லக்ஷ்மி

CPL 693632

நூங்கோடி பதிப்பகம்

மீண்டும் ஒரு சீதை

உள்ளே...

1. மீண்டும் ஒரு சீதை 5

2. அவள் ஒரு கரும்பூனை 141

12 JUL 2010
CHENNAI-600 006

மீண்டும் ஒரு சீதை

வானம் பொத்துக் கொண்டு விட்டது போன்று மூன்று நாளாக ஓயாது மழை.

வடவாறு கரைபுரண்டு ஓடுகிறது என்று தெருவே பேசியது. நான்காவது நாள் பளிச்சென்று சூரியன் புறப்பட்டு விட்டதும் தெருவில் ஆறாக ஓடிய தண்ணீர் எங்கேயோ நொடிப்பொழுதில் மாயமாகி விட்டிருந்தது.

காகிதக் கப்பல் செய்து ஓடவிட்டு மழையில் நனைந்து கொண்டு உற்சாகத்துடன் கத்திக் கொண்டிருந்த தெருப்பிள்ளைகள் அன்று பள்ளிக்கூடத்திற்குப் புறப் பட்டுப் போய் விட்டனர்.

தண்ணியிலே ஆடாதேன்னு சொன்னேன் கேட்டியா? மூக்கு ஒழுகுது, தலையை வலிக்குது - வயித்தை வலிக்கு துன்னு வம்பு செய்துகிட்டு பள்ளிக் கூடம் போகாம வீட்டில் உட்கார்ந்தியோ பலி போட்டுடுவேன். இந்தக் காலத்திலே படிச்சாதான் நாலு காசைப் பார்க்க முடியும். உங்கப்பனாட்டம் நீயும் உழைச்சு ஓடாக வேணாம்'' தன் ஐந்து வயது மகனை பரபரவென்று இழுத்துக் குளிப்பாட்டி உடை அணிவித்து, இட்டலியைப் பிட்டு ஊட்டி பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவிட்டிருந்தாள் செங்கமலம்.

இந்த மூன்று நாளாக அவள் வீட்டோடு மகனை வைத்துக் கொண்டு பட்டபாடு போதும்.

அப்பாடா என்று பெருமூச்சுடன் நிம்மதியாக நடையில் வந்து உட்கார்ந்து கொண்டு சமையலுக்கு

முருங்கைக் கீரையை ஆய்ந்து கொண்டிருந்தாள். யுகமாகி விட்டது போன்ற பிரமிப்பு. நேரம் இப்பொழுது என்னவாக இருக்கும்?

கவலையுடன் எழுந்து வீட்டுப் பின்பக்கத்தில் இரு மூங்கிலிடையே கட்டப்பட்டிருந்த கொடியில் ஈரத்துணி களைக் காயப்போட்டு விட்டு வந்தாள்.

"இன்று ஒருநாள் நல்லா சூரியன் காஞ்சா போதும்- அடுத்த நாள் குழந்தைக்குப் பள்ளிக்கூடம் போட்டனுப்ப சீருடை-அவளது மாற்றுப் புடவை - கணவனது வேட்டி சட்டை எல்லாம் நன்றாகக் காய்ந்துவிடும் என்று எண்ணியபடி அவள் பரபரப்பாக மற்ற வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினாள். விடாது மழைகொட்டிக் கொண்டிருந்த போதிலும் அவள் கணவன் கந்தசாமி பெரியதனக்காரர் வீட்டு வேலைக்குப்போய் வர வேண்டியிருந்தது. குடைக் கம்பி ஒடிந்து மூலையில் சாத்தப்பட்டுக் கிடந்தது. அதைப் பழுது பார்த்துவர ஒரு நடை கடைத் தெருவுக்குப் போகக்கூட கந்தசாமிக்குப் பொழுது இருக்கவில்லை.

பக்கத்து டவுன் காய்கறி மண்டிக்குப் போகும் போதாவது எடுத்துப் போய் வாங்கோ... எத்தனையோ தடவைகள் சொல்லிவிட்டிருந்தாள். அவர் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

பரணில் கிடந்த தாழங்குடையைத்தான் அவன் எடுத்துக்கொண்டு வேலைக்குப் போய் வந்தான்.

"மழை பெய்கிறது. பொழுதோட வீட்டுக்குப் போ கந்தசாமி" என்று பெரியதனக்காரர் மனைவி கனகம்மா ஒரு நாளாவது அவனை வீட்டுக்குச் சீக்கிரம் அனுப்பிய தில்லை.

குடையை மீறிய சாரலில் நனைந்துகொண்டு உரித்த கோழிபோல் அவன் ஒவ்வொரு நாளும் வீட்டுக்கு இரவு ஒன்பது மணிக்கு வந்து நின்றபோது...செங்கமலத்திற்கு மிகவும் கோபமும் மனவேதனையுமாகத்தானிருந்தது.

'பிறருக்கு கைகட்டி சேவகம் செய்யும் பிழைப்பும் ஒரு பிழைப்பா?' உள்ளுரக் குமைந்தாள்.

பெரியதனக்காரர் நாகலிங்கம் இருந்தபோது நிலைமை வேறு. அவர் மிகவும் தாராள மனமுடையவராக இருந்தார். ஆட்படைகளுக்கு தமது நிலத்தில் விளைந்த நெல்லிலிருந்து ஆளுக்கு ஒரு மூட்டை விகிதம்... பண்டிகைகளின் போது தந்து உதவினார். தோட்டத்துக் காய்கறிகள் அத்தனையையும் மண்டியில் விற்றுக் காசாக்கிக் கொள்ளவில்லை.

கந்தசாமி உன் வீட்டுக்கு எடுத்துக்கிட்டு போ-என்று மிகவும் கனிவோடு ஒரு கூடை காய்களையும்.... சீப்பு வாழை பழத்தையும் தந்து உதவினார்.

அவர் போன பின்பு, கனகம்மா ஆட்களை பாதியாகக் குறைத்ததுடன் அவர்களுக்கு வழங்கிய அதிகப்படி சலுகைகளையும் அடியோடு நிறுத்திக் கொண்டு விட்டாள்.

அப்படி பணத்தை யாருக்குச் சேர்த்து வைக்கிறாளோ தெரியவில்லை. போதாதற்கு அந்த வீட்டில் சில மாதங்களாக ஒரு கலவரம். பட்டணத்து மருத்துவமனை யொன்றில் கால் எலும்பு முறிவுக்குச் சிகிச்சை செய்து படுத்துக் கொண்டிருந்த நர்ஸ் லாவண்யாவைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டு விட்டான்.

வேண்டாத மருமகள் என்பதால் கனகம்மாள் தன் வெறுப்பை நெருப்பாக எல்லார் மேலும் உமிழ்ந்து கொண்டிருந்தாள். பாவம் அந்தப் பெண்... அவளிடம்

என்ன பாடுபடுகிறதோ? வாசலில் காலடி ஓசை கேட்டது.அடுப்பிலே கொதித்துக் கொண்டிருந்த குழம்பை கொஞ்சம் கிளறி விட்டு - வேகமாக வந்து கதவைத் திறந்தாள். "உன் காரக் குழம்பு தெருவையே தூக்குதே..." சிரித்தபடி நடையில் செருப்புகளை விட்டுவிட்டு உள்ளே வந்தான் கந்தசாமி.

"அப்பாடி!இன்னிக்காச்சும் நேரத்துக்கு சாப்பிட உங்களை வீட்டுக்கு அனுப்பினாங்களே, அந்த மகராசி?"

தோள்பட்டையில் இடித்துச் கொண்டாள். செங்கமலம்.

"இந்தா! இதுகளை எடுத்து வை. பெரியம்மா எனக்குக் கொடுத்தனுப்பினாங்க" சுமந்து வந்த சிறு துணிப்பையைத் தரைமீது கவிழ்த்தான். முற்றிப்போன வெண்டைக்காய்கள். சொத்தை விழுந்த கத்திரிப் பிஞ்சு, ஒரு சிறு கூடைப் புடலங்காய்... முதலியவை தரைமீது விழுந்தன.

"இது வேணும்னு யார் கேட்டா?" அலுத்துக் கொண்டு அவைகளை வாரி ஒரு கூடையில் போட்டு ஒதுக்குப் புறமாக வைத்தாள்.

"கைகால் கழுவிட்டு வாங்க.... சாப்பிடுவீங் களாம்..." என்றபடி மேடை ஓரம் கவிழ்த்து வைத்திருந்த அலுமினியத் தட்டை எடுத்து கழுவித் துடைத்து அடுப்பருகே தரைமீது வைத்தாள்.

"இடுப்பில் இரண்டு கைகளையும் ஊனிக்கிட்டு தோட்டத்திலே வந்து சுத்திகிட்டிருந்திருப்பாங்களே?" எரிச்சலுடன் கேட்டபடி சோற்றுப் பானையை இறக்கி தட்டருகே வைத்தாள்.

"என்னை அதட்டி வேலை வாங்கிறதைப்பத்தி நான் கவலைப்படறதில்லை. அவங்க குணம்தான் தெரிஞ்ச

கதையாச்சே. மகன் டவுன் கடையை கவனிக்கப் புறப் பட்டதும் ஆரம்பிக்கிறாங்க பார்... அந்தப் பொண்ணை சித்தநேரம் நிக்க விடறதில்லை."

"நர்ஸ் வேலைக்குப் படிச்ச பொண்ணுதானே, சம்பாதிச்சு வாழக்கூடிய திறமை இருக்கிற பொண்ணு இவங்ககிட்ட வந்து மொத்துப் படணுமா? கேட்க வேதனையா இருக்கு."

"காதல் கலயாணம் செய்துகிட்டோம். மாமியாரைப் பத்தி புருஷன்கிட்டே மூட்டிக் கொடுத்து கலகம் செய்யக் கூடாதுன்னு அது பொறுமையா இருக்கு."

"இன்னிக்கு எஜமானியம்மா என் முன்னாடி அந்தப் பொண்ணைப் பார்த்து கத்தினாங்க பாரு... நானே அதிர்ந்திட்டேன்."

"அது என்ன தப்பு செய்தது, அப்படிக் கத்திட்டாங்க?"

"புதுசா நாலு நாள் முன்னாடிதானே ஐயா கார் வாங்கியிருக்கார். முன்னெல்லாம் கடைக்கு ஸ்கூட்டரில் தானே போவார். காரைக் கோயிலுக்கு எடுத்திட்டுப் போய்... ஒரு அர்ச்சனை செய்திட்டு அப்படியே கடைக்குப் போய்ட்டார். அதுக்கு பிறகுதான் மூணுநாளா ஒரே மழை. பெண்ஜாதியை அதிலே கூட்டிகிட்டு தமாசா வெளியிலே போக முடியலை இல்லையா?

"இன்னிக்கு வெள்ளிக்கிழமையாச்சே, நம்ப துர்க்கையம்மன் கோயிலில் ரொம்ப விசேஷமான பூஜை உண்டே. கடைக்குப் போறத்துக்கு முந்தி பெண் ஜாதியை கோயிலுக்குக் கிளம்பும்படி அய்யா கூப்பிட்டார். அது படிச்ச பொண்ணுதான். ரொம்ப அடக்கமா நடந்துக்கிற குணம். புருஷன் சொன்னதும் சட்டுனு தேங்காய், பழம், பூவை எடுத்து கூடையிலே வச்சுகிட்டு ஒரு பட்டுச் சேலையை எடுத்து உடுத்திகிட்டு- தலையிலே பூவும்,

நெத்தியிலே குங்குமமுமா... கிளம்பிடுச்சு. மாமியாருக்கு ஒரே பொறாமை. தன்னை முதலில் காரில் ஏத்திக்கிட்டு கோயிலுக்குப் போகாம மகன் பெண்டாட்டியைக் கூட்டிகிட்டு போரானேன்னு ஆத்திரம்.''

''வீட்டுக்கு விளக்கேத்த வந்த அந்தப் பொண்ணு புது காரோட கோயிலுக்குப் போய் சாமியைக் கும்பிட்டுட்டு வந்தா என்னவாம்? இந்தம்மா புருஷனோட வாழ்ந்த காலத்திலே வைர அட்டிகையும், இடுப்பிலே ஒட்டியாணமும், தகதகப் பட்டுச்சேலையுமா அவரோட ஜோடி போட்டுகிட்டு கிளம்பினது மறந்து போச்சா?'' கோபத்துடன் கேட்டபடி கரண்டியால் சோற்றை அள்ளி தட்டில் வைத்துக் குழம்பை ஊற்றினாள்.

''காரசாரமா குழம்பு நல்லா வச்சிருக்கே. ஒரு பிடி பிடிக்கப் போறேன், ஆமாம். கடிச்சுக்க என்ன வச்சிருக்கே?''

''முருங்கைக்கீரை புரட்டி வச்சிருக்கேன். நம்ப தோட்டத்துக் கீரை. மறந்துட்டேனே'' என்று எழுந்து மேடையில் ஒரு பக்கம் வைத்திருந்த அலுமினியக் கிண்ணத்தை எடுத்து வந்து பரிமாறினாள்.

''அப்புறம்! மகன் கடைக்குக் கிளம்பினதும் மாமியார்காரி கத்தி ரகளை செய்தாங்களாக்கும்?''

''கார் தெருவை விட்டு நகர்ந்ததும் எஜமானியம்மா ஆரம்பிச்சுட்டாங்க. ''உனக்கு என்ன துணிச்சல்? கல்லு பிள்ளையாராட்டம் நான் பெத்தவ இருக்கேன்... என் புருஷன் சம்பாதிச்ச பணத்திலேதான் கடை, கார் எல்லா வாழ்வும் கிடைச்சிருக்குங்கிற ஞாபகம் அவனுக்குத்தான் இல்லே... உனக்குப் புத்தியிருக்க வாணாம்? அத்தை நீங்க பெரியவங்க - முதல்லே கோயிலுக்கு போயிட்டு வாங்கன்னு சொல்லாம... ஜம்னு ஏறி உட்கார்ந்துட்டியே,

காரிலே பிறந்து... அதிலே வளர்ந்து ஆளான செல்வச் சீமாட்டி போல கோயிலுக்குன்னு அலங்காரம் வேறே?'' உரத்த குரலில் கத்தினாள்.

''அத்தை! உங்க மகன்தான் வெளியிலே புறப்பட்டா நல்லா உடுத்திகிட்டு வரணும்னு சொன்னார்...அதனாலே அப்படிச் செஞ்சேன்னு அது லேசான குரலில் பதில் சொல்லிச்சு.''

''கட்டின புடவையோட உன் சாமர்த்தியக்கார அண்ணன் அனுப்பிச்சுட்டான். உனக்கு ஒரு புளியங் கொம்பைப் பிடிச்சிட்டோம்னு திமிரு. என் மகனை கைக்குள்ளே போட்டுகிட்டு என்னையே இங்கிருந்து விரட்டப் பார்க்கிறே... அப்படின்னு சீறினாங்க.''

அந்தப் பொண்ணு பதில் பேசலை... மௌனமாக வேலையைக் கவனிக்கத் தொடங்கிச்சு. இந்தம்மா என்ன மாதிரி ஜென்மம்! கல்யாணமாகி வீட்டுக்கு மருமக வந்திருக்கா... சிறுசுகள் கொஞ்சம் இங்கேயும் - அங்கேயும் போய்ட்டு வரட்டும். சிரிச்சுப் பேசி சந்தோசமா இருக்கட்டும்னு நினைக்காம மருமகளைப் பார்த்து வயிற்றெறிச்சலா? சே!''

''இவங்கல்லாம் பெரிய மனுசங்க!''

''எனக்குத்தான் மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருந்திச்சு''

முதல்லே அந்தப் பட்டுப் புடவையை களைஞ்சுட்டு வீட்டுக்கு உடுத்தற நூல் சேலையைக் கட்டிகிட்டு மளமளன்னு காரியத்தைக் கவனி. அடுப்பருகிலே பட்டுச் சேலையோட போய் மேலே எண்ணையை ஊத்திகிட்டு அதை பாழாக்கிடாதே. நான் வரப்போற மருமகளுக்கு அழகு பார்த்து பணத்தைக் கொட்டி வாங்கி வச்ச புடவை

நினைப்பிருக்கட்டும். ஒரு அம்பாரம் துணி ஈரமா காயாம கிடக்கு. வேலைக்காரியோட போய் கூடநின்று வெய்யலில் காய வச்சுட்டு வந்து சீக்கிரம் சமையலைக் கவனி... மசமசன்னு நிக்கிறே. நீ எப்படித்தான் நர்ஸ் வேலை பார்த்தியோ?''

''சிவனேன்னு அந்தப் பொண்ணு வேலை செய்து கிட்டிருந்த அந்த ஆஸ்பத்திரியிலேயே பாடுபட்டுகிட்டு பட்டணத்திலேயே ஒரு நல்ல மாப்பிள்ளையைப் பார்த்து கட்டிகிட்டு சுகமா இருக்கலாம். திங்க சோறும், உடுத்த நல்ல துணியும், வாழ்க்கையிலே நிம்மதியுந்தான் அய்யா ஒரு பொண்ணுக்குதேவை. தங்க வைர நகைகளை சுமந்து கிட்டு பட்டு சேலையிலே இந்த ராட்சசிகிட்டே தினிக்கும் பாடுபடர வாழ்வு என்ன வாழ்வு அய்யா! நா மட்டும் அந்த பொண்ணா இருந்தா...''

''என்ன செய்திருப்பியாம்?'' சிரித்தபடி மேலும் அவள் வடித்த சோற்றையும் குழம்பையும் வேகமாகப் பிசைந்தான்.

''நீயுமாச்சு - உன்முகக்கட்டையுமாச்சுன்னு சொல்லிட்டு அடுத்த ரயிலிலேயே பிறந்த வீட்டுக்குப் போயிடுவேன். என்னாட்டம் அந்த பொண்ணு கை நாட்டு பேர்வழி இல்லையே, படிச்சிருக்கு-நல்லா சுதந்திரமா வேலை செய்துகிட்டு - நிம்மதியா வாழலாமே?''

''நல்ல வேளை நீ படிக்கலை... இல்லாட்டி சிலசமயம் கோபத்திலே நான் கத்தறபோது நீ வீட்டை விட்டு கிளம்பியிருப்பே?'' சிரித்துக்கொண்டு அவளது கன்னத்தைக் கிள்ளினான்.

''போதுமையா உமது கொஞ்சல்...வாசல் கதவு திறந்து கிடக்கு யாராச்சும் பார்க்கப் போராங்க'' சிணுங்கினாள்.

அப்பொழுது மூச்சிறைக்க கோடிவீட்டு பிள்ளைகள் - பள்ளி சிறுவர்கள் ஓடி வந்தனர்.

''ஏண்டா பசங்களா, நீங்க ரெண்டுபேரும் இன்னிக்கு பள்ளிக்கூடம் போகலையா?'' வியப்புடன் அதட்டினாள் செங்கமலம்.

''இன்னிப்பொழுது பார்த்துவிட்டு நாளைக்குப் போகலாம்னு அம்மா சொல்லிட்டாங்க'' மூத்த பையன் பதில் அளித்தான்.

''அதனாலே நாங்க ஆத்தங்கரை பக்கம் வேடிக்கை பார்க்கப் போனோம்'' இளையவன் மூச்சுத் திணற பதிலளித்தான்.

''அட்பாவிகளா - கரை தெரியாம வெள்ளம் புரண்டோடுது, அங்கே போய் விளையாட்டா?''

''கொடுக்கப்புளி பறிச்சுகிட்டு ஆத்து வெள்ளத்தை வேடிக்கை பார்க்கலாம்னு போனோம்...'' இன்னும் பெரியவனுக்கு மூச்சிறைத்தது. ''அங்கே கரை ஓரமாக நாகப் புதர்கிட்டே...'' தடுமாறினான் பயத்துடன்.

''நல்ல பாம்பை பார்த்தியா? இன்னிக்கு வெள்ளிக்கிழமை, முருகனை மனசிலே கும்பிட்டுக்கோ'' செங்கமலம் ஓங்கி அதட்டினாள்.

''இல்லே! ஒரு மனுஷன் வெள்ளை சட்டை போட்டு கிட்டு கவுந்தபடி கிடந்தார். கிட்ட போக பயமா இருந்திச்சு, செத்திட்டார்போல இருக்குன்னு ஓடியாந்தேன். அம்மா சொன்னாங்க அய்யாகிட்டே போய் சொல்லுங்கன்னு அனுப்பினாங்க-'' கண்களில் மிரட்சியுடன்... உடல நடுங்க வாய் தடுமாறினான்.

கையில் அள்ளிய சோற்றை அப்படியே தட்டில் வைத்துவிட்டு கந்தசாமி எழுந்துவிட்டான்.

"முகத்தைப் பார்த்தீங்களா?"-கவலையுடன் கேட்டாள் செங்கமலம்.

அவர்கள் வசித்த தெருவில் ஆப்பம் சுட்டு விற்கும் பூங்கோதையின் மகன் காக்காய் வலிப்புக்காரன். ஒரு சமயம்... மேலே சிந்திக்க முடியவில்லை.

"சீக்கிரம் கைகளைக் கழுவிகிட்டு நாலுபேரை கூட்டி கிட்டு போய் பாருங்க... வடிவேலுதான் இந்த தெருவிலேயே உங்களுக்கு அடுத்தபடி வெள்ளை சட்டை போடற பழக்கம். பாவம் கிழவிக்கு ஏதும் கஷ்டம் வரக் கூடாது! அதோட உடம்பு தாங்காது காக்கா வலிப்புக்காரன் - காசு சம்பாதிக்க துப்பில்லாதவன்னாலும் தனக்குக் கொள்ளிபோட்டு கரையேத்திடுவான்னு ஆசையிலே உயிரை வச்சு கிட்டிருக்கு... என் அடிவயத்தை சங்கடம் குழப்புது - சீக்கிரம் கிளம்புங்க" செங்கமலம் பதறினாள். துண்டை உதறிப் போட்டுக்கொண்டு காலில் செருப்பை திணித்துக் கொண்டு வேகமாக வெளியே ஓட்டமும் நடையுமாக கந்தசாமி விரைந்தான்.

2

ஒரு சில நிமிஷங்களில சங்கதி ஊரில் நெருப்பாகப் பரவிப் போனது. கிராமமே திரண்டுவிட்டது போல ஆற்றங்கரை ஓரத்திலே பெருத்த கூட்டம். கந்தசாமிதான் முதலில் பார்த்தான்.

அந்தப் பிள்ளைகள் சொன்னது உண்மை. வெகு தூரத்திலேயே ஆற்றின் ஓரத்தில் மேடிட்ட பாதைமீது நடக்கும் போதே நாணலும் - கோரைப்புல்லும் புதராக மண்டிக் கிடந்ததொரு பகுதியில் கரை ஓரமாக ஒரு ஆள் குப்புறப் படுத்துக் கிடப்பது தெரிந்தது. வெய்யில் சுள் என்று அடிப்பதை உணராது மணல்மீது முகத்தை பதித்துக் கொண்டு குடிகாரன்கூட அத்தனை நேரம் கிடக்க மாட்டான். பிள்ளைகள் சொல்லியதுபோல செத்து விட்டிருக்கிறான் போலத்தான் தெரிகிறது - படபடத்த நெஞ்சோடு... துண்டைத் தலையில் கட்டிக்கொண்டு வேட்டியை மடக்கிக் கட்டியபடி... இறங்கினான்.

சேறும் சகதியுமாக இருந்த பகுதியில் மெல்ல காலை ஊன்றி எட்டிப் பார்த்தான். முகம் தெரியவில்லை - அந்தக் கிராப்பு முடி... டெர்லீன் சட்டை - முழங்கால்வரை மடித் திருந்த பழுப்பு பாண்ட்... கையில் கடிகாரம் எனக்கிடந் தான். கட்டாயம் ஆப்பக்கார கிழவியின் மகன் வடிவேலு அல்ல என்று ஊகித்தபோது பெருத்த நிம்மதி ஏற்பட்டது.

ஆனாலும், பாவம் அவன் எவனோ... எங்கே போகப் புறப்பட்டானோ? ஆற்றில் இறங்கி சுழலில் சிக்கிக் கொண்டு மடிந்து விட்டிருக்கிறான்...

அடுத்ததாக அவன் என்ன செய்ய வேண்டும்?

உடலைப் புரட்டி முகத்தைப் பார்க்கலாம்... ஆனால் கொலை செய்யப்பட்டு ஆற்றோரம் கிடந்த பிணமாக இருந்துவிட்டால்... வம்பாகிப் போகுமே? இது காவல் துறையினர் கவனிக்க வேண்டிய சங்கதி-கூட வந்த தெரு ஆட்கள் சிலரை... உடலை யாரும் தொடாது பத்திரமாகப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு... காவல்துறை அலுவலகத்திற்கு ஓடினான்.

கடைத்தெருவில் பஸ் நிலையத்திற்குச் சிறிது தொலைவில் பலசரக்குக் கடைகளைத் தாண்டி இருந்தது போலீஸ் ஸ்டேஷன். சமீபத்தில் கொஞ்சம் சிவப்பு சாயம் பூசி, வெள்ளைக் கோடிட்டு சிங்காரிக்கப்பட்டிருந்தது. அதைத் தவிர அது அதே பழைய கட்டடந்தான்.

புகார் கொண்டுவரும் கிராம மக்களின் மனதில் போலீஸ் ஸ்டேஷன் என்கிற பயத்தைப் போக்க கேட்டைத் தாண்டி உள்ளே சென்றதும் நடைபாதையின் இருமருங்கிலும் வரிசையாக குரோட்டன்ஸ் செடிகள் சட்டிகளிலிருந்து நிமிர்ந்து நின்று கொண்டிருந்தன. முன் பக்கத்துத் தோட்டத்திலே ஒரு பெரிய வேப்பமரம். அதில் சில காகங்கள் உட்கார்ந்து கரைந்து கொண்டிருந்தன.

வழக்கமான மண் நிறைந்த சிவப்புச் சாயம் தீட்டிய தீயணைக்கும் லாரிகள்... அதைத் தாண்டியிருந்த சிறு ஹாலின் இருபக்கமும் இரண்டு அறைகள் - ஹாலின் நடுவே மின் விசிறிக்கடியில் உட்கார்ந்து பெரிய புத்தகமொன்றில் ஏதோ மும்முரமாக எழுதிக் கொண்டிருந்தார், ஒரு போலீஸ்காரர்.

வம்பு - வழக்கு போலீஸ் என்ற விவகாரம் கந்தசாமிக்குக் கட்டோடு பிடிக்காத சங்கதி.

ஒரே ஒரு தடவைதான், அவன் தன் யஜமானனுடன் கூட அங்கு வந்திருந்தான். மகேந்திரன் அங்கு புதிதாக மாற்றலாகி வந்திருந்த சப்இன்ஸ்பெக்டர் சந்திரசேகரனின் கல்லூரித் தோழன்.

கேள்விப்பட்டு தோழனை வரவேற்று பாராட்ட வந்திருந்தான். வில்வண்டியை ஓட்டிக் கொண்டு வந்த கந்தசாமி எஜமான் பின்னால் மிட்டாய் நிறைந்த அட்டைப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்தான்.

"இதெல்லாம் என்ன?" என்று சப்-இன்ஸ்பெக்டர் சந்திரசேகரன் நண்பனைப் புன்முறுவலுடன் அதட்ட...

"இங்கே வருக... வந்து எங்களுக்கு உங்களது பாதுகாவலைத் தருக" என்று ஊர் மக்கள் சார்பில் வரவேற்புக் கூறி, உன் வருகை நல் வருகை என்று சொல்லி இனிப்பு வழங்க வந்தேன். உனக்கு மட்டுமல்ல. இங்கு உள்ள

எல்லோருக்கும் வழங்கப் போறேன். உத்தியோக மும்முரத்தில் உனக்கு மறந்துபோச்சு - நாளை விடிந்தால் தீபாவளி இல்லையா? என் தாயார் கவனமாக பசுநெய்யில் தயாரித்த மிட்டாய்கள்... ஞாபகமிருக்கா? நாம் படிக்கும் போது... ஹாஸ்டலுக்கு நெய் முறுக்கு எடுத்து வருவேனே... நீ ஒருத்தனே அத்தனையையும் ஒழிச்சு கட்டிடுவியே?... மனம் விட்டு சப்-இன்ஸ்பெக்டர் சிரிப்பதைக் கண்டு கந்தசாமி மகிழ்ந்து போனான்.

"காலம் எப்படி ஓடிப்போயிடுச்சு. ஆளுக்கு ஒரு திக்கா போயிட்டோம். ஆமாம், உனக்கு கல்யாணமாகி குழந்தை குட்டிகள் ஏதாச்சும் -"

"கல்யாணம் ஆறு மாசத்துக்கு முந்தி நடந்தது. இன்னும் நீ சொல்கிற அந்த உறவுகள் ஏற்படலை... உன் சங்கதி?"

"நான் இன்னமும் தனிக்கட்டை. எனக்குப் பேசி வச்சிருக்கிற பெண் படிப்பு முடிஞ்சாத்தான் கல்யாணம்னு அவ அப்பா ரொம்ப கண்டிப்பா சொல்லிட்டார்."

"காலம் எப்படி மாறிடிச்சு பார்த்தியா? முன்னெல்லாம எங்க பையன் படிப்பு முடிஞ்சு வேலை ஏத்துக்கிட்டாத்தான் கல்யாணம் என்பாங்க - இப்போ பெண் படிச்சு முடிச்சு பிறகுதான் கல்யாணம்னு அப்பாக்காரங்க ஆட்சேபிக்கிற அளவு...

இருவரும் கலகலவென்று சிரித்தனர். அவர்களது தோழமையைக் கண்டு பூரித்துப் போனான் கந்தசாமி. அட்டைப் பெட்டியை தன் எஜமானனிடம் கொடுக்க - முதலாவதாக ஒரு மைசூர்பாகு எடுத்து இரண்டாகப் பிட்டு ஆளுக்கு பாதி - மீதி இவங்களுக்கு என்றார் சப்-இன்ஸ்பெக்டர். இதுவரை காவல்துரை நிலையம் என்றதும் அந்த மகிழ்ச்சியான நினைவுதான் வந்தது.

இப்போது?... சங்கடமானதொரு சங்கதியைச் சொல்ல வந்திருக்கிறோமே? என்று தயங்கியபடி... அவன் உள்ளே சென்று - "ஐயா!" என மெல்லிய குரலில் கூப்பிட்டான்.

திடுக்கிட்டு நிமிர்ந்தார் எழுதிக் கொணடிருந்த போலீஸ் அதிகாரி.

"சப்-இன்ஸ்பெக்டர் ஐயாகிட்டே ஒரு விசயம் சொல்லணும்" அதற்குள் அடுத்த அறையில் தொண்டையைச் செருமும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

"சாப்பாட்டு நேரம், ஒரு சமயம் குவாட்டர்ஸுக்கு போயிட்டீங்களோன்னு கவலைப்பட்டேன்..." கும்பிட்டான் கந்தசாமி.

"கிளம்பிட்டிருந்தேன் - பரவாயில்லை. வந்த சங்கதியைச் சொல்லலாமே?" முகத்தில் சிரிப்பும் - குரலில் கண்டிப்புமாகக் கேட்டார்.

வடவாற்றுக் கரையில் அவன் கண்டதைச் சொல்லி விட்டு கையைக் கட்டிக்கொண்டு நின்றான் கந்தசாமி.

"அப்படியா?..." என்று கேட்டுவிட்டு தம்முடன் இரு போலீஸ்காரர்களுடன் ஜீப்பில் ஒரு நொடியில் புறப்பட்டு விட்டார் சப்-இன்ஸ்பெக்டர். பூட்ஸ் கால் சேற்றில் புதைய உடலை நெருங்கி தம்முடன் கூடவந்த போலீஸ்காரர்களின் உதவியால் அதை நிமிர்த்திப் போட்டுப் பார்த்தார். கந்தசாமி வந்த விஷயத்தை அவர்களுக்கு தெரிவித்தான் என்ற தகுதியில் மெல்ல அவர் பின்னால் வந்து நின்று கொண்டு எட்டிப் பார்த்தான்.

ஒரு போலீஸ்காரர் சிறிது தண்ணீரை கைகளில் அள்ளி முகத்தின்மீது ஊற்ற சேறாகிவிட்டிருந்த முகம் பளிச்சென்று தெரிந்தது.

தண்ணீரில் ஊறி சிறிது உப்பலாகி விட்டிருந்த அந்த முகத்தை திகிலுடன் கந்தசாமி பார்த்தான்.

சந்திரசேகரன் அவன் பக்கம் திரும்பினார். "இந்த ஆளை உனக்குத் தெரியுமா?"

"இல்லை" என்று பலமாகக் கந்தசாமி தலை ஆட்டினான்.

அந்தக் கிராமத்திலோ - சுற்று வட்டாரத்திலேயோ - அவன் அந்த இளைஞனை பார்த்ததேயில்லை.

பட்டணத்துவாசி போல... அழகாக வெட்டப்பட்ட கிராப்பு முடியும்... காதோர கிருதாவும், சேறாகிப் போன வெள்ள டெர்லின் சட்டையும், பழுப்புவண்ண பாண்டு மாகக் கிடந்த அவனுக்கு சுமார் இருபத்தைந்து அல்லது முப்பதிற்குள் வயதிருக்கும் என்று தனக்குள் ஊகித்துக் கொண்டான். கால்களில் செருப்புகளைக் காணவில்லை. அவை ஆற்றுச் சுழலில் அடித்துப் போகப்பட்டிருக்கும். ஐயோ யார் பெத்த பிள்ளையோ! இப்படி அநியாயமாக ஆற்றிலே விழுந்து செத்து விட்டிருக்கிறானே? கந்தசாமியின் மனம் இரக்க வசத்தில் தவித்தது. போலீஸார் யாரையும் உடல் அருகே நெருங்க விடவில்லை. குறிப்பிட்ட சில ஆண்களை மட்டும் அழைத்து முகத்தைப் பார்க்கச் சொல்லி... அடையாளம் காட்டச் சொன்னார்கள்.

உற்றுப் பார்த்துவிட்டு அவர்களும் உதட்டைப் பிதுக்கினர்.

அதற்குள் சங்கதி பல கற்பனைகளுடன் காட்டுத் தீயாக கிராமத்திற்குள் பரவி விட்டது.

யாரோ இருபத்தஞ்சு வயசு இளங்காளை - ஆற்றிலே முழுகி செத்து விட்டிருக்கான் பாவம்...

போட்ட துணிமணிகளோட செத்துக் கிடந்தா தற்கொலை செய்துக் கிட்டான்னு அர்த்தம்.

மதகுமேலே உட்கார்ந்திருந்தப்போ வேண்டாதவன் தள்ளி விட்டிருக்கலாமோ...

ஒரு சமயம் திருடனாக இருக்கலாம். கையிலிருக்கிறதை பறிச்சுகிட்டு இவனை தள்ளிட்டு போயிட்டானோ?

கடிகாரம் கட்டினபடி இருக்கு. கழுத்திலே செயின் கிடக்கு. பார்த்தா படிச்சவனாட்டம் இருக்கு. நம்ப கிராமத்துக்கு இவன் ஏன் வரணும். இப்படிச் செத்துத் தொலைக்கணும்.

அதற்குள் பக்கத்து நகரத்து அரசு ஆஸ்பத்திரியிலிருந்து வண்டி வந்து போலீஸார் பாதுகாப்புடன் உடல் அகற்றப்பட்டது. கூட்டம் கலைந்து போனது. பிரேத பரிசோதனைக்கு முன் இன்னமும் அடையாளம் கண்டு பிடிக்க உடலை பிணக் கிடங்கில் ஐஸ் துண்டுகள் மீது பத்திரமாக வைத்து விட்டனர்.

அன்று இரவு கடையை மூடிவிட்டு வீட்டுக்கு வந்த மகேந்திரனுக்கு ஏற்கனவே இந்தச் செய்தி தெரிந்து விட்டிருந்தது.

"ஊரே ரெண்டுபடுது. ஆற்றில் தண்ணி கரைபுரண்டு ஓடுதேன்னு ஜனங்க சந்தோஷப்பட்டு சொன்னதுக்கு முந்தி இப்படி ஒரு அவலம். மாடு மேய்க்கிற பசங்ககூட அவன் விழுந்து கிடந்த படுகைப் பக்கம் போகவே மாட்டாங்க. கொஞ்ச தூரத்திலே இறங்கு துரை இருக்கு. இனி எந்தப் பெண்ணாவது தனியா குளிக்கப் போவாளா? துர்மரணம் - அவன் ஆவி அங்கேயே சுத்திகிட்டு இருக்குமே" கனகம்மாள் மூச்சுவிடாது பேசினாள்.

"ஆவியாவது, மண்ணாங்கட்டியாவது பாவம் யாரோ ஒரு இளைஞன் ஆற்றிலே இறங்கி ஒரு வாய் தண்ணி குடிக்கப் போயிருக்கான். சுழல் இருக்கிற பக்கம் தவறி இறங்கிவிட்டான். அது இழுத்துகிட்டு போயிட்டது... கட்டாயம் இவன் பட்டணத்துக் காரனாகத்தான் இருக்கணும்" மகேந்திரன் குறுக்கிட்டான்.

"பட்டணத்துக்காரனுக்கு இங்கே என்ன வேலை. ஒரு சமயம் தன் கள்ளக் காதலியைப் பார்க்க வந்திருப் பானோ?"

"ஏம்மா உங்களுக்கு இப்படி ஒரு கற்பனை."

சமையலறை வாசற்படியருகில் நின்றபடி கேட்டுக் கொண்டிருந்த லாவண்யாவின் உள்ளம் முன்பின் தெரியாத அந்த இளைஞனுக்காகப் பரிதாபப்பட்டது.

மாமியாரின் விமர்சனத்தை அவள் காதுகளில் போட்டுக் கொள்ளவில்லை.

கந்தசாமி கார் டிக்கியிலிருந்த பொருள்களை உள்ளே கொண்டுவந்து வைத்தான்.

சண்பகப்பூ என்றால் லாவண்யாவுக்கு மிகவும் பிடிக்கும் என்பதை மகேந்திரன் அறிவான்.

நகரத்து பூக்கடை ஒன்றில் அந்த மலர்களைப் பார்த்து விட்டான். உடனே இரண்டு டசன் பூக்களை வாழை இலையில் கட்டித்தரச் சொல்லி வாங்கி வந்திருந்தான்.

"இந்தா நூலில் கோத்து தலையிலே வச்சுக்கோ. உனக்கு பிடிச்ச பூ அப்படியே நம்ப தோட்டத்திலே நட்டு வைக்க ஒரு செண்பகச் செடிக்கு தர்ஸரியிலே ஆர்டர் கொடுத்துட்டு வந்திருக்கேன். இரண்டு நாளிலே கிடைக்கும்னு சொன்னாங்க."

மாமியார் கனகம் முகம் சுருங்கிப் போனாள்.

ஒரு நாளைப்போல மகன் தன் மனைவிக்கு ஏதாவது நகரத்திலிருந்து வாங்கிவர மறப்பதே இல்லை.

என்ன சொக்குப்பொடி போட்டிருக்கிறாளோ இவள். மகேந்திரன் முன்போல இல்லை. ஆளே மாறி விட்டிருக்கான் பற்களைக் கடித்துக்கொண்டு மருமகளைப் பார்த்தாள்.

''பூஜை அறையில் முதலில் கொண்டுபோய் சாமிபடங்களுக்கு வை. மீதமிருக்கிற ரெண்டில், ஒரு பூவைத் தலையிலே வச்சுக்கோ. எனக்கு சண்பகப்பூ வாசம் தலைவலியைக் கிளப்பிடும். உனக்கு இது எப்படித்தான் பிடிக்குதோ?'' கசப்பாகக் கூறிவிட்டு தன் அறைப் பக்கம் நகர்ந்தாள்.

''அம்மா எப்பவும் இப்படித்தான். ஏதாவது ஏடா கூடமா பேசுவாங்க. எனக்காகப் பொறுத்துக்கோ லாவணி. அவங்களோட விளையாட ஒரு பேரன் பிறந்துடட்டும், பிறகு பார், நீ. எப்படி மாறிப்போயிட்டாங்கன்னு அதிசயப் படுவே''என்றபடி அவள் அருகே நெருங்கி..நெற்றியில் புரண்ட அவளது கூந்தலை அன்போடு ஒதுக்கிவிட்டான்.

''அய்யா!''

திடுக்கிட்டுத் திரும்பினான் மகேந்திரன்.

கந்தசாமி தலையைச் சொறிந்து கொண்டு சங்கோஜ சிரிப்பு முகத்தில் தவழ நடையில் நின்று கொண்டிருந்தான்.

''இன்ஸ்பெக்டர் ஐயா இந்தக் கடிதத்தை உங்ககிட்ட கொடுக்க சொன்னார்.'' மடியில் பத்திரமாக வைத்துக் கொண்டிருந்த ஒரு காகித உறையை எடுத்து அவனிடம் கொடுத்தான். அவசரமாகப் பிரித்து... படித்தான் மகேந்திரன்.

''அன்புள்ள மகேந்திரன் அவர்களுக்கு - வணக்கம். ஆற்றங்கரையோரம் ஒதுக்கப்பட்டு ஒரு உடல் கிடந்தது

என்ற செய்தியைக் கேட்விப் பட்டிருப்பீர்கள். இதுவரை யாரும் இறந்தவனை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. நாளைக் காலை கடைக்குப் புறப்படுமுன் நீங்கள் என்னுடன் ஆஸ்பத்திரிக்கு வந்து பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டிருக்கும் அந்த இறந்த மனிதனைப் பார்க்க வேண்டும். ஒரு சமயம் உங்களுக்குத் தெரிந்தவராக இருக்கலாமோ என்பது என் ஐயம்.

நெற்றிமீது துளிர்த்த வியர்வையை அவன் துடைத்துக் கொண்டான். அவனுக்குத் தெரிந்தவனாக இருக்கலாமோ என்று சந்திரசேகரன் ஏன் சந்தேகப் படுகிறார்.

இனம் விளங்காத குழப்பத்தில் அவனுக்கு அன்று இரவு சரியான உறக்கமே இருக்கவில்லை.

3

மறுநாள் காலை. மகேந்திரன் கடைக்குப் போகுமுன் சப்-இன்ஸ்பெக்டர் சந்திரசேகரனை சந்திக்க வேண்டுமென்பதை லாவண்யா அறிவாள்.

அவள் விடியுமுன்பே எழுந்து விட்டிருந்தாள். ஸ்நானம் செய்துவிட்டு ஈரத் தலையைத் துவட்ட நேரமின்றி துவாலையை முடியுடன் முறுக்கித் தலையில் சுற்றிக் கொண்டு பூஜையறை விளக்கை ஏற்றிவிட்டு காப்பி பலகாரம் தயாரிப்பதில் மும்முரமாக இருந்தாள்.

அன்று இரவு வெகுநேரம் அமைதியில்லாது படுக்கை மீது கணவன் புரண்டு கொண்டிருப்பதை அவள் கவனித்தாள். ''ஒரு சாதாரண விஷயம்! இதுக்கு இப்படி

ஏன் மனசைக் குழப்பிக்கிறீங்க?'' அவன் தோளை மெல்லத் தட்டிக் கேட்டாள்.

''தன்னோட கூட டவுன் ஆஸ்பத்திரி பிணக் கிடங்குக்கு கூப்பிட்டிருக்கிறார், சப்-இன்ஸ்பெக்டர். எனக்கு அங்கேயெல்லாம் போகப் பிடிக்காதே.''

''இறந்து போனவன் ராத்திரி உங்க கனவில் வந்து பயமுறுத்த வரப் போறான்?'' அவனது சுருண்ட கிராப்பு முடியை கைகளால் அளைந்து கொண்டு விளையாட்டாகக் கேட்டாள்.

''உனக்கு ஆஸ்பத்திரியில் வேலைசெய்து அருவருப்பு உணர்வு தெளிஞ்சு போயிருக்கு. என் விஷயமே வேறே. தெருவிலே குப்பை கூளத்தைப் பார்த்தாலே எனக்கு குமட்டிகிட்டு வரும். நம்ப தெருவை மத்த வீட்டுக்காரங்க அசுத்தப் படுத்துகிறாங்களேன்னு ஆள் ஒருவனை என் செலவில் நிதக்கும் தெருவைக் கூட்டச் சொல்லி வச்சிருக்கேன். தெரியுமில்லையா?

மகேந்திரனது பழக்க வழக்கங்கள் அத்தனையையும் அவள் அறிந்து கொண்டு விட்டவள் எனக் கூறமுடியாது.

ஆனாலும் மனைவியாக அவனுடன் வாழத் தொடங்கி விட்டிருந்த அந்தச் சில மாதங்களில் அவள் ஓரளவு புரிந்து கொண்டிருந்தாள்.

அவனது ஆடைகள் சுத்தமாகத் துவைக்கப்பட்டு பெட்டி போட்டு பீரோவில் அடுக்கி வைக்கப் பட்டிருப்பதை அவன் பெரிதும் விரும்பினான்.

லாவண்யாவோ அவனது தாயோ பரிமாறும்போதும் சுத்தமாக உடுத்தியிருக்க வேண்டுமென்பது அவன் கண்டிப்பு. சாப்பாட்டுத் தட்டு பளிச்சென்று இருக்க வேண்டும். டம்ளர்கள் துப்புரவாக கழுவப்பட்டிருக்க

வேண்டும். தோட்டத்தில் காய்ந்த இலைகள் குவியலாகக் கிடக்கக் கூடாது...

சாப்பிட்டுவிட்டு கையை மேல் துண்டில் துடைத்துக் கொள்ள விரும்பாது தனியாக பீங்கான் அருகில் ஒரு துவாலை வைத்திருக்க வேண்டும் என்று அவன் கட்டளை இடும் பழக்கம்.

பெற்றவர்களுக்கு ஒரே மகன். வசதியான குடும்பம் - பல சலுகைகளை அனுபவித்து பழகி விட்டவன். அதனால் கொஞ்சம் பிடிவாதம் அதிகமுண்டு. அதே சமயம் அவன் தாய்மீது அவனுக்கு மட்டற்ற பாசம். காதலித்துக் கல்யாணம் செய்து கொண்ட லாவண்யாமீது எல்லையற்ற அன்பு.

தாய்க்கும் தாரத்திற்குமிடையே பாச உணர்வைப் பகிர்ந்து கொள்ள இயலாது தவிக்கிறவன்.

பட்டணத்தில் படித்தவன் என்றாலும் கிராமத்து சூழ்நிலையில் வளர்ந்தவன். நாகரீக பழக்க வழக்கங்களை அனுசரித்தாலும் சில கட்டுதிட்டங்களுக்குள் அடங்கிப் போனவன். கடவுள் நம்பிக்கை உடையவன். அது அபரீத மாகிப்போய்... சில சாதாரண நம்பிக்கைகளில் அவனை ஆழ்த்தி விட்டிருந்தது.

''தேங்காய் நல்லா உடைஞ்சுருக்கான்னு பார் லாவண்யா...நம்ப குடும்பம் நல்லா இருக்கணும்...'' என்று அவன் பூஜை வேளையில் கவலைப்பட்டால் லாவண்யா தனக்குள்ளே சிரித்துக் கொள்வது வழக்கம்.

அவள் அண்ணன் தாமோதரன் படித்தவன்தான். ஒரு கம்பெனியில் தலைமைக் கணக்கராக இருந்தான். அவனது வருவாயில் ஒரு சிறு ஓட்டுக் கூரை வீட்டில் வாடகை கொடுத்து வாழ முடிந்தது. அண்ணி ஜெயாவும் படித்தவள்தான் வேலைக்குப் போகாது குடும்பத்தை

நிர்வகித்துக் கொண்டிருந்தாள். இரண்டு குழந்தைகள் - திருமணமாகாத தங்கை - பற்றாக்குறை பட்ஜெட்டில் ஒடும் வாழ்க்கை என்றாலும் அமைதியாக வாழ்ந்தனர்.

அவள் கடவுள் நம்பிக்கை உள்ள பெண்ணாகத்தான் வளர்க்கப்பட்டாள். ஆனால் அண்ணா அவளுக்கு போதித்த தத்துவம் - இதுமாதிரியான நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்டது.

கணவனிடம் அவளுக்கு தீவிர அன்பு. ஆனால் அவனது கட்டுப்பெட்டித்தனத்தை அவளால் ஏற்க இயலவில்லை.

மாமியாரிடம் அவளுக்கு மதிப்பு உண்டு... தன்னை விரும்பாது மாமியார் பலர் முன்னிலையில் சாடி அவமானப் படுத்துவதைக் கண்டு உள்ளூர வெகுண்டாள்.

எதிர்த்துப் பேசிவிடுவது சுலபம். மகேந்திரன் மேலிருந்த மட்டற்ற காதலால் அவள் பொறுமையாக இருந்தாள்.

ஆனால், மாமியார் கனகம் அவளைத் தவறாகவே புரிந்து கொண்டிருந்தாள். பணக்கார வீட்டுப் பிள்ளை என்று தன் மகனை லாவண்யா வசமாகப் பிடித்துக் கொண்டு விட்டதாகத்தான் நினைத்து மனம் கசந்து போனாள்.

பணத்திற்கும் - பதவிக்கும் - வசதியான வாழ்க்கைக்கும் அவள் ஆசைப்பட்டிருந்தால்...

கல்யாணம் செய்து கொண்டு அமெரிக்காவுக்கு பயணப் பட்டிருக்கலாம்.

சென்னையில் புறநகர் பகுதியில் மிகவும் பிரபலமாக விளங்கிய சங்கரி நர்ஸிங் ஹோமில்தான் அப்போது அவள் வேலை பார்த்துக் கொண்டிருந்தாள்.

அங்கேதான் அவளை முதல்முதலாக டாக்டர் தினகரன் சந்தித்தான். அமெரிக்க ஆஸ்பத்திரிகளில் பணியாற்றி பணத்தைக் குவிக்க ஆசைப்பட்டு அதற்கு வேண்டிய நுழைவுத் தேர்வுகளை எழுதி வெற்றி பெற்றிருந்தான்.

அவன் சகோதரி தன் டாக்டர் கணவனுடன் அங்கே வாழ்வதால்... மெல்ல தன் தம்பியை அங்கே தருவித்துக் கொள்ள ஆவன செய்து கொண்டிருந்தாள்.

அந்த மாதிரி கட்டத்தில் தற்காலிகமாக சில மாதங்கள் வேலை செய்ய அவன் அங்கே வந்து சேர்ந்து கொண்டிருந்தான்.

பார்க்க கட்டழகன் அல்ல. ஆனால் தொழில் நுணுக்கம் அதிகம் தெரிந்தவன். சாதாரண குடும்பத்திலிருந்துதான் வந்தவன். விரைவில் தான் அமெரிக்கா விற்குக் குடியேறி... ஒகோ என்று வாழப்போகும் எதிர்பார்ப்பில்... ஒரு பெருமை- மமதை.

ஆபரேஷன் தியேட்டரில் உதவி செய்யும் நர்ஸாக அன்று அவள் பணி புரிந்தாள். அன்றுதான் அவன் ஒரு அறுவை சிகிச்சையை மேற்கொண்டிருந்தான். ஆப்ரேஷன் முடிந்ததும்... மூக்கை மறைத்த மாஸ்க்கைக் கழற்றிவிட்டு தலையில் இருந்த தொப்பியைக் கழற்றிக் கையில் பிடித்தபடி அவளைக் கூர்மையாகப் பார்த்தான்.

"ரொம்ப நல்லா குறிப்பறிஞ்சு உதவி செய்கிறீங்களே ஆமாம் உங்க பேர் என்ன?" முறுவலுடன் கேட்டான்.

"லாவண்யா!"

"அழகான பெயர் - அதைப் போலவே அழகான பெண் நீங்க" மேலே பேசமுடியாது தடுமாற்றத்துடன் கண்களால் அவளை அளந்து கொண்டு நின்றான்.

''தாங்யூ டாக்டர்'' - பேச்சை துண்டித்துக்கொண்டு அவள் நகர்ந்து விட்டாள். சில நாட்களுக்குப் பின் அவர்களது வீட்டைத் தேடிக்கொண்டு அவன் வந்து விட்டிருந்தான்.

அவளது அண்ணி ஜெயாவுக்கு அவன் ஒரு வழியில் தூரத்து உறவுமுறை என்று சொல்லிக்கொண்டு வந்திருந்த தான்.

அண்ணனுக்கு அவனை மிகவும் பிடித்துப் போய் விட்டது.

ஒருநாள் வேலையிலிருந்து திரும்பியதும் குளித்து உடை மாற்றிக்கொண்டு கூடத்திற்கு லாவண்யா வந்த போது, அண்ணா பரபரப்புடன் மேலும் கீழும் உலாவிக் கொண்டிருந்தார்.

''உட்காரம்மா, உங்கிட்ட பேசணும்'' அண்ணனது பீடிகை அவளுக்கு மெத்த வியப்பைத் தந்தது.

அண்ணி சமையலறை வாசற்படியருகே ஒதுங்கி நின்று கொண்டிருந்தாள்.

குழந்தைகள் இன்னொரு அறையில் பள்ளிக் கூடத்தில் கொடுத்திருந்த வீட்டுப் பாடங்களைப் படிப்பதில் ஈடுபட்டிருந்தன.

''நம்ப வீட்டுக்கு அடிக்கடி வந்து போகிற டாக்டர் தினகரனைப் பற்றி என்னம்மா நினைக்கிறே?''

''ரொம்ப கெட்டிக்காரர், விரைவில் அமெரிக்கா போக இருக்கிறார்.''

''உனக்கு அமெரிக்காவிற்குப் போய் தங்கி வாழ விருப்பமிருக்காம்மா?''

''உங்களையெல்லாம் விட்டுட்டு அங்கே போய் சம்பாதித்து நான் மூட்டை கட்டவேண்டியது அவசியமா அண்ணா?''

''ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள் எங்களையெல்லாம் விட்டுட்டு புருஷன் வீட்டுக்குப் போக வேண்டிய பெண்தானே...''

''அதுக்கு இப்போ என்ன அவசரம் அண்ணா?''

''அவசரம் வந்திருக்கு; கேட்கிறேன்.டாக்டர் தினகரன் உன்னைக் கட்டிக்க ஆசைப்படுகிறார். இதைப் போல ஒரு நல்ல வரன் நமக்குக் கிடைக்கிறது கஷ்டம் அம்மா.''

எச்சிலை விழுங்கிக் கொண்டாள். அண்ணாவின் கூரிய பார்வையைச் சந்திக்க முடியாது குழம்பிப் போனாள்.

''நான் ஏற்கெனவே ஒருவரைக் காதலிக்கிறேன். எனக்கு டாக்டர் தினகரன் மேலே விருப்பம் இல்லை...'' என்று சொல்லத் துணிவிருக்கவில்லை....

''வேண்டாம் எனக்குக் கல்யாணம். என்னை வற்புறுத்தாதீங்க அண்ணா'' என்றவள் திடீரென்று விம்மி அழத்தொடங்கினாள்.

''அட!என்ன நீ பச்சைக் குழந்தையா இருக்கே! கோடீஸ்வரன் வந்து இந்தப் பெண்ணை நானே கட்டிக் கொள்வேன் என்று மாலையோட நம்ப வீட்டு வாசலில் நின்னாக்கூட உன் விருப்பத்துக்கு மாறா நான் எதுவும் செய்யமாட்டேன். கண்களைத் துடைச்சுக்கோ'' அண்ணா அன்புடன் அதட்டினார்.

அண்ணிக்கு கொஞ்சம் மனத்தாங்கலாகத் தானிருந்தது. இரண்டு மாதங்களுக்குப் பின் அவர்களிடம் வலிய வந்து பெண் கேட்க மகேந்திரன் வரப்போகிறான் என்ற ரகசியம் அப்போது அவர்களுக்குத் தெரியாது. அவர்களது காதல் அந்த ஆஸ்பத்திரியில் தான் துவங்கியது.

டாக்டர் தினகரன் அங்கு வேலைக்கு வந்து சேரும் முன்னர் நடந்த சம்பவம் அது.

சென்னைக்கு வியாபார விஷயமாக வந்திருந்த மகேந்திரன் தான் தங்கியிருந்த ஹோட்டலிலிருந்த தனது நண்பனைப் பார்த்துவரப் புறப்பட்டான். நடைபாதையில் நண்பனுடன் பேசிக்கொண்டு - டாக்ஸி ஒன்றைத் தேடிப் பிடிக்க மெல்ல நடந்து சென்று கொண்டிருந்த போது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஓட்டி சாலையி னின்று சருக்கி... அவன் பக்கம் நகர... அந்த வேகத்திலே தள்ளப்பட்டு... நடைபாதை ஓரத்திலே சாலை ரிப்பேருக்காக வெட்டியிருந்ததொரு பள்ளத்தில் மகேந்திரன் விழ வலது காலில் முறிவு ஏற்பட்டுவிட்டது. நண்பனும் மோட்டார் சைக்கிள் ஓட்டியவனும் அதிசயமாக சிறு சிராய்ப்புக் காயத்துடன் தப்பித்துக் கொள்ள அவன் அந்தத் தனியார் மருத்துவ மனையில் எலும்பு முறிவு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தான்.

"இப்போ வலி குறைஞ்சிருக்கா?" கேட்டபொழுது மயக்கத்தினின்று விழித்துக்கொண்டு அவன் லாவண்யாவைப் பார்த்தான்.

திருமணத்திற்கு பின் அடிக்கடி அவன் அந்த நிகழ்ச்சியை சொல்லி மகிழ்வது வழக்கம்.

"வலி தாங்க முடியாது துடித்துப்போய் - பின் மருந்தினால் மயக்க நிலையில் ஆழ்ந்து விட்டிருந்த நான் விழித்துக்கொண்டு உன் முகத்தைத்தான் முதலில் பார்த்தேன். இரக்கம் கலந்த கண்களும், மனதை மிருதுவாகத் தடவிய புன்னகையும், உன் இனிய குரலும்... எனக்கு எப்படி இருந்தது தெரியுமா?

"நான் சின்னப் பையனாக இருந்தபோது காய்ச்சல், தலைவலின்னு அவதிப்பட்டால் என் அம்மா பக்கத்திலே

உட்கார்ந்து நெற்றியில் மருந்து பூசித் தடவுவாங்க - அவங்க கட்டியிருக்கும் புடவைத் தலைப்பு லேசாக என் கழுத்தை வருடும்... கம்மென்ற தாழம்பூ மடல் வாசனை சுகமாக மூக்கைத் தழுவும். அவங்க விரல்கள் மிருதுவாக வருடினதும் தலைவலி மாயமாகிவிடும்"

"உங்கம்மாவைப் பார்த்ததுபோலத்தான் உங்களுக்கு நான் தெரிந்தேன்" அவன் கன்னத்தைக் கிள்ளி விளையாடுவாள் லாவண்யா.

"ஒண்ணு புரிஞ்சுக்கோ... ஒவ்வொரு மனிதனும் தன் தாயிடம் கண்டு அனுபவித்த... அன்பைத்தான்... தன் மனைவியிடமும் எதிர்பார்க்கிறான். சில துர் அதிர்ஷ்டம் பிடித்தவர்களைத் தவிர, மனிதன் பிறந்தவுடன், முதல் முதலாக பார்த்து சிரிக்கத் தெரிந்து கொள்ள உதவுகின்ற முகம் தாயுடையது."

"தாயைப் போன்ற அழகும், நற்குணமுமுடைய ஒரு பெண்ணைத் தேடிக்கொண்டு இன்னும் விநாயகர் ஆற்றங்கரை ஓரங்களில் குடி கொண்டிருக்கிறார் என்பாங்களே... அதுபோல நீங்களும் தவமிருக்க வேண்டி வந்திருக்கும்."

"அதான் அவங்களைப்போல நல்ல குணமுள்ள பெண்ணான நீ எனக்குக் கிடைச்சிட்டியே!"

"நான் உங்க தாயாரிலிருந்து வித்தியாசப்பட்டவ"

"அன்பில் துளியும் வித்தியாசப்பட்டவள் இல்லை.

"இந்தக் கால் சரியாகிவிடுமா... நான் எழுந்து முன் போல நல்லா நடப்பேனா?" பயந்துகொண்டு அவளை அவன் கேட்டபோது அவள் சிரித்தாள்.

"உங்க குழந்தைகள் பின்னாடி தோட்டத்திலே கண்ணா மூச்சி விளையாடப் போறீங்க கொஞ்ச நாளில்... சரிதானே" கன்னம் குழிய சிரித்தாள்.

"என்ன யோசிக்கிறீங்க" அவள் அதட்டினாள்.

"நீங்க சிரிக்கும்போது வலது கன்னத்தில் குழிவிழுது, அப்படிப்பட்டவங்க ரொம்ப அதிஷ்டசாலிம் பாங்க."

"எனக்கு இன்னமும் கல்யாணமாகலை - அதனாலே என் குழந்தைகளை துரத்திகிட்டு தோட்டத்திலே கண்ணா மூச்சி விளையாட முடியாதேன்னு, கவலைப் படறேன்" குறும்புத்தனமாக அவன் சிரித்தான்.

"சீக்கிரம் செய்துக்கோங்க... அந்தக் குறை தீர்ந்து விடும்." வேடிக்கையாகப் பதிலளித்துவிட்டு அவள் நகர்ந்து விட்டாள்.

இரண்டு தினங்களில் மகனைப் பார்க்க மருத்தவ மனைக்கு அவன் தாய் வந்திருந்தாள்.

நோயாளியின் நாடித்துடிப்பு - உடல் உஷ்ணம் இவைகளைக் கவனிக்க அவள் உள்ளே நுழைந்தபோது கனகம்மாள் அவளை ஏற இறங்கப் பார்த்தாள்.

"இந்த மேனா மினுக்கிகள் எல்லாம் நர்ஸ்க்குப் படிச்சு வேலையா செய்யப் போறாங்க... யாராவது வசமா கிடைச்சா கைக்குள் போட்டுக்குவாங்க... ஒட்டு மொத்த மாக படித்துவிட்டு வேலை செய்யும் பெண்களைப் பற்றிய தன் தாழ்வான அபிப்பிராயத்தை அவன் தாயார் வெளியிட்டதை அவள் கேட்டுவிட்டாள்.

முகம் மாறிப்போய் நின்ற லாவண்யாவைக் கடுமையாகப் பார்த்தாள் கனகம்மாள்.

அன்று ஆரம்பித்த கடுமை-அந்த முகத்தினின்று இன்னமும் மறையவில்லை. மருமகளாக அவள் வீட்டுக்குள் வந்த பின்னால் அது அதிகமாகி விட்ட தென்றே சொல்ல வேண்டும்.

மேனா மினுக்கி என்று மருத்துவமனையில் பார்த்தபோதே கணிப்பு செய்துவிட்டிருந்த லாவண்யா தன் மகனை கைக்குள் போட்டுக்கொண்டு தாலியைக் கட்டச் சொல்லி தங்கள் வீட்டுக்குள் புகுந்துகொண்டு விட்டாளே என்ற எரிச்சல்

மாடி குளியலறையில் தண்ணீர்க் குழாய் திறந்து விடப்பட்ட சத்தம் கேட்டதும், தன் சிந்தனைகளை உதறிவிட்டு... அரைகுறையாகக் காய்ந்துவிட்டிருந்த முடியைச் சீவி - அழகாகக் கொண்டை போட்டுக் கொண்டாள். நெற்றிபொட்டை சீர் செய்து கொண்டாள். பூஜையறைக் கூடையில் மீதமாக வைத்திருந்த முல்லைச் சரத்தை எடுத்து தலையில் சூடிக்கொண்டாள். கணவனைக் கவனிக்க அவள் தயாராக வெளியே வந்தபோது அவளுக்கு முன்னதாக கனகம் - நெற்றியோரம் பட்டையாக வெளுத்து விட்டிருந்த முடியை வாரி கோடாலி முடிச்சிட்டுக் கொண்டு - நெற்றியில் திருநீர் கீற்றுடன், வெள்ளை ரவிக்கைமீது கழுத்தோரம் தங்கச் சங்கிலி கொத்தின் வைர முகப்பை தள்ளிவிட்டுக்கொண்டு...

'என் பிள்ளை அவன் - அவனுக்குக் காப்பி பலகாரம் கொடுத்து உபசரிக்கும் உரிமை என்னுடையது....' என்று பேசாமல் பேசிய விழிகளால் மருமகளை எரிப்பது போல பார்த்துவிட்டு, சாப்பாட்டு மேஜையருகே வந்து உட்கார்ந்து கொண்டாள்.

4

அந்த வீட்டில் காலை வேளையில் இரண்டு விதமான பலகாரமாவது செய்து வைக்கவேண்டும் என்பதை வந்தநாளே லாவண்யா தெரிந்து கொண்

டிருந்தாள். மகேந்திரனுக்கு பிடித்தது அவனது தாயாருக்குப் பிடிக்காது. தாய்க்குப் பிடித்த சில பலகாரங்களை மகேந்திரன் கண்களால் கூடப் பார்க்க மாட்டான். மருமகள் வந்துவிட்டாளே? கொஞ்சம் அடுப்படியில் உலவட்டும் என்பது கனகம்மாளின் கெட்ட எண்ணம்.

காலை வேளை காப்பி பலகாரத்திற்கு பலவித பக்க பதார்த்தங்களையும் அவள் எதிர்பார்த்தாள்.

கந்தசாமி விடியற்காலையிலேயே தோட்டத்திற்குள் நுழைந்து அறுத்து வந்து நடையில் கிடந்த பெஞ்சிமீது வைத்திருந்த நுனி வாழை இலைகளைத் துடைத்துக் கொண்டு வந்து மேஜைமீது பரத்திவிட்டு தண்ணீர் தெளித்தாள் லாவண்யா.

தான் தயாரித்த பலகாரங்களைப் பாத்திரங்களில் வைத்து எடுத்துக் கொண்டு வந்து மேஜைமேல் வைத்தாள்.

ஆவிபறந்த இட்டலிகளை கனகம்மாள் மெல்ல கையால் தொட்டுப் பார்த்தாள்.

மல்லிகைப் பூவாக, அவை மெத்தென்று இருந்தன.

ஆனாலும் குறை சொல்லாவிட்டால் அவளுக்குப் பொழுதே போகாதே?

"இன்னும் கொஞ்சம் உளுந்து போட்டிருக்கணும்... நீயா அரைக்கிறே? மிசின் அரைக்கிறது. அந்தக் காலத்தில் நான் இந்த வீட்டில் பட்ட சிரமமெல்லாம் இப்போ உனக்கு ஏது? மின் விசிறி...பிரிட்ஜ் இருக்கு. சாணத்தில் எரியும் காஸ் அடுப்பை வேறே உனக்காக ஏற்படுத்திக் கொடுத்திருக்கான் மகேந்திரன்; அப்படியிருந்தும் சமையலை சட்டுபுட்டுனு உன்னால் செய்ய முடியற தில்லை..."

"என்னம்மா? என்ன சங்கதி-" என்று சிரித்தபடி கேட்டுக்கொண்டு நாற்காலியில் தாயின் எதிர்ப்பக்கமாக உட்கார்ந்து கொண்டான் மகேந்திரன்.

"நீ போய் மத்ததுகளை எடுத்துட்டு வா... நான் இவனுக்குப் பரிமாறறேன்" என்று மருமகளை ஏவி விட்டாள் கனகம்.

ஆப்பத்தை எடுத்து இலையில் போட்டு சர்க்கரை தூவி தேங்காய்ப் பாலை தாராளமாக ஊற்றினாள். அதைத் தானே பிட்டு மகனுக்கு ஊட்டிவிட வேண்டும் போன்ற கண்மூடித்தனமான பாசம் அவளுக்கு. தன் இலையில் இட்டலிகளை எடுத்து வைத்துக்கொண்டு சட்டினியைப் பரிமாறிக் கொண்டாள்.

குற்றமே குறியாக இருந்த அவளது கண்களில் அந்தக் குறை தென்பட்டுவிட்டது.

மிளகாய்ப் பொடியைக் கொண்டு வந்து வைத்த மருமகள் நல்லெண்ணைக் கிண்ணத்தை வைக்க மறந்து விட்டிருந்தாள்.

"லாவணி!" பெருங்குரலில் கத்தினாள் கனகம்.

"உனக்கு ஏன் இப்படி அடிக்கடி மறதி? நேத்து பகல் சாப்பாட்டின்போது எலுமிச்சங்காய் ஊறுகாயை எடுத்து வைக்க மறந்து போனே, ஒரு சின்ன வேலையைக்கூட செய்கிறதிலே ஏன் இப்படி தவறுகள்? அப்படி உன் மனசைக் குழப்பிக்கிட்டிருக்கிற சங்கதி என்னவாம்? படபடவென்று அதட்டினாள்.

நெய் கிண்ணத்தையும் - எண்ணைப் பாத்திரத்தையும் கொண்டு வந்து வைத்துவிட்டு மாமியாருக்குப் பிடித்த அளவில் பால் கலந்து காப்பியை நுரை பொங்க இதமான

அப்பொழுதும் கனகம்மாளின் முணுமுணுப்பு அடங்கவில்லை.

"மகேந்திரா! உன் மூஞ்சி ஏன் இப்படி உப்பி இருக்கு. ராத்திரி நல்லா தூங்கலையா?" தாய் மிகவும் அனுதாபத்துடன் கேட்டபடி இட்டலியைப் பிட்டு சாம்பாரில் முக்கி விழுங்கிக் கொண்டிருந்தாள்.

"ஆமா அம்மா! விடிஞ்சதும் என் வேலைகளைக் கவனிக்க முடியாம செத்துப்போன எவனையோ போய் பார்த்து அடையாளம் தெரிஞ்சவனான்னு சொல்லணுமாம். அதை நினைச்சு" மேலே பேச முடியாது இலையைப் பார்த்தான் மகன்.

"ராத்திரி உன் புருஷன் தூங்காம வேதனைப்பட்டு கிட்டு இருந்தப்போ, நீ கொஞ்சம ஏதாச்சும் பணி விடை செய்து தூங்க உதவாம எருமை மாடு போல, குறட்டை விட்டுகிட்டு கிடந்தியா" மேஜையருகே நின்ற மருமகளைச் சாடினாள் கனகம்மாள்.

லாவணி முகம் சிவந்து போனாள். நெஞ்சுவரை குமுறிக்கொண்டு வந்த கோபத்தை விழுங்கிக்கொண்டாள்.

பின் நடையில் கையைக் கட்டிக்கொண்டு நின்ற கந்தசாமிக்குப் பொறுக்கவில்லை. துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு காதுபடாத தூரத்தில் இருக்க அவன் கிணற்று மேடைப் பக்கம் நழுவி விட்டான்.

"லாவண்யா தலைவலி மருந்து தடவி, நெற்றியைப் பிடிச்சுவிடறேன்னு சொன்னா, நான் வேண்டாம்னுட் டேன். காலையிலே அவள் எனக்கு முன்னாடி எழுந்து வீட்டு வேலைகளைக் கவனிக்கணுமே?"

தாயார் ஆத்திரத்தில் குமைந்தாள். எத்தனை வெளிப்படையாக எடுத்துச் சொன்னாலும் இவனுக்கு

மனைவி மேல் ஏற்பட்டிருக்கும் மோகம் அடங்க மாட்டேன் என்கிறதே? அவ செய்கிற தப்பு எதுவும் கண்களில் படறதில்லையே?"

அது சமயம் வாயிற் கதவு லேசாகத் தட்டப்பட்டது.

லாவண்யா சென்று திறந்தாள். கோடி வீட்டு பள்ளிச் சிறுமி கற்பகம் ஓடி வந்ததில் மூச்சிறைக்க உள்ளே வந்து நின்றாள்.

"அக்கா! உங்களை அம்மா அவசரமா கூப்பிட்டு கிட்டு வரச் சொன்னாங்க. என் அக்காவுக்கு உடம்பை என்னமோ பண்ணுதாம். அழுகிறாங்க-வந்து பார்த்து தைரியம் சொன்வீங்கன்னா தல்லதுன்னாங்க"

"ஏ கற்பகம். இங்கே வா! என்ன சங்கதி?" கனகம் பெரும் குரலில் அதட்டினாள்.

கல்லுப்பிள்ளையார் போல வீட்டு எஜமானி அவள் இருக்கும்போது இந்தச் சின்னப் பெண் அவளிடம் வந்து கேட்காது லாவண்யாவிடம் என்ன உளறுகிறாள். கட்டுக் கொள்ளாது அவளுக்குக் கோபம்.

"பாட்டி! குளிகுளிக்க என் அக்கா ஊரிலிருந்து வந்திருக்கில்லையா? அவங்களுக்கு உடம்புக்கு முடியலை. வயிற்றை வலிக்குதுன்னு அழுகிறாங்க. ஆஸ்பத்திரிக்கு எடுத்திட்டு போகனுமான்னு கொஞ்சம் இவங்களை வந்து பார்த்துட்டு போகச் சொன்னாங்க அம்மா.." சிறுமி பயத்தில் குளறினாள்.

"போய் உங்கம்மாகிட்டே சொல்லு. என் மருமகள் லாவண்யா முன்னாள் நர்ஸ் வேலை பார்த்தவதான். ஆனால் இப்போ எங்க வீட்டு மருமகள். அவ கண்டவங்க வீட்டுக்குள்ளே வந்து யோசனை சொல்லிகிட்டிருக்க முடியாது. இந்த ஊரில் டாக்டர் இல்லையா? மருத்துவ

வசதிகள் இல்லையா? அங்கே போய் யாரையாச்சும் அழைக்சுகிட்டு போ'' சீறினாள்.

லாவண்யா பரிதாபமாகத் தன் கணவனைப் பார்த்தாள். மகேந்திரன் இந்த விஷயத்தில் தாயுடன் ஒத்துப் போகிறவன். தன் மனைவி படிதாண்டாத பத்தினியாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறவன். இடது கையில் இன்னொரு ஆப்பத்தை எடுத்து இலையில் போட்டுக் கொண்டு மௌனமாக சாப்பிடத் தொடங்கினான்.

தொழில் ரீதியான கடமை லாவண்யாவின் மனதை நெருடியது. நர்ஸ் வேலைக்குப் படித்தவள் கல்யாணம் செய்துகொண்டு வேலையை விட்டுவிட்டாள். ஆனால் தன்னால் ஆன உதவியை மற்றவர்களுக்கு செய்ய முடியாத ஒரு கட்டுப்பாடான குடும்பத்திலே வந்து சிக்கிக்கொண்டு விட்டிருக்கிறாளே?

''பாட்டி! அப்ப அக்கா வரமாட்டாங்களா'' மறுபடியும் கேட்டாள் அந்தச் சிறுமி.

தன் வயதைச் சுட்டிக் காட்டி அவளைப் பாட்டி என்று அழைத்தால் கனகத்திற்கு கொஞ்சமும் பிடிக்காது.

''பாட்டியுமில்லை - கீட்டியுமில்லை-உன் பள்ளிக் கூடத்தில் பெரியவங்களிடம் எப்படி மரியாதையா பேசறதுன்னு சொல்லித் தறதில்லையா? இந்த வீட்டு பெரியம்மா தன் மருமகளை அனுப்ப மாட்டேன்னு சொல்லிட்டாங்கன்னு போய் உன் அம்மாகிட்டே சொல்லு... உறுமினாள்.

தயக்கத்துடன் தன் பக்கம் திரும்பிய லாவண்யாவை கனகம்மாள் கோபத்துடன் உறுத்து விழித்தாள்.

''உன் மூஞ்சி ஏன் இப்படிச் சுருங்கிப் போகணும்... நீ இங்கே குடித்தனம் பண்ண வந்தியா... இல்லே ஒரு

கொத்து வேப்பிலையையும் ஒரு கத்தியையும் கூடையில் போட்டுகிட்டு ஊரில் உள்ள பெண்களுக்கு பிரசவம் பார்க்க வந்தியா? நர்ஸ் வேலை மேலே உனக்கு ஆசையிருந்தால் நீ என் பிள்ளையைக் கட்டிகிட்டிருக்கக் கூடாது.''

மகேந்திரனது மௌனம் லாவண்யாவின் மனதை துயரத்தில் ஆழ்த்தியது.

இது மூன்றாவது முறையாக நடக்கும் நிகழ்ச்சி.

அந்த வீட்டுக்கு வந்த புதிதில் அடுத்த தெருவில் ஒரு பெண் பிரசவ வேதனையில் துடிக்கிறாள் என்று அவளது தாய் ஓடிவந்து அழைத்தபோது மாமியாரிடம் சொல்லிக் கொள்ள நேரமின்றி... வேலைக்காரியை வீட்டைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு மருந்துப் பெட்டியுடன் விரைந்து ஓடிவிட்டாள். கொஞ்ச நேரத்தில் பிரசவம் ஆகிவிட்டது. தாயும் சேயும் நலமாக இருப்பதை பரிசோதித்து திருப்தியிடன் வீட்டுக்குத் திரும்பும்போது அங்கே ஒரு பூகம்பம் ஆரம்பித்து விட்டிருந்தது.

மகேந்திரன் சாப்பிட வீட்டுக்கு வந்திருந்தான்.

''நில் அங்கேயே. ஊரார் தீட்டையெல்லாம் வீட்டுக்குள்ளே கொண்டுவர வேண்டாம்'' கத்திய மாமியார் அவளை பின் பக்கமாகச் சென்று கிணற்றடியில் பச்சைத் தண்ணீரில் முழுகிவிட்டு வரச்செய்தாள். மாற்றுடையில் கணவனுக்கு சோறு பரிமாற வந்தவளிட மிருந்து பாத்திரத்தை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு அனல் பொறி பறந்த கண்களால் அவளை சுட்டாள்.

''என்ன துணிச்சல் உனக்கு. பத்து நிமிஷம் படுக்கலாம்னு தலை சாய்ச்சேன். அப்படியே தூங்கிட்டேன். அதனாலே என்கிட்ட கூட சொல்லிக்காம யாரோ கூப்பிட்டாங்கன்னு கிளம்பிட்டியே-இது வீடா

சத்திரமா? எனக்குத் தெரிஞ்சாகணும். உரத்த குரலில் இரைந்தாள்.

"என்னாலே ஏதோ உதவ முடியும் என்கிற நம்பிக்கையாலே அவசரத்துக்குக் கூப்பிட்டாங்க..." மெல்லிய குரலில் லாவண்யா பதிலளித்ததும் மாமியார் காளி அவதாரம் எடுத்து விட்டாள்.

"அப்படின்னா நீ பட்டணத்திலேயே இருந்து கொண்டு உன் படிப்புக்குண்டான கடமையைச் செய்யறது தானே? எனக்கு மருத்துவச்சி மருமக தேவையில்லை. ஒழுங்கா இந்த வீட்டுக்குண்டான மரியாதையோடு இருந்தால்..." அவள் மேலே கத்துமுன் மகன் குறுக்கிட்டான்.

"லாவண்யா... அம்மா சொல்கிறதிலும் நியாயம் இருக்கு. உன் தொழிலைத் தியாகம் செய்ய ஒப்புக் கொண்டு தானே நீ என்னைக் கல்யாணம் செய்துகிட்டே? இனி உன் கடமை இந்த வீட்டோடு அடங்கிப் போச்சுன்னு தெரிஞ்சுக்கிறது நல்லது. மறுபடி இதுமாதிரி ஒரு நிகழ்ச்சி நடக்கக் கூடாது. இந்த வீட்டுப் பெண்கள் அனாவசியமாக வீட்டை விட்டு வெளியே வரமாட்டாங்க. அப்படி உனக்கு வெளியே போக ஆசை ஏற்பட்டால்-நான் வண்டியிலே கூட்டிக் கொண்டு போவேன். ஒரு சினிமாவுக்கோ, ஒரு கல்யாண வீட்டுக்கோ நீ என்னோடு ஜோடியா போறதுதான் மரியாதை...அப்பா ரொம்ப செல்வாக்குடன் வாழ்ந்தவர். அவர் இல்லாம அம்மா வெளியே தனியா எங்கேயும் போனதில்லை..."

"கோவிலுக்குக் கூடவா?" மெல்லிய குரலில் லாவண்யா கேட்டபோது மாமியாரின் முகம் கடுமையாகியது.

"இது திமிரான கேள்வி, இப்போ கூட நான் தனியா கோவிலுக்குப் போவதில்லை. வீட்டு வேலைக்காரி துணையோடத்தான் போற பழக்கம்-என் கணவர் உசிரோட இருந்தப்போ கோவிலுக்குப் போகக்கூட அவர் உத்தரவோடத்தான் கிளம்புவேன். ஏன்னா-கணவனுக்கு மேலே கடவுள்னு இந்த வீட்டுப் பெண்கள் நம்பறதில்லை" கனகம்மாள் சீறி விழுந்தாள்.

சுடச்சுட மாமியாருக்கு பதிலளிக்க அவள் நாக்குத் துடித்தது. வீணாக சண்டையை வளர்ப்பானேன்- மனக் கசப்பைப் பெருக்கிக் கொள்வதில் லாபம்? மௌனமாக இருந்து விட்டாள்.

கணவனே கண்கண்ட தெய்வம். கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்ற பழமொழிகள்-மிகப் பழைய மொழிகள். கணவன் மனைவி இருவரும் வாழ்க்கையால் சரிசமமானவர்கள். இருவரும் பல தவறுகள் செய்யக்கூடிய சதாரண மனிதப் பிறவிகள்-மகாலக்ஷ்மி என்று மனைவிக்கு கணவன்கோயில் கட்டத்தேவையில்லை. கணவன் கடவுள் என்று ஒரு பெண் தன்னைத்தானே தாழ்த்திக் கொள்வதும் தவறு.

அண்ணன் அவளுக்கு சிறுவயதிலேயே போதித் திருந்த முற்போக்கான கருத்துகள்-மனதில் வேரூன்றிக் கிடந்தன. அவைகளை ஒரு நிமிஷத்தில் அவள் உதறிவிட முடியாது... உதறிவிட்டு கட்டுப் பெட்டியான மாமியார்... கணவன் இருவரிடமும் , சண்டை போட்டுக் கொண்டு தன் வாழ்க்கையை வீணாக்கிக் கொள்ளவும் இயலாது. மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாத ஒரு இரண்டுங் கெட்டான் நிலையில் வந்து அவள் மாட்டிக் கொண்டிருக்கிறாள். அவளது கணவன் தன் குறுகிய மனப்பான்மையை ஒரே நாளில் மாற்றிக் கொண்டு அதிசயம் சாதிக்கப் போவதில்லை... பொறுமையாக இருந்து நாளாவட்டத்தில் அவள்தான் அவனது பத்தாம்பசலித்தனத்தைப் போக்க வேண்டும்.

வீடு தேடி வந்தவர்களுக்கு அவள் செய்ய நினைத்த உதவிகளுக்கும் மாமியார் முட்டுக்கட்டை போட்டு விட்டிருந்தாள்.

எதிர் வீட்டுப்பெண், காய் நறுக்கிக் கொண்டிருந்த போது அரிவாள் மனையில் கை விரலைக் காயப்படுத்திக் கொண்டு தன் புடவைத் தலைப்பால் ஒழுகிய ரத்தத்தை அழுத்திக்கொண்டு பதைபதைத்தவளாக ஓடி வந்தாள். அக்கா... கட்ட விரலில் காயம்பட்டுடுச்சு... என்று கண்கலங்க பயந்து கொண்டு வந்து நின்றவளை அவள் சமாதானப்படுத்தினாள். தன் மருந்துப் பெட்டியைத் திறந்து... மருந்து... பஞ்சு பிளாஸ்த்திரி இத்யாதிகளை எடுத்து காயத்தை சுத்தப்படுத்தி மருந்து தடவி பிளாஸ்த்திரி போட்டு விட்டாள். கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு - நன்றி அக்கா என்று பற்களைக் காட்டினாள் அந்தப் பெண்.

''இத்தோடு போதாது... இது முதல் உதவி. நீ கடைத் தெருவுக்கு போய் டாக்டரிடம் சொல்லி விஷ வலிப்பு வராதிருக்க தடுப்பு ஊசி போட்டுக்கணும். மறக்காதே...'' அவளது முதுகை ஆதரவாகத் தட்டி அனுப்பிவிட்டு கைகளைக் கழுவிக்கொண்டு உள்ளே வந்தாள்.

இடுப்பில் ஊன்றிய கைகளுடன் நின்ற கனகம்மாள் அவளை எரித்து விடுவதுபோலப் பார்த்தாள்.

''வெளியிலே போகவேணாம்னு சொன்னதும்- வீட்டையே ஆஸ்பத்திரியாக்கிட்டியா? கல்லெறிகிற தூரத்திலே கடைத்தெருவில் டாக்டர் கிளினிக் வச்சிருக்கார் அவர் கிட்ட போகறதுக்கு இவங்களுக்கு என்ன கொள்ளை. இனி இந்த வீட்டுக்குள்ளே நோய், நொடி, காயம் - கட்டின்னு எவளாவது நுழைஞ்சா நான் பொல்லாதவளா இருப்பேன்'' கூக்குரலிட்டாள்.

வெளியிலும் லாவண்யா போய் உதவ முடியாது- வீட்டுக்கு வந்தவர்களின் அறுத்த கைக்கு சுண்ணாம்பைக் கூட எடுத்துத்தர முடியாது, அப்படி ஒரு கண்டிப்பு.

அவர்களிருவம் காப்பி பலகாரத்தை முடித்துக் கொள்ளும்வரை மௌனமாக மாமியாரின் ஏவலுக்குக் காத்துக் கொண்டு சிறிது தூரத்தில் பணிவாக நின்று கொண்டிருந்தாள்.

''போய்ட்டு வரேன் அம்மா-நான் முதல்லே சப்-இன்ஸ்பெக்டரை பார்த்துட்டு அவரோட டவுன்வரை போகணும்''

''டவுனுக்கு அந்தக் காரியத்துக்குப் போகும் முன் காரிலே போக வேணாம். போலீஸ் ஸ்டேஷனில் உன் காரைநிறுத்திவிட்டு அவங்களுடைய ஜீப்பில் ஏறிக்கிட்டு வந்து இங்கே இறங்கிக்கோ. கந்தசாமி அண்டாவிலே வெந்நீர் தயாரா எடுத்து வச்சிருப்பான். தலை முழுகிட்டு வேறே உடுத்திகிட்டு நீ போலீஸ் ஸ்டேஷனுக்கு போய் காரை எடுத்துகிட்டு கடையைத் திறக்கப் போகலாம். எவனோ செத்தவன் தீட்டு நமக்கு வேணாம்.'' தாயார் உத்திரவிட்டாள்.

''அப்படித்தான் செய்யப் போறேன் அம்மா'' என்று கூறிவிட்டு மகன் கிளம்பினான்.

நமக்கு சொந்தமில்லாத இறந்தவன் ஒருவனுடைய முகத்தைப் பார்த்தாக் கூடவா தீட்டு ஒட்டிக்கும்.

'படித்திருந்தும் இவருக்குக் கூடவா இந்தப் பத்தாம் பசலித்தனம்?'

தனக்குள் எண்ணியபடி வாயில்வரை வந்து அவனுக்கு வழிவிட்டாள். ஆனால் மனதில் இனங்காணாத ஒரு குழப்பம்-ஏன் என்று அவளுக்கே புரியவில்லை.



மகேந்திரன் வழி நெடுகிலும் பேசவில்லை. காலை வேளையில் கடையைத் திறந்து வியாபாரத்தை கவனிப் பதை விட்டு இப்படி ஒரு வேலை குறுக்கிட வேண்டுமா? மனம் ஆதங்கப்பட்டது.

செத்து நாறிப் போய் கிடப்பவனைப் பார்க்க வேணுமே என்று அடிக்கடி நெஞ்சிலே ஒரு அருவருப்பு நெருடிக் கொண்டிருந்தது.

அரசு ஆஸ்பத்திரி உள்ளே ஜீப்பை ஓட்டிச்சென்று ஒரு மரத்தடியில் நிறுத்தினார் சப்-இன்ஸ்பெக்டர்.

''இறங்குங்கோ-பிணக்கிடங்கு பின் பக்கத்து கட்டடத்திலிருக்கு'' என்று கூறியதைக் கேட்டு திடுக் கிட்டுப் போனான் மகேந்திரன். பரீட்சை நடக்கு மிடத்திற்குள் பயந்துகொண்டு நுழையும் மாணவனைப் போல நெஞ்சு திக்திக்கென்று அடித்துக்கொள்ள சந்திரசேகரன் பின்னால் தயக்கமுடன் நடந்தான்.

''உங்கள் வேலையிலிருந்து உங்களை நான் இழுத்துக் கொண்டு வந்திருக்கேன், மன்னிக்கவும். நம்ப கிராமத்திலே நீங்க ஒரு முக்கியமான மனிதர். நாட்டாண்மை முருகேசன், மளிகைக்கடை மாசிலாமணி, சைக்கிள் ரிப்பேர் கடை கிருஷ்ணன் என்று பலரையும் நேற்று மாலையே அழைத்துக் கொண்டு வந்து காட்டி விட்டேன். அவர்களுக்கு இறந்தவனை யார் என்று சொல்ல முடியவில்லை. நீங்களும் மருந்துக்கடை ரங்கனும் பார்த்துச் சொல்லிட்டா வேலை முடிஞ்சுட்டது. முகம் முழுதும் விகாரமாகிடுமுன் போட்டோ எடுத்துட்டோம். அதை பத்திரிகையில் போட்டு விவரமாக

பிணம் அகப்பட்ட செய்தியோட நாள் ஏடுகளில் பிரசுரிக்க ஏற்பாடு செய்துவிட்டேன். வெளியூர்வாசிகள் செத்தவனுக்கு வேண்டியவர்கள் யாராவது இருந்தா அதைப் பார்த்துட்டு அடையாளம் கண்டு கொண்டு வந்து சொந்தம் கொண்டாடும் வரை உடலைப் பத்திரமா பனிக்கட்டிகளிடையே பாதுகாக்க முயற்சி செய்கிறோம். எங்கள் பிழைப்பே இப்படித்தான். கொஞ்ச நாள் ஊரில் சண்டை, சச்சரவு, திருட்டு, கொலை ஏதும் இல்லாது அமைதியா இருக்கும். அப்போ நாங்களும் நிம்மதியா மற்ற பணிகளை கவனிச்சுக் கொண்டிருப்போம். பிறகு திடீர்னு இங்கே ஒரு பெண் கொலை, அங்கே ஒரு தீ விபத்துன்னு ஏதாவது ஏற்படும். பிறகு ஒரே ஓட்டந்தான். வாயில் ஈ பூந்தது தெரியாம அலைஞ்சுகிட்டிருப்போம்-'' சிரித்தார் சப்-இன்ஸ்பெக்டர்.

அவர் பின்னால் பலிபீடத்து ஆடுபோல மெள்ள நடந்து கொண்டிருந்தான் மகேந்திரன்.

முகத்தை சுருக்கியபடி ஆஸ்பத்திரியின் அந்த கட்டடத்திற்குள் நுழைந்தான்.

சப்-இன்ஸ்பெக்டரின் வருகைக்காக அங்கே காத்திருந்த காவல்துறை அதிகாரிகள் இருவர் அவருக்கு வணக்கம் தெரிவித்தனர். ஆஸ்பத்திரியின் அந்தப் பகுதியின் தலைவர் விரைவாக அங்கு வந்து சேர்ந்தார்.

ஆஸ்பத்திரியின் ஊழியர் ஒருவர் பூட்டியிருந்த பெரியதான அறையின் கதவைத திறந்துவிட்டார், அனைவரும் உள்ளே சென்றனர். சில்லென்று உள்ளே ஏ.சி.யின் குளிர்ச்சி. ஹால் போன்றதொரு அமைப்பிலிருந்த அந்த அறைக்குள் பளிங்குக்கல் பாவிய சில மேஜைகள் கிடந்தன. ஏ.சி.யின் குளிர்ச்சியையும், மருந்துகளின் வாசனையையும் மீறி ஏதோ ஒரு நாற்றம் முகத்தில்

மோதுவது போன்ற உணர்வில் மூக்கை சுறுக்கிக்கொண்டு மெல்ல உள்ளே எல்லோர் பின்னாலும் வந்தான் மகேந்திரன்.

ஒரு மேஜைமேல் துணியால் மூடப்பட்டுக் கிடந்ததொரு பிணத்தைக் கண்டதும் அவனுக்குள் ஒரு அதிர்ச்சி.

"சொக்லாம் பேட்டையிலிருந்து விடியற்காலை எடுத்து வந்தாங்க. தற்கொலையாம் போஸ்ட் மார்டம் செய்யணும்-தலைவர் உத்திரவுக்குக் காத்திருக்கேன்." என்றார் டாக்டர்

ஏதோ வாழைக்காயை நறுக்குவதுபோல எந்தவிதச் சலனமும் இன்றிப் பேசிய அவர் முகத்தை வியப்புடன் பார்த்தான் மகேந்திரன். நல்லவேளை அவன் டாக்டர் தொழிலுக்குப் படிக்கவில்லை என்று அதுசமயம் மனதில் ஒரு நிம்மதி.

பூட்டைத் திறந்த ஆஸ்பத்திரி ஊழியர் கையோடு தூக்கி வந்த கனமான நோட்டுப் புத்தகத்தின் ஏடுகளைப் புரட்டினார் டாக்டர். "எண்பதாம் நம்பர்" என்று தமக்குள்ளே சொல்லிக்கொண்டு, சுவருக்கு ஒட்டினாற் போல அமைக்கப்பட்டிருந்த இழுப்பறைக்கு அருகே வந்தார், அவர். மார்பளவு இழுப்பறையை இழுத்துவிட்டு மேலேயிருந்த குழல் விளக்கை பளிச்சென்று எரிய விட்டார்.

"இதுதான் உங்க ஆசாமி, பார்த்துக்கோங்க" என்று முறுவலித்தார் டாக்டர்.

சப்-இன்ஸ்பெக்டர் பின்னால் தயக்கமாக நின்ற மகேந்திரன் முன்வந்து அந்த முகத்தை உற்றுப் பார்த்தான்.

அவனது நெஞ்சு பக்பக்கென்று அடித்துக் கொண்டது. எச்சிலை விழுங்கிக் கொண்டு... நன்றாகக் கவனித்தான்.

முகம் ஊதிப்போயிருந்தது... ஆனாலும் ஓரளவுக்கு உருக்குலையாது காப்பாற்றி வைக்கப்பட்டிருந்தது. ஐஸ்துண்டங்களில் பாதுகாக்கப்பட்டிருந்ததால் அவன் எதிர்பார்த்தபடி அழுகி நாற்றமடிக்கவில்லை. ஆனாலும் அவனுக்கு வயிற்றைக் குமட்டியது.

இடது பக்கமாக நின்று கவனித்தான். பின்னர் வலது பக்கம் நகர்ந்து நின்று கவனித்தான்.

உகும்! செத்துப் போனவனை அவனுக்குத் தெரியவே தெரியாது. அந்தப் பக்கத்தில் எதேச்சையாகப் பார்த்த முகமாகக் கூட தெரியவில்லை.

தலையைப் பலமாக அசைத்தான். "எனக்குத் தெரியாத ஆள் ஸார்" என்றான்.

அப்பாடா என்று மனதிலே ஒரு நிம்மதி ஏற்பட்டது.

டாக்டருக்கு நன்றி தெரிவித்துவிட்டு மகேந்திரனுடன் வெளியே வந்தார் சப்-இன்ஸ்பெக்டர்.

"என்னை வீட்டருகில் இறக்கி விட்டுடுங்க... நான் போய் ஸ்நானம் பண்ணிட்டு ஸ்டேஷனில் நிறுத்தி வச்சிருக்கிற காரை எடுத்துட்டு கடைக்குப் போகணும்..."

மகேந்திரன் கூறியதைக் கேட்டு ஜீப்பை ஓட்டிக்கொண்டு வந்த சந்திரசேகரன் உரக்கச் சிரித்து விட்டார்.

"உங்களைப்போல இந்தச் சாங்கியங்களை நான் நம்புவதில்லை. அப்படி நம்பினால் ஒரு நாளைக்கு நான் பத்து தடவையாவது தலை முழுக வேண்டியிருக்கும்..." என்றார்.

"அம்மாவுக்கு இவைகளில் நம்பிக்கை. அவங்களை திருப்தி செய்ய வேண்டியது என் கடமையாச்சே!"

"அம்மாவைக்கூட இந்தக் கேஸ் விஷயமா போலீஸ் அதிகாரி ஒரு சமயம் பார்க்க வரக்கூடும்..." என்று சந்திரசேகர் கூறி முடிப்பதற்குள், "என் தாயாரையா...? அவங்களுக்கு போலீஸ் என்றாலே பிடிக்காதே, எதுக்கு?" கலவரத்துடன் கேட்டான் மகேந்திரன்.

'எவனோ ஒருவன் வந்து வடவாற்றில் விழுந்து செத்து வைத்தது போதாது போல ஊரில் உள்ளவர்களை யெல்லாம் போலீஸ் விசாரிப்பு செய்ய வைத்து விட்டானே' உள்ளூர எண்ணி வெகுண்டான்.

போலீஸ் என்றாலே நம் ஜனங்களிடையை ஒரு கலவரம். சின்ன வயதில் அம்மா சாதம் ஊட்டும்போது சாப்பிடு இல்லாட்டி போலீஸ்காரர்கிட்டே பிடிச்சு கொடுத்திடுவேன் என்று பயமுறுத்தியதின் விளைவோ என்னவோ? கொஞ்சம் போலீஸ் ஸ்டேஷன்வரை வந்து ஒரு தகவல் தந்துட்டு போறீங்களான்னு யாரையாவது கூப்பிட்டால் எப்படி அரண்டு போயிடறாங்க? இன்னொரு வேடிக்கை தெரியுமா? குற்றம் புரிந்து நன்றாகத் தேர்ந்து விட்ட ஒரு குற்றவாளியை ஸ்டேஷனுக்கு வரும்படி அழைத்தால்... கிராப்புத் தலையை சிலுப்பிக் கொண்டு, லுங்கியை மடித்துக் கட்டிக்கொண்டு மார்பை நிமிர்த்தியபடி மாமியார் வீட்டுக்குள் நுழைவதுபோல, 'என்ன வாத்தியாரே எதுக்கு கூப்பிட்டியாம்?" என்று பல்லைக் குச்சியால் குத்தியவாறே வந்து மேஜைமுன் நிற்பான். அப்படியும் ஒரு ரகம்" சந்திரசேகரன் சிரித்தார். மகேந்திரனால் கூட சிரிப்பில் கலந்துகொள்ள முடியவில்லை.

இப்போது போலீஸ் அவனது தாயாரை எதற்குப் பார்க்க வேண்டும்? ஜீப்பை நிதானமாக ஓட்டிக் கொண்டு சப்-இன்ஸ்பெக்டர் பேசினார்.

"இறந்தவனது உடைகளை சோதித்துப் பார்த்தோம். ஏதாவது விசிடிங் கார்டு இருந்தால்... முகவரியைக் கண்டுபிடிக்கலாமே என்கிற ஆவல்தான்... பாண்ட்பையில் தோலால் ஆன பழுப்புவண்ண வாலாட் ஒன்று கிடைத்தது. தண்ணீரில் அதுவும் நனைந்து உப்பியிருந்தது. மெள்ளத் திறந்து ஆராய்ந்து பார்த்தோம். கொஞ்சம் சில்லரை ஒரு பகுதியில் கிடைத்தது. இன்னொரு பகுதியில் ஒரு பிளாஸ்டிக் உறை... அதற்குள் ஒரு புகைப்படம். பத்திரமாக நீர் பட்டு சிதைந்து விடாது அப்படியே புத்தம் புதிதாக இருந்தது."

அது ஒரு இளம்பெண்ணின் வண்ணப்படம். பின்னால் மார்ச் மாதம் பதினெட்டாந் தேதி1984-வது வருஷம் என்று எழுதப்பட்டிருந்தது. அதைத் தவிர எழுதியது இறந்தவனா - அல்லது அந்தப் பெண்ணா என்ற விவரம் தெரியவில்லை. அந்தத் தேதியன்று அவர்களிரு வரும் சந்தித்துக் கொண்டார்களா? அதன் அர்த்தம் என்ன? ஒன்றும் புரியவில்லை. சர்க்கிள் அவர்களிடம் இந்தக் கேசைப் பற்றி விவரமாக சொல்லிக் கொண்டிருந்தபோது அந்த வாலட், புகைப்படம் முதலியவற்றைக் காட்ட வேண்டியிருந்தது. அவருக்கு ஒரு யோசனை ஏற்பட்டது. ஒரு சமயம் அந்தப் பெண்ணைத் தெரிந்தவர்கள்... யாராவது இந்த ஊரில் இருந்தால்...

இறந்துபோனவன்... பட்டணத்தைச் சேர்ந்தவன் போல இருக்கிறான். அவன் இங்கே ஏன் வந்தான்? அந்தப் பெண்ணைத் தேடிக்கொண்டு வந்திருக்கலாம் இல்லையா?... அவள் அவனுக்கு ஏதோ உறவினனாக இருக்க வேண்டும் என்று நினைத்தார்..."

"அப்படியா... அந்தப் போட்டோவிலிருந்த பெண்ணுக்கு வயது சுமார் எத்தனை இருக்கும்... பார்க்க எப்படி இருந்தாள்?"

"வயது சுமார் இருபத்தஞ்சு என்பது எங்கள் கணிப்பு. புகைப்படக் கடையில் எடுத்த படமல்ல. இறந்த போனவன் ஒரு சமயம் அவளைத் தன் கையிலிருந்த காமிராவில் எடுத்திருக்க வேண்டும். பட்டணத்தில் எதோ ஒரு வீட்டு மாடியில் எடுத்த போட்டோ என்பது என் ஊகம். பின்னால் பல மாடிக் கட்டடங்கள் தெரிகின்றன. அவள் ஒரு மாடியின் கைப்பிடி மீது சாய்ந்த வாக்கில் நின்று கொண்டிருக்கிறாள். வலது கையில் கடிகாரம், இடது கையில் வளையல்கள், கழுத்திலே சன்னமான ஒரு சங்கிலி. அதில் தாலி தொங்குகிறதோ... இல்லையோ- புடவை அத்தனை மெலிதாக இருக்கவில்லை. சின்னஞ்சிறு மஞ்சள் வண்ண பூக்கள் போட்ட ஊதாவண்ணச் சேலை அணிந்திருந்தாள். அதற்கேற்ற ஊதாவண்ண ரவிக்கை... பெண் பார்க்க அழகாக இருக்கிறாள்" மகேந்திரனின் நெஞ்சு ஏனோ படபடத்தது.

"இவைகளையெல்லாம் என்னிடம் சொல்லு கிறீங்களே - தவறு இல்லையா?"

"நான் தவறான காரியங்கள் எதுவும் செய்ய மாட்டேன். இதுவும் போலீஸ் விசாரிப்புத்தான். இந்தப் புகைப்படத்தை எங்கள் காவல்துறை அதிகாரி ஒருவரிடம் கொடுத்து... இந்தக் கிராமம், பக்கத்து டவுன் முதலிய பல இடங்களில்... பெண்கள், ஆண்கள் சிலரிடம் காட்டி அந்தப் பெண்ணை இந்தப் பகுதியில் பார்த்திருக் கிறாங்களா என்கிற விவரம் வேண்டும். உங்கள் வீட்டுக்கு வந்து உங்கள் தாயாரிடம் அந்த போட்டோவைக் காட்டி விவரம் கேட்க போலீஸ்காரர் வருவார். உங்கள் தாயாரை முன்னதாக எச்சரித்து வையுங்கள். போலீஸ்காரர் என்றதும் அவங்க பயந்திட வேண்டாம்" லேசாகச் சிரித்தார் சப்-இன்ஸ்பெக்டர். "ஒரு சமயம் அந்தப் பெண் அவனது

CPL 693633

சகோதரியாகவும் இருக்கலாம்-" பெருமூச்செறிந்தான் மகேந்திரன்.

693633

சாதாரணமாக இதுமாதிரி ஒரு மனிதன் தன் பையில் வைத்துக்கொண்டு திரியும் புகைப்படங்கள் அவனது காதலியுடையதாகவோ அல்லது மனைவியுடையதாகவோ தான் இருக்கும். தங்கை - அக்காவின் படங்களாக இருப்பது மிகவும் அபூர்வம் என்பது என் கணிப்பு. அந்தப் புகைப் படத்திலிருப்பவள்... அவனது புதுமனைவியாக இருக்க வேண்டும். அல்லது காதலியாக இருக்க வேண்டும்... படத்தை பத்திரிகையில் வெளியிட்டு... விவரத்தை சீக்கிரம் கண்டுபிடித்துவிட முடியும். ஆனால் அது அவனது காதலியின் புகைப்படமாக இருந்தால்- அவர்களது காதல் பெற்றோருக்குத் தெரியாத சங்கதியாக இருந்தால்... அந்தப் பெண்ணுக்குப் பலவித சங்கடங்கள் ஏற்படும் இல்லையா?"

"இந்தக் கிராமத்திலோ... பக்கத்துக் கிராமத்திலோ... டவுனிலோ படத்தைப் பார்த்து யாரும் அடையாளம் கண்டுகொள்ள முடியாதுபோனால், பிறகு படத்தை பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டிவரும் என்பது மேலதி காரியின் அபிப்பிராயம்."

"அம்மா படத்தைப் பார்க்கட்டும், கோயில் திருவிழாக்கள் போன்ற இடங்களுக்கு அம்மா போகிற பழக்கம். மேலும் எங்க கிராமத்தில் உள்ள பல பெண்களை அம்மாவுக்குத் தெரியும். நீங்க சொல்கிற விவரப்படி இந்தப் பக்கத்தில் யாரும் இருப்பதாகத் தெரியலை. ஆனாலும் அம்மா பார்க்கட்டும்... அனுப்பி வையுங்கோ. நானும் சொல்லி வைக்கிறேன்" விடை பெற்றுக்கொண்டு வீட்டு வாசலில் இறங்கினான்.

தோட்டத்தின் பின்பக்கமிருந்த கிணற்றடிக்கு அவன் வருமுன் கந்தசாமி காற்றாகப் பறந்துவந்து அண்டாவிலே இளஞ்சூடாகத் தண்ணீரை நிரப்பித் தந்தான். தலை முழுகிவிட்டு ஈர உடையுடன் நின்ற யஜமானுக்கு மாற்று உடை துவாலை எல்லாம் கொடுத்து உபசரித்தான்.

உள்ளே வந்த மகேந்திரன் பூஜையறைக்குள் சென்று கடவுள் படங்களை வணங்கி, பிளாஸ்டிக் டப்பாவிலிருந்த திருத்தணி முருகனது விபூதியை அள்ளிநெற்றியில் அணிந்து கொண்டு வந்தான். 'என்ன போனியே... அடையாளம் ஏதாச்சும் தெரிஞ்சுதா?'' கனகம்மாள் ஆவலுடன் மகனைக் கேட்டாள்.

'' முன்பின் பார்த்திராதவன்... அவன் எவனோ ஆனால் அவன் சாவினால் இந்தக் கிராமமே ரொம்ப பாதிக்கப்பட்டிருக்கு.''

''விவரமா சொல்லேன்...'' கனகம்மாள் ஊஞ்சலில் அமர்ந்து கொண்டாள். வம்பு விசாரிப்பதில் அவளுக்கு அலாதி ஆசை. ''லாவண்யா... சூடா ஏதாச்சும் சாப்பிடக் கொண்டு வா... அங்கேயே அடுப்படியில் நின்னு கிட்டிருக்க வேண்டாம்'' என்று அவள் கூச்சல் போடுமுன் மருமகள் பாதாம்பாலை ஆற்றி தம்பளரில் எடுத்துக்கொண்டு வந்து மேஜைமீது வைத்துவிட்டாள்.

''அவனுடைய பாண்ட் பையில் ஒரு பெண்ணோட போட்டோவை வச்சிருந்தானாம்... அதை ஊர் ஜனங்க கிட்டேயும் காட்டி... இத்தப் பொண்ணை தெரியுதான்னு போலீஸ் விசாரிப்புச் செய்கிறது. நம்ப வீட்டுக்குக்கூட அந்தப் போலீஸ் அதிகாரி வருவாராம். உங்ககிட்ட அந்தப் போட்டோவைக் காட்டப் போகிறாராம்'' நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள கனகம்மாள்.

ஊரில் நடக்கும் குழப்பத்தில் தனக்கும் ஒரு பங்கு இருக்கிறதே என்ற பெருமையில் அவள் ஊஞ்சலை நிறுத்திவிட்டு இறங்கினாள். என்னென்னவோ சொல்லத் துடித்த அவள் வாயைத் திறக்குமுன் வாயிற்கதவு தட்டப் பட்டது-கந்தசாமி ஓடித் திறந்தான்... போலீஸ் அதிகாரி ஒருவர், ''வணக்கம். உள்ளே வரலாமா?'' என்றபடி வாசலில் நின்று கொண்டிருந்தார்.

6

நாட்டாண்மை முருகேசன் அன்று கொஞ்சம் தாமதமாகவேதான் எழுந்திருந்தார்.

விடியுமுன்பே வீட்டுப் புழக்கடை கிணற்றிலிருந்து தண்ணீரைத் தாமே இறைத்து தலைமுழுகிவிட்டு, தமது வேட்டி, பனியன், துண்டு முதலியவற்றைத் தாமே துவைத்து கொடியில் காய வைத்துவிட்டு மாற்றுடை அணிந்து கொண்டு நெற்றியில் திருநீருடன் ஊருக்குக் கோடியிலிருந்த சிவன் கோவிலுக்குக் கிளம்பிவிடுவார். மகேந்திரனுக்கு அடுத்தபடியாக அந்தக் கிராமத்தில் வசதியாக வாழ்கிறவர் நாட்டாண்மை முருகேசன். ஆனாலும் அவருக்கோ அவர் மனைவிக்கோ தங்களது அந்தஸ்து பற்றி எள்ளளவும் கர்வம் கிடையாது. கணவனுக்கு முன் எழுந்து தலை முழுகிவிட்டு கொடியில் தானே துவைத்துக் காயப்போட்ட புடவையை உடுத்துக் கொண்டு பூஜையறை காரியங்களை கவனிக்கத் தொடங்கி விடுவாள் திலகவதி.

கணவன், மனைவி இருவருக்கும் கடவுள் பக்தி அதிகம். மகேந்திரன் வீட்டைப்போல அவர்கள் வீட்டில்

ஆள் படைகள் அதிகம் கிடையாது. வாசலைப் பெருக்கவும், சாமான்களை விளக்கித் தரவும் மட்டும் ஒரு வேலைக்காரி. பின்பக்கம் விரிந்து பரவிக்கிடந்த பூமியில் திலகவதி பயிரிட்டு பாதுகாத்து வந்த காய்கறிச் செடிகளை கவனித்து உதவ ஒரு தோட்டக்காரன்.

ஆள் இருக்கிறானே என்று அவள் அசட்டையாக இருந்ததில்லை. நடு வயதைத் தாண்டி விட்டோமே என்று அலுப்படைந்ததில்லை. சமையல் வேலையை முடித்து விட்டு தோட்டக்காரனுடன் கூட வளைய வந்து செடிகளுக்கு எருப்போட்டு காய்களைப் பறித்து எடுத்துக் கொண்டு வருவாள். அவைகளை கடையில் விற்று காசாக்கி தன் சுறுக்குப்பைக்குள் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டதில்லை. அவளது ஒரே பெண்ணை பக்கத்துக் கிராமத்தில் வசதியான ஒரு இடத்தில் கட்டிக் கொடுத்திருந்தாள். ஒரே மகன் பட்டாளத்தில் எஞ்சினியர் பட்டத்திற்குப் படித்துக் கொண்டிருத்தான்.

எல்லா வசதிகளையும் கடவுள் கொடுத்திருக்கிறார். கொஞ்சம் தாராள மனதோடு வாழ வேண்டும் என்பது திலகவதியின் கொள்கை.

தோட்டத்திலிருக்கும் மல்லிகைச் செடிகளிலிருந்து முதல் நாளே மொட்டுகளைப் பறித்து மாலை கட்டி வாழை இலையில் சுருட்டி, நீர் தெளித்து பத்திரமாக வைத்திருப்பாள்.

அவர்கள் வீட்டு மல்லிகை மாலையைத்தான் சிவலிங்கத்திற்கு அபிஷேக அலங்காரத்தின்போது முதலாவதாக அர்ச்சகர் அணிவிப்பார். அப்படியே ஒரு சிறு கூடையில் அர்ச்சகர் வீட்டுக்கு வேண்டிய காய்களை யும் கணவரிடம் கொடுத்தனுப்பி வைப்பாள்.

வீட்டுத் தேவைக்கு மேல் மீதமாகிவிட்ட காய்களை வேலைக்காரர்களுக்கு கொடுத்ததுபோக தெருவில் உள்ள சிலரது வீட்டுக்கு அனுப்பி வைப்பாள். வீட்டுத் தோட்டத் திலே காய்க்கிறதை நாலுபேர் வயிறு குளிர சாப்பிடட்டுமே என்று நினைப்பவள் அவள்.

கள்ளங்கபடு தெரியாத வெள்ளை மனம். நியாயத்திற்குக் கட்டுப்பட்டவள். தர்மத்துக்கு மதிப்புக் கொடுக்கிறவள்.

முருகேசன் முதலில் கடவுளை தரிசித்து விட்டுதான் பின்னர் காப்பி பலகாரம் சாப்பிடுவது வழக்கம்.

முதல்நாள் மாலை அவர் ஊரில் நடந்த ஒரு விவகாரத்தை ஒழுங்கு செய்யப் புறப்பட்டிருந்தார்.

வழக்கம்போல ஊரைக் கூட்டி ஜனங்களின் தீர்ப்புக்கு விட்டிருக்கலாம். சில விவகாரங்களை அவரே தனிப்பட்ட முறையில் கவனித்து நியாயம் வழங்குவ துண்டு.

அடுத்த தெருவிலிருந்த விவசாயி சண்முகத்தின் மகள் தன் புருஷன் வீட்டுக்கு திரும்பிப் போக மறுத்து விட்டிருந்தாள்.

அவளது குடிகாரக் கணவன் அவளை அடித்து இம்சிப்பதுடன் வேறு ஒருத்தியுடன் சகவாசம் வைத்துக் கொண்டிருப்பதால் அவனுடன் வாழ முடியாது என்று கிளம்பி பிறந்த வீட்டிற்குள் புகுந்து கொண்டு விட்டிருந்தாள். அவளது கணவன் களத்துமேட்டிற்கு வந்து நாட்டாண்மை காலில் விழாத குறையாகக் கெஞ்சி தங்களுக்குள் சமரசம் செய்து வைக்க வேண்டினான். ஊரைக் கூட்டிதான் இதற்கு தீர்வு காண வேண்டும் என்று பெண்ணைப் பெற்றவன் ஒரே பிடிவாதமாக இருந்தான்.

விவாகரத்து கேஸ்களில் கூட தீர்ப்பு வழங்குமுன் நீதிபதி அந்தத் தம்பதியரை தமது அறைக்குள் வரவழைத்து தனிப்பட்ட முறையில் புத்தி சொல்வதுண்டு. திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர். சட்டமெனும் கத்தியால் அதை அறுத்து குவித்து விடக் கூடாது என்ற அனுதாப நோக்கம்தான் அதற்குக் காரணம். இந்த உண்மையை நாட்டாண்மை நன்கு உணர்ந்து கொண்டிருந்தார். அந்தத் தம்பதியருக்குப் புத்தி சொல்லி அவர்களை ஒருங்கிணைக் கத்தான் அவர் அன்று மாலை முழுவதையும் சண்முகத்தின் வீட்டில் செலவழித்து விட்டிருந்தார். சொன்னதையே சொல்லி பிடிவாதம் செய்த அந்தப் பெண்ணிற்கு இளம் வயது. உலகப்போக்குத் தெரியாத பத்தாம் பசலி. அவளுக்கு வாழ்க்கையின் மேடு பள்ளத்தைப்பற்றி விபரமாக சொல்லி அவளது பெற்றோர்களிடம் சம்மதம் பெற்று அவளைக் கணவனுடன் கூட்டிப்போகச் சொல்லிவிட்டு கணவனுக்கும் ஒழுங்காக அவளை வைத்துக் காப்பாற்ற வேண்டியதைப் பற்றி எச்சரித்துவிட்டு அவர் கிளம்புவதற்குள் இரவு மணி பத்தாகிவிட்டது. அதற்குள் மூன்று செவ்விள நீரைச் சாப்பிட்டு - இரண்டு தடவை வெற்றிலை போட்டு துப்பிவிட்டுக் கிளம்பியிருந்தார்.

எட்டு மணிக்கே சாப்பிட்டு உறங்கிவிடும் கணவன் வீடு திரும்பாததைக் கண்டு திலகவதி வாசலிலேயே தவ மிருந்தாள்.

அதற்குமேல் அவருக்கும் பசிக்கவில்லை. சாப்பாடு இறங்கவில்லை. உறக்கமும் நடு இரவிற்கு மேல்தான் கண்களைத் தழுவியது. அதனால் அன்று சற்று அதிகப்படியாகத் தூங்கி விட்டிருந்தார்.

வேகமாக ஸ்நானத்தை முடித்துக் கொண்டு கோவிலுக்குள் அவர் விரைவதற்குள் அபிஷேகம் முடிந்து

விட்டிருந்தது. ''நல்ல வேளை வந்து விட்டீங்க. அலங்காரத்தை முடிக்கணுமேன்னு கவலைப்பட்டுண்டு இருந்தேன்'' சிவலிங்கத்திற்கு விபூதி அலங்காரத்தினை முடித்து விட்டிருந்த அர்ச்சகர் அவர் கையிலிருந்த கூடையை வாங்கிக் கொண்டார்.

''சண்பகேஸ்வரனுக்கு உங்க வீட்டு உபயந்தான் முதல் இடம் பெறுகிறது. சந்தோஷம்'' என்றபடி அர்ச்சகர் மலர் மாலையைச் சாத்தினார்.

கிராமத்துக் கோயில்-அந்த வேளையில் கூட்டமே இல்லாதிருப்பது வியப்பில்லை. இரண்டு வயதான பெண்கள் மட்டும் கோயிலை வலம் வந்து விட்டு தீபாராதனையின் போது கலந்து கொண்டனர்.

அவர்கள் வெளியேறிய பின்னர் வழக்கமாக தாம் கொடுக்கும் வீபூதி குங்குமப் பொட்டலங்களுடன் ஒரு ரோஜா மலரை வைத்து சந்நிதியில் நின்று கொண்டிருந்த நாட்டாண்மைக்காரரிடம் அர்ச்சகர் கெடுத்தார்.

நேத்தி மத்தியானம் நான் கோவிலைப் பூட்டிண்டு வெளியே கிளம்பர சமயம் போலீஸ்காரர் ஒருவர் வந்தார்; அவரைக் கண்டதும் நான் நடுங்கிப் போய்ட்டேன். இப்பத்தான் கோவில் நகைகளை கொள்ளையடிக்கிறது - விக்கிரகங்களைத் திருடறதுங்கிறது மாமூலா போயிட்டதே? யாராவது குறும்புத்தனமா... சம்பகேஸ்வரன் கோவிலில் நகைகள் திருட்டுப் போயிட்டதுன்னு போலீசில் புகார் எழுதி வச்சுட்டான்களா? எதுக்கு இவர் நம்மைத் தேடிண்டு வரணும்னு ஒரு நிமிஷம் பதறிப் போயிட்டேன்.''

''போலீஸ்காரர் உங்களைத் தேடிக்கொண்டு எதுக்கு வந்தாராம்?''

"முழுக்கக் கேளுங்கோ... போன மாசம் நடந்த விசேஷ பூஜைக்கு சிவலிங்கத்துக்கு சாத்தின வைரப் பட்டை, உற்சவ விக்கிரகங்களுக்கு சாத்தின நகைகள், அம்பாளுக்கு சாத்தின காசு மாலை எல்லாத்தையும் ஸ்தானிகர் காரியதரிசி இரண்டு பேர்கிட்டேயும் கணக்கிட்டு ஒப்புச் சுட்டேன். அவா ரெண்டு பேரும் இரும்புப் பெட்டியிலே வச்சு பூட்டிட்டா. லாக்கர் சாவி காரியதரிகிக்கிட்டேயும் வெளிப்பூட்டு சாவி ஸ்தானிகர் கிட்டேயும் இருக்கறதாலே இரும்புப் பெட்டியைத் தனியா யாரும் திறக்க முடியாது.

அர்ச்சகரிள் நீண்ட கதை எரிச்சலையூட்டிய போதிலும் நாட்டாண்மை புன்முறுவலுடன் நின்று கேட்டுக் கொண்டிருந்தார்.

"உங்ககிட்ட ஒரு விஷயம் கேட்கணும். கோவிலுக்கு வர பெண்களைப் பத்தி உங்களுக்கு தெரிஞ்சிருக்கும்னு பூடகமா சொன்னார் போலீஸ்காரர்.

"இந்தக் கிராமத்திலிருந்தும் பக்கத்துக் கிராமத்தி லிருந்தும் பலர் இந்தக் கோவிலுக்கு வரது பழக்கம். சம்ப கேஸ்வரர் கோவில் இந்த வட்டாரத்துக்கே பெரிய கோவிலாச்சே, ஒரு மண்டலம் ஒரு பொழுது இருந்து அம்பாளை வழிபட்டா, அவள் கேட்ட வரத்தைத் தருவாள்னு பிரசித்தம். இங்கே ஆடி, தை வெள்ளிக் கிழமைகளில் நிறைய பெண்கள் வருவார்கள். ஏன் கேட்கறேள்னு கேட்டேன்."

"அநேகமாக உங்களுக்கு கோவிலுக்கு வர பெண்கள் பெயர், ஊர் விவரம் தெரிஞ்சிருக்குமல்லவா... போலீஸ்காரர் கேட்டதும் நான் திடுக்கிட்டுப் போயிட்டேன்.

"ஐயா இதென்ன கேள்வி? பள்ளிக்கூடம், தாய்சேய் பராமரிப்பு நிலயம்னு பலதும் இருக்கிற பெரிய கிராமம் இது. இந்தக் கோவிலில் நான் பல வருஷமா அர்ச்சகராக இருக்கேன். ஓரளவு இந்த ஊர் மக்களை எனக்குத் தெரியும். முக்கியமா கோவிலுக்கு வரவாளைத் தெரியும். படபடன்னு பேசினேன்.

"தம் சட்டைப்பையிலிருந்து ஒரு டைரியை எடுத்தார் போலீஸ்காரர். நீங்கதானே சுப்பிரமணிய குருக்கள்?"

"அதைக் கேட்டதும் நான் நடுங்கிப் போயிட்டேன். என் வாய் காஞ்சு போயிடுத்து.

"நீங்க வடவாறு கரையிலே ஒதுக்கப்பட்ட பிணத்தைப் பார்த்தீர்களா?"

"நேத்து சாயங்காலம் சப்-இன்ஸ்பெக்டர் என்னையும் சில பேரையும் தம் ஜீப்பில் ஏத்திண்டு பக்கத்து டவுன் ஆஸ்பத்திரிக்கு அழைச்சுண்டு போனார். செத்தவனை அடையாளம் கண்டுபிடிக்க முடியலை. நான் வந்து உடனே ஸ்நானம் பண்ண வேண்டியிருந்தது. ஆஸ்பத்திரி தீட்டோட நான் சாயங்கால பூஜைக்கு எப்படி கோவிலுக்குள் நுழைய முடியும். மறுபடியும் செத்துப்போனவனை வந்து பார்க்கணும்னு அழைப்பா? கொஞ்சம் காரமாகக் கேட்டுட்டேன்.

"இல்லை... நல்லா கவனமா பார்த்து சொல்லுங்கோ நீங்க எப்பவாவது இந்தப் பெண்ணை கோவிலில் பார்த்திருக்கேளான்னு கேட்டுட்டு, ஒரு கலர் போட்டோவை என் முன் நீட்டினார்.

"உற்றுப் பார்த்தேன். எனக்கு மூச்சே நின்னுடும் போல் திகிலா இருந்தது.

"இந்தப் பொண்ணுடைய புகைப்படம் இவர் கையில் எப்படி வந்ததுன்னு ஒரு நிமிஷம் கலங்கிப் போயிட்டேன்.

"அந்தக் காவல்துறை அதிகாரி வேலைக்குப் புதுசு போலத் தென்பட்டார். தினமும் ஈஸ்வரனையும் அம்பாளையும் பூஜிக்கிற பாக்யமுள்ள நான் பொய் சொல்றது பாவமாச்சே. அதனாலே துணிவா சொல்லிட்டேன்.

"இந்தப் படத்திலிருக்கிற பெண்ணை ஆடி வெள்ளிக் கிழமைகளில் கோவிலில் பார்த்திருக்கிறேன். தீபாராதனை செய்துட்டு ஜோதியைக் காட்டி தட்டில் விழும் தட்சணையைதான் நான் கவனிக்கிற வழக்கம். யார் இந்தப் பெண் - பேர் என்ன? எந்த வீட்டைச் சேர்ந்தவள்னு ஆராய்ச்சி பண்றதில்லை. மறுபடியும் கோவிலில் இவங்களைப் பார்த்தால் அடையாளம் காட்ட முடியும்னு பட்டும் படாமலும் சொல்லி தப்பித்துக் கொண்டேன்.

"நாட்டாண்மைக்காரர் வீட்டில் போய் கேட்டால்? முனகினார் அந்தக் காவல்துறை அதிகாரி.

"ஆண்களை விசாரிக்கிறதைவிட பெண்களிடம் காட்டி கேட்டுப் பாருங்கள் என்று அனுப்பி விட்டேன்.

"ராத்திரி எனக்குத் தூக்கமே இல்லை. கார்த்தால வந்த பத்திரிக்கையைப் பார்த்ததும் அடக்க மாட்டாது ஒரு சஞ்சலம்...

"அந்தப் பெண் யார்னு என்கிட்டே நீங்க தாராளமா சொல்லலாமே..." நாட்டாண்மை புன்முறுவலித்தார்.

"இங்கே - இன்று காலை வந்த பத்திரிகையைக் காட்டரேன்..." என்றபடி மண்டபத்தின் தூண் ஓரமாக சுருட்டி வைத்திருந்த பத்திரிகையைக் கொண்டு வந்து அர்ச்சகர் அவரிடம் கொடுத்தார்

"இது ஜெட் யுகம் - அதனாலே நம்ம ஊர்போல ஒரு கிராமத்திலே நடந்த சங்கதிகூட ரொம்ப வேகமா பத்திரிக்கையிலே பிரசுரிக்கப் பட்டுடுத்து. மூணாம் பக்கம் முதல் காலத்திலே பாருங்கோ" என்றார் அர்ச்சகர்.

பத்திரிகையைப் பிரித்துப் பார்த்தார் நாட்டாண்மை.

"மேலே பிரசுரிக்கப்பட்ட படத்தில் உள்ள இளைஞரின் உடல் வடவாற்றுக் கரையில் வெள்ளத்தால் ஒதுக்கப்பட்டு... தேதி... பகல் கண்டு பிடிக்கப்பட்டது. பழுப்பு பாண்டும், வெள்ளை சட்டையும் அணிந்து கொண்டிருந்த இவரது பாண்ட் பையில் ஒரு இளம் பெண்ணின் புகைப்படம் இருந்தது. இவரை அடையாளம் கண்டு கொள்கிறவர்கள்... கிராமத்து காவல் துறையை அணுகவும்."

"அந்தப் படத்திலிருந்தது நம்ப ஊரைச் சேர்ந்த பெண்ணா? உங்களுக்கு நல்லா தெரிஞ்சுதா?"

அர்ச்சகர் குரலைத் தாழ்த்திக் கொண்டார். "சொல்ல எனக்கு மனசு வேதனைப் படறது.இன்னும் சில நாளில் ஊர் ரெண்டுபட போர சங்கதி. ஊர் மக்களின் நியாய அநியாயத்தை எடை போட்டு விசாரணை செய்து தீர்ப்பு வழங்கற உங்ககிட்டே சொல்றதிலே குத்தமில்லே.

"என் கேள்வி எல்லாம் இதுதான். இந்தப் பெண் போட்டோ செத்தவன்கிட்டே இருந்ததின் அர்த்தம்? இந்த ஊருக்கு இந்தப் பெண்ணைத் தேடிக்கொண்டுதான் வந்திருக்க வேண்டும் அவன். எதுக்கு? முன்னாடியே இந்தப் பெண்ணோட இவனுக்குப் பழக்கம் உண்டா?

சிவ... சிவா...

"யார் அந்தப் பொண்ணுன்னு சொல்லுங்கோ... எனக்கு பிறகு விஷயம் அமபலத்துக்கு வரும்போது அதிர்ச்சி ஏற்படாது."

அர்ச்சகர் குனிந்து வலது கையால் வாயை பொத்திய படி ஏதோ மந்திரம் உபதேசிப்பது போல பெண்ணின் பெயரை... கிசுகிசுத்தார். முகம் வெளுத்துப் போனார் நாட்டாண்மை. ''இருக்காது. நீர் சொல்வது சரியாக இருக்காது...''

''எனக்கு அந்தப் பெண்ணை நன்னாத் தெரியும். கோயிலில் அடிக்கடி பார்த்திருக்கேன்; பேசியிருக்கேன்... அதனால்தான் என்னாலயே நம்ப முடியலை. செத்தவன் வந்த நோக்கம் என்னவோ அந்த ஈஸ்வரனுக்குத்தான் தெரியும். செத்து ஒழிஞ்சவன் பையில் இதை ஏன் வச்சுத் தொலைக்கணும் - நம்ப ஊர் ஜனங்களைக் கேட்கணுமா? தூ ஒண்ணு தூ ரெண்டுன்னு கதை கட்டி பரப்பிடு வாளே?'' நாட்டாண்மை தமது நறுக்கு மீசையைத் தடவிக் கொண்டார். உத்திரயத்தை உதறி தோளில் போட்டுக் கொண்டார். வேட்டித் துணியை கையில் பிடித்துக் கொண்டார். ''எதுக்கும் நானும் பார்த்துடறேன். திலகவதியும் பார்த்து சொல்லட்டும்... காலை வேளையில் கலவரமான செய்தியைச் சொல்லிட்டீங்க...'' முனகினார்.

''என்மேல் பிசகில்லை... நடந்த உண்மையை- பார்த்த சங்கதியைச் சொன்னேன்''

வேகமாக வீட்டை நோக்கி மூச்சிறைக்க வந்து கூடத்து நாற்காலியில் தொப்பென்று உட்கார்ந்தார்.

''ஏன் இப்படி வியர்த்து கொட்டியிருக்கு?'' கேட்ட மனைவி மின்விசிறியைச் சுழல விட்டாள்.

''காப்பி, பலகாரம் எடுத்து வைக்கவா'' கனிவுடன் கேட்டவளை வெறித்துப் பார்த்தார்.

''வேண்டாம்... தாகத்துக்கு பச்சைத் தண்ணி கொண்டுவா போதும். இன்னும் சித்த நேரத்தில்

போலீஸ்காரர் நம்ம வீட்டை தேடிக்கிட்டு வந்து நிக்கப்போறார்...'' என்றார்.

''போலீசா? எதுக்கு-அவங்க நம்ப வீட்டைத் தேடிக்கிட்டு எதுக்கு வராங்களாம்...'' கலவரத்துடன் கேட்டாள் திலகவதி. அவளுக்கு அவர் பதிலளிக்கும் முன் வாயிற்கதவு தட்டப்பட்டது. வேகமாகச் சென்று கதவைத் திறந்தாள். காக்கி சட்டையில் மிகவும் மிடுக்காகத் தெரிந்த இள வயதான காவல்துறை அதிகாரி உள்ளே வந்தார்.

''காலை வேளையில் உங்களை சிரமப்படுத்து வதற்கு மன்னிக்கவும். தன் கடமையைச் செய்து முடிக்கணும். இன்னும் சிலர் வீட்டுக்குப் போக வேண்டியிருக்கு-அதனாலே...''

''உட்காருங்க...'' என்று நாட்டாண்மை சுட்டிக் காட்டிய நாற்காலியில் போலீஸ்காரர் அமர்ந்தார்.

அவர் எடுத்துக் காட்டப்போகும் புகைப்படத்தைப் பற்றிய விவரம் ஏற்கனவே நாட்டாண்மைக்குத் தெரியு மாதலால் அந்த எதிர்பார்ப்பின் அழுத்தத்தைத் தாங்க முடியாது அவரது இதயம் வேகமாகத் துடிதுடித்தது.

7

மகேந்திரன் அந்தப் போலீஸ் அதிகாரியை முன்பின் பார்த்ததில்லை. ஊரில் உள்ள பெரிய மனிதர்களில் அவனும் ஒருவன் என்ற தகுதியில் விழாக்களின் போது - அவன் கிராமத்து காவல்துறை அதிகாரிகள் சிலரைச் சந்தித்திருக்கிறான். சந்திரசேகரன் சப்-இன்ஸ்பெக்டராக அந்த ஊருக்கு வந்தபின் சில தடவை போலீஸ்

ஸ்டேஷனுக்கு அவனைப் பார்க்கப் போன பயனால் அங்குள்ள அனைவரையும் அவனுக்குத் தெரிந்திருந்தது.

"உங்கள் பெயர்?" என்று தயக்கமாகக் கேட்டபடி நடைக்குள் வந்துநின்ற அந்த இளவயக அதிகாரி ஊருக்குப் புதிது போலும்!

"என் பெயர் மகேந்திரன்! பக்கத்து டவுனில் நான் மின்விசைப் பொருள் கடை ஒண்ணு வச்சிருக்கேன். உள்ளே வாங்கோ" என்று உபசரித்தான்.

"உங்க வீட்டில் உள்ள பெரியவங்களை முக்கியமாகப் பார்க்கணும். இந்த வீட்டுப் பெரியம்மா இருக்காங்க இல்லையா?" கேட்டுவிட்டு தன் ஷூக்களை தயக்கத்துடன் பார்த்தபடி நின்றார்.

"பரவாயில்லை. முன்னறையில் வந்து உட்காருங்க. அம்மாவைக் கூப்பிடறேன்" பாதணிகளுடன் வீட்டுக்குள் வந்து உட்கார அவன் உத்திரவளித்ததும் அந்த இளம் அதிகாரியின் முகத்தில் புன்னகை அரும்பி மலர்ந்தது. நெற்றி மீது லேசாகப் பூத்த வியர்வையைக் கைக் குட்டையால் ஒத்திக்கொண்டு சுட்டிக் காட்டப்பட்ட ஆசனத்தில் அமர்ந்தார்.

சாப்பாட்டறையில் இருந்த கனகம்மாளுக்கு எல்லாம் தெளிவாகக் கேட்டது. தன் வீட்டில் நடக்கும் அத்தனையும் அவளுக்குத் தெரிந்தாக வேண்டும் என்ற தொரு வீம்பு.

சமையலறையிலிருந்து வெளிப்பட்ட மருமகளை உறுத்துப் பார்த்தாள்.

"அவங்களுக்கு தாகத்துக்கு ஏதாச்சும்." என்று தணிந்த குரலில் லாவண்யா கேட்டு முடிப்பதற்குள் சீறி விழுந்தாள்.

"வந்தவங்களை உபசரிக்க எனக்குத் தெரியாதா? உன்னைக் கூப்பிட்டபோது வந்தால் போதும்."

"அம்மா! உங்களைப் பார்க்கவும் ஏதோ விசாரிப்புச் செய்யவும் போலீஸ் அதிகாரி ஒருவர் வந்திருக்கிறார், இப்படி வரீங்களா? மகன் கூப்பிட்டதும் அவள் எழுந்தாள்.

கலைந்து போயிருந்த தனது கூந்தலை அவிழ்த்துத் தட்டி சீராக்கி முடிந்துகொண்டாள். புடவைத் தலைப்பைச் சரி செய்து இடுப்பிலே செருகிக் கொண்டாள்.

தொண்டையை செருமிக் கொண்டு முன்னறைக்கு வர ஆயத்தமானவள் மெல்ல எட்டிப் பார்த்தாள்.

வந்திருந்தவர் மகேந்திரனைவிட வயதில் இளையவராகத் தென்பட்டார்.

"காப்பி சாப்பிட்டுட்டு பேசலாமா?" மகேந்திரன் உபசரித்தபோது போலீஸ் அதிகாரி மறுத்தார்.

" நான் இப்போது டியூட்டியில் வந்திருக்கிறேன். எதுவும் சாப்பிடுவதற்கு இல்லை..."

கனகம்மாள் தனக்குள்ளே கோபத்துடன் முணுமுணுத்தாள்.

"வயசாகிறதே தவிர இவனுக்கு விவேகமேயில்லை. வீட்டுக்கு வந்திருக்கிறவன் வயதில் சின்னவன். அவன் முன்னால் தன் பெண்டாட்டியை அழைத்து காப்பி தந்து உபசரிக்கச் சொல்லணுமா? அவளும் இதுதான் சமயம்னு பல்லைக் காட்டிக்கிட்டு நிப்பா... எல்லாம் என் தலையெழுத்து."

மகேந்திரன் எழுந்து உள்ளே வந்தான். "அம்மா - போலீஸ் அதிகாரி உங்களைத்தான் முக்கியமா பார்க்க வந்திருக்கிறார்..."

மகனைப் பார்வையால் வெட்டினாள் கனகம்.

"புரிகிறது - செத்துப் போனவன் காதில் சங்கு வச்சி ஊதுகிறாங்க இவங்க. அது கிடக்கட்டும். உனக்கு சில சமயங்களில் புத்தி ஏன் இப்படிக் குழம்பிப் போகுது? உன் மனைவி ரொம்ப அழகானவ. படிச்சவள்னு மத்தவங்க கிட்ட பெருமை அடிச்சுக்க ஆசையா?... வந்திருக்கிற அதிகாரி உன்னைப்போல ஒரு இளைஞர். அவருக்கு உன் மனைவி காப்பி கொண்டு வந்து உபசரிப்பது நல்லா இருக்காது. அவருக்குப் பதில் இந்த வயசிலே நான் அடுப்படியிலே நின்னு மூச்சு வாங்க வந்தவங்க போனவங்களுக்கு காப்பி தயாரிக்கணும். உனக்கு சில சமயம் புத்தியே கிடையாது. எத்தனை தடவை நான் எடுத்து சொல்லியிருக்கேன்? வீட்டு விவகாரத்தை என்கிட்டே விட்டுடு. ஊர் உலகத்திலே மனுஷன் ஒருத்தனைப்போல ஒருத்தன் இருக்க மாட்டான்... உன் பெண்ஜாதியோ பட்டணத்துக்காரி. இந்தக் கண்லே பூந்து அந்தக் கண்லே வந்திடுவா..."

படபடவென்று பொரிந்துவிட்டு மகனைக் கோபத்துடன் வெறித்தபடி முன்னறைக்கு வந்தாள்.

"வணக்கம்" என்று போலீஸ் அதிகாரி எழுந்து நின்று கைகூப்பிவிட்டு உட்கார்ந்தார்.

"என்னவோ என்னைப் பார்க்கணும்னு வந்தீங்களாமே?" கேட்டபடி எதிரே கிடந்த சோபாவில் சாய்ந்து கொண்டாள் கனகம்.

"ஆமாம், அம்மா-காலை வேளையில் உங்களுக்கு எத்தனையோ வேலைகள் இருக்கும். அதன் நடுவில் உங்களை வந்து தொந்திரவு செய்வதற்கு மன்னிக்கணும்."

போலீஸ் அதிகாரி தமது கையில் பிடித்திருந்த ஃபைலுக்குள்ளிருந்து ஒரு பிளாஸ்டிக் உறையை எடுத்தார்.

"வேலை எப்பவும் இருக்கவே இருக்கு. அதைவிட்டுத் தள்ளுங்க. உங்களுக்கு என்ன விவரம் தெரியணும்னு கேளுங்க. தெரிஞ்சவரை சொல்றேன்."

மிகவும் அழுத்தமாகப் பதிலளித்தாள் கனகம்.

பிளாஸ்டிக் உறையிலிருந்து போலீஸ்காரர் முதலில் இறந்தவனது புகைப்படத்தை எடுத்து அவள் முன் நீட்டினார்.

"இது பிரேத பரிசோதனைக்கு முன் எடுத்த படம். இதிலுள்ளவரை நீங்கள் எங்கேயாவது பார்த்த நினைவு இருக்கான்னு முதலில் சொல்லணும்" என்றார்.

படத்தை விரலால் தொட்டால்கூட நீட்டு ஒட்டிக் கொள்ளும்போல அருவருப்புடன் கனகம்மாள் உடலைச் சுருக்கிக் கொண்டாள். அவள் முகத்திற்கெதிரே நீட்டப் பட்ட அந்தப் படத்தை நன்றாக உற்றுப் பார்த்தாள்.

முன்னே எப்பொழுதாவது பார்த்திருந்தாலும்-அந்த நிலையில் அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடி கன்னங்களும் மூடியிருந்த கண்களும் உப்பி முகம் உருண்டையாகத் தெரிந்தது.

உதட்டைச் சுழித்தாள். "ஊகும்!... இவனை நான் பார்த்ததேயில்லை. எங்களின் தூர உறவினில்கூட இப்படி ஒரு பையனை நான் பார்த்ததில்லை. இவன் யாரோ தெரியாது" மிகவும் அழுத்தமாகச் சொன்னாள்.

போலீஸ் அதிகாரி அந்தப் படத்தை பத்திரமாக தமது ஃபைலுக்குள் வைத்துக் கொண்டார். அடுத்ததாக ஒரு சிறிய வண்ணப்படத்தை உறையிலிருந்து எடுத்தார்.

"இந்தப் படம் இறந்துபோன மனிதனுடைய பாண்ட் பையிலிருந்தது. இந்தப் பெண் இறந்தவனுக்குச்

சொந்தமாக இருக்கலாம் - படத்தைப் பார்த்துட்டு சொல்லுங்க'' என்று அதை அவள் முன் நீட்டினார்.

ஆவலுடன் மகேந்திரன் தாய்க்குப்பின் வந்து படத்தை எட்டிப் பார்த்தான். வீடே தட்டாமாலை சுற்றுவது போன்றதொரு பயங்கர உணர்வில் தவித்துப் போனான். நெஞ்சும் முகமும் நெருப்பாகிப்போன கனகம்மாள் மகனைப் பார்த்து ஜாடை செய்தாள்.

எச்சிலை விழுங்கிக் கொண்டாள். பதைபதைத்த மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். செயற்கையாக முறுவலித்தாள்.

''இந்தப் படத்தை ஊரில் இன்னும் யார், யாருக்குக் காட்டி அடையாளம் கேட்டீங்க, யாராவது சொன்னாங்களா?'' கவலையுடன் விசாரித்தாள்.

''எனக்கு இந்த வேலை கொடுக்கப்பட்டதும் இந்த ஊர் கோயில் அர்ச்சகரிடம் காட்டினேன், கடைத்தெருவில் இரண்டு பெண்களிடம் காட்டினேன். காலையிலே நம்ப ஊர் நாட்டாண்மைக்காரரிடம் காட்டினேன்.''

''அவருக்கு அடையாளம் தெரிஞ்சுதா?'' கேட்டு முடிக்குமுன் மகேந்திரனின் இதயம் பல சுக்கலாகிவிடும் போலத் துடித்தது, மூச்சு முட்டியது. அவனது வெள்ளைச் சட்டை வியர்வையால் நனைந்து போனது.

''அவரும், அவரது மனைவியும் பார்த்தாங்க - இந்தப் பெண்ணை அவங்க பார்த்திருக்காங்களாம்! ஒரு நாள் அவகாசம் கொடுத்தா போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து ஊர், பெயர் எல்லாம் தெரிவிக்கிறதா சொன்னாங்க. நீங்களும் பார்த்துட்டு சொன்னாக்க என் வேலை எளிதாகி விடும்.''

தாயை திகிலுடன் பார்த்தான் மகேந்திரன்.

''எங்களுக்கும் இந்தப் பெண்ணைத் தெரியும். கொஞ்சம் அவகாசம் எங்களுக்குத் தேவை. மகேந்திரனே நேரில் உங்க சப்-இன்ஸ்பெக்டரைப் பார்த்து விவரமாகச் சொல்ல முடியும். தவறாக யாரையாவது சுட்டிக் காட்டி விட்டால் வீண் வம்பு இல்லையா?''

போலீஸ் அதிகாரி பெரிதாக புன்னகைத்து தலையை அசைத்தார். ''இந்த போட்டோக்களை எங்ககிட்டே விட்டுட்டுப் போக முடியுமா?'' மகேந்திரன் குழைவாகக் கேட்டான்.

''இவைகளை நான் சப்-இன்ஸ்பெக்டரிடம் பத்திரமாக சேர்க்க வேணும் என்பது சர்க்கிளின் உத்தரவு. இந்தப் பெண்ணின் போட்டோ ஒரு முக்கிய தடயமாக இருப்பதால் யாரிடமும் தர இயலாது-மன்னிக்கணும்.''

''இந்த போட்டோக்களை ஒரு நிமிஷம் கொடுக்க முடியுமா? என் மருமகள் உடம்புக்கு முடியாம உள்ளே படுத்திருக்கிறா அவளிடம் காட்டி சந்தேகத்தைத் தெளிவு படுத்திக்க விரும்பறேன்.''

அரை மனதுடன் போலீஸ் அதிகாரி அந்த போட்டோக்களை கனகத்தின் கையில் கொடுத்தார்.

சற்றுமுன் விரலால்கூடத் தொட அஞ்சிய கனகம் சட்டென்று அவைகளைப் பெற்றுக் கொண்டாள். மகன் பின் தொடர வேகமாக உள்ளே சென்றாள்.

சமையலறை மேடைமீது மணைக் கட்டையை வைத்து முட்டைகோசைச் சன்னமாக கத்தியால் நறுக்கிக் கொண்டிருந்தாள் லாவண்யா. கோஸ் கறி அவளது கணவனுக்கு பிடித்தமான பக்க பதார்த்தம். முன்னறைக்கு சற்று தொலையில் சமையலறையிருந்ததால் அவளுக்கு அங்கே நடந்தது எதுவுமே தெரிய வாய்ப்பில்லை.

மாமியார் அழைக்காதவரை அவள் வெளியே வந்து வந்தவர்களுடன் பேசுவது வழக்கமில்லை. அதனால் அவள் சமையல் காரியங்களை கவனிக்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

வேகமாக வந்த மாமியார் முகத்தில் கோபம் பொங்க "இப்படி வா" என்று அதட்டினாள்.

மகேந்திரன் பார்வையில் தெரிந்த கடுமையைக் கண்டு அவள் திகைத்துப் போனாள்.

"இந்தப் போட்டோவில் இருக்கிறவனை நீ சந்தித்திருக்கிறாயா?" கனகம்மாள் கட்டுக்கடங்காத ஆத்திரத்துடன் சீறினாள்.

கைவேலையைப் போட்டுவிட்டு, நெருங்கிவந்து போட்டோவைப் பார்த்தாள் லாவண்யா.

"தெரியாது. நான் பார்த்ததே இல்லை" என்றாள் அழுத்தமாக.

"பொய் சொல்லாதே! நீ பட்டணத்து நர்ஸிங் ஹோமில் வேலை செய்து கொண்டிருந்தப்போ இவனோட சிநேகிதமா இருந்ததுண்டா? நீ மறைச்சாலும் ஊரே இப்ப உண்மையை தெரிஞ்சுக்கப் போகுது நிசத்தைச் சொல்லிடு..."

ஆங்காரமாக அடிக்குரலில் அதட்டினாள் கனகம்.

லாவண்யா திகைப்புடன் விழித்தாள். இதென்ன விபரீதமான குற்றச்சாட்டு?

"உண்மையைத்தான் சொல்றேன். இவரை எனக்குத் தெரியாது" என்றாள் சிறிது கோபத்துடன்.

"நான் சொல்கிறேன். நீ என் மகனைச் சந்தித்துக் கட்டிக்கிறதுக்கு முந்தி இவனோட ரொம்ப சிநேகிதமாக

பழகியிருக்கே. இவன் உன்னைத் தேடிக்கிட்டு இந்தக் கிராமத்துக்கு வந்திருக்கான். ஆற்று வெள்ளத்திலே விழுந்து செத்துப் போயிருக்கான். இல்லாட்டா இவன் பாண்ட் பையிலே உன் போட்டோ எப்படி இருக்க முடியும்? போலீஸ்காரர் உன் மேலே களங்கம் கற்பிக்க ஒரு போட்டோவை இவன் பையிலே திணிச்சு வச்சாரா? இதைப் பார். பார்த்திட்டாவது நிசத்தைச் சொல்லு" கோபத்தில் கொதித்த கனகம்மாள் அந்த வண்ணப் போட்டோவை அவள் முகத்துக்கெதிரே நீட்டினாள். நெஞ்சு வெடித்து விடும்போன்ற பயங்கர திகிலுடன் அவள் அந்த போட்டோவைப் பார்த்தாள்.

என்ன அதிசயம்? புகைப்படத்தில் இருப்பது அவள் தான். தன் முகத்தையே கண்ணாடியில் பார்த்துக்கொள்வது போல தெரிந்த அந்தப் பெண் அவளேதான்! ஆனால் அந்த மாதிரியான சிறு பூக்கள் போட்ட புடவையைக் கட்டிக் கொண்டு வலது கையில் கடிகாரத்துடன், மாடி கைப்பிடிமீது சாய்ந்த வாக்கில் எப்போது படம் எடுத்துக் கொண்டாள்? யார் எடுத்தது? எங்கே எடுக்கப்பட்டது?

"மார்ச் மாதம் பதினெட்டாம் தேதின்னு பின்னாலே எழுதியிருக்கிறதையும் பார்... அதைப் பத்தி என்ன சொல்லப் போறே?" மகேந்திரன் கடுமையான குரலில் கேட்டதும் திடுக்கிட்டு கணவன் பக்கம் திரும்பினாள்.

படத்தைத் தன் கையில் வாங்கிக்கொண்டு பின் புறத்தைப் பார்த்தாள்.

'இந்தக் கையெழுத்து என்னுடையதல்ல என்பது உங்களுக்குத் தெரியும்."

"இந்தக் குறிப்பிட்ட தேதியின் விவரமோ அர்த்தமோ எனக்குத் தெரியாது."

"நீ நல்லா பேசிச் சமாளிக்கிறே! ரொம்பக் கெட்டிக்காரி" பற்களைக் கடித்துக்கொண்டு சமையலறையை விட்டு வெளியே வந்தாள் கனகம்மாள்.

"இப்ப நாம் என்ன சொல்வது?" மெல்லிய குரலில் மகனிடம் கேட்டாள்.

"நாட்டாமை சொன்னதையே நாமும் சொல்லி அனுப்புவோம். பிறகு இதைப் பத்தி தீவிரமாக சிந்திக்கணும்"

அழுகை தொண்டையை அடைத்துக் கொண்டு விட்ட துயரத்தில் ஆடிப்போய் மெல்லத் தடுமாறியபடி நடந்து முன்னறைக்கு வந்தாள்.

"மன்னிச்சுக்கோங்க-உங்களை வெகுநேரம் காக்க வச்சுட்டோம். இந்தப் போட்டோவிலிருக்கும் பெண்ணை அநேகமாக நாங்க அடையாளம் காட்ட முடியும். அதனாலே நீங்க வேறு யாருகிட்டேயும் இனிக் காட்டி தடயம் தேடத் தேவையில்லை. இன்னிக்குப் பகல் பொழுது நான் சப்-இன்ஸ்பெக்டர் சந்திரசேகரனிடம் இது சம்பந்தமாக போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து நேரில் பேசிக்கிறேன் என்றான் மகேந்திரன்.

"நன்றி...அப்படியே நான் அவர்கிட்டே சொல்லிடறேன்" கூறிவிட்டு போலீஸ் அதிகாரி எழுந்திருந்தார்.

கேட்டுவரை கூடவே நடந்து சென்று அவரை அனுப்பி விட்டு வாயிற் கதவை அடைத்துக்கொண்டு வந்த மகேந்திரன் தாங்க முடியாத துயரத்துடன், தொப்பென்று முன் அறை சோபா ஒன்றின்மீது விழுந்தான். அது சமயம் முன் வீட்டில் அவர்கள் மூவரையும் தவிர வேறு யாரும் இருக்கவில்லை. அந்தத் துணிவில் கனகம்மாள்

தொண்டை கிழியக் கத்தினாள். "நான் சொன்னப்போ கேட்டியா! இப்போ நம்ப மானம் கப்பல் ஏறப்போகுது!"

"இதைப்பத்தி நாம் லாவண்யாவை மேலும் விசாரிப்போம் கவலைப்படாதீங்க அம்மா."

"விசாரிக்க இனி என்ன இருக்கு? உண்மையை அவள் முகமே சொல்லுதே? ரொம்ப நல்லா ஜாலம் செய்து உன்னை மடக்கிட்டாளே சதிகாரி! தாங்க முடியாம எனக்கு அழுகை வருதே? என்னத்தை நினைச்சு அழுவேன் சொல்லு. கள்ளம் கபடு தெரியாத என் மகன் ஏமாந்து போயிட்டான்னு வயிறெரிஞ்சு அழுவேனா? பரம்பரையா பணக்காரக் குடும்பம் கௌரவமாக வாழ்ந்தவங்க என்கிற பெயர் போய் இப்போ ஊரில் உள்ள நாய் நரிகள் கூட நம்மை பார்த்துச் சிரிக்க இடமாச்சேன்னு புலம்புவேனா? எதை நினைச்சு நான் அழுவேன் ஐயா-" மடார் மடார் என்று அடித்துக்கொண்டு உரத்த குரலில் ஓவென்று ஓலமிட்டு கனகம்மாள் அழுதாள்.

8

காலை பத்து மணி அளவில்தான் சப்-இன்ஸ்பெக்டர் சந்திரசேகரன் போலீஸ் ஸ்டேஷனில் இருப்பார் என்பது நாட்டாண்மைக்குத் தெரியும். அவர் புறப்படு முன்னர் அவரை வீட்டிலேயே சந்தித்துவிட வேண்டுமென்ற ஆதங்கம். முகத்தின் மீது விழுந்து கண்களைக் கூசிய காலை வெய்யிலைப் பொருட்படுத்தாது நாட்டாண்மை வேகமாக நடந்தார். கேட்டைத் திறந்து கொண்டு அவர் உள்ளே நுழைந்தபோது, முன்னறையில் ஆர்டர்லி இருந்தார். கஞ்சியில் மொடமொடத்த பெட்டி

போடப்பட்ட சப்-இன்ஸ்பெக்டரின் சீருடையை உதறி ஒழுங்கு செய்து, அருகிலிருந்த ஸ்டாண்டில் தயாராக மாட்டிக் கொண்டிருந்தார் ஆர்டலி. அவர் வந்ததைப் பார்க்கவில்லை.

"ஐயா குளிக்கிறார் என்ன வேணும்?" சமையல் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த விபூதி நெற்றிப் பையன் அதட்டலாகக் கேட்டான்.

கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும். அது போல போலீஸ் அதிகாரி வீட்டுப் பொடிப் பையனும் மிரட்டுவான் போலும்! தமக்குள் புன்னகைத்தபடி "நாட்டாண்மை முருகேசன் வந்திருக்கார்னு சொன்னால் போதும்?"

குனிந்து கொண்டிருந்த ஆர்டலி சட்டென்று நிமிர்ந்தார்.

"உட்காருங்க அய்யா... சப்-இன்ஸ்பெக்டர் வந்திடு வார்" பிரம்பு நாற்காலியைக் காட்டி உபசரித்தார்.

சமையற்காரப் பையன் பிக்பக்கம் மாயமாகி விட்டான்.

குளியலறைக் குழாயின் சப்தம் அடங்கியது. சிறிது நேரத்தில் சப்-இன்ஸ்பெக்டர் தலையைத் துவாலையால் துடைத்தபடி லுங்கி பனியனில் முன்னறைக்கு வந்தார். அவரது கண்கள் தூக்கமின்மையால் சிவந்து காணப் பட்டன.

"பையா, காப்பி கொண்டு வா"... எனக் குரல் கொடுத்தார்.

"அதெல்லாம் ஒண்ணும் தேவையில்லை. உங்களிடம் தனியா ஒரு சங்கதி பேசணும்," முருகேசன்

மெல்ல ஆரம்பித்ததும் ஆர்டலி அந்த இடத்தைவிட்டு அப்பால் நகர்ந்து போய்விட்டார்.

"நேத்து ராத்திரி நான் வெகுநேரம் கழிச்சுதான் குவார்ட்டர்ஸுக்கு வந்தேன். இரவு பால் மட்டும் சாப்பிட்டுட்டு படுத்துட்டேன். அதனாலே காலையிலே எழுந்திருக்க நேரமாயிடிச்சு"

"பக்கத்து கிராமத்திலே ஒரு அடிதடி சமாச்சாரம்னு கேள்விப்பட்டேன். அங்கே உங்களுக்கு வேலை சரியா இருந்திருக்கும்" சப்-இன்ஸ்பெக்டர் லேசாகச் சிரித்தபடி துவாலையைத் தோள்மீது போட்டுக்கொண்டு வலது கைவிரலால் முடியை சீராக்கியவராக எதிரே கிடந்த பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்.

"காலையில் விஷயமில்லாம இப்படி நீங்க அவசரமா வந்திருக்க மாட்டீங்க...தெரிஞ்சுக்கலாமா?"

"காரணத்தோடுதான் வந்திருக்கேன். நீங்க எங்களுக்கு ஒரு உதவி செய்யணும். அந்த போட்டோவில் இருக்கும் பெண் யார்னு கண்டு பிடிச்சுட்டோம். அதனாலே..."மென்று விழுங்கினார் முருகேசன்.

"அப்படியா? எங்க வேலை சுலபமா போச்சு!"

"எங்களுக்குத்தான் இப்போ பல சிக்கல்கள் ஏற்பட்டிருக்கு. அந்தப் பெண் வேறு யாருமில்லே...நம்ப பெரியதனக்காரர் மருமகள் லாவண்யா."

சுற்றுமுற்றும் பார்த்தபடி மெல்லிய குரலில் கூறினார் முருகேசன். திகைப்புடன் நிமிர்ந்து உட்கார்ந்தார் சப்-இன்ஸ்பெக்டர். "அப்படின்னா அந்த ஆளு?"

"அதெல்லாம் பத்தி நாம் அந்தப் பொண்ணுகிட்டே கொஞ்சம் விசாரிக்க வேண்டியிருக்கும். ஏற்கெனவே படத்தைப்பத்தி ரெண்டொருவர் இத்தனை நேரம் தெரிஞ்சு

கிட்டு என்ன கதைகள் கட்டி இருக்காங்களோ? மகேந்திரன் குடும்பத்துக்கு எந்தவிதமான அவச்சொல்லும் ஏற்படாமப் பாதுகாக்க வேண்டியது என் கடமை. உண்மையை நான் உங்ககிட்டே சொல்லிட்டேன். மேற்கொண்டு இந்தச் சங்கதியில் நீங்க செய்ய வேண்டிய கடமைகளைக் கொஞ்சம் இலைமறையாச் செய்தா ரொம்ப புண்ணியம். எங்க ஊரின் மானம் பிழைக்கும்."

"அந்தப் பெண்ணின் புகைப்படம் இறந்தவனது பாண்ட் பையில் இருந்ததுன்னா?" சந்திரசேகரன் அர்த்தபாவத்துடன் கேட்டார். உடல் கூசிப் போனார் முருகேசன்.

லாவண்யா அப்படிப்பட்டதொரு பெண்ணா? ஏற்கனவே இருந்த காதலனை உதறிவிட்டுப் பணக்காரப் பிள்ளை என்று மகேந்திரனைக் கட்டிக் கொண்டு விட்டாளா?

எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ? சந்திரசேகரன் கேட்டபோது அவமானத்தில் மிகவும் சுருங்கிப் போனார்.

"விஷயம் ரொம்ப அம்பலமாகி ஊர் சிரிக்குமுன் நான் அந்தப் பெண்ணைக் குடும்பத்து நண்பன் என்கிற முறையில் விசாரிக்கப் போகிறேன். தயவு செய்து நீங்க எனக்குக் கொஞ்சம் அவகாசம் தரணும்" நாட்டாண்மையின் குரல் கெஞ்சலில் குழைந்தது.

"அப்படியே செய்கிறேன். அதற்குள் இறந்தவனது உறவினர்கள் யாராவது அவன் படத்தை பத்திரிக்கையில் பார்த்துவிட்டு உடலைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கலாம். எங்களுக்கு இந்தக் கேஸ் சம்பந்தமாக ஏகப்பட்ட வேலை இருக்கு"

"நன்றி...அப்போ நான் வரேன்" விடைபெற்றுக் கொண்டு பெருமூச்சுடன் கிளம்பினார்.

"வெகு தொலைவு நடந்து வந்தது போன்ற களைப்புடன் வீட்டுக்குள் புகுந்தார். முற்றத்தில் இறங்கி கால் கைகளைக் கழுவிக் கொண்டார். செம்பில் இருந்த பச்சைத் தண்ணீரால் முகத்தை அலம்பிக்கொண்டும் அது அனலாக எரிவது போன்றதொரு பிரமை!

"திலகா இலையைப் போடு... ஏதாச்சும் சாப்பிடக் குடு" குரல் கொடுத்தார்.

"சித்தே முன்னே ஒண்ணும் சாப்பிட பிடிக்கலைன்னு சொன்னீங்க? இப்போ வந்து பசிக்குதா?' லேசாகச் சிரித்தாள் மனைவி.

"இந்த வயிறு இருக்குப் பாரு, அது ரொம்பவே வெட்கம் கெட்டது. இப்போ திடீர்னு பசி வந்துவிட்டது" என்று சொல்லிக்கொண்டே கூடத்துத் தரையில் அமர்ந்தார். ஏதாவது சாப்பிட்டால்தான் மனதை வருத்திய வேதனை அடங்கும் போன்றதொரு நினைப்பு அவருக்கு.

பட்டுப் போன்ற மிருதுவான தோசைகளை வார்த்து வார்த்துத் தட்டில் எடுத்துக் கொண்டு வந்து சாம்பாரோடு பரிமாறிவிட்டு காப்பி டம்ளருடன் வந்து எதிரே உட்கார்ந்து கொண்டாள் திலகவதி. வெளிப்பார்வைக்கு அவள் அமைதியாகக் காணப்பட்டாலும் உள்ளூர வேதனையில் புழுங்கிக்கொண்டிருந்தாள்.

"ஊரில் நாலு பேருக்கு தெரிய வரத்துக்கு முந்தி, கனகம்மாளிடம் இதைப் பத்திப் பேசியாகணும்" முணுமுணுத்தபடி நாட்டாண்மை தோசையைப் பிட்டு சாம்பாரில் தோய்த்து விழுங்கினார்.

"கனகம்மாள் இந்த விஷயத்தில் ரொம்பக் கடுமையாகத்தான் இருப்பாங்க... அவங்களைப் பத்தி

நமக்குத் தெரியாதா!'' இன்னும் ஒரு தோசையை எடுத்து இலையில் போட்டாள் திலகவதி.

நாட்டாண்மை நிமிர்ந்து தமது மனைவியைக் கூர்மையாகப் பார்த்தார்.

''உண்மையைச் சொல் திலகா! நீ என்ன நினைக்கிறே!''

''எங்கேயோ ஏதோ ஒரு தப்பு நடந்திருக்கு. அதைத்தவிர என்னால் வேறே எதுவும் நினைக்க முடியலை.''

''செத்தவன் பாண்ட் பையில் லாவண்யாவின் போட்டோ இருந்துதுன்னா அதுக்குக் காரணம் இல்லாமல் போகுமா?''

''காரணம் பல இருக்கலாம், ஆனால் லாவண்யா குற்றமற்றவள்னு என் கணிப்பு'' அழுத்தமாகச் சொன்னாள் திலகவதி.

''எப்படி நீ நிச்சயமாகச் சொல்றே?''

''லாவண்யாவின் அண்ணனுக்கு வேண்டாத எவனோ ஒரு தடியன் அவுங்க குடும்ப கௌரவத்தைக் குலைக்க லாவண்யாவின் புகைப்படத்தை எடுத்துட்டு வந்திருக்கான். மகேந்திரன் கிட்டே காட்டி பணம் வாங்கத் திட்டமிட்டிருக்கலாம்...அதுக்காகப் புறப்பட்டு நம் ஊருக்கு வந்திருக்கான். விதி வேடிக்கை செய்துட்டது. வெள்ளத்திலே விழுந்து அவன் செத்துட்டான். ஆனா அவன் நினைச்ச அந்தக் கொடும் காரியம் இப்போ அசுர வடிவம் எடுத்திருக்கு. பாவம் லாவண்யா? அவளுக்கு இப்படி ஒரு அவமானம் வரத் தேவையில்லை'' படபடவென்று பேசினாள் திலகவதி.

''நீ அப்படியா நினைக்கிற-அந்தப் பெண்ணைப் பத்தி உனக்கு நல்ல அபிப்ராயம் இருக்கு.''

''நான் லாவண்யாவோட அதிகம் பழக வாய்ப்பு இருக்கலை. அவள் மாமியார் மருமகளை வீட்டோட கைதிபோல வச்சிருக்கற சங்கதி ஊர் அறிஞ்ச ரகசியம். கல்யாணமான புதுசுலே உறவினருங்க வீட்டிலே மகேந்திரனுக்கும் அவள் மனைவிக்கும் விருந்து கொடுத்தாங்க... அப்போ நாமும் அவங்களை நம் வீட்டிலே சாப்பாட்டுக்கு அழைச்சிருந்தோம்.''

''ஆமாம் ஞாபகமிருக்கு. கனகம்மா ரொம்ப பிகுசெய்துகிட்டு பிறகு அனுப்பி வச்சாங்க.''

லாவண்யா படிச்ச பெண்தான். ஆனால் துளிக்கூட கர்வமில்லாம நடந்துகிட்டா. முதல் தடவை ஏற்பட்ட அறிமுகத்தின்போதே எத்தனை அன்பா பழகினா. அடுப்பு மேடைமேல் வச்சிருந்த பாயசப் பாத்திரத்தைப் பரிமாற எடுத்தேன்...கை சுட்டுடுச்சு. 'அப்பாடா'ன்னு நான் என்னையுமறியாமல் கூவிட்டேன். எழுந்தோடி வந்து அவசரமாத் தன் கையைக் கழுவிகிட்டு என் கையை பிடிச்சுச் சூடுபட்ட விரல்களை ஊதி, என்ன காரியம் செய்தீங்க, பாயாசத்தைக் கால்மேலே ஊத்திக்கிட்டிருந்தா நெருப்பு காயமாகியிருக்குமென்று என்னைப் பரிவோடு கண்டிச்சு கைவிரல்கள் மேலே கொஞ்சம் தேங்காய் எண்ணெயைத் தடவிவிட்டு பிறகு சமையல் அறை வேலையெல்லாம் அவளே செய்தாள். வீட்டுக்கு விருந்தாளியாக வந்துட்டு வேலை செய்கிறியேம்மான்னு நான் மாஞ்சு போனபோது அதனால் என்ன? கையிலே வேதனையோட நீங்கள் இப்போ எதுவும் செய்ய முடியாது. நாங்க வீட்டிற்குப் போனதும் ஒரு மருந்து கொடுத்தனும்பறேன். மறக்காம படுக்கப் போகுமுன்

ரெண்டுநாள் அதைக் தடவிக்கோங்கோ. கொப்பளம் ஏற்படாது எரிச்சல் அடங்கிடும்னு ஆறுதலா சொன்னா. அப்படியே மறக்காம கணவன்கிட்டே மருந்தையும் கொடுத்தனுப்பிச்சா, எத்தனை அன்பான பெண்!''

''இருக்கலாம். அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்'' காப்பியை ஒரே மூச்சில் குடித்து விட்டுக் கேட்டார் நாட்டாண்மை.

''கபடமே இல்லாம யதார்த்தமாப் பழகற ஒரு பெண் தன் புருஷனுக்குத் துரோகம் செய்வாளா, யோசிச்சுப் பாருங்கோ?''

''ஏற்கனவே நான் ஒருவனைக் காதலிச்சேன்னு மகேந்திரன் கிட்டே சொல்ல பயந்து விட்டிருக்கலாம்.''

''அப்படிச் செய்கிறவளா எனக்குத் தோணலை வெளிப்படையாப் பேசற பெண் அவள்.

''அத்தனை தீர்மானமா நீ எப்படிச் சொல்ல முடியும்?''

''அவங்க அண்ணனைப் பத்தி... சாப்பாட்டுக்கு வந்த அன்னிக்கு நான் விசாரிச்சேன். அவங்க ரொம்ப சாதாரணக் குடும்பம்-ஏதோ கடன் இல்லாம காலங் கழிக்கிறவங்கனு கொஞ்சமும் வெட்கப்படாம சொன்னா. பிறந்த வீட்டில் பால் ஓடுது. தேன் ஓடுதுன்னு புழுகலை. ஏழ்மையை வெட்கமில்லாம ஒப்புக் கொண்டா. அப்படிப் பட்டவ கல்யாணத்துக்கு முந்தி மகேந்திரனிடம் சொல்லி யிருப்பா?''

''என்ன சொல்லியிருப்பா?''

''நான் ஏற்கெனவே ஒரு முறை காதலித்து ஏமாந்து போனவ-நான் அதை மறைக்க விரும்பலைன்னு விலாவாரியா சொல்லியிருப்பா.''

''அத்தனை துணிவான பெண் லாவண்யான்னு நீ நினைக்கிறியா?''

''அத்தனை நேர்மையான ஒரு பொண்ணுன்னு நான் நினைக்கிறேன்.''

''நம்ப ஊர் சமாசாரம் தெரியுமில்லையா?''

''நல்லாத் தெரியும், கனகம்மாளின் குணமும் தெரியும்.

''எல்லோரும் சேர்ந்து அந்தப் பெண்ணை அவமானப்படுத்த போறீங்க? ஆனால் நான் மட்டும் அவள் பக்கம் என்கிறதை இப்பவே தெரிஞ்சுக்கோங்க...'' மிகவும் கோபத்துடன் திலகவதி பேசினாள். லாவண்யாவுக்கு வரவிருந்த கஷ்டத்தை நினைத்தபோது பெண் ஒருத்தியைப் பெற்று விட்டிருந்த அவள் நெஞ்சம் பதைத்தது.

கையைக் கழுவிக் கொண்டு உத்திரீயத்தை நாற்காலி கைமேலிருந்து உதறித் தோளில் போட்டுக்கொண்டு கிளம்பினார் நாட்டாண்மை.

''வெளியே போகரச்சே குறுக்கால பேசரதாக நினைக்காதீங்க. அந்தப் பொண்ணை நேரே கூப்பிட்டு நீங்களே கேட்டுடுங்க. என்னைக் கேட்டா இந்தப் போட்டோ விவகாரத்தை காதும் காதும் வச்சாப்பல எல்லாரும் மறந்துடறது நல்லதும்பேன்.''

''எனக்கும் அப்படித்தான் தோணுது. ஆனால் இப்போ விவகாரம் எல்லை மீறிப் போயிருக்கு. அந்தப் போலீஸ்காரர் நேரே மகேந்திரன் வீட்டுக்குப் போவதாகத் தானே சொல்லிட்டுப் போனார். இத்தனை நேரம் அவங்க எல்லோரும் படத்தைப் பார்த்திருப்பாங்க.''

''ஒருத்தருக்கு தெரிஞ்சதுதான் ரகசியம். இரண்டு பேருக்குத் தெரிஞ்சா விஷயம் அம்பலம் ஏறிட்டதுன்னு அர்த்தம். நம்ப சிவன் கோவில் அர்ச்சகர் பார்த்து அடையாளம் கண்டுகொண்டு விட்டார். கடைத் தெருவிலே யாராவது ஒருத்தர் கண்டு கொண்டிருப் பாங்க... நாம பார்த்துட்டோம், இதை இனிமேலே ரகசியமாகப் காப்பாத்த முடியும்னு நினைக்கிறியா?''

தெருக் கோடியில் கணவன் மறையும்வரை நின்று பார்த்துவிட்டு உள்ளே வந்து கதவைத் தாளிட்டுக் கொண்ட திலகவதியின் நெஞ்சு நெருப்பாக எரிந்தது. ஒரு பொல்லாதவன் ஒரு பெண்மேல் குற்றம் கற்பிக்கக் கிளம்பி வந்திருப்பதைப் புரிந்து கொள்ளாது இவர்கள் எல்லோரும் கூடி லாவண்யாமீது படாப்பழி சுமத்தப் போகிறார்கள். லாவண்யா இதை எப்படி சமாளிக்கப் போகிறாள்.?

கதவை லேசாகத் தட்டிவிட்டு மெல்லத் திறந்து கொண்டு உள்ளே வந்தார் நாட்டாண்மை.

''கதவு மூடியிருக்குன்னு நினைச்சேன்...ஏதோ பேசவேண்டுமென்று'' ஆரம்பித்தபடி செருப்புகளை நடையில் கழற்றிவிட்டு... கூடத்திற்குள் வந்தார்.

தலைவிரிகோலமாக கனகம்மாள் ஊஞ்சல்மீது உட்கார்ந்திருத்தாள். கண்கள் சிவந்து முகம் உப்பிக் காணப்பட்டது.வேலையாட்கள் யாரையும் அருகில் காணவில்லை.

''இனிமேலே வாசக்கதவை எதுக்கு மூடணும்? சொல்லுங்க. நம்ப வீட்டுச் சங்கதி ஊர் முழுதும் பரவியாச்சே!'' கடுமையாகக் கேட்டபடி ''உட்காருங்கோ'' என்று கோபம் கலந்த குரலில் உபசரித்தாள்.

''மகேந்திரன் கடைக்குப் போயிருக்கான்'' கூடத்தில் கிடந்ததொரு நாற்காலியில் அவர் அமர்வதற்குள் அதட்டலாகக் கனகம்மாள் சீறினாள்.

''இனி மகேந்திரனுக்குக் கடை கண்ணி வேலை எதுவும் இருக்காது. அங்கே போய் யார் மூஞ்சியில் அவன் விழிப்பான் சொல்லுங்கோ? போலீஸ்காரர் உங்க வீட்டுக்கு வந்து படத்தைக் காட்டி விட்டுத்தான் இங்கே வந்திருக்கார்னு உங்களுக்கு நல்லாத் தெரியும், நீங்க ஊருக்குப் பெரியவர், நல்லது பொல்லாததுக்கு நடுநிலைமை வகிச்சு நியாயம் சொல்பவர். சொல்லுங்கோ, எங்க மானத்தை இவ இப்படியா குலைக்கணும்?''

''தீர விசாரிப்போம்... அவசரப்படாதீங்க...'' ஆறுதலாக அவர் பேசியதை கனகம்மாள் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

''மகேந்திரன் சப்-இன்ஸ்பெக்டரைப் பார்க்கப் போயிருக்கான். ஊர் முழுவதும் இனி தேடி அலைய வேணாம். அந்தப் போட்டோவில் இருக்கிறவ என் பெண்ஜாதிதான். அவளுக்கு ஏற்கனவே ஒரு காதலன் இருந்தான் என்கிற சங்கதியே இப்பத்தான் தெரிய வந்திருக்கு... அதனால இதுக்கு நாங்க ஒரு தீர்வு காணக் கொஞ்சம் அவகாசம் கொடுங்கோன்னு கேட்கப் போயிருக்கான்.

''காலையிலே எழுந்ததும் வீட்டிலே பிணம் விழுந்தாப்பல ஆயிடுச்சு. அடுப்பு அப்படியே தூங்குது... ஆனால் தூக்கம் இனி எங்கள் யாருக்கும் கிடையாது. முருகேசன் அண்ணா... இந்தப் பாவி என்ன செய்துட்டா பாருங்க... மானம் போச்சே?''

தலையில் அடித்துக் கொண்டு மறுபடியும் குலுங்கி அழ ஆரம்பித்தாள் கனகம்மாள்.



அன்று சற்று முன்னதாகவே சந்திரசேகரன் காவல்துறை நிலையத்துக்கு வந்து விட்டிருந்தான். நாட்டாண்மை சொன்ன தகவலைக்கேட்டு அவன் அதிர்ச்சியுற்றிருந்தான். அந்தப் படத்திலிருக்கும் பெண் மகேந்திரனின் மனைவியா? அப்படியென்றால் 'இறந்தவன் யார்?" என்று அவளால் அடையாளம் காட்ட இயலும். அது தெரிந்தால் மேற்கொண்டு ஆவன செய்வது சுலபமாயிற்றே?

அடுத்து அவன் லாவண்யாவை நேரிடையே விசாரிக்க வேண்டிய வேலை இருக்கிறது. அதை விரைவில் முடிக்க வேண்டும்.

"சார்!" ஆர்டலியின் குரலைக் கேட்டு அவன் நிமிர்ந்தான்.

"மகேந்திரன் ஐயா உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்?"

மாலைவரை காத்திருக்க முடியாததுபோல மகேந்திரன் உடனேயே புறப்பட்டு அங்கு வந்திருந்தான். தன் நண்பனிடம் அருவருப்பான விஷயங்களைப் பேச வேண்டி வருமே என்றதொரு குழப்பம் ஒரு கணம் அவன் மனதைக் கலவரப்படுத்தியது.

"வரச்சொல்!" என்றார். தன் உணர்வுகளை சமாளித்துக் கொண்டு, 'உட்காருங்கோ?' எதிரே கிடந்த நாற்காலியைக் சுட்டிக்காட்டி உபசரித்தார்.

முகம் சிவந்துபோன மகேந்திரன் பதட்டமாக அமர்ந்தான். பேச வேண்டி நினைத்த சங்கதிகள் எல்லாம் நெஞ்சிற்குள் உருண்டையாக அடைத்துக் கொண்டு விட்டன போன்ற பிரமையில் மூச்சுத் திணறிப் போனான்.

"பிளாஸ்கில் காப்பி இருக்கு. சாப்பிடுகிறீர்களா?"

சந்திரசேகரன் அன்புடன் கேட்டதும் வேண்டாம் என்ற பாவனையில் பலமாகத் தலையை அசைத்தான். உண்மை தெரிந்தபின் அவனுக்கு உணவு இப்போது விஷமாகி விட்டதே! ஒரு கணம் பயங்கரமானதொரு அமைதி நிலவியது. முடிவில் தொண்டையை செருமிக் கொண்டு மகேந்திரன் மெல்லிய குரலில் பேசினான்.

"அந்தப் புகைப்படத்திலிருப்பது யார் என்று தெரிந்து விட்டது."

"ஆமாம் நாட்டாண்மை வந்து காலையில் சொன்னார்."

கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டான் மகேந்திரன். அவமான உணர்வில் உடல் முழுதும் சில்லிட்டுப்போயிற்று. நண்பன் முன்னால் அவனுக்கு எத்தனை பெரிய தலைக்குனிவு?

"அது என் மனைவி லாவண்யாவின் புகைப்படம். இறந்து போனவன் என் மனைவிக்கு வேண்டியவனாக இருக்கலாம். அவளது நெருங்கிய நண்பன் என்பது எங்கள் சந்தேகம். நான் இன்னும் அவளை விசாரிக்கவில்லை. என் தாயும் நானும் ரொம்ப அதிர்ந்து போயிருக்கிறோம். இந்தச் சங்கதி ஊராருக்குத் தெரிந்துவிட்டால் பிறகு நான் தலை நிமிர்ந்து நடக்க முடியாது... அதனால்" தடுமாறினான்.

"புரிகிறது மிஸ்டர் மகேந்திரன்! சற்றுமுன் என்னைத் தேடிக்கொண்டு குவாட்டர்ஸ்க்கு வந்த நாட்டாண்மை யின் வேண்டுகோளும் இதுவேதான். என்னால் ஓரளவு தான் இந்த விஷயத்தை ரகசியமாகப் பாதுகாக்க முடியும். என் மேலதிகாரி இந்தக் கேஸ் சம்பந்தமாக மிகவும் ஜாக்கம் எடுத்துக் கொண்டிருக்கிறார். ஏற்கெனவே பத்திரிக்கையில்

இறந்தவரின் படத்தைப் போட்டு பெண் ஒருத்தியின் புகைப்படம் இருந்த விவரத்தை பிரசுரித்திருக்கிறோம். அத்துடன் புகைப்படத்தை நாலு பேரிடம் காட்டித் தகவல் சேகரிக்கக் கிளம்பிய போலீஸ் அதிகாரி இதற்குள் யார் யாரிடமெல்லாம் காட்டியிருக்கிறாரோ தெரியாது.

"அது யாருடைய படம் தெரியுமா? மகேந்திரன் பட்டணத்திலிருந்து புடிச்சுகொண்டு வந்திருக்கிறானே ஒரு அழகியை, அதான் அவன் மனைவி லாவண்யா அவளுடைய படம். அப்படின்னா தெரியுதா? பெரிய வீட்டு சங்கதியெல்லாம் இப்படித்தான் கும்பையைக் கிளறினாக் கூளம் கூளமாக வெளியே வராப்பல... கொஞ்சம் நோண்டிப் பார்த்தால் ரொம்ப சங்கதிகள் கிடைக்கும்" யாரோ கூறிவிட்டுச் சிரிப்பதுபோல அவன் காதுகளில் கேட்கவே அவனுக்குத் தலை சுற்றியது. அவனால் நம்ப முடியவில்லை. நம்பாதும் இருக்க முடியவில்லை. கொஞ்சிக் குழைந்து பேசும் லாவண்யா அப்படிப்பட்டதொரு வஞ்சகியா? பணத்துக்காக அவனை மயக்கி விட்டாளா?

"மிஸ்டர் மகேந்திரன்! நான் உங்கள் மனைவியை இப்போது விசாரிக்க வேண்டியிருக்கு உங்க வீட்டுக்கு நான் எப்போது வந்தால் சௌகரியப்படும்!"

திடுக்கிட்டு விழித்துக் கொண்டான் மகேந்திரன்.

"இன்று சாயங்காலம் விசாரிப்பை வச்சுக்கலாமா?"

"போட்டோவிலிருப்பது யார்னு தெரிஞ்சதும் உடனடியாகச் செயல்பட வேணும்னு சர்க்கிள் எதிர் பார்ப்பார். தண்ணீரால் ஊறிப்போன பிணம்! அதிகநாள் பிணக்கிடங்கில் தொடர்ந்து வைத்திருப்பது சிரமம். அதனாலே..."

அவமான உணர்வில் சுருங்கிப்போனான் மகேந்திரன். போலீஸ்காரர் அவர்கள் வீட்டுக்குள் நுழையுமளவு நிலைமை மோசமாகிவிட்டது. "நான் சீக்கிரம் கடையை மூடிவிட்டு வந்துவிடறேன். ஐந்துமணி அளவில் நீங்க வந்தால் சரியா இருக்கும்."

"இந்த விஷயத்தில் என் கை கட்டப்பட்டிருக்கிறது. நான் என் கடமையைச் செய்து முடிக்கவேண்டும் என்பதை நீங்க புரிஞ்சுக்கணும். என்னால் இதில் அதிக உதவி ஏதும் செய்ய முடியாததற்கு வருந்துறேன்."

கண்டிப்பாக ஆனால் கனிவாகக் கூறியபடி சந்திரசேகரன் எழுந்து நின்றார்.

"அவ்வளவுதான், போகலாம்" என்ற அந்தக் குறிப்பை உணர்ந்து கொண்டு மகேந்திரன் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தான். காரில் உட்கார்ந்தவனது மனம் கல்லாகக் கனத்தது. இந்த அவமானத்துடன் அவன் தொடர்ந்து உயிரோடு வாழவேண்டியது அவசியமா?

வடவாற்றில் இன்னமும் வெள்ளம் வடியவில்லை. காரை நேரே ஆற்றங்கரைக்கு ஓட்டிச் சென்று கண்ணை மூடிக்கொண்டு இறங்கிவிட்டால்? காதலனை விழுங்கி விட்ட வடவாறு கணவனையும் ஏற்றுக் கொண்டு விடட்டுமே! பிறகு யார் என்ன பேசுகிறார்கள் என்ற துக்கம் வெட்கம் ஏதும் இல்லையே? கண் இமைகளைச் சுட்ட கண்ணீரை விழுங்கிக் கொண்டான்.

அம்மா மனம் ஒடிந்து போய் அவனது திருமணத்திற்கு சம்மதம் கொடுத்ததின் பலன்? அன்னையின் மனத்தைக் குத்திக்குதறி நோக வைத்ததின் பாவம் எல்லாவற்றையும் அவன் இப்போது இந்த ரூபத்தில் அனுபவிக்கிறானே? கடவுளே!

பெருமூச்சு விட்டபடி வீட்டை நோக்கி வண்டியைச் செலுத்தினான்.

"மகேந்திரா! நீயும் உன் தாயும் கூடத்தில் இருங்கள்- முன்னறையில் நானும் லாவண்யாவும் கொஞ்சம் பேச வேண்டியிருக்கு" என்றார் நாட்டாண்மை.

"கேட்கிறதை எங்கள் முன்னால் கேட்டு விடுங்களேன்-இனி மூடிமறைக்க என்ன இருக்கு?" சீறினாள் கனகம்மாள்.

"ஆத்திரப்படாதீங்க அம்மா. இதில் ஏதாவது தவறு இருக்கான்னு முதலில் சிந்திக்கணும். எதுக்கும் நான் லாவண்யாவுடன் தனியே பேச விரும்பறேன்."

அரை மனதுடன் கனகம்மாள் ஊஞ்சலிலேயே உட்கார்ந்து விட்டாள். தொப்பென்று ஒரு நாற்காலியில் சாய்ந்து கொண்ட மகேந்திரனுக்கு தன் மனைவியின் முகத்தைப் பார்க்கக்கூட வெட்கமாக இருந்தது. முன்னறைக்குள் புகுந்தார் முருகேசன்.

பணக்காரர் வீட்டு மருமகள் என்று பட்டுசேலை கட்டிக் கொண்டு நகைகளை அள்ளிப் போட்டுக் கொண்டு நிற்கவில்லை லாவண்யா. வாயில்சேலையில் மிகவும் எளிமையாக நெற்றியில் நிறைந்த குங்குமப் பொட்டுடன் பளிச்சென்று காணப்பட்டாள். நாட்டாண்மை முருகேசன் அவளை ஏற இறங்க வியப்புடன் பார்த்தார்.

அவளது அழுது உப்பியிருந்த முகமும் சிவந்த கண்களும் அவர் மனதை வேதனை செய்தன. கபடமே சிறிதும் காணாத அந்த முகத்திற்குப் பின்னால்...இந்த துரோகமான செயல் மறைந்து கொண்டிருக்கும் என்று அவரால் நம்பவே முடியவில்லை.

"லாவண்யா. அப்படி உட்காரம்மா" ஒரு சோபாவைச்

"பரவாயில்லை நின்றுகொண்டே பேசறேன்" என்ற அவள் ஓரமாக வந்து நின்றாள்.

படிப்பறிவற்ற கிராமத்துப் பெண்ணாக இருந்தால் அதட்டி உருட்டி மிரட்டி அவர் கேட்க முடியும். லாவண்யா படித்தவள். மேல்மட்டத்துவாசி. காலம் சென்ற தமது நண்பரின் மருமகள்.

அவருக்குப் பேச நாத் தடுமாறியது.

"ஏம்மா!... படம் உன்னுடையதுதானே?" கேட்பதற்குள் நெஞ்சு படபடத்தது.

"என்னுடையது போலத்தான் இருக்கு.ஆனால் எங்கே எப்போ யார் எடுத்ததுன்று எனக்கே தெரியலை."

"இப்படிச் சொன்னா யாராவது நம்புவாங்களா அம்மா?"

"கண்ணால் பார்த்ததெல்லாம் பொய் - தீர விசாரிப்பது தான் மெய்னு பெரியவங்க சொல்லியிருப்பது உங்களுக்கு தெரியாததல்ல?"

"விஷயத்தை பெரிசு படுத்தாம காதும் காதும் வச்சது போல முடிக்கணும்னுதான் நான் இதில் தலை யிட்டிருக்கேன். தகப்பன்போல நினைச்சு உண்மையை என்கிட்ட சொல் அம்மா!

"இப்போ எனக்கு எல்லோரும் எதிரிகளா யிட்டாங்க. அதனாலே உங்க ஒருத்தர் கிட்டேதான் நான் நியாயத்தையும் கருணையையும் எதிர்பார்க்கிறேன். உங்களை என் தகப்பனாக நினைச்சு சத்தியமாச் சொல்றேன். அந்த மனிதன் யார்னு எனக்குத் தெரியவே தெரியாது. அவர் பாண்ட் பையில் என் புகைப்படம் எப்படி வந்ததுன்னும் புரியலை. அந்தப் படத்தை நான்

எப்போ எடுத்துக்கிட்டேன்னும் தெரியலை'' திணறிய லாவண்யா கண்களில் நீர் புரள பரிதாபமாகப் பார்த்தாள்.

''நீ இப்படி ஒரேயடியாக மறுத்தா உன் மாமியார் ஒத்துக்க மாட்டாங்க. உன் கணவர் ஏத்துக்க மாட்டார். ஊரார் நம்பமாட்டாங்க?''

''நான் சொல்றது உண்மை. எனக்கும் அந்த மனிதனுக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது. எந்தக் கோவில் முன்னாலும் நான் நின்னு சத்யம் செய்ய் முடியும். ஏன்னா நான் நிரபராதி-களங்கமில்லாதவ'' கோபமாகப் பேசிய லாவண்யா கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

''ரொம்ப குழப்பறே அம்மா. படம் உன்னுடைய துன்னு கண்டு பிடிச்சுட்டாங்க. அந்த மனிதன் உன்னைத் தேடிக் கொண்டுதான் இங்கே வந்திருக்கான்னு சப்-இன்ஸ்பெக்டர் உள்பட எல்லாரும் சந்தேகிக்கறாங்க. அவன் யார்னு நீ அடையாளம் காட்டிட்டா கேசை சட்டு புட்டுனு முடிச்சிட்டு உடலைச் சொந்தக்காரங்ககிட்ட கொடுத்துடுவாங்க. இந்தச் சங்கதி ஊர் முழுவதும் பரவாம தடுத்துடலாம்.''

யார்னு எனக்குத் தெரிஞ்சாதானே சொல்ல முடியும்?''

நல்லா யோசிச்சுப் பார் அம்மா...பட்டணத்திலே நீ நர்ஸ் வேலை பண்ணிக்கிட்டிருந்தப்போ ஒரு சமயம் இந்த மனிதன் நோயாளியாக உன் கவனிப்பில் இருந்தானா? இன்னொரு தடவை இன்ஸ்பெக்டரிடமிருந்து படத்தை வாங்கிக் கொண்டு வந்து காட்டவா?''

அருவருப்பைத் தாளாது உடலைச் சிலிர்த்துக் கொண்டாள் லாவண்யா!

''நல்லா யோசிச்சுப் பார்த்துதான் சொல்றேன். இந்த மனிதனை நான் எங்குமே பார்த்தது கிடையாது. நீங்க நினைக்கிறாப் பல அவர் என்னுடைய சிநேகிதருமில்லே. ஊருக்கு பெரியவரான நீங்கள் என் வார்த்தையை நம்பணும். தகாத காரியம் ஏதாவது செய்தவளாக இருந்தால் சட்டென்று ஒத்துக் கொண்டு அதுக்கேத்த தண்டனையை அனுபவிக்கத் தயாரா இருப்பேன். மனதால் கூட நான் என் கணவருக்கு துரோகம் செய்யலை. இதுக்கு மேலே என்னைக் குத்திக் கேட்டு சித்திரவதை செய்யாதீங்க!''

முன்னறையிலிருந்து வெளியே வந்த நாட்டாண்மை கூடத்திற்கு வந்தார்.''உங்களுக்காவது உண்மையைச் சொன்னாளா?'' ஆவலுடன் கேட்டபடி கனகம்மாள் ஊஞ்சலினின்று எழுந்தாள்.

''இல்லேம்மா. உங்க மருமகளுக்கு இறந்தவனைப் பத்தி எதுவும் தெரியாதாம். பலமுறை கேட்டுவிட்டேன். அவளிடமிருந்து ஒரே பதில்தான் கிடைச்சது.''

கனகம்மாள் வெறுப்புடன் சூள் கொட்டினாள்.

''நீங்களும் நானும் கேட்டு அவள் எதையும் ஒத்துக்கப் போறதில்லை. தாலி கட்டினவன் கேட்டுப் பார்த்தால்தான் உண்டு'' மகன் பக்கம் திரும்பி கடுமையாக விழித்தாள்.

துயரம் - கோபம் - அவமானம் போன்ற பல்வேறு உணர்வுகளால் குழம்பித் துவண்டு போயிருந்தான் மகேந்திரன்.

''எல்லோரும் கேட்டு முடிச்சதும் நான் என் கடமையைச் செய்யத்தான் போறேன். கொஞ்சம் இப்போ நிம்மதியா வெளியிலே போயிட்டு வரேன்'' என்று கூறி விட்டு பதிலுக்குக் காத்திராது காரில் கிளம்பி விட்டான்.

சந்திரசேகரன் வந்து விசாரிக்கும்வரை அவனுக்கு வீட்டில் இருப்புக் கொள்ளாது போன்ற ஒரு தவிப்பு. வேலையை கவனித்தாலாவது கொஞ்சம் நிம்மதி ஏற்படாதா என்ற ஆதங்கம் அவனுக்கு.

முருகேசன் விடைபெற்றுக் கொண்டு வெளி யேறினார். கனகம்மாள் கதவடைத்துவிட்டு முன்னறைக்கு வந்தாள்.

திகைப்பும், வேதனையுமாக, புயலில் அடிபட்ட சிட்டுக்குருவி போல சுவர் ஓரமாக ஒண்டிக்கொண்டு நின்ற மருமகளைக் கண்டு ஆத்திரத்தில் கொதித்துப் போனாள்.

"இந்த விவகாரம் ஒரு முடிவுக்கு வரும்வரை நீ பின் பக்கத்து அறையிலே எங்கள் முன் வராம இருந்தாப் புண்ணியமுண்டு. நீ சமைக்க வேண்டாம், பரிமாறத் தேவையில்லை, உன் கை சாப்பாட்டை திங்கிறதைவிட புழக்கடை புளியமரத்திலே தொங்கலாம்.

பளிச்சென்று பதிலளிக்க முடியாது குற்றவாளிக் கூண்டில் நிற்பதைப் போன்றதொரு பயங்கரத்தில் மௌன மாக விழித்தாள் லாவண்யா.

மாமியார் அப்பால் நகர்ந்ததும் அவள் தாழ்வாரத்தைத் தாண்டி பின்னாலிருந்த அறையைத் திறந்து உள்ளே சென்று அறை நடுவே கிடந்த பெஞ்சி மீது உட்கார்ந்து கொண்டாள்.

மாமியார் இப்படி வீட்டுக்குள்ளே ஒதுக்கி அவமானப் படுத்துவதை எண்ணி எண்ணி மனம் குமைந்தாள். இப்போது அவள் என்ன செய்ய முடியும்? இந்த இக்கட்டான நிலைமையின்போது பக்க பலமாக இருந்து அவளது கட்சியை எடுத்துப் பேச யாருடைய உதவியை அவள் நாட முடியும். அவளது அண்ணனுக்கு ஒரு தந்தியடித்து அவரை வரவழைத்தால்? வேண்டாம்-

வேண்டாம் அவளே இந்த அவமானம் முழுவதையும் அனுபவித்து ஒரு முடிவைத் தேடிக் கொள்ள வேண்டியதுதான் சரி.

மாமியார் ஆரம்பத்திலிருந்து அவளை வெறுத்தாள். இப்போது அந்த வெறுப்பு விஷமாகி விட்டிருப்பதில் வியப்பில்லை. ஆனால் அவள் கணவன் மகேந்திரன் இதைப் பற்றி என்ன நினைக்கிறார் என்று பேசித்தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாயிற்றே? கட்டாயம் அவர் அவளுடன் பேச வருவார். பின் பக்கத்து அறையில் சோறு தண்ணி இல்லாது அவளை அடைத்து வைத்து வேடிக்கை பார்க்கும் கிராதகர் அவர் இல்லையே?

கட்டாயம் அவளே முன்வந்து கணவனிடம் இதைப் பற்றி பேச வேண்டும். இந்த அவமான செய்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். ஆனால் அவள் நெஞ்சுக்குள் வழிந்த ரத்தம் துடைக்க முடியாது பெருகி வடிந்து கொண்டே இருந்தது?

10

பகல் உணவுக்கு வீட்டிற்குப் புறப்பட்டு விட்டிருந்தான் கந்தசாமி. காலையிலிருந்து அவனுக்கு ஒரே குழப்பம்.

கேட்டைத் திறந்து கொண்டு போலீஸ் அதிகாரி உள்ளே நுழைவதைக் கண்டு அவன் தோட்டத்தில் ஒரு பக்கம் ஒதுங்கிக் கொண்டான்.

திறந்து கிடந்த முன்னறை ஜன்னல் வழியே அவர்கள் பேசுவது அவனுக்கு நன்றாகக் கேட்டது.

நெஞ்சு படபடக்க மெல்ல நடந்து பின்பக்கமாக இரண்டாங்கட்டை அடைந்தபோது கனகம்மாள் மருமகளிடம் மிகவும் கோபமாகப் பேசியதையும் கேட்டு விட்டான். பின்னர் வியாதி பிடித்தவளைப் போல மருமகளைப் பின்னறைக்கு அனுப்பி விட்டு புடவைத் தலைப்பை இழுத்துக் கட்டிக் கொண்டு ஆத்திரத்துடன் சமையற் கட்டிற்குள் நுழைவதைக் கவனித்தான்.

அவனது குழப்பம் தீவிரமாகியது. உண்மையை விளக்கமாக அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை.

அந்தப் போலீஸ் அதிகாரி சிவன் கோவில் அர்ச்சகரிடம் படத்தைக் காட்டியதாகச் சொன்னாரே?

வீட்டுக்குப் போகாது திரும்பித் தென்னந்தோப்பின் ஒற்றையடிப் பாதையில் பரபரப்பாக நடந்தான்.

அவன் எதிர்பார்த்தபடி சுப்ரமணிய குருக்கள் கோவிலைப் பூட்டிவிட்டு வீட்டுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார்.

அன்று காலை அவருக்கு நாட்டாண்மை தீபாராதனைத் தட்டில் போட்ட ஒரு ரூபாயுடன் அடுத்த கிராமத்திலிருந்து வந்த புதுமணத் தம்பதியர் போட்ட ஐந்து ரூபாய் நோட்டும் சேர்ந்து விட்டிருத்தது.

அந்தப் புது மணப்பெண் தட்டில் விட்டுப் போனதொரு தேங்காய் மூடி, இரண்டு பழங்கள் - பாக்கு வெற்றிலை இத்யாதிகளுடன் கடவுளுக்கு நைவேத்யம் செய்த சர்க்கரைப் பொங்கல் பொட்டலத்துடன் தமது சிறு பிரம்புக் கூடையுடன் லேசாக முறுவலித்தபடி வெளியே வந்தார்.

கந்தசாமியைக் கண்டதும் மதிலை ஒட்டிய வாராவதி மேலிருந்த பாலத்தின் கைப்பிடி சுவர் மேல் உட்கார்ந்து கொண்டார்.

கந்தசாமி முண்டாசை அவிழ்த்து இடையில் கட்டிக் கொண்டு கைகளைக் கூப்பி வணங்கினான்.

"சாப்பாட்டுக்குக் கிளம்பிக் கொண்டிருக்கிங்க...? என்று தலையைச் சொரிந்தான்.

"என்னப்பா வேணும்? கோவிலைப் பூட்டியாச்சு- இனி மேல நாலு மணிக்கு மேலேதான் தரிசனம்..."

"உங்ககிட்ட ஒரு சங்கதியைக் கேட்கப் பிரியப்படறேன்... எங்க எஜமானர் வீட்டு விஷயம்."

அர்ச்சகர் சட்டென்று நிமிர்ந்து அவனைப் பார்த்தார். எதற்கு இப்படி சுற்றி வளைக்கிறான் அவருக்கு வியப்பு.

"காலையில் பெரியதனக்காரர் வீட்டுக்கு வந்த போலீஸ்காரர் சொன்னதைக் கேட்டு இங்க வந்திருக்கேன். நான் அந்தப் படத்தை பாக்கலை. நீங்க பார்த்திருக்கிங்க. மறைக்காம சொல்லணும் - அந்தப் பெண் யார்?"

"அர்ச்சகர் பெருமூச்செறிந்தார். விஷயம் வேலைக் காரர்கள்வரை பரவி விட்டதே? இனி அம்பலம் ஏறப்போகிறது. மூடி மறைப்பதில் பயன்?" தமக்குள் எண்ணி தயங்கியபடி திரும்பினார்.

"பெரியதனக்காரர் உப்பைத் தின்று வளர்ந்தவன் நான். வீட்டுக்கு வந்த மருமக சீரும் சிறப்புமாக வாழணும்னு நினைக்கிறேன். அதனாலே..." அவன் குரல் துயரத்தில் உடைந்தது.

"வெள்ளம் தலைக்குமேலே போயிட்டுது கந்தசாமி. படத்தை நான் பார்த்துட்டேன். இன்னும் சிலரும் பார்த்துவிட்டனர். நாட்டாண்மைகிட்டேயும் காண்பிச்சிருக்கார். இனி நான் மறைக்க முடியாது. செத்துப் போனவன்கிட்டே மகேந்திரன் ஸாரோட மனைவியின்

போட்டோ இருந் திருக்கு. அதைத்தான் அந்த போலீஸ்காரர் எடுத்துண்டு அடையாளம் கண்டுபிடிக்க அலைஞ்சுண்டு இருக்கார். இது தடுக்க முடியாத விளம்பரமாகி விட்டதே?"

"இருக்க முடியாது!" ஆத்திரத்தில் கந்தசாமியின் உடல் பதறியது. கண்களில் நீர் புரண்டது.

"அந்தம்மா படிச்சவங்கதான் ஆனால் ரொம்ப பதவு சானவங்களாச்சே. அவங்களைப் பத்தி அவதூறு பேசுகிறது பெரும் தவறு."

"உனக்கும் எனக்கும் அப்படித் தோணறது. ஊர் வாயை யார் மூட முடியும்?"

"நீங்க நல்லா பார்த்தீங்களா? அந்த போட்டோவிலிருக்கிறது நம்ப லாவண்யா அம்மாவா?"

"நன்னா பார்த்துட்டுதானே நான் மனம் கலங்கிப் போயிருக்கேன்."

"இப்போ மேற்கொண்டு என்ன நடக்கும்னு நினைக்கிறீங்க."

"இந்த உண்மை பத்திரிக்கையில் வரும். ஊரே கொல்லுனு போயிடும். அதுக்கு மேலே மகேந்திரன் தம் மனைவியைப் பத்தி என்ன நினைப்பாரோ தெரியாது. பிறந்த வீட்டுக்கு அனுப்பிவிட்டு பிறகு விவாகரத்து வாங்கிக்கலாம். ஒண்ணும் சொல்ல முடியாது.

சிறிது நேரம் பிரமிப்புடன் நின்றான் கந்தசாமி. மனதை வேதனை இறுக்கியது. இப்படி ஒரு அவமானம் அந்த நல்ல பெண்ணுக்குத் தேவையா?

"என்னங்க ஒரு மாதிரி இருக்கீங்க?" செங்கமலம் கேட்டபடி அலுமினிய தட்டை வைத்து சாதத்தை அள்ளிப் போட்டு குழம்பை ஊற்றினாள். அவனுக்குப் பிடித்த

பொரித்த அப்பளம் ஒன்றைக்கூட வைத்தாள். போதும்! என்று வெறுப்புடன் ஒதுக்கிவிட்டு குழம்பு சோற்றை உருண்டை பிடித்து வேகமாக விழுங்கினான். கையைக் கழுவிக்கொண்டு திண்ணை மீது வந்து உட்கார்ந்து கொண்டான்.

"எண்ணை விக்கிற விலையில் நான் உங்களுக்காக அப்பளம் பொரிச்சேன். அதை சட்டை செய்யாம... என்ன வந்திருச்சு உங்களுக்கு?" செல்லமாக செங்கமலம் அதட்டியபடி வெற்றிலை பாக்குக்கொண்ட ஓலை பையை அருகில் கொண்டு வைத்தாள்.

அவனால் கட்டுக்கொள்ள இயலவில்லை. நடந்தது அனைத்தையும் படபடவென்று கொட்டிவிட்டாள்.

"இப்போ சொல்லு செங்கமலம்?"

"நான் பெத்த மக ஒரு தப்புக் காரியம் செய்துட்டது போல மனம் சங்கடப் படறேன். இனி அந்தப் பெண் கதி என்னாகும்?" துயரத்தில் அவள் குரல் தடைப்பட்டது.

உதட்டைக் கடித்துக் கொண்டாள் அவள் - மனசிலே கோபம் குமிழியிட்டது.

"செத்தவன் வசம் லாவண்யா அம்மாவின் போட்டோ இருந்ததுன்னா உடனே அவங்க நடத்தை மேலே களங்கம் கற்பிக்கிறதா? நல்லா யோசிச்சு பாருங்கோ"

"அப்படிதானே எல்லாரும் நினைப்பாங்க?"

"போன மாசம் நம்ப டெண்ட் கொட்டாயிலே ஓடின ஒரு படத்தை நானும் சின்னியும் பார்த்த ஞாபகம் சட்டுனு வருது. அதிலே ஒரு வில்லன் போட்டோ கடையிலிருந்து கதாநாயகி படத்தை வாங்கி வச்சுகிட்டு அவளை பயமுறுத்தினான் - அதுபோல இது ஒரு தப்பு காரியமா

ஏன் இருக்கக்கூடாது? பட்டணத்திலே யதேச்சையா லாவண்யாவை ஆஸ்பத்திரியிலே பார்த்திருக்கான் - கல்யாணம் கட்டிக்கிட்டு கிராமத்திலே வசதியா வாழறதைக் கேள்விப்பட்டு அயோக்கியத்தனமா அந்தப் பெண்ணோட போட்டோவை எப்படியோ கைவசமாக்கிட்டு பயமுறுத்தி பணம் வாங்க வந்திருக்கலாம் இல்லையா?''

''பரவாயில்லை- புத்திசாலித்தனமாதான் பேசறே அப்படி இருந்துட்டா நல்லதாச்சே?''

''இருந்துட்டா என்னங்க? அதுதான் உண்மைன்னு என் மனம் சொல்லுது. இதையே மாத்தி நினைச்சுப் பாருங்க. ஆத்து வெள்ளத்திலே முழுகி செத்துப்போன ஒரு இளம் பெண்கிட்டே மகேந்திரன் அய்யாவோட போட்டோ இருந்துச்சுன்னு வச்சுக்குவோம்... அப்போ ஊர் என்ன பேசும்?''

''பணக்காரப் பையன் - மைனர் விளையாட்டு ஆடியிருக்கான் - கல்யாணமானவனைத் தேடிக்கிட்டு இவ கூறு கெட்டதனமா ஏன் இங்கே வந்தாள்னு பேசும்.''

''அப்பவும் ஊரார் பெண்ணைத்தான் குத்தம் சொல்வாங்க இல்லையா? ஒரு நாளும் நியாயம் பெண் ஜென்மத்துக்குக் கிடைக்காது.''

''உலக வழக்கம் அது. தெரிஞ்ச கதைதானே? இப்போ இந்தச் சங்கதி எங்கே போய் முடியப் போகிறதுன்னு திகிலா இருக்கு''

''லாவண்யா அம்மாவை அவங்க மாமியார் குறுக்குக் கேள்வி போட்டு குதறுவாங்க. இப்பவே அவங்களை பின்னால் அறையில் தள்ளி வச்சிருக்கிறதைக் கேட்டதுமே எனக்கு வரப்போரது என்னன்னு தெரியும்.

பிடிக்காத மருமகளை - இந்த விஷயத்தைக் காரணமாக வச்சிக்கிட்டு வீட்டை விட்டு விரட்டப் போகிறாங்க...''

''நாட்டாண்மைக்காரர் ஒத்துக்க மாட்டாரே - நியாயம்னு ஒண்ணு இருக்கே?''

''ஊர் கூட பஞ்சாயத்து கூட்டி இந்தச் சங்கதியை அலசுவாங்க. எல்லார் மனதிலும் இந்தப் பொண்ணு களங்க மானவள்னு அபிப்ராயம் ஏற்பட்டபோது...நான் குத்த மத்தவள்னு நிரூபிக்கணும்-எனக்கு இந்த ஊர் சங்கதி நல்லாவே தெரியும். சுருளி பெண்ஜாதிக்கு நியாயம் கிடைச்சுதா?

''ராமசாமி தங்கச்சிக்கு பழிவந்தப்போ என்ன முடிவு சொன்னாங்க... ஆனால் ஒண்ணு-ஊரே கூடி லாவண்யா அம்மாவுக்கு எதிரா பேசினாக்கூட நான் அவங்க பக்கந்தான் பேசுவேன்''

பெரியதனக்காரர் வீட்டு விரோதத்தை சம்பாதிக்கப் போரே. பிறகு என்ன நடக்கும் தெரியுமா? செங்கமலம் எனக்கு ரொம்பக் கவலையா இருக்கு. ஆட்டைக் கடிச்சு... மாட்டைக் கடிச்சிது. பிறகு வீட்டைக் கடிச்சதுன்னு விஷயம் நம்மை பாதிக்குமேன்னு அரண்டு போகிறீர்களா? இந்த மடமில்லாட்டா வேற ஒரு சந்தமடம். உழைக்கச் சோராத உங்களுக்கு வேலையா கிடைக்காது?'' அவள் கண் எதிரே வரப்போகும் அந்தக் காட்சி பயங்கரமாக விரிந்து நிற்கவே கோபத்துடன் பேசினாள் - நெஞ்சு நெருப்பாகக் கனன்றது.

உடனடியாக அவன் பெரியதனக்காரர் வீட்டுக்குத் திரும்பாது கடைத் தெருவுக்குப் புறப்பட்டு விட்டான்.

ஈயம் பூசச் சொல்லி கனகம்மாள் கொடுத்திருந்த பித்தளை அண்டாக்கள் தயாராகி விட்டதா என்று

பார்க்கப்போகும் சாக்கில் சஞ்சலத்துடன் கடைத் தெருவில் வளைய வந்து கொண்டிருந்தான்.

மாலை வெய்யில் அடங்கிவரும் வேளையில் அவன் மெள்ள கேட்டைத் திறந்துகொண்டு தோட்டத்திற்குள் நுழைந்தவன் திடுக்கிட்டுப் போனான்.

அவனுக்கு முன்னதாக சப்-இன்ஸ்பெக்டர் சந்திரசேகரனுடன் - மகேந்திரன் வீட்டுக்குள் நுழைவதைப் பார்த்து விட்டான்.

தயக்கமாக தோட்டத்தின் ஓரத்தில் செழித்து வளர்ந்து கிடந்த முல்லைச் செடியின் பின்னால் மறைந்து கொண்டான்.

முன்னறை ஜன்னல் திறந்து கிடந்தது. திரையை இழுத்து மூட மறந்து அவர்கள் எல்லோரும் அங்கே அமர்ந்து பேசத் துவங்கி விட்டிருந்தனர். அதுவரை பின் பக்கத்து சின்ன அறைக்குள் ஒண்டிக்கொண்டு இருந்த லாவண்யாவை, கணவன் முன்னறைக்கு- வரும்படி அழைத்து விட்டிருந்தான். தெருக்கூத்திலும் - சினிமா விலும் தான் அசோகவனத்து சீதையைப் பார்த்திருக்கிறான் கந்தசாமி.

ஆனால் இன்று உண்மையிலேயே அவளை நேரில் கண்டு விட்டது போன்றதொரு பிரமிப்பு.

சோகம் கப்பிய முகத்துடன்- நெற்றியில் புரண்டு விழுந்த முடியும் அலங்கிய ஆடையுமாக வந்து நின்ற லாவண்யாவை - அங்கே எரிந்த குழல் விளக்கு வெளிச் சத்தில் நன்றாகப் பார்க்க முடிந்தது. 'அடப் பாவிகளா! யாரோ பெத்த பொண்ணை இப்படி வதை செய்கிறீங்களே!" உள்ளூரக் கத்தினான் கந்தசாமி.

காதைத் தீட்டிக்கொண்டு கவனித்தான்.

"நான் விசாரிப்புச் செய்ய வந்திருக்கேன். அதனாலே நீங்க ரெண்டு பேரும் அமைதியா இருக்கணும்" சப்-இன்ஸ்பெக்டர் சொன்னதைக் கேட்டு தாயும் மகனும் விழித்தனர்.

"இப்படி உட்காரம்மா" என்று சப்-இன்ஸ்பெக்டர் உபசரித்ததை ஏற்காது லாவண்யா நின்று கொண்டிருந்தாள்.

"பரவாயில்லை. நீங்க கேட்கவேண்டியதை ஆரம்பிக்கலாம்" என்றாள் மெல்லிய குரலில்.

"ஏற்கனவே உங்கள் கணவர் சொல்லியிருப்பார்னு நினைக்கிறேன். ஒரு சமயம் நீங்களே இந்தப் படத்தை பார்த்திருப்பீங்க, இது உங்க படந்தானே?"

"ஆமாம்" என்று தலையசைத்தாள் லாவண்யா

"இது இறந்து போனவர் படம். இவரை உங்களுக்குத் தெரியுமா அம்மா - யோசிச்சு சொல்லணும் தயவுசெய்து எங்களுக்கு ஒத்துழைப்பு கொடுத்து உதவணும்" பட்டுப் போன்ற குரலில்... மிகவும் பரிவோடு கேட்டார். மௌனமாக நின்றாள் லாவண்யா-பெருக முயன்ற கண்ணீரில் அவளது கண்கள் பளபளத்தன. முகம் சிவந்து அவமானத்தைத் தாங்க முடியாதவளாக சுவற்றை ஆதாரமாகப் பிடித்துக் கொண்டாள்.

"எனக்குத் தெரியாது. என்னை ஏன் இப்படிச் சித்தரவதை செய்கிறீங்க" ஒங்கிய குரலில் கூவிவிட்டு ஓவென்று அவள் அழுதாள்.

கந்தசாமி துண்டால் கண்களைத் துடைத்துக் கொண்டான். தோட்டத்து சாமான் அறைக்குள் புகுந்து ஒரு கட்டையை எடுத்து வந்து லாவண்யாவைத் துன் புறுத்தும் எல்லோரையும் வெளுத்துக் கட்ட வேண்டும் போன்ற ஒரு ஆவேசத்தில் அவன் உடல் நடுங்கியது.



மகேந்திரன் தயக்கத்துடன் அறைக்குள் வந்தான்.

அவனுக்கு வெட்கமாகவும் இருந்தது. வேதனையாகவும் இருந்தது. அவனது தாய் லாவண்யாவை ஒரு கைதியைப் போல, அந்த அழுக்குப் பிடித்த அறைக்குள் உட்காரவைத்து விட்டிருப்பதை நினைத்து வெகுண்டான். அமைதியும் மகிழ்ச்சியுமாக விரைந்து கொண்டிருந்த அவனது வாழ்க்கையில் இப்படி ஒரு அசம்பாவிதமா?

மங்கலாக அறைக்குள் எரிந்த விளக்கு ஒளியில் மனைவியின் முகத்தைக் கூர்ந்து கவனித்தான்.

வியர்வையில் நனைந்து பரவலாக நெற்றிமீது வழிந்து விட்ட குங்குமப்பொட்டு, அலங்கிய கூந்தலும் - தூசிபட்டு அழுக்காகிவிட்ட கூந்தலுமாக சோர்வாகக் காணப்பட்டாள் அவள்.

அவளது சோகம் படர்ந்த கண்களை நேரிடையாக சந்திக்க முடியாது சங்கடப்பட்டான்.

காதல் என்று சொல்லி கல்யாணம் செய்துகொண்டு அவளை இப்படிச் சித்திரவதை செய்து சீர்குலைப்பது நியாயமா? அம்மாவின் போக்கு மிகவும் தவறு. அவன் வாயை மூடிக் கொண்டு இருப்பது அதைவிடப் பெரும் தவறு. குற்ற உணர்வு நெஞ்சை வருடியது.

"முதல்லே ஏதாவது சாப்பிடறியா-பிறகு பேசலாம். காலையிலிருந்து பச்சைத் தண்ணிகூட குடிக்காம பட்டினியா இருக்கியே."

அனுசரணையாக மெல்லிய குரலில் கேட்டான்.

அவள் சட்டென்று பதில் பேசவில்லை.

ஆயிரம் அர்த்தங்கள் நிறைந்த அவளது பார்வையை அவனால் சந்திக்க முடியவில்லை. தலையை மறுபக்கம் திருப்பிக் கொண்டான்.

"வேண்டாம். இந்த பிரச்சினைக்கு ஒரு முடிவு காணும் வரை சாப்பிடுவதில்லை. உறங்குவதில்லைன்னு தீர்மானம்."

மெலிதாக ஒலித்த அவளது குரல், சன்னமான ஆனால், கூர்மையானதொரு கத்திபோல அவன் நெஞ்சிலே சொருகியது.

"சில சமயம் முடிவு காண சில நாட்கள் ஆகலாம். அதுவரை பட்டினி கிடந்து சாகத் தீர்மானமா?"

"சாகவேண்டும் என்று தண்டனை விதிக்கப்பட்டால் ஏற்க வேண்டியவள்தானே?"

உதட்டைக் கடித்துக் கொண்டான்.

உயிருக்கு மேலாகக் காதலித்துக் கைபிடித்த மனைவி அவள். இன்று இந்த பிரச்சினை அசுரவடியில் அவனுக்கும் அவளுக்கும் இடையே நிற்கிறது. உண்மை எது என்று தெரியும்வரை அவள் மீது மாசு ஒரு போர்வையாக விழுந்து கிடக்கிறது.

அவனுக்கு உண்மையில் துரோகம் செய்து விட்டாளா, என்ற ஒரு கேள்வியில் ஒரு பக்கம் உள்ளம் குமுறியது.

இல்லை! இருக்காது - அவள் அப்படிப்பட்டவளே இல்லை. எங்கேயோ ஒரு தப்பு - யாரோ வேண்டுமென்று அவர்களது வாழ்க்கையைக் குலைக்கச் செய்த சதி என்று அலறியது மனம் இன்னொரு பக்கம்.

அவனுக்கு மட்டும் உணவு பிடித்ததா-உறக்கந்தான் வந்ததா?

"லாவண்யா! உன்னிடம் மனம் விட்டு பேசப் போகிறேன் - நான் கிராமத்து மனிதன். கட்டுப்பெட்டி. ஆனால் கயவன் அல்ல. கொடூரமானவனும் அல்ல. உட்கார்ந்து பேசலாமா?"

"நீங்க அந்த பெஞ்சிமேலே உட்கார்ந்து கொண்டு என்ன கேட்கணுமோ கேளுங்கோ. நான் நின்றுகொண்டே பதில் சொல்றேன். நான் இப்போ குற்றவாளி ஸ்தானத்தில் இருக்கேன் - உட்கார்ந்து கொண்டு பதில் சொல்ல யோக்யதை இல்லை."

சுருக்கென்று நெஞ்சைத் தைத்தது அவளது வார்த்தைகள்.

"நீ இங்கேயே இருக்கணும்னு கட்டாயமில்லே - மாடிக்கு வந்து படுக்கையறையில் தூங்கிக்கலாம். இந்த அழுக்குப் பிடிச்ச தரையில் படுத்தால் உடம்பு கெட்டுடும். குளிச்சுட்டு வேறே உடை மாத்திக்கோ கொஞ்சம் பால் எடுத்திட்டு வரேன்... லாவண்யா என் பேச்சைக் கேள்." மிகவும் அனுதாபத்துடன் சொன்ன கணவனை அவள் வேடிக்கையாகப் பார்த்தாள்.

"இந்த வீட்டின் அதிகாரம் என் மாமியாரின் உரிமை-அவங்க சொன்னபடி கேட்க வேண்டியது என் கடமை. அதனாலே இங்கேயே நான் இப்படியே இருக்கப்போறேன். அசோகவனத்திலே சீதை அரக்கிகள் சூழ சிறையிருந்தாள்" "மீட்கப்பட்டவளை ஸ்நானம் செய்து உடை மாற்றிக்கொண்டு சுத்தமாக அழகாக ராமன் முன் நிற்க ஆலோசனை சொன்னபோது என்ன நடந்தது... சந்தேகப் பொறி ராமன் மனதிலும் ஒரு கணம் பளிச்சிட்டதல்லவா?"

"வேண்டாம். நான் இங்கேயே இருக்கேன். என்னைப் பத்தி கவலைப்படாதீங்க."

தொண்டையைக் கனைத்துக் கொண்டான். சுற்று முற்றும் பார்த்தான். ஒட்டடையும் மூலைகளில் குப்பையும் ஒட்டை உடைசலான சாமான்களுடன் இருந்த அழுக்குப் பிடித்த அறையிலா அவள் நாள் முழுதும் கைதியாக இருக்க வேண்டும். ஆனாலும் அம்மாவுக்கு இத்தனை ஒரு கெட்ட எண்ணம் வேண்டாம் - கையிலிருந்த குட்டையால் நெற்றியில் பூத்த வியர்வையைத் துடைத்துக் கொண்டான். பெஞ்சிமீது படிந்திருந்த தூசியைத் தட்டிவிட்டு ஒரு பக்கம் உட்கார்ந்து கொண்டான்.

"லாவண்யா" நாம ரெண்டு பேரும் உயிருக்குயிராக நேசித்தோம் - நெருங்கிப் பழகினோம்."

அவள் பலமாகத் தலையை அசைத்தாள்.

"மனம் ஒன்றுபட்டு திருமணம் செய்துகொண்ட தம்பதியர் நாம்."

"ஆமாம்."

"செத்துப் போனவனை உனக்குத் தெரியும், அவன் யார்னு சொல்லிட்டா சப்-இன்ஸ்பெக்டர் மேற்கொண்டு காரியத்தைச் சுலபமாக செய்து முடித்துவிடுவார்."

"பல தடவை கேட்டுட்டா மட்டும் என் பதில் மாறிவிடப்போகுதா, இது என்ன அறியாத்தனம்!

"லாவண்யா! பெருந்தன்மையோட நான் உன்னை மன்னிச்சு உன் கடந்த காலத்தைப்பத்தி மறந்துடத் தயாரா இருக்கேன். ஏன்னா நான் உன்னை இன்னமும் நேசிக்கிறேன். இத்தனை கலவரத்துக்குப் பின்னும் என்னால உன்னை வெறுக்க முடியலை. அதனாலே நீ என்கிட்ட சொல்லலாம். இதைப் பெரிசு படுத்தாம செத்தவனின் உறவினர்களைக் கண்டுபிடித்து...உடலை

அவர்கள்வசம் சேர்ப்பித்து இந்த கேசை உடனடியாக அவர் முடித்துவிட முடியும். விஷயம் தெரிந்த இரண்டொருவர் நம் குடும்பத்துக்கு வேண்டியவர்கள் வெளியே சொல்ல மாட்டார்கள்.

"அவன் யார்? என்னை நீ சந்திக்கிறதுக்கு முந்தி அவனோட உனக்குப் பழக்கம் உண்டா? அவனை மணந்து கொள்வதாக வாக்குக் கொடுத்திருந்தியா? அதனால்தான் உன்னைத் தேடிவந்து அவமானப்படுத்த விரும்பினானா?"

எரிமலை வெடித்து தீக்குழம்பைத் துப்பியது போல அவள் நெஞ்சு ஒவென்று எரிந்தது.

ஒரு கணம் மௌனமாக அவனை உற்றுப் பார்த்தாள்.

"என்னுடைய கடந்த காலத்தைப்பற்றி தூண்டித் துருவ உங்களுக்கோ, உங்கள் தாயாருக்கோ... மற்ற யாருக்குமோ உரிமை கிடையாது"

"உங்களது கடந்த காலத்தைப்பற்றி நான் என்றாவது எதைப் பற்றியாவது கேட்டிருக்கேனா? கணவன் மனைவி என்கிற நமக்கு - இப்போதிருக்கும் வாழ்க்கையைப் பற்றியும் எதிர்காலத்தைப் பற்றியும்தான் பிரச்சினை. மனைவின்னு உங்கள் வாழ்க்கையில் புகுந்த பிறகு நினைவால் கூட நான் உங்களுக்கு துரோகம் செய்யலை- வருங்காலத்திலும் அப்படித்தான் ஒரு ஒழுக்கமான மனைவியாக வாழ்வேன்னு நம்பிக்கை."

"அப்படின்னா லாவண்யா! உன் கடந்த காலத்திலே ஏதோ ஒரு ரகசியம் இருக்குன்னு ஒப்புக் கொள்றே. செத்துப்போனவனுக்கும் உனக்கும் உறவு இருந்திருக்குன்னு அர்த்தம். அவன் வந்து இங்கே செத்துப்போய் இந்த மாதிரி ஒரு கலவர நிலமையை ஏற்படுத்தாவிட்டால் நான் உன் கடந்த காலத்தைப்பத்தி கவலைப்பட்டிருக்க மாட்டேன். எதுவும் விசாரித்திருக்க மாட்டேன்."

வெறுப்புடன் சிரித்தாள் அவள்.

"எனக்கும் அவனுக்கும் எந்தவிதமான உறவும் கிடையாது. அவனை நான் பார்த்ததே கிடையாதுன்னு நூறாவது தடவையா சொல்றேன். மேலும் நான் நாணப் பட்டுக்கிறாப்பல என் கடந்த காலத்தில் எந்தவிதமான ரகசியமும் கிடையாது..."

"நான் நம்பறேன் லாவண்யா... நீ பரிசுத்தமான வள்னு எனக்குத் தெரியும்... என் தாயும் இந்த ஊராரும் நம்பணுமே!"

"ஊராரா?" திகைப்புடன் கேட்டாள்.

"ஆமாம் லாவண்யா - இந்தச் சங்கதி எப்படியும் பகிரங்கமாகிவிடும்..."

"அப்போ ஊர் ஒரு மாதிரி பேச ஆரம்பிச்சுடுமே?" காலடி ஓசை கேட்டு அவள் திரும்பிப் பார்த்தாள். கண்களில் நெருப்புப் பறக்க மாமியார் கனகம்மாள் வாயிற்படி அருகே நின்று கொண்டிருந்தாள்.

"நான் எல்லாத்தையும் கேட்டுகிட்டுத்தான் நிக்கிறேன். நீ சொல்றபடி பத்தினியா இருந்தா அந்த உண்மையை பஞ்சாயத்து முன்னாடி ஒப்புக்கணும் - அப்பத்தான் உன்னை நான் துணிவோட வீட்டிலே சேர்க்க முடியும்."

"இதென்ன அசிங்கம். என் மனைவி தாசியில்லைன்னு தண்டோராப்போடச் சொன்னானாம் ஒரு ராஜா - அந்தக் கதையாத்தானிருக்கு... நான் கெட்டவ இல்லை - பத்தினின்னு பத்துபேர் முன்னாடி நான் சொல்லணுமா? வேடிக்கை" கோபத்துடன் மெல்லிய குரலில் சீறினாள்.

"இந்தக் கிராமத்துப் பழக்கம் அது. எந்த ஒரு சிக்கலையும் பஞ்சாயத்து முன்னாடி போட்டு அலசி முடிவு எடுக்கணும்."

"பெரியதனக்காரர் மருமகளே நடத்தை கெட்டவள் - நாம ஏன் ஒழுக்கத்துக்கு கட்டுப்படணும்னு மத்த பெண்களுக்கு துணிச்சல் ஏற்படும். கிராமத்துக் கட்டு திட்டமான வாழ்க்கை குலைஞ்சு போயிடும். ஊர்ப் பெண்களுக்கு நீ ஒரு இலக்கணமா இருக்கணும். அதனாலே அவங்க எல்லோரும் நீ சொல்வதை நம்பும்படி - இருக்கணும்."

மகேந்திரன் குறுக்கிட்டுப் பேசினான்.

'லாவண்யா! உனக்கு அதெல்லாம் புதுசா தெரியும்.' இப்போ நம்ப குடும்பத்து கௌரவம் ஒரு சிக்கலில் மாட்டிக் கொண்டு தவிக்கிறது. சப்-இன்ஸ்பெக்டர் அந்த புகைப்படத்தை பத்திரிக்கையில் போட்டு விடுவார். அதைப் பார்த்ததுமே பலருக்கு நீதான்கிற உண்மை தெரிஞ்சுடும். ஊரே தீப்போல சங்கதி பரவி உன்னைப் பற்றி அசிங்கமா பேச ஆரம்பிச்சிடுவாங்க. அதுக்குப் பிறகு ஊரில் நடக்கும் எந்தவித தகறாரின் போதும், ஆமாம்! பெரியதனக்காரர் மருமகளே நடத்தை கெட்டவளா இருந்தும் புருஷன் வச்சு வாழலையா? என்றதொரு குறுக்குக் கேள்வி எழும்... அதற்கு நாம இடம் கொடுக்கக் கூடாது. அதனாலே நான் மௌனமா இருக்க முடியாது."

"நீ இருந்தாலும் நான் இருக்க முடியுமாப்பா... உன் அப்பா வாழ்ந்த சிறப்பான வாழ்வை நினைச்சு... நான் இந்த அவலத்துக்கு ஒரு முடிவு கட்டியாகணுமே? பஞ்சாயத்திலே நான் ஒரு பிராது கொடுக்கப் போகிறேன். என் மருமகள் நடத்தை கெட்டவள். அவளைத் தொடர்ந்து என் மகனோட வாழ அனுமதிக்க அவமானமா இருக்குன்னு... சொல்வேன்."

"உங்களுக்கு இத்தனை சிரமம் வேண்டாம்-நான் என் அண்ணனுக்கு கடிதம் எழுதி வரவழைத்து அவருடன் புறப்பட்டு பிறந்த வீட்டுக்குப் போய் விடறேன். பிறகு..." சொல்ல முடியாது துக்கத்துடனும் கோபத்துடனும் மாமியாரை வெறித்தாள்.

"அதோட நாங்க பட்டிருக்கிற அவமானம் போயிடுமா?"

"என்னை என்னதான் செய்யச் சொல்றீங்க?..." சலிப்பும் வேதனையுமாகக் கேட்ட அவள் கண்களில் நீர் புரண்டது.

"ஏற்கெனவே நாட்டாண்மை கிட்டே ஒப்புக் கொண்டிருக்கே..."

"என்ன ஒப்புக் கொண்டேன்?"

"எந்தக் கோவிலுக்கும் வந்து சத்தியம் செய்ய தயார்னு ஒப்புக் கொண்டியே."

"நான் சொல்றது உண்மை என்கிறதை அழுத்தமாகச் சொல்ல அப்படிப் பேசினேன்."

"அந்த உண்மையை நாலுபேர் முன்னே ஒத்துக் கொண்டு விடு. எங்க குல தெய்வத்து கோயில் முன்னாடியிருக்கிற ஆலமரத்து மேடையிலே பஞ்சாயத்து கூட்டுவோம். நியாயம் கேட்போம். ஊர் பெரியவங்க சொல்றதை நீ கேட்டு... நட... எல்லாருக்கும் முன்னாடி நீ நிரபராதினுட்டு சத்தியம் செய், போதும்."

"விண்வெளியில் உலாவும் அளவு விஞ்ஞானத்தில் முன்னேறி விட்டிருக்கும் நாம்... இதுமாதிரி பழக்கங்களை இன்னுமா அனுசரிக்கணும் - ரொம்ப வியப்பா இருக்கே."

"கிராமத்து மனிதனைக் கட்டிக் கொள்ளும் போது ஊர் பழக்கவழக்கங்கள் எல்லாம் என்னன்னு நீ

ஆரம்பத்திலேயே கேட்டு தெரிஞ்சு கொண்டிருக்கணும். பணக்காரன் - அழகா இருக்கான் - படிச்சவன் வசதியான வாழ்க்கைன்னுட்டு நீ கணக்குப் போட்டே இல்லையா.." கனகம்மாள் வார்த்தைகளால் குத்தினாள்.

விஞ்ஞானத்தில் ஒரு புறம் நாம் வெற்றியடைந்து கொண்டிருக்கும் சமயத்தில் இப்படி அஞ்ஞானம் கிராமங்களில் மறைந்து கொண்டிருக்கிறதே! பலர் முன்னால் சத்தியம் செய்தால்தான் உண்மை - உண்மையாகுமா? மனம்விட்டுப் பேசி புரிய இரண்டு நெஞ்சங்களுக்கு உண்மை தெரியாது போய்விடுமா? இது அர்த்தமற்றதொரு நம்பிக்கை... பெருமூச்செறிந்தாள்...

"ஆகட்டும். நாளைக்குள்ளே பஞ்சாயத்து கூட்ட ஏற்பாடுகள் பண்ணுங்கள். நான்...சத்தியம் செய்கிறேன்" என்றாள், கோபத்துடன்.

12

ஊர் ரெண்டுபட்டு விட்டது.

'உண்மையா? பெரியதனக்காரர் மனைவி கனகம்மாள் தன் மருமகள்மீது குற்றம் சுமத்தி பஞ்சாயத்தார்முன் நியாயம் கேட்கப் போகிறார்களாமே? கன்னத்தில் கை வைத்து பிரமித்துப் போனார்கள் பெண்கள். உண்மை ஏதோ இருக்கு - இல்லாட்டி பெரிய மனுஷங்க வீட்டு சங்கதியெல்லாம் இப்படி நடுவீதிக்கு வரவேண்டா மில்லையா?"

கனகம்மாளுக்கு மருமகளை ஆரம்பித்திலேயே பிடிக்கலையாம். விரட்டியடிக்க இப்படி ஒரு திட்டம்.

அவங்க அப்படி செய்தா ஊர் பெரிய மனுஷங்க ஒப்புக்குவாங்களா?" காலையிலிருந்து கடைத் தெருவில் வம்பர்கள் வாய் அசைந்த மயமாகத்தானிருந்தது.

சுப்ரமணிய குருக்கள் உச்சிகால பூஜை முடிந்ததும் கோவிலை பூட்டிக்கொண்டு கிளம்பியவர் தென்னந் தோப்பு பாதைக்குள் புகுந்தார்.வேகமாக கோவிலை நோக்கி மூச்சிறைக்க வந்த கந்தசாமியைப் பார்த்து பிர மித்து நின்றார்.

"உங்களைத்தான் பார்க்க ஓடி வந்துகிட்டு இருக்கேன்." கந்தசாமி திணறினான்.

"அதிசயமா இருக்கே! நானும் உன்கிட்ட பேசத்தான் உன் வீட்டுப் பக்கம் வந்துண்டு இருக்கேன்."

"இப்படி எல்லோரும் சேர்ந்து அந்த அம்மாளை அவமானப்படுத்தறது நியாயமா? அவங்க பிறந்தவீட்டுக்கு ஒரு சேதி சொல்லாம பஞ்சாயத்துக் கூடறது முறையா?..'

"லாவண்யா அம்மாதான் இந்த விஷயத்துக்கு ஒரு முடிவு கட்டணும்னு சொன்னார்களாம். நீடுச்சு இந்த சிரமத்தை அந்தப் பெண்ணால தாங்கிக்க முடியலையாம். நீங்கதான் கூட இருந்து நடத்தி வைக்கப் போறவங்க. அதனாலே நீங்க இதைத் தடுக்க முடியாதா? இது சுத்த அநியாயம்னு பெரியவங்களுக்கு எடுத்துச் சொல்ல முடியாதா?"

"நானா? என் பேச்சுக்கு அத்தனை மதிப்பு ஏதப்பா? நான் நீட்டற கற்பூர ஜோதி தட்டை ஜனங்கள் அணுகி கண்களில் ஒத்திக்குவா. சுவாமிக்கு ஆராதனை செய்த ஜோதிமேலே இருக்கிற பயபக்தி... அந்த சுவாமியை தினம் அலம்பி அலங்கரித்து வழிபடற இந்தக் குருக்கள் மேலே யாருக்கு இருக்கு சொல்லு. நான் ஏதாவது பேசினா... வாயை மூடு அய்யான்னு பதில் வரும். இந்த

பஞ்சாயத்திலே மிக சன்னமா ஒலிக்கப்போற குரல் என்னுடையதாகத்தானிருக்கும். உன்னை எதுக்குப் பார்த்து பேச ஆசைப்படறேன்னா... நீ நாலு பேருக்கு எடுத்துச் சொல்லி நியாயத்தின் பக்கம் கொஞ்சம் ஆள் சேர்ப்பேன்னு நம்பறேன்.''

''அப்போ நீங்க அவங்கமேலே சந்தேகப்படலை இல்லையா?''

''அந்தப் பெண்மேலே தப்பு ஏதும் இல்லேன்னு என் மனசு சொல்றது. யாரோ செய்த சூழ்ச்சியால... பாவம் அந்தப் பெண்மேலே கலங்கம் சுமத்தப்பட்டிருக்கு.''

''இது போதும் அய்யா, நீங்களும் நானும் என் பெண்ஜாதியும் இன்னும் சிலரும் அந்தப் பெண் பக்கம் துணையா நிப்போம். என்ன நடக்கிறதுன்னு பார்த்துடுவோம்'' கோபமும் துயரமுமாகக் கூறிவிட்டு அவசரமாக விடை பெற்றுக்கொண்டு விரைந்தான் கந்தசாமி.

அன்று பிற்பகல் நாட்டாண்மைக்காரரின் மனைவி திலகவதி வந்து வாசல் கதவைத் தட்டினாள்.

கதவைத் திறந்த கனகம்மாள் முகத்தைச் சுளித்துக் கொண்டாள்.

''இன்னிக்கு பஞ்சாயத்து நடக்கப் போறதினாலே — லாவண்யாவுக்குத் துணையாயிருக்க நான் வந்திருக்கேன்'' முறுவலித்தபடி உள்ளே வந்தாள். கழுத்தைப் பிடித்துத் தள்ளமுடியாத நிலை. தலையை அசைத்தாள் கனகம்மாள்.

அறையின் மூலையில் தரைமீது உட்கார்ந்திருந்த லாவண்யாவைக் கண்டதும் திகில் பகீர் என்று அவள் நெஞ்சைக் கவ்வியது.

சோறு தண்ணிகூட இல்லாது இதென்ன அலங்கோலம்?

''லாவண்யா நான்தான் திலகவதி வந்திருக்கேன் - நீ பஞ்சாயத்துக்கு இப்படியே வரக்கூடாதம்மா. பஞ்சாயத்து கோவில் முன்னாடி நடக்கறது - நீ ஈசுவரன் சந்நிதியிலே சத்தியம் பண்ணப் போறே - குளிச்சுட்டு - வேறு புடவை கட்டிகிட்டு சுத்தப்பத்தமா வரணும்'' அனுசரணையாகச் சொன்னாள்.

லாவண்யா ஒருகணம் வெறுப்புடன் விழித்தாள் - பின்னர் நாட்டாண்மைக்காரரின் மனைவி சொல்வது சரி என்று படவே, மாடியிலிருந்த தங்களது படுக்கையறைக்குச் செல்ல எழுந்தாள். அறை வாசலில் தயக்கமாக நின்றாள். இரண்டு தினங்களுக்கு முன் தன் உயிருடன் ஒன்றாகி விட்டது போன்ற மகேந்திரன் இப்போது அவளுக்கு அந்நியனாகத் தென்பட்டான். அவனுடன் பகிர்ந்து கொண்ட அந்த அறைக்குள் செல்ல உணர்வுகள் மிரண்டன. மெல்லத் தன் பீரோவைத் திறந்தாள். தன் பிறந்த வீட்டிலிருந்து கொண்டு வந்த சேலை, ரவிக்கை இத்தியாதிகளை ஒரு தட்டில் வைத்திருந்தாள். அவை களிலிருந்து நூல் சேலையையும் உள் ஆடைகளையும் எடுத்துக் கொண்டு விரைவாகக் குளியலறைக்குள் புகுந்தாள்.

ஷவரிலிருந்து பச்சைத் தண்ணீர் மழைபோல தலை மீது விழுந்தபோது அவளுக்கும் மகேந்திரனுக்குமிடையே இருந்த பந்தம் சொந்தம் எல்லாம் அன்றுடனே அற்றுப் போய்விட்டது போன்றதொரு திகைப்பைத் தரவே... அந்தத் துயரத்தின் கொடுமையைத் தாளாது அவள் அழுது கொண்டே ஸ்நானம் செய்துவிட்டு மாற்றுடை அணிந்து கொண்டு கீழே வந்தாள்.

"ஏதாவது சாப்பிட்டுட்டு வந்தா நல்லதம்மா." திலகவதி வற்புறுத்தியதும் கண்கலங்கிப் போனாள் அவள்.

'மருமகள் மீது குற்றமிருந்த போதிலும் பஞ்சாயத்து ஒரு முடிவுக்கு வருமுன் கனகம்மாள் இத்தனை ஒரு அரக்கத்தனமாக நடந்து கொண்டிருக்கத் தேவையில்லை. பட்டினி போட்டு ஒதுக்கி வைத்தது அநியாயம்' உள்ளூர வெகுண்ட திலகவதி தொண்டையைச் செருமினாள்.

"பஞ்சாயத்தின்போது நான் லாவண்யாவை கூட்டிகிட்டு வரப்போறதாலே எங்க வீட்டுக்கு இப்பவே அழைச்சிட்டு போக நினைக்கிறேன். மறுப்பு, இல்லையே" மெல்லிய குரலில் கேட்டாள்.

"எனக்கு மாமியார் என்கிற தகுதி பஞ்சாயத்து முடிவிலேதானே இருக்கு. அதனாலே மறுப்புச் சொல்ல என்ன உரிமை?"... கனகம்மாள் வெறுப்பை உமிழ்ந்து விட்டு மருமகளை ஆத்திரமாகப் பார்த்தாள்.

தெருப் பெண்கள் கண்களில்பட்டு வாயில் விழுந்து புரளாதிருக்க லாவண்யாவை புழக்கடை வழியாக ஓடிய சிறு ஒற்றையடிப் பாதையில் நடத்திச் சென்று தங்கள் வீட்டுத் தோட்டத்தின் வழியே உள்ளே அழைத்துக் கொண்டு வந்தாள் திலகவதி

உடனடியாகக் கொஞ்சம் பசும்பாலை காய்ச்சிக் கொண்டு வந்து குடிக்கச் சொல்லி வற்புறுத்தினாள்.

"சுமங்கலிப் பெண்-பட்டினியும் பசியுமாக கோவில் முன் நின்னு சத்தியம் செய்யக் கூடாது. ஊருக்கு நல்ல தில்லையம்மா. அதனாலே தயவுசெய்து கொஞ்சம் இதை குடிச்சுடு.

"என் வயத்துக்கு வேண்டாம் - ஊர் க்ஷேமமா இருக்கட்டும்" என்று கூறிய லாவண்யா பாலை பருகி முடித்தாள்.

பஞ்சாயத்துக்கு புறப்பட வேண்டிய நேரத்தில் தங்கள் வீட்டு வில் வண்டியில் அவளை ஏற்றிக்கொண்டு கிளம்பினாள் திலகவதி.

ஆலமரத்து மேடையைச் சுற்றி... ஊர்மக்கள் பலர் ஆண்கள் ஒரு புறமும் பெண்கள் ஒரு புறமும் திரண்டு விட்டிருந்தனர்.

வண்டியிலிருந்து இறங்கிய லாவண்யாவின் நெஞ்சு பக்... பக்...கென்று அடித்துக்கொண்டது.

கனவில்கூட எண்ணிப்பார்க்காத அவமானம் இது. விபசாரம் செய்து விட்டவளை விசாரிப்பது போல ஊரார் முன்னால் அவளது நடத்தை எடை போடப்படப் போகிறது. அண்ணனுக்கு மட்டும் இந்தச் செய்தி தெரிந்தால்... நெஞ்சம் நெருப்பாக எரிய கால்கள் தள்ளாட தூக்குமேடையை நெருங்கும் கைதிபோல திலகவதியின் பின்னால் பெண்கள் பகுதியில் நின்று கொண்டாள் லாவண்யா.

ஆலமரத்து மேடைமீது அலங்காரமானதொரு ஜமக்காளம் விரிக்கப்பட்டிருந்தது. ஒரு ஸ்டீல் கூஜாவில் தண்ணீரும் ஒரு டம்ளரும் ஒரு பக்கம் வைக்கப் பட்டிருந்தன. கூட்டத்திலே திடீரென்று கசமுச சத்தம் வரக்கேட்டு ஓரக் கண்ணால் பார்த்தாள் லாவண்யா.

வெள்ளைப் பட்டுக் சேலையில் மகனுக்குப் பின் கம்பீரமாக வந்த கனகம்மாள் எல்லோருக்கும்முன் பெண்கள் பகுதியில் தரைமீது விரிக்கப்பட்டிருந்த பட்டுப் பாயில் உட்கார்ந்து கொண்டாள். மகேந்திரன் ஆண்கள்

பகுதியில் உட்கார்ந்து கொண்டான். பஞ்சாயத்து நடவடிக்கையைப் பார்க்க சப்-இன்ஸ்பெக்டர் சந்திரசேகரனும் வந்திருந்தார்.

பஞ்சாயத்தின் பத்து உறுப்பினரும் நாட்டாண்மையைப் பின் தொடர மேடைமீது வந்து அமர்ந்து கொண்டனர்.

பெண்கள் பகுதியில் உட்கார்ந்திருந்த செங்கமலம் எதிர்ப்பக்கத்திலே அமர்ந்திருந்த தன் கணவனையும் சுப்ரமணிய குருக்களையும் உறுத்துப் பார்த்தாள்.

இதென்ன அநியாயம்? தாயாரின் மன அமைதிக்காக மனைவியை நடுச் சந்தியில் கொண்டு வந்து நிறுத்தி யிருக்கானே மனிதன். மனைவிமேல் சந்தேகம் என்றால் இரகசியமா வீட்டோடு விசாரிப்பை நடத்திவிட்டு வேண்டாம் என்றால் பெண்ஜாதியைப் பிறந்த வீட்டுக்கு அனுப்பியிருக்கலாமே? பலவும் எண்ணி வெகுண்டு கொண்டிருந்தாள்.

சுப்ரமண்ய குருக்கள் பிரார்த்னை செய்ய பஞ்சாயத்து ஆரம்பமாகியது. அன்று முழு நேரமும் பஞ்சாயத்தில் பேரியதனக்காரர் மருமகள் மேல் கொண்டு வரப் பட்டிருக்கும் குற்றச்சாட்டை விசாரிப்பது என்ற ஒரே பிரச்சனைதான் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

தொண்டையைக் கனைத்துக்கொண்டு நாட்டாண்மை முருகேசன் பேசத் தொடங்கினார்.

வெள்ளத்திலே மூழ்கி இறந்து போனவன் ஒருவனின் உடல் வடவாற்றுக் கரை ஓரத்திலே கண்டெடுக்கப்பட்டதிலிருந்து... அன்றுவரை நடந்த அத்தனையையும் சொல்லி முடித்தார்.

பின்னர் கனகம்மாள் எழுந்து நின்றாள். கூட்டத்திலே சலசலப்பு ஏற்பட்டு அடங்கியது.

புடவைத் தலைப்பை இழுத்து மூடிக்கொண்டு அவள் கோபம் கொப்பளித்த கண்களால் எல்லோரையும் வெறித்தாள்.

"ஒழுக்கம் பேசவந்தா அது ஊரில் உள்ள எல்லாருக்குமே பொதுவான சங்கதி! இந்த மாதிரி சங்கடமான சமயங்களிலே நாம் முடிவு செய்ய முடியாத பிரச்சினைகளை பஞ்சாயத்துக் கையிலே ஒப்புவிக்கிறது தான் முறை. பெரியவங்களான உங்களுக்கு இது மாதிரியான பல பிரச்சினைகளைக் கேட்டு... நியாயம் வழங்கின அனுபவம் ஏராளம் உண்டு."

"இந்தக் கோயில் முன்னாடி பலருடைய குறைகளை நீங்க தீர்த்துவச்சு... உண்மையை எல்லாருக்கும் விளக்கி இருக்கீங்க. அதனாலே நான் உங்களுக்கு எதுவும் சொல்லத் தேவையில்லை. எங்க குடும்பத்துக்கு இப்படி ஒரு சோதனை காலம் வந்து விட்டிருக்கு. என் மருமக பேரிலே நான் சந்தேகப்படலை. என் மகன் சந்தேகப்படலை. ஆனால் ஊர் வாய் சும்மா இருக்காது. அசிங்கமா பேசு வாங்க. என் கணவன் வாழாது வாழ்ந்துட்டுப் போனவர் - அவரைப்பத்தி உயர்வா பேசிக்கிட்டிருக்கிற அதே ஜனங்க இந்த ஒரு சங்கடத்தாலே எங்க குடும்பத்தைப்பற்றி குறைவா சொன்னா என்னால் தாங்கிக்க முடியாது. ஊர் மக்களுக்கு உண்மை தெரிய வைக்க வேண்டியது நம் முடைய கடமை.

"என் மருமகள் தன் பேரில் எந்தவிதமான தப்பும் இல்லைனு போலீஸ் விசாரிப்புக்கும் நாட்டாண்மை விசாரிப்புக்கும் அழுத்தமா சொல்லிட்டா. இது இப்போ மக்கள் விசாரிப்பு-மகேசன் முன் விசாரிப்பு. இப்போவும் கடவுள் முன்னாடி-பெரியவர்கள் உங்க முன்னாடி - மக்கள் எதிரே தான் குற்றமற்றவள்-இது யாராலோ செய்யப்பட்ட

சதின்னு சத்தியம் செய்துட்டா, நான் இவளை மறுபடியும் என் மருமகளா ஏத்துகிட்டு எல்லாரும்போல ஒத்துமையா வாழ ஒப்புக்கிறேன். என்னைப் பத்தி விவாதம் இவ்வளவுதான் - இனி பெரியவர்களான நீங்கதான் முடிவு எடுத்து எல்லாத்தையும் சுளுவாக முடிச்சுத் தரணும்'' மூச்சு இறைக்க நெற்றிமீது பொடித்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு உட்கார்ந்தாள்.

நாட்டாண்மை பஞ்சாயத்து உறுப்பினர்கள் முகத்தைப் பார்க்க அவர்கள் அனைவரும் ஆமோதித்தபடி தலை அசைத்தனர்.

ஊசி விழுந்தாலும் அதிர்ச்சி எழும் நிசப்தம் அங்கு நிலவியிருந்தது. நாட்டாண்மை தொண்டையைச் செருமிக் கொண்டார்.

''அப்போ லாவண்யா அம்மா... ஒரே ஒரு காரியம் நீ செய்தாகணும்.''

''கடவுள் சந்நிதியை நோக்கி - நின்னுகிட்டு - குருக்கள் அய்யர் கொடுக்கிற கற்பூரத்தை கையில் வச்சுகிட்டு - அவர் அதை ஏத்தி விட்டதும் அதைக் கடவுளுக்கு ஆரத்தி சுத்திகிட்டு... நீ தவறு ஏதும் செய்யலை - கடவுள் சாட்சியாக நீ குற்றமற்றவள்னு... மூணுதரம் பிரமாணம் செய்யணும். கற்பூரம் அணைகிறவரை உள்ளங்கையிலே ஜோதியை வச்சுகிட்டு நிக்கணும். அணைஞ்சதும் உன் மாமியாரும் - பஞ்சாயத்தும் உன் உள்ளங்கையை சோதிப்பாங்க. தீக்காயம் ஏதும் ஏற்படாம இருந்தா நீ உண்மையில் குற்றமற்றவள். காயம் ஏதும் பட்டிருந்தால்...'' மேலே பேசாது அவளைப் பார்த்தார்.

''எரிகின்ற கற்பூரத்தை கையில் வைத்துக் கொண்டு நிற்கணுமா? இது என்ன சோதனை?'' திடுக்கிட்டுக் கேட்டாள் லாவண்யா.

''சீதைக்கு அக்னி பரீட்சை வச்சதுபோல இதுவும் ஒண்ணு'' பின்னாலிருந்து யாரோ முணுமுணுத்தது துல்லியமாக எல்லோருக்கும் கேட்டது.

தட்டில் கற்பூரக் குவியலுடன் சுப்ரமணிய குருக்கள் அவளை அணுகினார்.

''முடியாது... நான் அப்படிச் சத்தியம் செய்ய மாட்டேன் - மாட்டேன்...'' அந்தி வேளையில் அமைதியான நேரத்தில் லாவண்யா அலறியது... ஊரின் சாலை, தெருக்கள் வரை எட்டியது. ''உங்கள் முன்னாடி நான் இன்னொரு சீதையாக இருக்க முடியாது'' கண்ணீர் கண்களில் மாலையிட உரத்த குரலில் கத்தினாள் லாவண்யா.

13

கனகம்மாள் கற்சிலையாக உட்கார்ந்திருந்தாள்.

அம்புபட்ட மானாக துடிதுடித்துக் கதறிய மனைவியின் முகத்தை ஏறெடுத்துப் பார்க்கக்கூட மகேந்திரனுக்குத் துணிவு இருக்கவில்லை.

இப்படி ஒரு காரியம் செய்து விட்டோமே! என்று உள்ளூரப் புழுங்கிவனாகத் தரையைப் பார்த்தபடி உட்கார்ந்து கொண்டிருந்தான்.

கீழே விழுந்து விடுகிறவள் போலத் தள்ளாடிய லாவண்யாவைத் திலகவதி இருக்கமாக அணைத்துக் கொண்டு மெல்லத் தரையில் உட்கார வைத்தாள்.

சட்டென்று கந்தசாமி மேடையை அணுகி கூஜாவிலிருந்து கொஞ்சம் தண்ணீரைத் தம்ளரில் ஊற்றிக்கொண்டு வந்து தன் மனைவியிடம் கொடுத்தான்.

செங்கமலம் சிறிது தண்ணீரைக் கையில் விட்டு, லாவண்யாவின் முகத்தில் தன் புடவைத் தலைப்பால் துடைத்து விட்டாள். மயக்கம் தெளியக் கொஞ்சம் தண்ணீரைப் பருகச் சொல்லி உபசரித்தாள்.

பிரமை பிடித்தவர்களாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பஞ்சாயத்து உறுப்பினர்களில் ஒருவர் தொண்டையைப் பலமாகச் செருமிக் கொண்டார். ''அப்படி மாட்டேன்னு சொன்னா பஞ்சாயத்து ஒத்துக்காதே. அது தெரிய வேண்டாமா?'' அதட்டலாகக் கேட்டார்.

மயக்க நிலையிலிருந்து தெளிந்துவிட்ட லாவண்யா வுக்கு ஆவேசம் வந்துவிட்டது.

தன்னை அணைத்துக் கொண்டிருந்த திலகவதியின் கரங்களிலிருந்து திமிறி எழுந்து நின்றாள்.

''பெரியோர்களே வணக்கம். நீங்கள் எல்லோரும் நியாயத்தை நிலை நாட்டத்தான் இங்கே கூடியிருக்கிறீங்க என்பதை ஒத்துக்கறேன். ஆனால் இந்தப் பழக்க வழக்க மெல்லாம் நடைமுறையில் ஒத்துவராது என்பது உங்களுக்குத் தெரியாதா? நம்நாடு விஞ்ஞானத்தில் முன்னேறிக் கொண்டிருக்கும் இந்தச் சமயம் நீங்கள் எல்லாரும் கூடி அறிவுக்கு அப்பாற்பட்ட இதை நான் செய்ய வேண்டும்னு எதிர்பார்ப்பது சரியல்ல. யோசித்துப் பாருங்கள்'' கோபம் பொங்கிய குரலில் கேட்டுவிட்டு தரையைக் குனிந்துகொண்டிருக்கும் மகேந்திரனைத் திரும்பிப் பார்த்தாள். மாமியார் கனகம்மாளின்மீது அனல் தெறிக்கும் பார்வையைச் சுழற்றினாள். கூட்டத்தினரைப் பார்வையால் எரித்தாள். மகேந்திரன் தலை நிமிராது அமர்ந்து கொண்டிருந்தான்.

இப்படித்தான் அன்று தருமன் தன் மனைவி பாஞ்சாலியை சபை நடுவே நியாயம் கேட்டு அலறித் துடிக்கவைத்து விட்டு வாய்மூடி மௌனியாக இருந்திருக்கிறான்.

இப்படித்தான் ராமனும் தன் குடிமக்களைத் திருப்தி செய்யும் பொருட்டு சீதையை இரண்டாவது தடவையும் தீக்குளித்துத் திரும்பச் சொல்லி ஆணையிட்டான். பாஞ்சாலியின் அபயக் குரலைக் கேட்டு அவளது அண்ணன் கண்ணன் அருள்பாலித்தான்.

லாவண்யாவின் அபயக்குரல், அவளது ஓலம் அவள் அண்ணன் காதுகளில் விழுவது சாத்யமாகும் சங்கதியா?

பொறுமையின் இருப்பிடமான பூமியின் மகள் சீதை - அவளும் பொறுமையின் இலக்கணம்தான்- ஆனாலும் சோதனையின் எல்லைக் கோட்டை எட்டியபோது தாங்க முடியாது ஆத்திரத்துடன் பூமியைக் கையால் அறைந்து - அது பிளந்து கொண்டதும் அந்தப் பிளவில் இறங்கி மறைந்தே போய்விட்டாள் மகராசி.

புராண காலத்தில் நடந்ததாகக் கூறப்படும் சங்கதிகள் இவை.

எத்தனை ஆத்திரப்பட்டாலும் பூமி வெடித்து லாவண்யாவுக்கு இடம் தரப்போவதில்லை.

அவள் மனத்திற்குள் குமுறுகின்ற உணர்வுகளின் அழுத்தம் தாங்காது அவளுக்கும் மகேந்திரனுக்கும் இடையேயிருந்த உறவு பிளந்து கொண்டு விட்டிருக்கிறது.

அந்தப் பிளவிலே அவள் இனி மறைய வேண்டிய வள்தான். ஏன் இன்னமும் நின்று கொண்டு... விவேகத்துடன் யோசிக்காத ஒரு முரட்டுக் கூட்டத்தினரி டம் விவாதிக்க வேண்டும்.

விரைவில் பலவும் எண்ணிக் கொதித்த அவளது முகமும் உடலும் நெருப்பாகி விட்டதுபோலத் திருதிரு வென்று எரிய நின்றாள்.

அநீதி இழைக்கப்பட்டுவிட்டது என்று அறிந்து கண்ணகி இப்படித்தான் நெருப்பாக நின்றிருப்பாள்- ஆமாம்! அந்த நெருப்புதான் மதுரையை எரித்திருக்க வேண்டும்.

இன்று அவள் உடலையும உள்ளத்தையும் தகிக்கும் இந்த ஆத்திரக் கனல் மகேந்திரன் நெஞ்சைச் சுட்டு - ஊர் மக்களின் மனதை எரிக்கப் போகிறது. ஐயோ! தவறு செய்து விட்டோமே என்று தாபத்திலே உருகித் தவிக்கட்டும். எல்லோரும் நன்றாகத் தவிக்கட்டும்.

''நான் ஒரே முடிவாகச் சொல்லி விட்டேன். நான் சத்தியம் செய்யத் தயார். ஆனால் இந்த முறையில் அல்ல'' சீறினாள் லாவண்யா.

''அப்போ நீங்க இந்த பஞ்சாயத்தின் வார்த்தைகளை ஏற்காம அவமதிக்கத் தீர்மானிச்சுட்டீங்க இல்லையா...'' காரமான குரலில் ஒரு உறுப்பினர் கேட்டார்.

இதுவரை மௌனமாக இருந்த திலகவதி இப்பொழுது சட்டென்று எழுந்து நின்றாள்.

''பஞ்சாயத்து நடக்கும்போது இரு தரப்புக்கும் வழக்காட சிலபேர் துணை நிற்பது வழக்கமில்லையா? இந்தப் பெண்ணுக்கு அவள் பக்கத்து உண்மையைப் பேச நாங்க சிலபேர் வந்திருக்கோம். லாவண்யா நர்சுக்குப் படிச்ச பெண். அவள் மறுத்துக் கூறுவதிலே உண்மை யிருக்கு. உள்ளங்கையில் ஒருபிடி கற்பூரத்தை வச்சுக் கொளுத்தினாலும் சரி, கொதிக்கிற எண்ணையிலே கையை விடணும்னு கட்டாயப்படுத்தினாலும் சரி... குடத்துக்குள்

இருக்கும் நாகப்பாம்பைப் பிடிச்சு எடுத்து வெளியே போடணும்னு சொன்னாலும் சரி... இந்தக் காலத்துக்கு ஒவ்வாத சோதனைகள். இதனால் ஒரு பெண்ணின் கற்பை நிலைநாட்ட முடியாது. கற்பூரமும் கொதிக்கும் எண்ணையும் தீக்காயத்தை உண்டாக்கும். அபாயம் விளைவிக்கும். இந்தப் பழங்காலத்து சங்கதிகளை இன்னமும் நாம் அனுசரிப்பது முறையில்லை. அதனால் அறிவுக்கு ஒத்த வகையில் விசாரணை நடத்துவதுதான் நல்லது என்பது என் அபிப்பிராயம்.''

''பலராலும் அனுசரித்து வந்து பழக்கங்களை நாம் சட்டுனு கைவிட்டுட முடியாது?'' ஆண்களின் கூட்டத் திலிருந்து ஆத்திரமாக ஒரு குரல் ஒலித்தது.

''அப்படின்னா முதல்லே மகேந்திரன் அவர்கள் கடவுள் முன் சத்தியம் செய்யட்டுமே. உள்ளங்கை நிறைய கற்பூரத்தைக் குவிச்சு ஏத்தி வச்சுகிட்டு, எனக்கு என் மனைவி மேலே எள் அளவு சந்தேகம் கிடையாது. ஊர் மக்கள் யாரும் அவளைச் சந்தேகிக்கக் கூடாது என்கிறதுக்குத்தான் இந்த விஷயத்தைப் பஞ்சாயத்துக்கு கொண்டு வந்தேன். இது சத்தியம் என்று உறுதி சொல்லட்டும். பிறகு நாம் மேற்கொண்டு லாவண்யா அம்மாவை விசாரிக்கலாம்.'' நிதானமாக ஆனால் தீயாக வார்த்தைகளைக் கக்கினாள் திலகவதி.

''இப்போ நாம் விசாரிக்கப் போறது லாவண்யா அம்மாவைப் பற்றின விவகாரம்-அவங்க கணவனை ஏன் இதில் இழுக்க வேணும். ''

கோபமாக ஒரு பஞ்சாயத்து உறுப்பினர் உறுமினார்.

''இது அவங்க குடும்பத்துப் பிரச்சினை என்று ஆரம்பத்திலேயே பெரியதனக்காரர் மனைவி சொல்லிட்டாங்களே? குடும்பம் என்கிறபோது அதில்

புருஷனும் - மாமியாரும் அடங்கிப் போறாங்களே? அதனாலே கணவன் முதலில் சத்தியம் செய்வதில் குற்றமில்லையே. அவருக்காக நீங்க ஏன் வாதாடணும்? மகேந்திரன் அவர்கள் எழுந்து எல்லார் முன்னாலும் முதலில் நிற்கட்டும்'' அதட்டலாகத் திலகவதி பதில் அளித்தாள்.

நாட்டாண்மை தமது மனைவியை வியப்புடன் பார்த்தார். பொது இடத்திலே இப்படி அடித்துப் பேச திலகவதிக்கு துணிவு எங்கேயிருந்து வந்தது?

''ஏன் பெரியதனக்காரர் பெண்ஜாதிகூட எல்லார் முன்னாலும் சத்தியம் செய்யணும்னு நான் சொல்றேன். அவங்களுக்கு மருமகள் மேலே விரோதம் ஏதும் இல்லை. ஊர் ஜனங்கள் உண்மையைத் தெரிஞ்சுக்கத்தான் இந்த பஞ்சாயத்தை ஏற்பாடு செய்தாங்க-அப்படின்னு முதல்ல அவங்க சத்தியம் செய்யட்டும்-பிறகு மத்தவங்க ஆரம் பிப்பாங்க'' ஓங்கிய குரலில் கத்தினான் கந்தசாமி.

அவர்கள் வீட்டில் வேலை செய்கிறவன்-அவர்களது உப்பைத் தின்று ஆளாகினவன், நன்றி கெட்டதனமாக எப்படிப் பேசுகிறான்?

கனகம்மாள் அதிர்ந்து போனாள். கோபத்தைக் கட்டுப்படுத்த இயலாது கிரீச்சென்று அலறினாள்.

''எல்லார் முன்னிலையிலும் என் வேலையாள் என்னை அவமானப்படுத்துவதை பஞ்சாயத்து பார்த்துக் கொண்டிருக்கிறதே? இதென்ன வேடிக்கை!'' ஆத்திரத்தில் வெடித்தாள்.

''பஞ்சாயத்து என்று வரும்போது எஜமான்-வேலையாள் என்கிற பேதமெல்லாம் கிடையாது-எல்லாரும் மனிதர்கள் என்கிற முறையில்தான் விசாரணை செய்து நியாயம் வழங்குவாங்க. அதனாலே

நாட்டாண்மை அவர்களே - நான் லாவண்யா அம்மா பக்கமாகப் பேசுவதில் தவறு இல்லையே? பெரிய அம்மாவுக்கு எடுத்துச் சொல்லுங்க'' படபடவென்று பதிலளித்தான் கந்தசாமி.

''இது லாவண்யா அம்மாவைப் பத்தின விசாரணையா? அவுங்க குடும்பத்தைப்பத்தின விசாரணையா'' கூப்பாடு போட்டார் கூட்டத்திலிருந்த ஒருவர்.

''கேளுங்க... அப்படித்தான் நல்லா கேளுங்க'' இன்னொருவர் இரைச்சலிட கூட்டத்தில் சலசலப்பு அதிகமாகவே நாட்டாண்மை தமது இரு கைகளையும் தூக்கி ''அமைதி - அமைதி'' என்று எச்சரிக்க வேண்டி யிருந்தது.

இதுவரை மௌனமாக இருந்த சுப்ரமணிய குருக்கள் பஞ்சாயத்தார் முன்னால் நகர்ந்து வந்து நின்று கொண்டார்.

''எல்லாரும் நான் சொல்றதைக் கொஞ்சம் தயவு பண்ணி கேட்கணும். நான் உங்களைப்போல இந்த கிராமத்தைச் சேர்ந்த ஒருத்தன் என்கிற முறையில்தான் பேசறேன். நம் புராணக்கதைகளில் நாம் அநேகம் கேள்விப் பட்டிருக்கோம். நல்லதங்காள் கதையை எடுத்துக்குவோம். அவள் நாட்டில் பஞ்சம் அதிகமாகிவிட்டதால் தன் குழந்தைகளோடு அண்ணா வீட்டுக்குப் போகிறாள் நல்லதங்காள். அண்ணா காட்டுக்கு வேட்டையாடப் போயிருக்கிற சமயம். அவர் சம்சாரத்துக்கு நாத்தனாரைப் பிடிக்காது. அதனாலே அவமானப்படுத்தி கொடுமை செய்யறா - அத்தனை பேரும் சாப்பிட ஒரு பானையும் - அரிசி பருப்பும் - கொஞ்சம் வாழைத் தண்டும் கொடுக்கிறா.

''பத்தினிப் பெண்ணான தல்லதங்காள் தன் பர்த்தாவையும் - பகவானையும் நினைச்சுக் கொண்டு

வாழைத் தண்டை விறகா உபயோகித்து சமைத்து தன் குழந்தைகளுக்குப் போடறா. வாழைத்தண்டு அவளது பதிவிரத மகிமையால் விறகா எரிகிறது என்பது புராணம். இது நடைமுறையில் சாத்யப்படுமா?''

''ஏன் நாட்டாண்மை மனைவிகிட்டே கொடுத்துப் பாருங்கோ - ஒரு சமயம் விறகுபோல எரியும்'' கேலியாக பின்னாலிருந்து ஒரு ஆண்குரல் கத்தியது.

திலகவதி அதிர்ந்து போகவில்லை. லேசாக முறுவலித்தாள். ''பதினைந்து வயதில் புக்ககம் வந்தவள் - இத்தனை வருஷமாக என் கணவர் முகம் கோணாது வாழ்கிறவள் - நான் ஒழுக்கமான பெண் என்பது அவருக்குத் தெரியும். என் மனசாட்சி அறியும் - அப்படியிருந்தும் குருக்கள் அய்யா சொல்றபடி நடைமுறையில் சோதனை வைத்தால் நான் வெற்றி பெறமாட்டேன். வாழைத்தண்டை முறித்து எங்க வீட்டு அடுப்பில் வைத்தால் ஏற்கனவே எரிகிற விறகும் அணைந்து போகும். அவை எரியாது. நல்லதங்காள் செய்த அற்புதத்தை என்னால் சாதிக்க முடியாது. அதனாலே நான் நடத்தை கெட்டவளாகிவிடமாட்டேன். நல்ல தங்காள் அண்ணி மேலே கோபம் கொண்டு அவமானம் தாங்க முடியாது தன் குழந்தைகளோடு கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்கிறாள். அவளைத் தேடிவந்த அண்ணன் புலம்பிக் கடவுளை வேண்ட எல்லோரும் உயிர் பெற்றுக் கொள்கிறார்கள்-இதுவும் அந்தக் கதையில் நடக்கும் அற்புதம். இப்போது எந்த நல்லதங்காளாவது கோபத்துடன் குழந்தையைத் தூக்கி கிணற்றில் போட்டால் - சிவபெருமான் காட்சி தரமாட்டார். நம்ப போலீஸ்கார அய்யா வந்து அவளைக் கொலைக் குற்றத்துக்காக கைது செய்வார்.''

கூட்டத்தில் சிரிப்பு அலை மோதியது.

''ஏன் பின்னாலேயிருந்து கூப்பாடு போடற ஆண் சிங்கம் முன்னால வந்து தைரியமா பேசலாமே?'' செங்கமலம் குறுக்கிட்டுக் காரமாகக் கேட்டுவிட்டு குரல் கொடுத்தவனை முறைத்தாள்.

அவளுக்கு அவனை நன்றாகவே தெரியும் - அவர்களது தெருவின் திருப்பத்தில் வசிக்கிறவன். வயதை மீறி ஒரு சின்னப் பெண்ணுக்குத் தாலி கட்டிவிட்டு அவளது நடத்தைக்குக் காவலாக இருந்து தவிக்கிறவன் - ஒரு சமயம் அந்தச் சின்னப் பெண் வாய்க்கால் கரையோரத்தில் ஒரு இளைஞனுடன் நெருக்கமாக நின்று பேசியதை ஊரில் உள்ள சிலர் பார்த்து கதை கட்டிவிடவே கோபத்துடன் மறுமுறை தன் மனைவி அந்த வாலிபனுடன் பேசும் சமயம் பார்த்து இருந்து கையும் களவுமாக அவளைப் பிடித்து கூந்தலைப் பற்றி தர தரவென்று இழுத்துவந்து அவள் அலற அலற... முதுகில் ஒங்கி அறைந்து தலையைச் சுவற்றில் மொத்திய சங்கதியைத் தெருவே அறியும். தன் முதுகில் அழுக்கை வைத்துக்கொண்டு மற்றவன் குளிக்கவில்லை என்று குற்றம் சாட்டும் கோழை. அவனை ஏளனமாக வெறித்தாள் செங்கமலம் - கந்தசாமிக்கும் அந்த விஷயம் தெரிந்திருந்த தினால் அவன் வெகுண்டெழுந்தான்.

''ஏன் இந்தச் சமயம் உங்க வீட்டு சங்கதியையும் இங்கே போட்டு உடைச்சு விசாரிப்பு செய்துடலாமே?'' என்று இரைந்து கேட்டான்.

''இது என் வீட்டுப் பிரச்சனை இல்லையே? என்னை ஏன் இழுக்கறே எனக்குக் கோபம் வந்தா விசயமே வேறாக்கும்'' அவன் பதிலுக்குக் கத்த...

''கந்தசாமி ரொம்ப துள்ளறான் - யாராவது ரெண்டு மொத்தினால்தான் அடங்குவான் போலிருக்கு'' என்று ஒருவன் குரல் கொடுக்க...

''யாருடா என்னை மொத்தறவன்... மீசையுள்ள ஆம்பிள்ளையினா பொம்பிளை பின்னாடி நின்றுகிட்டு பேசமாட்டான்'' என்று கந்தசாமி பதிலுக்குக் கத்த - ஆண்களும் பெண்களுமாக ஏக காலத்தில் பலவும் பேச - ஏச, ஒரு பெரும் சண்டையே துவங்கி விடும் போன்ற நிலைமையைக் கண்டு பஞ்சாயத்துத் தலைவர் முருகேசன் எழுந்து நின்றார்.

''அமைதி - அமைதி... இது என்ன சத்தம்? இங்கே நியாயம் வழங்க நாங்க கூடியிருக்கோமே ஒழிய நீங்க சண்டை போடரதை வேடிக்கை பார்க்க அல்ல - இது மாதிரி நிலைக்குப் பிறகு தொடர்ந்து இன்னிக்கு பஞ்சாயத்தை நடத்த முடியாது-அதனாலே ஒரு நாள் சாவகாசம் தரேன். நாளைக்கு இந்நேரம் மறுபடி இங்கே நாம் கூடலாம். இன்னிக்கு சபை கலைகிறது - வணக்கம்'' என்று அழுத்தமாகச் சொன்னார். கூட்டம் நாலா பக்கமும் கலைந்து போனது.

''இந்தக் குழப்பம் தீருகிறவரை நான் உங்களோட இருக்க விரும்பரேன்... மறுப்பு இல்லையே'' என்று கண்கலங்கிய லாவண்யாவைத் தான் பெற்ற மகள் போல மார்புடன் அணைத்துக் கொண்டாள் திலகவதி. ''என்னோட இரும்மா - நீ எங்கேயும் போக வேண்டாம்'' - கனகம்மாள் காதில் படுமாறு சொல்லி விட்டு மகேந்திரனை வெறுப்போடு பார்த்தபடி லாவண்யாவுடன் தங்கள் வீட்டு மாட்டு வண்டியில் ஏறிக் கொண்டாள்.

14

சப்-இன்ஸ்பெக்டர் சந்திரசேகரன் லேசான தலை வலியுடன் தனது அறையில் மேஜை மேல் கிடந்ததொரு ஃபைலைப் புரட்டிக் கொண்டிருந்தார். இரவு சரியாக உறங்காததினால் கண்களில் நெருப்பாக வேதனை. ஃபைல்களிலிருந்த கடிதத்தில் கண்ட எழுத்துக்கள் நர்த்தன மாடியது போன்ற பிரமையில் எரிச்சலுடன் அதை மூடினார். அவருக்குத் தன் மீதே கோபம். பட்டப் படிப்பு படித்த - நண்பன் மகேந்திரன் வியாபார நுட்பம் தெரிந்தவன் நல்லவன் என்று அவரது மதிப்பில் உயர்ந்திருந்தவன் தன் மனைவியை சந்தியில் நிறுத்தி ஆளுக்கு ஒரு கேள்வி கேட்க அவமானத்தில் அவள் துடிப்பதைப் பார்த்துக் கொண்டு கோழையாகத் தலை குனிந்து கொண்டு உட்கார்ந்திருந்த கொடுமையை அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. கிராமத்துப் பெண்கள் என்றாலும் திலகவதியும் செங்கமலமும் துணிச்சலாக சபையில் பேசியதை அவரால் வியக்காதிருக்க முடியவில்லை. அவர்கள் விவாதத்தை ஊரார் ஏன் ஏற்க மறுத்தார்கள் - குற்றங்கள் நிகழாது ஊர் மக்களை பாதுகாக்க பதவி ஏற்றுக் கொண்டிருந்த அவரால் கூட ஒரு பெண்ணுக்கு இழைக்கப்பட்ட அந்த அநியாயத்தைத் தடுத்து நிறுத்த இயலவில்லை.

என்ன அவமானம்?

'இது ஊர் பழக்கம்-இதில் உங்களுக்கு பங்கு இல்லை'' என்று பஞ்சாயத்தார் கடுமையாகச் சீறுவார்கள்.

இங்கே கொலையா நடக்கிறது? ஊர் கட்டுப்பாட்டுப் படி ஒரு விசாரணை நடக்கிறது. இதில் தலையிட உங்களுக்கு உரிமையேது என்று மக்கள் கொதித்து எழுவார்கள்.

பின்னர் அவர் அணிந்து கொண்டிருக்கும் சீருடைக்கும் வகிக்கும் உத்தியோகத்திற்கும் மதிப்பில்லாது போய்விடும் என்ற அச்சத்தில் கோழையாகி - வாயை மூடிக் கொண்டு அவரும் இருந்தது - தவறுதான்! மனசாட்சி குடைந்து கொண்டிருந்தது.

"ஸார்! உங்களைப் பார்க்க இரண்டு பேர் வந்திருக்காங்க. பம்பாயிலிருந்து புறப்பட்டு வந்தாங்களாம்... இறந்து போனவரைப் பத்தி விவரம் சொல்ல முடியுமாம்" கான்ஸ்டபிள் கருணாகரன் உள்ளே வந்து வணக்கம் தெரிவித்தபடி... விஷயத்தை படபடத்தார்.

திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தார் சந்திரசேகர். இத்தனை சீக்கிரம் அந்தப் பிரச்சனைக்கு ஒரு முடிவு வந்து விட்டதா? மகிழ்ச்சியில் மார்பு படபடத்தது. "வரச் சொல் உள்ளே!" என்றார்.

காலடி ஓசை கேட்டுத் திரும்பினார் - பெருத்த அதிர்ச்சி. கண்களை மூடித் திறந்து மறுபடியும் பார்த்தார் - கனவல்ல - உண்மையேதான்! வெள்ளைச் சட்டையும் வேட்டியும் தரித்திருந்த - நரைத்த கிராப்புத் தலை மனிதர் பின்னால்... நீல ஷிபான் சேலையில் கொடிபோலத் துவண்டு நின்ற அந்தப் பெண்ணை மறுபடியும் வியப்புடன் பார்த்தார்.

பஞ்சாயத்தின் முன்னால் - முதல்நாள் மாலை சோகம் கப்பிய முகத்துடன் சோர்ந்து நின்ற லாவண்யா... அங்கு வந்துவிட்டது போல... என்ன அதிசயமான உருவ ஒற்றுமை, யார் இந்தப் பெண்?

மிரமிப்புடன் அவர்கள் இருவரும் எதிரே அமர ஆசனங்களை சுட்டிக் காட்டினார், சப்-இன்ஸ்பெக்டர்.

"நாங்க பம்பாயிலிருந்து வரோம். என் பெயர் சரவணன். இவள் என் பேத்தி ரேவதி... நீங்க பத்திரிகை

யில் கொடுத்திருந்த விவரத்தையும் பிரசுரித்திருந்த புகைப்படத்தையும் கண்டு அலறித் துடிச்சுப்போய் புறப்பட்டு வந்திருக்கோம். இறந்துபோன குருமூர்த்தி எங்க தூரத்து உறவுப்பையன். என் பேத்தியை கட்டிக்க இருந்த மாப்பிள்ளை. நிச்சயம்கூட நடந்து விட்டது. கல்யாணத்தை தை மாசம் வச்சுக்கலாம்னு இருந்தப்போ..." பேச முடியாது துயரத்தில் திணறினார்.

கண்களிலிருந்து முத்தாகக் கன்னங்களில் உதிர்ந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் ரேவதி.

"பம்பாயிலிருக்கும் ஜெயஜோதி ஒப்பனைப் பொருள் தயாரிப்பு நிறுவனத்திலே வேலை பார்த்துக் கொண்டிருந்தார் அவர். தஞ்சை திருச்சி மாவட்டங்களில் கிளை ஸ்தாபனங்கள் வைக்க வாய்ப்பு பற்றி நேரே தெரிந்துவர புறப்பட்டு வந்தார். சுற்றுப் பயணத்தின்போது தான் இந்த விபத்து நேர்ந்திருக்க வேண்டும். அவருக்கு பெற்றவங்க கிடையாது - என்னைப் பெற்றவங்களும் சின்ன வயசிலே இறந்து போயிட்டாங்க. இப்போ கட்டிக்க வந்தவரும் போயிட்டார். நான் ரொம்ப துர் அதிர்ஷ்டம் பிடிச்சவ..." மேலே தொடர முடியாது ரேவதி விக்கி விக்கி அழுதாள்.

"அழாதேம்மா! அழுதா என்ன நடக்கப் போகுது. வழியிலே விமானப் பயணம் முழுவதும் அழுதே - பஸ் பயணத்தின் போதும் அழுதே. உடம்பு கெட்டுடும். கண்ணைத் துடைச்சுக்கோ" சரவணன் அன்புடன் பேத்தியைக் கடிந்து கொண்டார்.

கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு மெல்ல விசும்பினாள்.

சந்திரசேகரன் எழுந்து சென்று இரும்பு பீரோவைத் திறந்து அதில் வைக்கப்பட்டிருந்த ஃபைல் ஒன்றை எடுத்து

திறந்து சந்தேகப் புயலை எழுப்பிவிட்ட அந்தப் புகைப் படத்தை அவள் முன் நீட்டினார்.

"ஆமாம். இது என் படம். பம்பாயில் எங்கள் ஃபிளாட்டில் உள்ள சிறு பால்கனி சுவற்றில் என்னை சாய்ந்துகொண்டு நிற்க வைத்து எடுத்த படம் - புகைப் படம் எடுப்பது அவருக்கு ஒரு இனிதான பொழுது போக்கு. மறுநாள் இப்படத்தை கொண்டு வந்து காட்டி இதில் என் கையெழுத்தைப் போட்டுத் தரும்படி சொன்னார். என் பெயரை எழுத மறுத்தேன். படம் தவறி யாரிடமாவது அகப்பட்டால் என் பெயர் கண்டவருக்குத் தெரிவானேன் என்பது என் விவாதம். முடிவில் போட்டோ எடுத்த தேதியை பின்னால் போட்டுக் கொடுத்தேன். படத்தைத் திருப்பிப் பாருங்கள். மார்ச் பதினெட்டு 1984 என்று என்னால் எழுதப்பட்டிருக்கும். அது என் கையெழுத்து. இந்தப் படத்தில் நான் உடுத்திக் கொண்டிருக்கும் பூப்போட்ட அமெரிக்கன் ஜார்ஜெட் அவர் சிங்கப்பூர் போனபோது எனக்காக வாங்கி வந்தது. முதன் முதலாக அவர் எனக்குக் கொடுத்த பரிசு"

பொல பொலவென்று கண்ணீர் உகுத்தபடி கரகரத்த குரலில் பேசினாள் ரேவதி.

அடுத்ததாக இறந்தவரது போட்டோவை எடுத்து சந்திரசேகரன் அவள் முன் காட்டியதும்... அடக்கமாட்டாத துயரத்தில் அவள் உரத்து அழுதுவிட்டாள்.

விசுக்கென்று எழுந்தார் சந்திரசேகர். "நீங்க ரெண்டு பேரும் பிணக்கிடங்குக்கு வந்து உடலைப் பார்த்து அடையாளம் கண்டு கொள்கிறதுக்கு முந்தி என்னோட ஒரு வீட்டுக்கு வரணும். ஜீப்பில் அழைச்சிகிட்டு போரேன்... கிளம்பலாமா" என்றார்.

அன்று காலை கோவிலிலிருந்து திரும்பிய நாட்டாண்மை அப்பொழுதுதான் காப்பி பலகாரத்தை

முடித்துவிட்டு கைகழுவிக்கொண்டு ஊஞ்சலில் வந்து ஆயாசத்துடன் உட்கார்ந்தார். எத்தனை வற்புறுத்தியும் லாவண்யா இரவு எதுவும் சாப்பிடவில்லை. காலை குளியலுக்குப் பின் சமையலறைக்குள் வந்து தனக்கு உதவி செய்ய முற்பட்ட அவளை மிகவும் கட்டாயப்படுத்தி திலகவதி சிறிது காப்பி குடிக்கச் செய்திருந்தாள். துவண்டு விழுந்து விடுவாள் போலிருந்த லாவண்யாவைப் பார்த்து மனம் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள் திலகவதி. வாயிற்கதவு பலமாக இடிக்கப்பட்டது."

முருகேசன் எழுந்து சென்று கதவைத் திறந்தார். சப்-இன்ஸ்பெக்டர் பின்னால் நின்று கொண்டிருந்த பெண்ணைக் கண்டதும் மின்விசை தாக்கியது போன்ற அதிர்ச்சி.

"திலகா! இங்க வா" உரத்து கூப்பாடு போட்டார் கலவரத்துடன் நாட்டாண்மை.

சமையலறையிலிருந்து எட்டிப் பார்த்த திலகவதி செயலற்றுப் போனாள். இது என்ன அதிசயம்? லாவண்யாவைப் போலவே இன்னொரு பெண். ஒரு சமயம் இருவரும் இரட்டைக் குழந்தைகளா?

"லாவண்யா! என்னோடு கூடத்துக்கு வா. உன்னைப் போலவே ஒரு பெண் வந்திருக்கா. நான் நினைச்சது சரியா போச்சு" என்று குழறினாள் மகிழ்ச்சி கட்டுக் கொள்ளாது.

மெல்ல திலகவதி பின்னால் கூடத்தில் நின்று கொண்டாள் லாவண்யா. பெஞ்சிமீது உட்கார்ந்திருந்த அந்தப் பெண்ணை வியப்புடன் அவள் பார்க்க - அவளும் லாவண்யாவை அதிசயத்துடன் உற்றுப் பார்க்க - இருவரும் ஒரு கணம் திகைத்துப் போயினர். என்ன ஆச்சரியம் - லாவண்யா போலவே இருக்காங்களே! ஒரே

அச்சில் வார்த்தது போல'' என்றார் வியப்புடன் நாட்டாண்மை.

''இந்த உருவ ஒற்றுமைதான் ஒரு பெரிய குழப்பத்துக்கே காரணமாகி ஒரு பெரிய விபரீதம் இந்த ஊரில் நடக்க இருந்தது. அதனால் தயவு செய்து பெரியவரே... எல்லாவற்றையும் விவரமாக நீங்க இவரிடம் சொல்லி விடுங்கள். இவர் பஞ்சாயத்து தலைவர்-நாட்டாண்மை வகிப்பவர். இன்று மாலை இந்த புகைப்படத்தால் வந்த கலவரத்திற்கு தீர்ப்பு வழங்க இருக்கிறார்'' என்று சந்திரசேகரன் சொன்னார்.

வந்தவர்கள் வெள்ள விபத்திலே இறந்துவிட்டவன் யார் என்பதை விளக்கமாகச் சொல்லி போட்டோவி லிருப்பது ரேவதிதான் என்று விளக்கினார்கள்.

''எங்களுக்கு உருவ ஒற்றுமையால் இந்தக் குழப்பம் ஏற்பட்டது. இது ஒரு அதிசயமான கேஸ்'' என்றார் சப்-இன்ஸ்பெக்டர்.

''ஒரு சின்ன வித்தியாசம் இருப்பதை நீங்கள் யாரும் கவனிக்கலையா?- எனக்கு இடது கன்னத்தில் ஒரு மரு இருக்கிறதே - அது போட்டோவில் கூட பளிச்சென்று தெரிகிறதே... பார்க்கலையா?'' ரேவதி கேட்டபோதுதான் அவர்கள் அனைவரும் விழிப்படைந்தனர். சப்-இன்ஸ்பெக்டர் தமது சட்டைப் பையிலிருந்து புகைப் படத்தை எடுத்து உற்றுப் பார்த்தார். ஆமாம் - ஒரு சிறு பரு இடது கன்னத்தில் இருக்கிறதே-அதை ஏன் அவர் கண்டு கொள்ளவில்லை?

நாட்டாண்மை புருவங்களைச் சுருக்கிக்கொண்டு பார்த்தார் - லாவண்யாவைத் திரும்பிப் பார்த்தார். என்ன முட்டாள்தனம்? மேலெழுந்தவாரியாக உருவ ஒற்றுமை இருக்கிறது. ஆனால் உற்றுப் பார்த்தால் போட்டோவில்

தெரிந்த பெண்ணுக்கும் லாவண்யாவுக்கும் சில வித்தியாசங்கள் இருக்கின்றனவே. அந்த மரு - புருவத்தின் வளைவுகள் உதட்டின் அமைப்பு... ஈஸ்வரா! எத்தனை பெரிய தவறு. குற்ற உணர்வில் மனம் குமைந்து போனார்.

''எத்தனை தடவை நான் சொல்லியும் யாரும் என்னை நம்பவில்லை'' சீற்றமும் துயரமுமாக எழுந்த லாவண்யாவின் வார்த்தைகள் அவரது நெஞ்சைச் சுட்டன.

''கவலைப்படாதேயம்மா - இந்த அவமானத்தை துடைத்து நீ களங்கமில்லாதவள்னு நிரூபித்து - பஞ்சாயத்து உன்னிடம் மன்னிப்புக் கேட்க ஏற்பாடு செய்துடரேன். சப்-இன்ஸ்பெக்டர் நீங்க ஒரு காரியம் செய்யணும். இந்த ரெண்டுபேரையும் பஞ்சாயத்துக்கு இன்னிக்கு சாயங்காலம் அழைச்சுட்டு வரணும். பெரியவரே தயவு செய்து இந்த உண்மையை நீங்கள் கூட்டத்துமுன் சொல்லி இந்தப் பெண்ணுக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைக்கணும்'' மிகவும் தாழ்மையாகக் கேட்டுக் கொண்டார்.

''என்னைப் போல ஒரு பெண். என் உருவ ஒற்றுமையால இவங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த கஷ்டத்தை நிவர்த்திக்கணும் - என் துயரம் ஒரு பக்கம் இருக்கட்டும். கட்டாயம் பஞ்சாயத்துக்கு நான் நேரே வந்து நான் யார் - அது என் போட்டோ என்று சகல விவரமும் சொல்லி நிரூபிக்கிறேன்.'' சவால் விட்டாள் ரேவதி.

முதலில் இந்தப் பெண்ணையும் பெரியவரையும் கனகம்மாள் வீட்டுக்கு அழைச்சிட்டுப் போய் காட்டுங்க. முதலில் அவங்க சந்தேகம் தீரட்டும்'' என்று ஏளனமாகச் சொன்னாள் திலகவதி

அன்று மாலை கூடிய பஞ்சாயத்தின் தீர்ப்பைக் கேட்க ஊரே திரண்டு விட்டிருந்தது.

"உண்மையா இது? ஒருத்தரைப் போலவே இன்னொருத்தர் இருக்காங்களே! உலகத்தில் ஒருத்தரைப் போல உருவ ஒற்றுமையுள்ளவர்கள் ஒன்பது பேர் இருக்காங்களாம் - நம்ப ஊர் பெரியதனக்காரர் வீட்டுக்கு இப்படி சோதனை வந்திருக்க வேண்டாம்."

"நல்லா விசாரிக்காம பத்தினிப் பெண்மேலே பழி போட்டுட்டாங்களே கனகம்மா... அவங்க ஒரு பெரிய மனுஷியா?"

'தாயார் புத்திகெட்டுப் பேசினா மகனுக்கு அறிவு எங்கே போச்சு' அடிக் குரலில் பலவிதமான விமரிசனங்கள் கூட்டத்தை கலகலக்க வைக்க பஞ்சாயத்து தலைவர் 'அமைதி, அமைதி' என்று கையை உயர்த்த... எல்லோரும் மௌனமானார்கள். ஊருக்குள் வந்திருந்த அவர்களிருவரும் உண்மை விவரத்தை எடுத்துச் சொல்ல - புகைப் படத்தை சப்-இன்ஸ்பெக்டர் பஞ்சாயத்து உறுப்பினர்களிடம் கொடுத்தார்.

"கூடியிருந்த பெண்கள் புடவைத் தலைப்பைத் தேடினார்கள் - ஆண்கள் ச்சோ! ச்சோ! என்று அனுதாபத்துடன் சூள் கொட்டினார்கள். கூட்டத்தில் மறுபடியும் பெருத்த சலசலப்பு!

முருகேசன் ஒரு சில நிமிஷம் பஞ்சாயத்து உறுப்பினர்களுடன் தாழ்ந்த குரலில் பேசிவிட்டு தொண்டையை பலமாகக் கனைத்தார். பிறகு லாவண்யா பக்கம் திரும்பினார்.

"அம்மா! எங்க அறியாமையால் நடந்துவிட்ட இந்தப் பிழையை நீங்க பெரிய மனசுபண்ணி மறந்து மன்னிக்கணும். நீங்களும் மகேந்திரனும் மறுபடி ஒன்றுகூடி இனிதாக வாழணும்னு வாழ்த்தி

எல்லார்கிட்டேயும் மன்னிப்பு வேண்டி கூட்டத்தை கலைக்கிறேன்" என்று முடித்தார்.

மகேந்திரன் அருகில் வந்தபோது திலகவதி கடுமையாகச் சொல்லிவிட்டாள்.

"இந்தப் பெரிய சங்கடத்தால் ஏற்பட்ட மனப்புண் அப்படி ஒரே நிமிஷத்தில் ஆறிவிடாது. மனம் அமைதியடைய நாளை வரை எங்க வீட்டில்தான் லாவண்யா இருப்பாள்" என்றபடி தன் அணைப்பில் அவளைத் தள்ளிக் கொண்டு போய் தங்கள் வில் வண்டியில் ஏற்றினாள்.

சப்-இஸ்ன்பெக்டர் சந்திரசேகரன் எல்லோருக்கும் வணக்கம் தெரிவித்து விட்டு மேலே காரியங்களை கவனிக்க தம்முடன் வந்தவர்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு கிளம்பிவிட்டார்.

அன்று இரவு ஒன்பது மணியளவில் தஞ்சாவூரை அடைந்த தூத்துக்குடி சென்னை ஜனதா எக்ஸ்பிரசில் எக்கச்சக்கமான கூட்டம். எப்படியோ திலகவதிக்கும் லாவண்யாவுக்கும் சென்னை செல்ல டிக்கெட்டுகள் கிடைத்து விட்டிருந்தன. வண்டி புறப்பட சில நிமிஷங்களே இருந்தன. பிளாட்பாரத்திற்குள் நுழைந்த மகேந்திரன் அவர்கள் பயணப்பட்ட பெட்டியைத் தேடிக் கண்டுபிடித்து ஜன்னல் அருகே வந்து மூச்சிறைக்க நின்றான்.

"லாவண்யா என்ன இது என்கிட்ட சொல்லாம கட்டின புடவையோட ஊருக்குப் புறப்பட்டா என்ன அர்த்தம்? என்னை மன்னிக்கலைன்னுதானே பொருள்?" ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு துயரத்துடன் தடுமாறினான். ஒரு சில வினாடி அவனை அனுதாபத்துடன் பார்த்த லாவண்யா லேசாக முறுவலித்தாள்.

"கட்டின புடவையோட மட்டுமல்ல உங்கள் குழந்தையோட நான் என் பிறந்த வீட்டுக்குப் போரேன்."

"என்ன காரியம் செய்துட்டே லாவண்யா. நீ தாய்மையடைந்திருக்கிற மகிழ்ச்சியான செய்தியை எனக்கு சொல்லலையே."

"உங்க மனசில் சந்தேகம் குடி கொண்டிருக்கிற சமயம் இதைச் சொன்னால் பாவம் பிறக்கப்போகும் குழந்தைக்கு தந்தை வேறு யாரோன்னு நீங்க சந்தேகப் பட்டால் அந்த அவமானத்தை என்னால் தாங்கிக்க முடியாது." மெல்லிய குரலில் அவனுக்கு மட்டும் கேட்கும்படி சொன்னாள்.

"ஐயோ லாவண்யா! என்னை வார்த்தைகளால் குத்தி குதறாதே. மன்னிச்சிடு. முதல்லே வண்டியை விட்டு கீழே இறங்கு. உன்னை வீட்டுக்குக் கூட்டிப்போக வந்திருக்கேன்" புலம்பினான் மகேந்திரன்.

"வீட்டுக்கு வரதா உத்தேசம் இருந்தா இப்படி கட்டின புடவையோட நான் புறப்பட்டிருக்கமாட்டேன். என் குடும்பம் - என் படிப்பு - என் உத்தியோகம் எல்லாத்தையும் உதறிவிட்டு நீங்களே கதின்னு கிராமத்துக்கு உங்களோட வாழ வந்தேன். ஒரு நல்ல மனைவியாகத்தான் வாழ்ந்தேன். உங்கள் தாயாரின் விருப்பு வெறுப்புகளை சகிச்சுக் கொண்டேன், ஆனால் பொறுமைக்கு ஒரு எல்லை உண்டில்லையா?"

"என்ன சொல்ரே லாவண்யா?" கண்களில் நீர் பளபளக்க... துயரம் நெஞ்சை இறுக்க கெஞ்சினான் மகேந்திரன்.

"சொல்றதுக்கு ஒண்ணுமில்லே-யார் சந்தேகப் பட்டாலும் எனக்கு அக்கறை இல்லை. நீங்களே என்னை சந்தேகப்பட்டீங்க என்கிறதைப் புரிஞ்சு கொண்டபோது என் மனம் வெடிச்சுப் போச்சு. இந்த அவமானத்திலே ஏற்பட்ட ரணம் சுலபத்திலே ஆறாது, அதனால் போகிறேன்."

"லாவண்யா!" அலறினான் மகேந்திரன்."

"எனக்கு என் தொழில் கை கொடுக்கும். உரிய காலத்தில் விவாகரத்து பெற்றபின் உங்களுக்கு ஏத்த ஒரு பெண்ணை நீங்க கட்டிக்கொண்டு சுகமா வாழ வாழ்த்தறேன்."

"லாவண்யா! நீ இப்படிப் பேசலாமா?"

"பேசவச்சது நீங்கதான்-பெண் படிச்சவளாயிருந்து என்ன - புத்திசாலியாக இருந்தென்ன? அவளுக்கு இன்னமும் சமத்துவம் இல்லைங்கிறதை என் அனுபவத்திலே புரிஞ்சு கொண்டேன். ஆனால் கோத்தடிமையா வாழ என் மனம் ஒப்பலே. புராண காலத்து சீதை என்ன செய்தாங்க? கோபம் தாங்காது பூமிக்குள் மறைஞ்சுட்டாங்க. அந்த அற்புதத்தை என்னால் செய்ய முடியாது. அதனாலே நான் உங்களைப் பிரிஞ்சி என் பிறந்த வீட்டிற்கு போய்ச்சேர்ந்ததுடரேன் அவ்வளவுதான்."

இரண்டாவது மணியடித்தது. வண்டி பெருமூச்சுடன் நகரத் தொடங்கியது. "லாவண்யா, லாவண்யா!" என்று கூவியபடி மகேந்திரன் அதனுடன் நகர்ந்து ஓடி வந்து கொண்டிருந்தான்.

"இந்த மாதிரி கொடுமைகள் இழைக்கப்படும் போது பொறுமையான பெண்களும் மறுபடியும் சீதையாக மாறிவிடறாங்க. வரேன்!" முகத்தைத் திருப்பிக் கொண்டாள் லாவண்யா.

வண்டி வேகம் கூடியது. ஒடும் ரயிலைப் பார்த்துக் கொண்டு உயிரற்றவன் போல நின்றான் மகேந்திரன்.

லாவண்யா கணவனை மன்னித்து-மறுபடி அவனுடன் வாழத் திரும்பி வந்தாளா? முடிவை வாசகர்களே தீர்மானிக்கட்டும்.

★★★

அவள் ஒரு கரும்பூனை

விடிந்ததுமே சுள்ளென்று எரித்த கோடை சூரியன் பத்து மணி அளவில் நெருப்பை வாரிக் கொட்டிக் கொண்டிருந்தது.

களத்துமேட்டின் ஓரத்திலேயே படர்ந்து விரிந்து வளர்ந்திருந்த புளியமரத்து நிழலில் மருது கயிற்றுக் கட்டிலைப் போட்டான்.

தோளில் ஆடிய சரிகை உத்தரியத்தை உதறி மீண்டும் போட்டுக்கொண்டு தன் நறுக்கு மீசையைத் தடவியபடி கட்டிலின்மீது கால் மேல் கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்த சின்னத்துரை கண்களைச் சுற்றிலும் ஓட்டினான்.

எங்கும் பசுமை பாய் விரித்தது போன்ற நஞ்சை நிலம். அதற்கு மறுபுறம் தெரிந்த தென்னந்தோப்பு. வாய்க்காலில் இன்னொரு பக்கம் தெரிந்த மாந்தோப்பு - என்று கண்களில் தோன்றிய அத்தனையும் அவனுக்குச் சொந்தமானதாக இருந்தன.

மங்களபுரத்து பெரியதனக்காரரின் ஏக வாரிசு அவன். லோகநாதன் இறந்து போனதும் அத்தனை சொத்துக்களும் அவனுக்குச் சொந்தமாகி விட்டதென்ற திமிரில் அவனது அடங்காப் பிடாரித்தனமும் ஒரு படி அதிகரித்து விட்டிருந்தது. கிராமத்து ஜனங்கள் அவனைக் கண்டு அச்சத்துடன் ஒதுங்கி நடந்தனர்.

"சின்னதுரையை கூப்பிடட்டுமா?" என்று தாய் பய முறுத்தி குழந்தைக்கு சோறு ஊட்டுமளவு அவன் ஊரில் பிரசித்தியடைந்திருந்தான்.

அவனுக்குத் தாளம் போட ஒரு கூட்டமும் ஊரில் இருந்தது. அவ்வப்போது நாய்க்கு எலும்புத் துண்டை வீசுவதுபோல அவன் தூக்கி எறிந்த காசைக் கண்களில் ஒத்திக் கொண்டு, ஏவிய வேலையை செய்து முடித்து விட்டு, அவனிடம் சரணாகதியாக வாழ்ந்தவர்கள் சிலர் இருந்தனர்.

அந்தத் திமிரில் பட்டுக்கரை வேட்டியும், மல் ஜிப்பாவும் அடர்ந்து தெரிந்த மார்பு உரோமத்தின் மேல் புரண்ட புலி நகம் தொங்கிய தங்கச் சங்கிலியுமாக நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு தெருவில் அட்டகாசமாக அவன் நடப்பது வழக்கம்.

பணமும் பதவியும் அவனது மாநிற முகத்திலே களையைக் கூட்டி விட்டிருக்கிறது. மழமழவென்று வழித்து விட்டுக் கொண்டிருந்த தாடையைத் தடவிக் கொண்டு அலையெனச் சரிந்த தனது கிராப்பு முடியை அடிக்கடி தொட்டுச் சீராக்கிக் கொண்டு, தான் மன்மதன் என்கிற நினைப்பில் வாய்க்கால் கரை ஓரம் தண்ணீர்க் குடத்துடன் நடக்கும் கிராமத்துப் பெண்களை அஞ்சாது ஊன்றிப் பார்ப்பான்.

"மைனர் சின்னத்துரை வரத்துக்குள்ளே போய் தண்ணி எடுத்துகிட்டு வந்துடு"-பருவப் பெண்களை அந்தக் கிராமத்துத் தாயார்கள் எச்சரிப்பது ஒரு வழக்கமாகி விட்டிருந்தது.

ஊரில் யாராவது அழகான பெண் அவன் கண்களில் தென்பட்டு விட்டால் அவளுக்குப் பிடித்தது ஆபத்து.

தனது கையாட்கள் மூலம் அந்தப் பெண்ணைப் பற்றிய விவரம் தெரிந்து கொண்டு அவளை அடையும் முயற்சிகளில் ஈடுபடத் தொடங்கி விடுவான்.

களத்து மேட்டில் வேலை செய்த அத்தனைப் பெண்களில்-இளமையும் கொஞ்சம் அழகுமாக இருந்த யாரும் அவனது பார்வையினின்று தப்பியதில்லை. பணத்தை வாரி இறைத்தான் - பயமுறுத்த வேண்டிய இடங்களில் அதையும் செய்தான்.

பயந்துகொண்டு இணங்கிய பெண்கள் சிலர் - பணத்துக்கு மயங்கி அவனுக்கு அடிமையானவர்கள் சிலர்.

வயது முப்பத்தைந்தை எட்டிவிட்ட போதிலும் அவன் தனது திருமணத்தைப் பற்றி தீவிரமாக நினைக்க வில்லை.

கல்யாணமானவனுக்கு மனைவி என்று ஒரு பெண் மட்டுந்தான் சொந்தம். தனிக்கட்டையாக இருந்த அவனுக்கோ அவன் பார்த்து ஆசைப்பட்ட அத்தனை பெண்களும் சீக்கிரம் சொந்தமாகி விடுவார்களே? எதற்கு இந்தக் கால்கட்டு என்று கல்யாணத்தை ஒரு பக்கம் ஒதுக்கி வைத்திருந்தான்.

"மந்திரியாரே நாட்டில் மழை பொழிகிறதா? கோவிலில் ஆறுகால பூஜைகள் நடக்கின்றனவா?" என்று நாடகத் தொடக்கத்தில் அரசன் கேட்பானே? அதுபோல "என்னப்பா மருது! ஊர் விவகாரமெல்லாம் எப்படி யிருக்கு?" என்று ஆரம்பித்தான் சின்னதுரை. அதற்குள் மருது ஒரு செவ்விள நிர் காயை சீவி கண்ணாடி டம்ளரில் இளநீரை ஊற்றி பவ்யமாகக் கொண்டு வந்து கொடுத்தான்.

களத்து மேட்டைச் சுற்றிலும் கண்களை ஓட்டியபடி இளநீரை உறிஞ்சிக் கொண்டிருந்தவன் பார்வை

சாலையோரமாக தான் நிறுத்திவிட்டு வந்திருந்த காரின் பக்கம் திரும்பியது.

அந்த ஊரிலேயே அவன் ஒருவன்தான் சொந்தமாகக் கார் வைத்துக்கொண்டு வாழ்கிறவன்-அந்தப் பெருமை முகத்திலே பொங்க... சூரிய ஒளியில் வெள்ளிப் பாளமாக ஒளி வீசிய வாய்க்கால் கரை பக்கம் திரும்பினான்.

அது யார் அது... பொண்ணு ஊருக்குப் புதிதுபோல இருக்கிறதே - இதுவரை அவன் பார்த்ததில்லையே?... நெஞ்சிலே ஏற்பட்டதொரு இன்பச் சிலிர்ப்புடன்... மீண்டும் நன்றாக உற்றுப் பார்த்தான். கைமடக்கிலே புத்தகங்களுடன் கஞ்சியில் மொடமொடத்த நீலவாயில் புடவையில் ஒரு நீலமலர் காற்றில் மிதப்பது போல மெல்ல நடந்து கிராமத்துக்குள் அவள் போவதைக் கண்டு வியப்படைந்தான்.

"மருது! அது யார். நான் இதுவரை பார்த்த தில்லையே?" கண்களைச் சிமிட்டினான்.

தொண்டையைச் செருமிக் கொண்டான் மருது. வாய்க்காலிலிருந்து மண் குடத்திலே நீரைச் சுமந்து கொண்டு களத்து மேட்டருகேயிருந்து அவனது வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்த மனைவி வீரம்மாளைப் பார்த்ததும் குற்ற உணர்வில் தவித்துப் போனான்.

கொஞ்ச நாளாக அவள் அவனது வம்பு தும்புகளுக்கு வாய்ப்பூட்டு போட்டிருந்தாள்.

"உன்னைத்தான் கேட்கிறேன். காதில் விழலையா?" நிமிர்ந்து உட்கார்ந்த சின்னதுரை அதட்டினான்.

எச்சிலை விழுங்கிக் கொண்டான் மருது. அந்தப் பெண்ணை பற்றிய விவரத்தை அவனுக்குச் சொல்ல மனம் கூசியது.

"நம்ப கிழக்குத் தெரு செந்தில் ஐயா இருக்கார் இல்லையா?"

"பக்கத்து டவுனிலே மளிகைக்கடை வச்சிருக்கானே அவனைத்தானே சொல்றே?"

"அவருக்கு ஒரு தங்கச்சி இருந்திச்சில்லையா?"

"ஆமாம் அவனோட அம்மா செத்துப் போனப்போ ஒரு சின்ன பொண்ணு இருந்திச்சி?"

"ஆமாங்க. பொண்ணு வளர்த்தியோ பிர்க்கங்காய் வளர்த்தியோன்னு சொல்வாங்க. அதே பொண்ணுதான் இது. அம்மா செத்துப் போனதும் தன்னந்தனியாகிட்ட செந்தில் வியாபாரத்தை கவனிச்சுகிட்டு தங்கச்சியையும் வளர்க்க ரொம்ப சிரமப்பட்டான். பட்டணத்திலே தன் ஒண்ணுவிட்ட மாமன் வீட்டிலே கொண்டு விட்டிருந்தான். அவருக்கு குழந்தை குட்டிகள் ஏதும் சிடையாது. பெத்த மகளைப் போல வளர்த்து படிக்க வச்சு ஆளாக்கினாங்க. போனமாசம் அந்த மாமன் செத்துப் போயிட்டார். அண்ணன்காரன் தன் தக்கச்சியை இட்டாந்துட்டான்."

"பட்டணத்திலே போய் இந்தப் பொண்ணு அப்படி என்ன படிச்சு கிழிச்சுட்டா."

"பத்தாவதுக்கு மேலே படிச்சு பாஸாச்சுதாம். டைப் அடிக்குமாம்.

"அடிசக்கை...இப்போ இவளை அண்ணன்காரன் வீட்டோட வச்சுகிட்டு ஊறுகாயா போடப் போறான்?"

"நல்ல இடம் வரும்வரை பக்கத்து டவுனிலே இருக்கிற மருத்துவமனையிலே வேலைக்கு அமர்த்தப் போகிறாராம். அங்கே ஒரு கிளார்க்கு வேலை காலியா இருக்குதாம்."

"உனக்கு ரொம்ப சங்கதி தெரிஞ்சிருக்கே மருது... பேஷ் பேஷ்.."

"என் பெண்ஜாதிக்கு அவங்க பக்கத்து வீட்டுக்காரி ரொம்பச் சிநேகிதம். அவ சொல்ல... என் வீட்டுக்காரி கேட்டு வந்து என்கிட்ட சொல்..."

"இப்போ என்கிட்ட சொன்னியாக்கும். பேர் என்னவாம்? அதைக் கேட்டிருப்பியே...?"

"தாரணின்னு பேர். ரொம்ப சாதுவான பெண். படிச்சிட்டோம்னு ராங்கி கிடையாது."

"பார்க்கக்கூட நல்லா இருக்கிறாளே."

"நம்ப தோட்டத்து கீரைத் தண்டுபோல தளதளன்னு இருக்கு... பருவத்தின் அழகு வேறே. அவளுடைய அத்தானைப்போல சிவப்பு நிறம். வேலைக்குப் போற இடத்திலே யாராவது நல்லா படிச்சவன் கொத்திட்டு போயிடுவான்னு என் பெண்ஜாதி கூட சொல்லிச்சு."

"மருது! இந்தப் பெண்ணை நமக்கு சரிப்படுத்திக் கொடுக்க உன்னால் முடியாதா?' கேட்கத் துடித்ததை விழுங்கிக் கொண்டான் சின்னதுரை. செந்தில் கொஞ்சம் வசதியானவன். பணத்திற்கு மசியாத இடம். பயமுறுத்தலுக்கும் செந்தில் அஞ்சாதவன். உண்மையைச் சொல்லப் போனால் ஊரில் அவன் ஒருவன்தான் சின்னதுரையை பற்றி அச்சப்படாதவன். அப்படிப்பட்ட தொரு இடத்தில் அவனுக்கு ஆசையை தூண்டிவிடுமளவு ஒரு பெண் வந்து விட்டிருக்கிறாளே?...

தன்னுள் பலவும் எண்ணியவனுக்கு அதற்குமேல் அங்கே உட்கார்ந்திருக்கப் பொறுமை இல்லை.

"நான் வரேன்" என்று சொல்லிவிட்டு வேகமாக கால் செருப்புகளைத் தினித்துக் கொண்டு களத்து

மேட்டிலிருந்து இறங்கினான். சடுதியில் காரைக் கிளப்பிக் கொண்டு விரைந்தான்.

தாரணி மௌனத்துடன் நடந்து போய்க் கொண்டிருந்தாள். பஸ் பிடித்து அன்று மாலை அவள் அடுத்த டவுனுக்குப் போயிருந்தாள். அண்ணன் கூடவர அவள் அந்தத் தனியார் மருத்துவமனைக்குத் தன் விண்ணப்பத்துடன் அதன் தலைவரைக் காணச் சென்றிருந்தாள்.

"உன் தங்கச்சியா இது" என்று முகமெல்லாம் சிரிப்புடன் கேட்டார் டாக்டர். மகிழ்ச்சியுடன் தலையை ஆட்டினான் செந்தில்.

"இங்கே ஒரு வேலை காலின்னு கேள்விப்பட்டு அழைச்சிட்டு வந்தேன். பட்டணத்திலே படிச்ச பொண்ணு" மேலே பேசாது அவர் முகத்தைப் பார்த்தான்.

சான்றிதழ்களைப் பார்வையிட்ட டாக்டருக்கு திருப்தியாக இருந்தது.

"அடுத்த மாதத் தொடக்கத்தில் வரச்சொல். வேலைபோட்டுத்தரேன். மாதம் முன்னூற்று ஐம்பதுதான் இப்ப தரமுடியும். காலை எட்டு மணியிலிருந்து மாலை ஐந்து மணி வரை வேலை. இடையே தேநீர் குடிக்க... சாப்பிடநேரம் தருவோம். இன்னும் ரெண்டு பெண்களும் ஒரு பையனும் வேலை பார்க்கிறாங்க" என்றார்.

செந்திலுக்கு மகிழ்ச்சி கட்டுக் கொள்ளவில்லை "நன்றி டாக்டர், நன்றி. எங்கே வேலை கிடைக்காம போயிடு மோன்னு பயந்து போயிருந்தேன்" என்று பற்கள் தெரிய கும்பிடு போட்டு விட்டு தங்கையுடன் வெளியே வந்தான். அந்த நற்செய்தியினைக் கொண்டாட அவன் தன் தங்கையை அருகிருந்த ஆனந்தா ஓட்டலுக்கு அழைத்துப் போனான்.

"குலோப்ஜான் இன்னும் ஒண்ணு சாப்பிடம்மா. மசாலா தோசை ஒண்ணு போதுமா? வேலை செய்யப் போற உடம்பிலே தெம்பு நிறையத் தேவை. எலி கொரிக்கிறாப்பல சாப்பிடக் கூடாது" என்று உபசரித்தான்.

தங்கையை வீட்டுக்குக் கூட்டி வந்து ஒரு வார காலம் கூட ஆகவில்லை. அதற்குள் தங்கை உபயோகத்திற்கு என்று ஒரு மேஜை நாற்காலி வாங்கிப் போட்டிருந்தான். சாமான் அறையை சரிசெய்து அதன்மீது புத்தம் புது பஞ்சு மெத்தை தலையணை வாங்கிப் போட்டு... தங்கைக்கு வசதிகள் செய்து கொடுத்திருந்தான்.

"நீ எதுக்கும்மா அடுப்பருகிலே போகணும்... சமைக்கவும் வீட்டைப் பாதுகாக்கவும் நம்ப முத்தாட்சி பெரியம்மாவை வரவழைக்கப் போகிறேன். அதுவரை மூலைக்கடை ஓட்டலிலிருந்து எடுப்புச் சாப்பாடு எடுத்துக்கலாம். பட்டணத்தைப் போல காஸ் அடுப்பு கிடையாதே, மண் எண்ணை ஸ்டவ்வோட நான் பாடுபடறது போதும்" என்று தங்கையை அன்போடு கடிந்து கொண்டான் செந்தில்.

தங்கையை ஒரு நல்ல இடத்தில் கட்டிக் கொடுத்த பிறகுதான் தன் வாழ்வைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று தனிக்கட்டையாக வாழ்ந்தவன். தங்கை-தங்கை என்று தன் உயிரையே அவள் மீது வைத்துக்கொண்டிருந்த பாசமலர் அண்ணன் அவன்.

"பட்டணம் போல இல்லையம்மா நம்ப மங்களபுரம் ரொம்ப கெட்டு கிடக்கு. அதனாலே நீ உடனே பஸ் பிடிச்சு ஊருக்குப் போய் சேர். பஸ்நிலையத்திலிருந்து ஊருக்குள்ளே நடக்கிற பாதையோரம் இப்போ நிறைய மனுஷப் புழக்கம் இருக்கும். கொஞ்ச நேரம் போனா சாலை வெரிச்சுக் கிடக்கும்" என்று கூறி தங்கைக்கு ஒரு பொட்டலம் ஒமப் பொடியும் ஜிலேபியும் வாங்கிக் கொடுத்து அவள் கேட்ட நோட்டு புத்தகங்கள்-கதைப் புத்தகங்களையும் வாங்கித் தந்து - ஒரு முழம் கதம்பத்தை வாங்கித் தந்து தலையில் சூடிக் கொள்ளச் சொல்லி, பஸ் நிலையம் வந்து நூறு பத்திரம் சொல்லி அனுப்பி யிருந்தான்.

தாரணி மிகவும் அடக்கமான பெண். அண்ணன் பேச்சுக்கு ரொம்பவும் மதிப்புக் கொடுப்பவள். அவளது படிப்புக்காக மாதந்தோறும் மறக்காது அவன் பணம் அனுப்பி வந்தான். ஆறு மாதத்திற்கு ஒரு முறையாவது அவசர நடையாகப் பட்டணம் வருவான். அவளுக்கு வேண்டிய துணி, பவுடர், சோப்பு என்று காசை கணக்குப் பாராது செலவழித்து விட்டு தாரணி இந்த வாட்டி இவ்வளவுதான் வாங்கித் தர முடிஞ்சது. பொங்கலுக்கு நீ கேட்ட அமெரிக்கன் ஜார்ஜெட் சேலை வாங்கித் தந்துடறேன்" என்று கனிவுடன் சொல்லி விடை பெறுவான்."

"பரவாயில்லை அண்ணா! இந்தக் கைத்தறி சேலை போதும்" என்றால் விடமாட்டான்.

"தின்கிற வயசிலே நல்லா நாக்குக்கு ருசியா உடம்புக்குத் தெம்புதர உணவைத் திங்கணும். என்னைப் பார், இந்த வயசிலே நான் பதினெட்டு வயசுக் காரனாட்டம் ஆட்டம் போட முடியுமா?"

காலையில் எழுந்து கடையைத் திறக்க ஓடி - கண்ட நேரத்திற்கு கிடைத்ததைச் சாப்பிட்டு - ஓய்வு ஒழிச்சல் என்று நேரமில்லாது வீட்டையும் பின்பக்கத்துக் காய்கறி தோட்டத்தையும் கவனித்துக் கொண்டு தங்கைக்காக வாழ்ந்த அண்ணன் முப்பது வயதிற்குள்ளே முகம் சுருங்கி தலையில் லேசாக நரை ஓடத் தொடங்கி, கிழடு தட்டியிருந்தான்.

''ஊர் கொஞ்ச தூரம் - நல்ல வெய்யில் மறுக்காம ஏறிக்கோங்க'' என்று காரை மிக அருகில் நகர்த்தியவனை முறைத்துப் பார்த்தாள்.

''தேவையில்லைனா புரியலையா? ஏன் ஸார் இப்படி வழியிலே போற பெண்களோட வம்பு பண்ணிகிட்டு?''... மிகவும் துணிச்சலாகக் கேட்டாள்.

இதுவரை அவனை அப்படி யாரும் முகத்திலடித்தது போல பேசியதில்லை. அவனைக் கண்டு பெண்கள் நடுங்கினார்களே ஒழிய தலையை நிமிர்த்தி அசட்டையாகப் பார்த்து பதில் சொன்னவர்களே கிடையாது. ஆத்திரத்தில் முகம் சிவந்து போனான். ஒரு சின்னஞ்சிறு குட்டி அவனை துச்சமாக தூசிபோல் தூக்கி எறிகிறாளே?

செந்திலின் தங்கையாக மட்டும் அவன் இல்லாதிருந்தால்... சரசரவென்று கையைப்பற்றி காரில் இழுத்துப்போட்டுக்கொண்டு நேரே வீட்டுக்குக் கடத்திக் கொண்டு போய்விடுவான்.

''சின்னதுரை! இந்த வருசமாவது ஒரு நல்ல பெண்ணைப் பார்த்து கட்டிக்கோப்பா. கும்பகோணத்து மாமன் பச்சைக்கிளிபோல பெண்ணை வச்சுகிட்டு நடையா நடக்கிறாரே''- இப்படி முணுமுணுத்து அவனது கோபத்தைக் கிளறிக் கொண்டிருந்த அம்மாவும் சமீபத்தில் காலமாகி விட்டாள். வீட்டிலே தவசுப் பிள்ளையையும் தோட்டக்காரனையும் தவிர பெண் வாடையே கிடையாது. அவனது அந்தரங்க லீலைகளுக்கு வீடே ஒரு கேளிக்கை ஸ்தலமாக மாறி விட்டிருந்தது.

வடக்குத் தெருவின் ஓரத்தில் கிராமத்தின் எல்லை யோரமாகப் படர்ந்து கிடந்த மரங்களின் உள்ளே அமைந்த காரைக் கட்டடம் அது. கொலை நடந்தாலும் கேட்பாரற்ற தொரு தனி வீடு.

''செந்தில்! தங்கச்சிக்கு இப்பத்தான் பதினெட்டு வயதாகப் போகுது. அதுக்குக் கல்யாணம் கட்டி தந்த பிறகுதான் எனக்குக் கல்யாணம்னு நீ இப்படி தனியா அவதிப்படறே? காலா காலத்திலே ஒரு பெண்ணைக் கட்டிக் கொண்டு வீடும் விளக்குமாக வாழறதை விட்டுட்டு.''

பக்கத்து வீட்டுப் பெரியவர் எத்தனையோ தடவை அவனது ஆசைக்கு தூபம் போட்டுப் பார்த்தார்.

அவன் ஒரே பிடிவாதமாக இருந்தான். மனைவியாக வரப் போகிறவள் தாரணியிடம் அன்பாக இருப்பாள் என்பதற்கு என்ன உத்திரவாதம்? அண்ணன் தங்கை என்ற அவர்களது பாசத்திலே அவள் பாஷாணத்தைக் கலந்து விட்டால்? வேண்டாம்! தாரணி புருஷன் வீட்டுக்குப் போன பின்தான் தனக்குக் கல்யாணம் என்று தங்கைக்காக தியாகம் செய்து கொண்டிருந்தான் அண்ணன்.

'நதியில் விளையாடி - கொடியில் தலைசீவி' என்ற அடிகள் ரேடியோவிலிருந்து ஒலிப்பதை தூரத்தே கேட்டு விட்டாலும் செந்தில் அண்ணனை நினைத்து கண்கலங்கி மனம் நெகிழ்ந்து விடுவாள் தங்கை தாரணி. அண்ணன் வாங்கித் தந்த புத்தகங்களை மார்போடு அணைத்துக் கொண்டு சுள்ளென்று எரித்த வெய்யிலை நிலவாக நினைத்து மெல்ல நடந்து கொண்டிருந்தவள் அருகில் சர் என்று வந்து கார் நின்றதும் திடுக்கிட்டுப் போனாள்.

''ஊருக்குள்ளாரதானே போறீங்க... காரில் ஏறிக் கோங்க. உங்க வீட்டிலே கொண்டு விட்டுட்டு போறேன்'' காலோடு தலைவரை ஊன்றிப் பார்த்த சின்னதுரையின் கண்களில் தெரிந்த வியப்பைக் கண்டு அரண்டு போனாள்.

''தாங்யூ ஸார்... நான் நடந்துபோக ஆசைப் படறேன்'' என்று கூறிவிட்டு மேலே நடக்கத் தொடங்கினாள் தாரணி.

கேட்பானேன். சின்னதுரைக்கு மிகவும் சௌகர்ய மாக அமைந்து விட்டிருந்தது.

அதைத் தவிர மாந்தோப்புக்குள் அவனது முப்பாட்டன் காலத்தில் கலெக்டர் துரை வந்து இறங்கி வசதியாக தூங்கிவிட்டுப்போகக் கட்டி வைத்த மாடி வீடு இப்போது மூடிக் கிடந்ததென்றாலும் அப்போதைக்கப் போது அவனுக்கு உபயோகமாக இருந்த இடம்.

அதற்கு சற்று தொலைவில்தான் குலதெய்வம் துர்க்கையம்மன் கோயிலும் தூர் எடுக்காது விட்டுப் போயிருந்த பாழும் கிணறும் இருந்தன. துர்க்கைக்கு செவ்வரளி பூப்போட்டு தொடர்ந்து ஏழு வாரம் வணங்கினால் கண்யாணம் கூடிவரும் என்ற நம்பிக்கை கிராமத்துப் பெண்களுக்கு . சில சமயம் மாந்தோப்பு வீட்டு ஜன்னல் வழியே துர்க்கை கோயிலுக்கு வருகிற பெண்களை நோட்டம் விடுவதுண்டு அவன்.

இதுவரை அவன் தொடர்பு கொண்ட எந்தப் பெண்ணும் இந்தத் தாரணிக்கு ஈடாக இருக்க மாட்டார்கள் போலிருக்கே?

மருது சொன்னது அத்தனையும் உண்மை.

தோட்டத்துக் கிரைத் தண்டைப்போல தளதள வென்று... எண்ணிக் கொண்டே வண்டியை ஓட்டிக் கொண்டு வீட்டையடைந்தான்.

காரை நிறுத்தி வைத்து பூட்டிவிட்டு உள்ளே சென்றவனது நெஞ்சு தாரணியை நினைத்து தவிப்புடன் தாளமிட்டது.

உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

செந்திலுக்கும் பயப்படப் போவதில்லை-அவனது பாட்டனுக்கும் பயப்படப் போவதில்லை.

அந்தத் தாரணியை எப்படியாவது அடைந்தே தீர வேண்டும்.

திருமணம் செய்து கொள்ளப் பெண் கேட்டால்?

வெட்கம். ஊரிலே பெருத்த புள்ளியான அவன் கேவலம் ஒரு சின்ன மளிகைக் கடைக்காரன் வீடு ஏறி பெண் கேட்பதா?

வேறு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. அவன் மனம் வைத்துத் தோல்வி அடைந்தான் என்று ஒரு காரியத்தையும் குறிப்பிட முடியாதே!

கருவேப்பிலை இஞ்சி போட்டு புளித்த மோரை குளிர்சாதனப் பெட்டியிலிருந்து எடுத்து, வெள்ளி தம்ளரில் ஊற்றி ஐஸ் துண்டுகள் போட்டுக்கொண்டு வந்து தவிசுப்பிள்ளை பணிவுடன் வைத்தபோது அவன் அந்தப் பெரிய ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்தான்.

தாரணிமேல் கொண்ட ஆசை அதைவிட வேகமாக அவன் மனதில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது.

கயிற்றுக் கட்டிலின்மீது உட்கார்ந்துகொண்டு ஈர்க்குச்சியால் பல்லை நோண்டிக் கொண்டிருந்த மருதுவின் காதில் உள்ளே மனைவி வீரம்மா முணு முணுப்பது கேட்டது. படக் படக்கென்று சுள்ளிகளை அவள் ஒடித்து அடுப்பிற்குள் வைத்த வேகத்திலிருந்து அவள் கோபமாயிருக்கிறாள் என்று புரிந்து கொண்டான்.

"வீரம்மா! வெத்திலைப் பெட்டியை எடு" என்று குரல் கொடுத்தான்.

"இன்னும் கொஞ்ச நேரத்திலே சோத்தைப் பொங்கிடுவேன். அதற்குள்ளாக வெத்திலை எதுக்காம்" என்று கேட்டபடி முந்தானையை வரிந்து கட்டிக்கொண்டு வெளியில் வந்தாள்.

"ஆமாம் அந்த மனுசன்தான் கேக்கிறான்னா நீ எல்லா சங்கதியையும் பிட்டுபிட்டு வைக்கணுமா?" அதட்டினாள்.

"நான் சொல்லாட்டா அவரு வேற வழியா தெரிஞ்சுக்க மாட்டாரா?"

"நமக்கேன் அந்தப் பாவம்-அந்தப் பொண்ணு மதியொளிக்கு என்ன கதி ஏற்பட்டுதுன்னு மறந்து போச்சா?"

கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டான். கடந்துபோன அந்த சம்பவத்தின் நினைவு சம்மட்டியாக மண்டையிலடித்தது.

2

மதியொளி அந்த ஊரிலிருந்த சாதாரண விவசாயியின் மகள். பக்கத்து டவுனில் பத்தாவது வரை படித்திருந்தாள். மகளை நர்ஸ் வேலைக்குப் படிக்க வைக்க ஆசைப்பட்டுக் கொண்டிருந்தான் தகப்பன். அந்தச் சமயம் அவள் சின்னதுரையின் கண்களில் பட்டுவிட்டாள்.

பெண் மா நிறந்தான். பதினெட்டு வயதைத் தாண்டாத பருவம். இளமையின் பூரிப்பில் பார்க்க நன்றாகத் தானிருந்தாள்.

சின்னதுரை தான் குறி வைத்த பெண்களை பலவித தந்திரங்களை உபயோகித்து கைப்பொம்மையாக்கிக் கொள்வது வழக்கம்.

மதியொளியை அவன் காதலிப்பதாக போக்குக் காட்டி மயக்கி விட்டிருந்தான். பெரியதனக்காரரின் மகன் தன்னை மணக்க விரும்புகிறான் என்ற ரகசியத்தை தன்

மனத்திற்குள் வைத்துக்கொண்டு அவள் சின்னதுரையை மாந்தோப்பு வீட்டிலே யாருக்கும் தெரியாது சந்தித்தாள்.

"அந்தப் பெண்ணுக்குக் கொஞ்சம் எடுத்துச்சொல்லு அய்யா... அந்த மனுஷனை நம்பினால் நாசமாகி விடு வாள்னு சொல்லு! என்று வீரம்மாள் தன் கணவனிடம் பலமுறை கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

"அவர் சங்கதியிலே குறுக்கே போனா நம்ப கழுத்து போயிடும்.. நீயும் வாயை மூடிட்டிரு. படிச்ச பொண்ணுக்கு அறிவு இருக்க வேண்டாமா?"- மருது மறுத்து விட்டான்.

முடிவு... இரண்டு மாத கர்ப்பம் என்பதை உணர்ந்து கொண்ட மதிஒளி சின்னதுரையின் காலில் விழுந்து வேண்டியும் அவன் இரங்கவில்லை.

"என்னைப்போல உனக்கு எத்தனைபேர் சினேகிதமோ? நான் கட்டிக்கப்போற பெண் பத்தினியாக இருக்கணும்" என்று ஒரே நொடியில் உதறிவிட்டான்.

தகப்பனுக்குத் தெரிந்தால் வெட்டருவாளை எடுத்துக் கொண்டு வந்து விடுவான். ஊராருக்குத் தெரிந்தால் அழியாத பழி என்று பலவும் எண்ணி மதிஒளி தன் முடிவைத் தூக்குக் கயிற்றில் தேடிக் கொண்டாள்.

ஆனாலும் அவள்மேல் அழியாத பழி ஏற்பட்டத்தான் செய்தது.

"பட்டணத்திலே யாரோடேயோ சினேகமாம். அந்தச் சிநேகிதன் இங்கேயும் வந்து பார்க்கிற பழக்கமாம். கல்யாணமாகாம கர்ப்பம் ஆயிட்டதாலே மானத்துக்கு அஞ்சி தூக்குப் போட்டுக்கிட்டா. அந்தப் பட்டணத்துக் காரன் கம்பி நீட்டிட்டான்" என்று ஊரார் அவளை நிந்தித்ததைத் தாங்காது அவள் தகப்பனும் மூட்டைப் பூச்சி மருந்தைத் தின்று அமைதியைத் தேடிக்கொண்டு விட்டான்.

மதிஒளியின் குடும்பம் சின்னதுரையால் சில மாதங்களில் சீரழிந்து போன ரகசியம் மருதுவுக்கும் இன்னும் சில பேருக்கும் மட்டும்தான் தெரியும். சின்னதுரை பண்ணையின் ஆட்கள் மூச்சுவிடவில்லை. அதற்குப் பின்னும் அவன் சும்மா இருக்கவில்லை. பெண்கள் பள்ளிக்கூடத்திற்கு ஆசிரியையாக வேலை பார்க்க வந்த அமிர்தாவிடம் தன் வேலையை ஆரம்பித்தான். பண்ணைக் கொல்லையில் காய்த்த காய்களிலிருந்து மூன்று வாழை ரஸ்தாளி சீப்புகளும், செம்பு நிறையக் கறந்த பசும்பாலும் அமிர்தாவுக்கு அடிக்கடி அனுப்பி வைத்தான். "எங்க கிராமத்து பெண் குழந்தைகளுக்கு பாடம் கற்றுக் கொடுக்க பட்டணத்திலிருந்து வந்திருக்கிங்க. உங்க வசதிகளை நாங்க கவனிக்காம பின் யார்தான் கவனிப்பாங்க?" - சாமர்த்தியமாகப் பதிலளித்தான்.

மாங்காய், தேங்காய் என்று பொருள்களை அனுப்பி விட்டு பின்னர் அந்தி நேரங்களில் அவள் தங்கியிருந்த வீட்டுக்கு வரத் தொடங்கியது-வாய்க்கால் துறையில் அந்த சங்கதியைப் பெண்கள் கிசுகிசுக்க ஆரம்பித்ததைக் கேட்டு கலவரமடைந்த அமிர்தா தன் கிழத்தாயாரோடு பட்டணம் புறப்பட்டு போனவள் திரும்பவில்லை. அந்த வேலைக்கு முழுக்குப் போட்டு விட்டதால் அவள் பிழைத்தாள்.

அதற்குப் பிறகு அவன் தாயார் நோயாக இருந்த போது பணிவிடை செய்யவந்த நர்ஸ் லோசனி... மூன்றாவது நாளே சொல்லாமல் கொள்ளாமல் ஊரைவிட்டு ஓடி விட்டாள்.

என்ன நடந்தது? ஏன் மறைந்து போனாள் என்பது பலருக்குத் தெரியாத ஒரு மர்மம். ஆனால் மருதுக்கு மட்டும் தெரியும்.

இரவு நேரத்திலே தூக்க மருந்தின் போதையில் தாயார் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருக்கும்போது... ஒரு நாள் இரவு பக்கத்திலே தரைமீது படுத்துக் கிடந்த நர்ஸ் லோசனியை மெல்லத் தொட்டு எழுப்பினான்.

அலறியடித்துக் கொண்டு எழுந்தவள்... அவனது பச்சைச் சிரிப்பைக் கண்டு பயந்துபோய் சத்தம் போட்டு விட்டாள்.

அப்போது அந்த வீட்டில் சமையல் வேலை செய்து வந்த ஏகாம்பரம் அவனது அப்பா காலத்திலிருந்து வேலை பார்க்கும் நாணயமான ஊழியர். நர்ஸ்லோசனி அங்கு பணி விடை செய்ய அமர்த்தப்பட்ட நாளிலிருந்து அவருக்கு இரவில் தூக்கம் கிடையாது.

"நெருப்பும் பஞ்சும்போல கல்யாணமாகாத கட்டைப் பிரமச்சாரியான எஜமான் இருக்கும் வீட்டிலே... சின்னஞ் சிறு பெண்ணை நர்ஸ்வேலைக்கு அனுப்பி விட்டிருக்கிறாரே இந்த டாக்டர். அவருக்கு மண்டையில் மசாலாவா இருக்கு?" உள்ளூர வெகுண்டு கொண்டிருந்தார்.

லோசனியின் அலறலைக் கேட்டு மேல் துண்டை தோளில் போட்டுக்கொள்ள மறந்து கையில் பிடித்தபடி உள்ளே ஓடி வந்தார். தாடை இறுகிப் போனான் கோபத்தில் சின்னதுரை.

"என்னம்மா என்ன நடந்தது?" ஏகாம்பரம் மிகவும் அனுதாபத்துடன் கேட்டது அவனது ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டது.

"தூக்கத்திலே என்னவோ கெட்ட கனவுபோல இருக்கு. ஏதோ ஒன்னு கூச்சல் போட நான் மாடியிலிருந்து ஓடி வந்தேன் - தங்களையே பார்த்துக்கொள்ளத் தெரியாத வங்க இதுமாதிரி வேலைக்கு ஏன் வர்ராங்க?"

படபடவென்று கூறிவிட்டு மாடிப்பக்கம் போய்விட்டான் சின்னதுரை.

லோசனி ஏன் விசும்பி அழுதாள் என்பதை ஏகாம்பரம் புரிந்து கொண்டுவிட்டார். மனக்கிலேசம் தரும் சங்கதி. தூண்டித் துருவிக் கேட்பது நியாயமல்ல என்று அவர் அந்தப் பெண்ணுக்கு அன்று இரவு முழுவதும் காவலாக அப்படியே உட்கார்ந்திருந்தார்.

மறுநாள் காலை. தன் உழைப்புக்கு சம்பளம்கூட வாங்கிக் கொள்ளாது லோசனி புறப்பட்டு விட்டாள்.

தனது முயற்சியின் குறுக்கே வந்து இடையூறு செய்ததற்காக ஏகாம்பரம் அந்த மாத முடிவிலே வேலையினின்று நீக்கப்பட்டார்.

எஜமானிடம் நெருங்கிப் பழகியிருந்த மருதுவுக்கு இவையெல்லாம் நன்றாகத் தெரியும்.

எந்தெந்தப் பெண்கள் - எந்தெந்தச் சமயம் எப்படி நடந்து கொண்டார்கள் என்கிற விவரம் அவனுக்கு நன்றாகவே தெரிந்திருந்தது.

"நான் கேட்டுகிட்டுதான் இருந்தேன். நீ மடமடன்னு அந்தப் பெண்ணைப் பத்தி விவரமா சொல்லிக் கிட்டிருந்தே. இது உனக்கே நியாயமா? நம்ப கடைக்குட்டி காவேரிக்கு விஷக் காய்ச்சல் வந்தப்போ உங்க யஜமான் ஊரிலே இல்லை. மருந்து வாங்க பையிலே காசில்லை. அப்போ ஓடிப்போய் செந்தில் அய்யாகிட்டே கேட்டியே... மறு பேச்சில்லாம அம்பது ரூபாயை தூக்கித் தந்தாரே மகராஜன், அந்த விவரம் கூட இல்லாம அவர் தங்கச்சியைப் பத்தி... இந்த ராட்சசன்கிட்டே அளக்கிறியே. உனக்கு நல்லா இருக்கா?" - சோத்தைக் கிளறிய ஆப்பையை கையில் பிடித்தபடி கோபத்துடன் கேட்டாள் வீரம்மா.

"அதெல்லாம் பத்திதான் நினைக்கிட்டு மனசு தடுமாறிக்கிட்டிருக்கேனே! நீ வேறே சொல்லிக் காட்டணுமா?"

"உனக்குத் தெரிஞ்சு அந்த மனுஷன் செய்திருக்கிற அக்கிரமங்கள் எத்தனையோ, உனக்குத்தெரியாது செய்தது இன்னும் எத்தனையோ? பாவி எந்த வேளையிலே வயிறு திறந்தாளோ, ஒரு பிசாசை பெத்துப் போட்டுவிட்டு போயிருக்கா. பிசாசைக்கூட மந்திரவாதியை வச்சு ஒட்டி விடலாம். உங்க யஜமானனை எந்த மந்திரவாதியும் கட்டுப்படுத்த முடியாதய்யா..."

"உரக்கக் கத்தாதே - யார் காதிலேயும் பட்டா ஆபத்து."

"இப்படிப் பயந்து பயந்து இவரு அளக்கிற சோத்தை திங்கிறதைவிட பட்டினி கிடக்கலாம். செந்தில் அய்யா தங்கச்சிக்கு ஏதாச்சும் நடந்ததுன்னா நான் பொல்லாத வளாயிடுவேன்! சொல்லிட்டேன்."

"அட! நான் ஏதோ கேட்டதுக்கு பதில் சொன்னேன். இந்தத் தூது நடக்கிற சமாசாரமெல்லாம் நான் வச்சுக்க மாட்டேன். சமயத்துக்கு செந்தில் அய்யாகிட்டே போய் கோள் மூட்டிவிடுவேன்."

"அவருக்கு ஏதாச்சும் கொஞ்சம் சந்தேகம் வந்திச்சோ குடலைப் புடுங்கி மாலை போட்டுடுவார். உங்க யஜமான் எல்லார்கிட்டேயும் தன் சின்ன புத்தியைக் காட்ட முடியாது. ஒண்ணு தெரிஞ்சுக்கோ நமக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருக்கு. ஊர்ப் பெண்கள் பாவத்தை கொட்டிகிட்டே நம் பாவத்தை கொட்டிக்க எவனாச்சும் வருவான்." சவால் விட்டுட்டு குடிசைக்குள் சென்றாள்.

"வாய்க்குள் கூட்டிக் கொண்டிருந்த எச்சிலை தூரத் துப்பினான் மருது.

அவனுக்கு தன் யஜமானனது போக்கு வரவர பிடிக்க வில்லை. காலாகாலத்தில் ஒரு கல்யாணத்தை செய்து கொண்டு எல்லோரையும் போல ஏன் இவர் சௌரியமாக வாழக்கூடாது?...

"ஊஹூம்! இனி அந்தப் பெண் தாரணியைப்பத்தி எது கேட்டாலும் தெரியாதுன்னுதான் சொல்லப் போறேன் பாவம்! தாயில்லாப் பெண். அண்ணன் அது மேலே உசிரையே வச்சுக்கிட்டிருக்கார், நமக்கேன் வம்பு?" பலவிதமாக எண்ணி சஞ்சலத்தில் தவித்தான்.

3

அன்று இரவு கடையை மூடிவிட்டு வந்த செந்தில் காலையில்தான் கடைத் தெரு ஹோட்டலில் விட்டுப் போயிருந்த டிபன் செட்டில் சூடான உணவுடன் வேகமாக வீட்டுக்குத் திரும்பினான்.

"சமையல் மேடை மேலே சாக்குக்குள்ளே பொதிஞ்சு வச்சிருக்கிற இலையை எடுத்து கூடத்திலே போட்டு தண்ணி டம்ளரை வையம்மா - சாப்பாடு ஆறறதுக்கு முந்தி ஒரு செம்பு தண்ணியை ஊத்தி, குளிச்சுட்டு வந்துடறேன்" பின் பக்கம் அவன் விரைந்தான்.

லுங்கி பனியனில் நெற்றி நிறைய விபூதியுடன் அவன் இலைக்கு முன் உட்கார்ந்து டிபன் செட்டைத் திறந்தான்.

தானே பொரியல், கூட்டு முதலியவற்றை தங்கையின் இலையில் எடுத்து வைத்தான்.

"அட உனக்குப் பிடிச்ச வெங்காய சாம்பார். சூடா கொதிச்சுகிட்டு இருக்கு... நெய் ஊத்தறேன். பிசைஞ்சு

சாப்பிடு. என்ன ஒரு மாதிரி இருக்கே? உடம்புக்கு என்ன" சட்டென்று இடது கையை நீட்டி அவளது நெற்றியைத் தொட்டுப் பார்த்தான்.

"ஒண்ணுமில்லை அண்ணா, இன்னிக்கு வரும் வழியிலே ஒரு சங்கதி நடந்தது பயந்துட்டேன்."

"என்னம்மா நடந்தது?" - அண்ணன் பதறிப் போனான்.

"பஸ் நிலையத்திலிருந்து நான் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தப்போ ஒரு பியட்கார் என் மேலே இடிச்சு தள்ராப்பலே போச்சு, நான் ஒதுங்கிப் போயிட்டேன்."

சோற்றைப் பிசைந்து வாயில் போட கையைத் தூக்கியவன் - தொப்பென்று அதை இலைமீது போட்டான். கோபத்திலே அவன் கொந்தளித்துப் போனான்.

"இந்த ஊரில் கார் வச்சிருக்கிற பய ஒரே ஒருவன் தான்-சின்னதுரைன்னு பேர் - பெரியதனக்காரர் மகன்-அவர் போன பிறகு அவனுடைய ஆட்டம்பாட்டம் ரொம்பவும் அதிகமாயிடுச்சு. அவன் காரை நிறுத்தி ஏதாச்சும் கன்னா பின்னான்னு பேசினானா?"

அண்ணன் முகத்திலே தெரிந்த கோபமும்-குரலில் தொனித்த காரமும் அவளை எச்சரித்தன.

நாள் முழுவதும் மாடாக உழைத்துவிட்டு வீடு வந்து ஒரு வாய் சோற்றை அள்ளிப் போடும் சமயத்தில் அவள் அதைப்பற்றி பேசியிருக்கக் கூடாது. சின்னதுரை காரில் தன்னை ஏறிக்கொள்ளச் சொல்லி வற்புறுத்தியதைச் சொன்னால் பாவம் அண்ணா சாப்பிடாது எழுந்து விடுவார். ஒரு சமயம் ஆத்திரத்தை அடக்கமாட்டாது அந்த சின்னதுரையிடம் சண்டை போடக் கிளம்பி விட்டால்?

ஒரு நிமிடத்தில் பலவும் எண்ணியவள், லேசாக முறுவலித்தாள்.

"அவன் யார்னு எனக்குத் தெரியாது-நான் யார்னு அவனுக்குத் தெரியாது. அவன் என்கிட்டேஎதுவும் பேசலே. ஆனா நான்தான் ரொம்ப பயந்துட்டேன். ஒரு கணம் தப்பியிருந்தா மண்டை உடைஞ்சிருக்குமேன்னு நடுங்கிப் போயிட்டேன்."

முத்தாச்சி பெரியம்மா புதன்கிழமை வர்றதாகக் கடைக்கு கடுதாசி போட்டிருக்காங்க. இன்னும் நாலு நாள் நீ அவங்க இல்லாம வீட்டிலே தனியா இருக்கப்போறே... கதவை யார் தட்டினாலும் விசாரிச்சுகிட்டு திற. அடுத்த மாசம் வேலைக்குப் போகப் போறே. காலையிலே என்னோடவே கிளம்பிடு. சாயங்காலம் வீடு வரும்போது கொடிக்கால் பக்கம் நிறைய ஆட்கள் வெத்திலை கிள்ளிக்கிட்டிருப்பாங்க... காலையிலே மனுஷப் புழக்கம் இருக்கும்... அப்போ நீ தைர்யமா நடக்கலாம். யாரும் இல்லாதபோது நீ தெருவிலோ வாய்க்கால் கரை ஓரமோ நடக்காதே. ஊர் கெட்டுக் கிடக்கம்மா" கூறி விட்டு அண்ணன் சாப்பிடத் தொடங்கினான்.

"ரசத்தை நல்லா ஊத்தி சாப்பிடம்மா. இந்தப் பயமே உனக்குக் காய்ச்சல் கொடுத்திடும் போலிருக்கே" என்றான் பரிவுடன். பாத்திரங்களைக் கழுவி அவள் வைக்குமுன் கட்டிலின்மீது படுக்கையை விரித்துத் தட்டிப் போட்டான்.

"தாரணி! நீ ரொம்ப பயந்திருக்கே, தலைவலிக்கு உனக்கு போனவாரம் டாக்டர் கொடுத்த மாத்திரை இருக்கும். அதைக் கொடுக்கிறேன். ஒரு வாய்த் தண்ணியோட முழுங்கு - நல்லா தூக்கம் வரும்" என்று உபசரித்தான்.

"நல்ல வேளை சின்னதுரை தன் காரில் ஏறச் சொல்லி வற்புறுத்தியதைச் சொல்லவில்லை" என்று எண்ணியபடி ஆழ்ந்து உறங்கிப் போனாள் தாரணி.

மறுநாள் காலை செந்தில் அவளுக்கும் தனக்கும் காப்பியும் தோசையும் ஹோட்டலிலிருந்து வாங்கி வந்தான். பகல் நேரத்திற்குச் சாப்பிட ஒரு இட்டலிப் பொட்டலமும் அவளுக்கு வாங்கிவந்து சமையல் மேடைமேல் வைத்தான்.

"நீ எதுக்கும் வெளியே போக வேணாம். சட்டியிலே மோர் இருக்கு. பகலுக்கு இட்டலியும் மோரும் சாப்பிடு. நான் இல்லாதபோது கதவைத் தாள் போட்டுகிட்டு யாருக்கும் திறக்காதே. உள்ளேயே பத்திரமா இரு. நாலு நாள் பொறுத்துக்கோ. முத்தாச்சி பெரியம்மா புதன் கிழமை வந்துடறாங்க. அவங்க விதவிதமா சமைச்சு போடறதை நீ சாப்பிட்டா இரண்டு மடங்காய் போயிடுவே" அண்ணன் வேடிக்கையாகச் சொன்னான்.

"வேணடாம் அண்ணா. உடம்பை ஊதவச்சுக்க எனக்குப் பிரியமில்லை."

"அதுவும் சரிதான். கல்யாணத்துக்கு நிக்கிற பொண்ணு நீ. கொடி போலத்தான் இருக்கணும். முத்தாட்சி பெரியம்மாகிட்ட நல்லா சமைக்கக் கத்துக்கோ. அடுத்த மாதந்தானே வேலைக்குப் போகப் போறே. அதற்குள்ளே ஒரு நல்லவன் வந்திட்டா நான் உன் கல்யாணத்தை முடிச்சுடுவேன்."

"உங்களுக்கு நான் ரொம்ப பாரமாகிட்டேனா அண்ணா."

"அது இல்லேம்மா! என்றைக்காவது ஒருநாள் என்னை விட்டுப் பிரிஞ்சு நீ உன் கணவன் வீட்டுக்குப் போகத்தானே வேணும்!"

"படிப்புக்காக பட்டணத்திலே இருந்ததையே என்னால் தாங்க முடியவில்லை... கல்யாணம் என்கிறது ஒரு நீண்ட பிரிவாச்சே அண்ணா - அதை என்னால் தாங்கிக்க முடியுமா? சில சமயம் நான் நினைச்சுகிற துண்டு... மரணம் என்கிறது திரும்ப முடியாத பிரிவாச்சே..."

"தாரணி கடைக்குக் கிளம்பிகிட்டிருக்கேன். கலவர மடையறாப்பலே இதெல்லாம் பேசாதே. கணவனோட நீண்ட காலம் வாழ வேண்டிய" என்று செல்லமாக அதட்டிவிட்டுப் புறப்பட்டான்.

கதவை அடைத்துக்கொண்டு அவள் உள்ளே போய் விட்டாள். வீட்டைப் பெருக்கி சுத்தம் செய்தாள். அலமாரியில் மெருகு குறைந்து தூசிபடிய அடுக்கி வைத்திருந்த பாத்திரங்களை எடுத்துப்போட்டு ஒரு மூச்சு தேய்த்துக் கழுவித் துடைத்து வைத்தாள். அண்ணனது துணிகளையும் தன் துணிகளையும் குளியலறைக் குள்ளேயே தோய்த்து முற்றத்துக் கொடியில் காயப் போட்டாள். சாமான் அறைக்குள் வந்து நின்றுகொண்டு ஜன்னலை மெல்லத் திறந்து வீதியில் வேடிக்கை பார்த்தாள்.

இது என்ன பொழுது நத்தையாக நகர்கிறது! அவளுக்கு மிகவும் அலுப்பாகத்தானிருந்தது.

அண்ணனிடம் கேட்டு முதல் நாள் டவுன் கடைத் தெருவில் வாங்கிவந்த கதைப் புத்தகங்களில் ஒன்றை எடுத்துப் பிரித்து வைத்துக்கொண்டு - முற்றத்துக் குறட்டில் காலைத் தொங்கப் போட்டவாறு தூண்மீது சாய்ந்து கொண்டு படிக்கத் தொடங்கினாள்.

வாயிற்கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது.

விசாரிக்காது சட்டென்று கதவைத் திறக்கக்கூடாது என்பது அண்ணனின் உத்திரவாயிற்றே?

சாமான் அறை ஜன்னலின்கீழ் கதவைத் திறந்து அதன் வழியே வாயிற்பக்கம் பார்த்தாள்.

வராந்தாவில் அவளுக்கு அறிமுகமில்லாத கிராமத்துப் பெண் ஒருத்தி ஒரு கூடையுடன் நின்று கொண்டிருந்தாள்.

"என்னம்மா! என்ன வேணும்?" உள்ளிருந்தபடியே கேட்டாள்.

"தாரணிங்கிறதுதானே உங்க பேரு? இதை வீட்டிலிருந்து கொடுத்தனுப்பினாங்க."

"எவங்க வீட்டிலிருந்து?" ஆதங்கத்துடன் கேட்டாள் அவள்.

"செந்தாமரையம்மா வீட்டிலிருந்து" என்று கூறிய அந்தப் பெண் தன் தலையில் சுமந்து கொண்டிருந்த சிறு கூடையை இறக்கி வைத்துக்கொண்டாள்.

செந்தாமரையா யார் அது? அந்தப் பெயரில் ஒரு உறவினர் இருப்பதாக அண்ணா சொல்லவில்லையே. ஊருக்கு வந்து ஒரு சில நாட்கள்தான் ஆயிருக்கு. அதற்குள் அவள் எப்படி எல்லோரையும் பற்றித் தெரிந்து கொள்ள முடியும். காலையில் கடை திறக்க ஓடும் அண்ணன் இரவு திரும்பியதும் சாப்பிட்டுத் தூங்கத்தானே பொழுது சரியாக இருக்கு... வந்திருக்கிறவள் பெண். அவளைக் கண்டு ஏன் மிரள வேண்டும்? ஒரு சமயம் அந்தச் செந்தாமரை அவர்களுக்கு தூர உறவுக்காரியோ என்னவோ? என்ன கூடையில் அனுப்பியிருப்பாங்க?" அடக்க முடியாத ஆவலில் கதவைத் திறந்தாள்.

"இதையெல்லாம் திருச்சிக் கடையிலேயிருந்து உங்களுக்காக வாங்கிட்டு வந்ததாக ஐயா சொல்லச்

சொன்னார்'' என்று கூடை நிறைய ஆரஞ்சு, ஆப்பிள், திராக்ஷை பழத்தைக் காட்டினாள்.

''ஐயாவா...? யார் அது?'' திகைப்புடன் கேட்ட தாரணிக்கு ஒரே குழப்பம்.

''செந்தாமரையம்மா மகன்தான்... சின்னதுரை அய்யா... அவர்தான் உங்களுக்கு அனுப்பி வச்சிருக்கார்'' விஷமமாக வந்தவள் சிரித்தாள்.

காதும் மூக்கும் ஜிவ்வென்று சூடாகிப்போக பொங்கி வந்த சினத்தைத் தாங்கமுடியாது சட்டென்று அந்தக் கூடையைத் தூக்கி வாசல் திண்ணைமீது வைத்தாள் தாரணி.

''இந்த விளையாட்டெல்லாம் வேறு யார்கிட்டேயாவது உங்க அய்யாவை வச்சுக்கச் சொல். இதை எடுத்துட்டு வர உனக்கு ரொம்ப துணிச்சல்தான். உங்க அய்யா என்னைப்பத்தி என்ன நினைக்கிறார்? அவர் பணத்திற்கும் பவிசுக்கும் இங்கே யாரும் மயங்கிக் கிடக்கலைன்னு போய்ச் சொல். உடனடியா இடத்தைக் காலி பண்ணாட்டா சத்தம்போட்டு அண்டை அசலைக் கூப்பிட்டு மானத்தை வாங்கிடுவேன்'' - அழுத்தமாக ஆவேசமாகப் படபடவென்று பேசிவிட்டு கதவை மூடித் தாளிட்டுக் கொண்டாள்.

மிகவும் துணிவாகப் பேசினாளே ஒழிய... உடல் முழுவதும் பயங்கரமானதொரு உணர்வில் நடுங்கியது. நெஞ்சு வெடித்து விடும்போல் துடித்துக் கொண்டது. வெகுநேரம் கதவின் மேல் அப்படியே சாய்ந்துகொண்டு நின்றாள். சின்னதுரையின் சாகசங்களில் அது ஒன்று என்பது அவளுக்குத் தெரியாது. அவனது ஆசை அவள்மேல் விழுந்து விட்டது. அவன் பலவகையிலும்

அவளுக்குத் தூண்டில்போட ஆரம்பித்திருக்கிறான் என்பது அவள் அறிந்து கொள்ளவில்லை.

திமிர் பிடித்தவன். தன் பணக்காரத்தனத்தைக் காட்டிக் கொள்ள பழங்களை வாங்கி அனுப்புகிறானே என்று எண்ணி வெகுண்டு போனாள்.

''என்னம்மா... சிறையிலிருப்பது போல் வீட்டுக்குள் அடைஞ்சு கிடந்தியா? பொழுது எப்படி போச்சி?'' என்று வேடிக்கையாகக் கேட்டபடி டிபன் செட்டை வைத்து விட்டு குளிக்கப் பின்பக்கம் ஓடினான் செந்தில்.

அன்று நடந்ததை அண்ணனிடம் சொல்ல வேண்டும் என்றுதான் அவள் மனம் ஆத்திரத்தில் தவித்தது.

சொன்னால் என்ன நடக்கும் என்பதைப்பற்றி நினைத்த போது பயமாகத்தான் இருந்தது.

அவளுக்கு நன்றாக நினைவிருக்கிறது. பட்டணத்திலிருந்த தங்கையைப் பார்த்துவிட்டுப் போக ஒரு தடவை அண்ணன் செந்தில் வந்திருந்தான். இருவரும் ஒய்வாக ஊரைச் சுற்றிக்கொண்டு கடற்கரைப்பக்கம் வந்தபோது சில இளசுகளின் கண்களில் அவள் பட்டுவிட்டாள்.

''இந்தக் காட்டான் பக்கத்திலே... யாரடா இந்த மோகினி'' என்று காதில் படும்படி ஒரு இளைஞன் கூறியதும் கொல்லென்று சிரிப்பு எழுந்தது முகம் சிவந்து போனான் செந்தில்.

''யாரடா காட்டான்? எங்கே ஒரு வாட்டி சொல்'' என்று ஒரே பாய்ச்சலாக அந்த இளைஞனது மார்புப் பக்கத்து சட்டையைப் பிடிக்க... அவன் திமிற - சட்டைகிழிந்து கையில் வந்து விட்டது.

முரட்டுத்தனமாக தங்கள் சிநேகிதன்மீது பாய்ந்து, தாக்க கையை ஓங்கிய அந்த மனிதனின் முகத்தில் பொங்கி வழிந்த கோபத்தைக் கண்டு பயந்து அவர்கள் ஆளுக்கு ஒரு திசையாக ஓட அகப்பட்டவன் கையெடுத்துக் கும்பிட்டு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு செத்தோம் பிழைத்தோம் என்று ஓடிய காட்சி நினைவுக்கு வரவே... அவள் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

அண்ணனுக்கு கோபம் வந்தால் காடுமேடு கூடத் தாங்காதே! பின்னர் சாவகாசமாக சொல்லிக்கொள்ளலாம் என்று அன்றைய நிகழ்ச்சியை ஒத்திப் போட்டுக் கொண்டாள்.

''கதைகளைப் படித்துக் கொண்டிருந்தேன், நேரம் போகிறதே தெரியலை அண்ணா'' என்று கூறிவிட்டு இலைகளைப் பிரித்து சாப்பாட்டை பரிமாறத் தொடங்கினாள்.

அண்ணனும் தங்கையும் பழைய கதைகளைப் பேசிச் சிரித்தபடி சாப்பிட்டனர் - எப்போதும் அப்படியே இருக்கப் போவதாக நிம்மதியாக உறங்கினாள் தாரணி. பெரியம்மா முத்தாச்சி வந்து சேர்ந்ததும் செந்திலுக்கு பெருத்த நிம்மதி.

வாய்க்கு ருசியாக சமைத்துப் போட்ட கிழவி வீட்டையும் தாரணியையும் வேட்டை நாய் போல காத்துக் கொண்டிருந்தாள்.

தாரணிக்கும் அவளை ரொம்ப பிடித்துவிட்டது.

வேலைக்குப்போய்ச் சேர மூன்று வாரங்கள் இருக்கின்றனவே. அதுவரை கதவைத் தாளிட்டுக்கொண்டு சிறையிலிருப்பது போல இருந்து தவித்தவளுக்கு வாழ்க்கை சுவையாகி விட்டது.

கிழவி நன்றாகச் சமைத்தது போல வேடிக்கையாகப் பல கதைகள் சொல்லி அவளைச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தாள். அலுப்புத் தெரியாத வகையில் சமையல் பக்குவங்களை அவளுக்குக் கற்றுக் கொடுத்தாள்.

அவள் வந்த பிறகு அந்த வீட்டில் ஏக கலகலப்பு. கிழவிக்குப் பெருத்த குரல்.

கிழவிக்குப் தெருப்பெண்கள் அனைவரும் சிநேகிதிகள்.

''ஏ! தங்கமணி என்று அடுக்களையிலிருந்து அவள் குரல் கொடுத்தால் கோடி வீட்டுத் தங்கமணி ஓடோடியும் வந்துவிடுவாள்.

''முத்தாச்சி! முத்தாச்சி'' என்று கூப்பிட்டுக்கொண்டு அடிக்கடி அவர்கள் வீட்டுக்கு தெருப் பெண்கள் வந்து போய்க் கொண்டிருந்தனர். பேச்சும் சிரிப்புமாக கிராமவாழ்வு அவள் மனதை நிறைத்தது.

வயசுப் பெண்ணை வீட்டுக்குள்ளேயே ஏன் அடைச்சி போடணும்? ரொம்ப தவறு என்று நினைத்தாள் முத்தாச்சி. தெருப் பெண்கள் சிலரோடு அவளை துர்க்கையம்மன் கோயிலுக்குப் போய்வர அனுமதித்தாள்.

''தோட்டத்திலே பூத்திருக்கிற செவ்வரளியைக் கிள்ளி எடுத்துக்கிட்டுப்போ... துர்க்கையை வழிபட்டால் சீக்கிரம் கல்யாணமாகுமாம். உனக்கும் உன் அண்ணனுக்கும் சேர்த்து வேண்டிக்கோ'' கிழவி உபதேசித்து அனுப்பி வைத்தாள்.

அந்தத் தெருவில் கல்யாணமாகாது நான்கு பெண்கள் இருந்தனர். எல்லோரும் துர்க்கையை வழிபட்டுக் கொண்டிருந்தனர். காலையிலோ, மாலையிலோ நேரம்

கிடைத்த போது பூக்கூடையுடன் துர்க்கை வழிபாட்டுக்கு சேர்ந்து புறப்பட்டனர்.

அண்ணன் செந்திலிடம் அவள் சொன்னபோது அவன் மறுப்புத் தெரிவிக்கவில்லை.

"கோவிலுக்கோ வாசலுக்கோ தனியாகப் போகாதேயம்மா! ஊர் கெட்டுக்கிடக்கு" என்று மட்டும் எச்சரித்தான்.

துர்க்கையம்மன் கோவிலுக்குக் குறுக்குவழி அந்த மாந்தோப்புதான். சுற்றிச் சாலை வழி நடந்ததால் வெகு தொலைவிலிருப்பது போல பிரமிப்புக் கொடுத்தது. சின்ன துரையின் மாந்தோப்பில் தெரிந்த ஒற்றையடிப் பாதை வழியேதான் தெருப் பெண்கள் கோவிலுக்குப் போய் வந்தனர். தாரணிக்கு அது பிடிக்கவில்லை. ஆனாலும் கூட்டத்தோடு போய்வர நேர்ந்ததால் அவளும் அந்த வழியேதான் போய் வந்தாள்.

ஒருநாள் மாலை - பொழுது மங்கிக் கொண்டு வந்த சமயம் அவர்கள் சிரிப்பும் பேச்சுமாகக் கோவிலுக்குப் புறப்பட்டிருந்தார்கள். தாரணி தோட்டத்து மலர் அத்தனையையும் பறித்துக் கட்டி மாலையாக எடுத்து வந்திருந்தாள். சிவப்புச் சேலையுடுத்தி செவ்வரளி மாலையணிந்து மினுக்கிட்ட விளக்கொளியில் பார்க்க மிரட்சியைத் தந்தாள் துர்க்கையம்மன். அந்தக் கோவிலுக்கு வருகிறவர்கள் மிகக் குறைவு. அந்தப் பெண்கள் கொண்டுவந்த மலர் மாலையை அம்மனுக்கு சாத்திவிட்டு - கற்பூர ஜோதி காட்டி தட்டில் கிடைத்த தட்சணையுடன் அர்ச்சகர் கதவைச் சாத்திக் கொண்டு வீடு கிளம்ப அவசரப்பட்டார்.

"கொஞ்சம் நில்லு! கொடுக்காப்புளி மரத்திலிருந்து காய் பறிச்சுகிட்டு வரோம்" பதிலுக்கு எதிர்பாராது

வாய்க்கால் கரையை நோக்கி ஓடிவிட்டனர் அந்தப் பெண்கள். மாலை நேரத்து மஞ்சள் ஒளி கரைந்து, இருட்டு தலை நீட்டி எழுவதைக் கண்டு பதறிப் போனாள் அவள்.

தரையில் கிடந்த மாவிலைச் சருகுகள் மேல் சரசர வென்று சப்தம் கேட்டு நடுங்கிப்போய் திரும்பிப் பார்த்தாள்.

சின்னதுரை வெள்ளை வேட்டி சட்டையில் அலங்காரமாக நின்று கொண்டிருந்தான்.

"துர்க்கையம்மனைக் கும்பிட்டால் என்ன கிடைக்கும்னு தெரியுமில்லையா?" அவனது கேலியும் சிரிப்பும் தாரணிக்குப் பிடிக்கவில்லை.

"உனக்கு கைமேலே பலன் கிடைச்சுட்டது பார்த்தியா?"

உருட்டி விழித்தாள் தாரணி... துணிவாக இருக்க முயன்றாள். மனம் பக்பக்கென்று அடித்துக்கொண்டது.

"உங்க வேலையைப் பார்த்துக்கிட்டு போங்கோ ஸார்" அதட்டினாள்.

சின்னதுரை பகபகவென்று சிரித்தான். துர்க்கையம்மன் கோயிலை அடைத்துவிட்டு, அர்ச்சகர் வாய்க்காலின் மறுகரையை அடைந்து வெகுதூரம் போய்விட்டிருந்தார். கூடவந்த பெண்களும் அருகில் இல்லை. அந்தியின் அந்த வேளைக்கு அங்கே யாரும் வரமாட்டார்கள் என்ற துணிச்சல்.

'என் வேலையைப் பார்க்கத்தானே தினமும் இங்கே வந்து காத்திருக்கேன். தாரணி நீ மட்டும் மனசுவச்சா... உன்னை தங்கத்தாலே இழைச்சு வைரத்தாலே அபிஷேகம் பண்ணி அழகு பார்ப்பேன். உன்னைப் பார்த்தது முதல்

எனக்கு உன் நினைப்பேதான்... தாரணி! - அவன் அருகில் நெருங்கினான்.

"எங்கண்ணனுக்குத் தெரிஞ்சா என்ன நடக்கும் தெரியுமா?"

"அவருக்கு ஏன் தெரியணும்? நாம் ரெண்டுபேரும் ரகசியமா இருந்திட்டா?"

"ரொம்ப அதிகம் பேசுறீங்க... கோயிலுக்கு வந்த பெண்கிட்டே வம்பு பண்ணினது பஞ்சாத்துக்கு தெரிஞ்சா?"

"என் மாந்தோப்பில் உனக்கு என்ன வேலைன்னு கேட்பேன் எல்லார் முன்னிலையிலும். இது என் சொத்து தெரியுமா?"

"நல்லவேளை கோயிலும் - அதிலே குடி கொண்டிருக்கிற தெய்வமும் உங்க சொத்துன்னு சொந்தம் கொண்டாடாது போனீங்களே! இனிமேலே நாங்க இந்தப் பக்கம் வரமாட்டோம்!"

"வந்திருக்கியே விடுவேனா?" சொல்லியபடி மிக அருகில் நெருங்கி அவளது கையைப் பிடிக்க முயன்ற போது... தன் கரத்தில் வைத்திருந்த பித்தளைத் தட்டால் ஓங்கி அவன் தலையில் அடித்துவிட்டாள். பித்தளை தட்டின் ஓரம் முகவாயின் நெற்றியில் இடித்து... காயத்திலிருந்து குபுகுபுவென்று ரத்தம் வழிந்து உதட்டில் பட்டு உப்புக் கரிக்கவே...ஆத்திரத்துடன் அவளை வேகமாக நெருங்கி அணைத்துக் கொள்ள முற்பட்டான்.

"சிங்காரி... அலமேலு!" என்று ஓங்கி கூக்குரலிட்டாள் தாரணி.

"என்ன? எதுக்கு இப்படிக் கத்தறே!" என்று கூறிய வண்ணம் அந்தப் பெண்கள் ஓடி வருவதைக் கண்டதும்

மரத்தின் பின்னால் மறைந்து மாயமாகி விட்டான் சின்னதுரை. நடந்ததைச் சொன்னால்... அது பலவித கதைகளாக மாறி அவளையே பாதிக்குமோ? தாரணி சட்டென்று பொய் ஒன்றைச் சொன்னாள்.

"இருட்டிக்கிட்டு வருதே... எனக்குப் பயமா போயிடுச்சு. சரசரன்னு அந்தப் பக்கம் சத்தம் கேட்டது. பாம்பு ஏதாச்சும் ஓடுதோன்னு நடுங்கிப் போயிட்டேன்."

"பாம்புமில்லே பல்லியுமில்லே. பட்டணத்துப் பொண்ணு நீ - ரொம்பவே எதுக்கும் பயப்படறே" சிரித்தபடி அவர்கள் அவளைச் சூழ்ந்து கொண்டனர்.

வீட்டுக்கு வந்தும் அவளது உடம்பில் ஏற்பட்ட நடுக்கம் அடங்கவில்லை. துர்க்கையை மனதுக்குள்ளே கும்பிட்டுக் கொண்டால் போதும். இனி அந்தக் கோயிலுக்கும் போவதில்லை. மனதிற்குள்ளே தீர்மானித்துக் கொண்டாள்.

சின்னதுரை மாந்தோப்பு வீட்டுக்குள்ளே சென்று முகத்தைக் கழுவிக்கொண்டு அங்கேயிருந்த படுக்கையறை விளக்கைப் பொருத்தித் தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்தான்.

அவனுக்கு கோபம் பற்றிக்கொண்டு வந்தது. அவனை அடித்து நெற்றியில் முடி ஓரத்தில் ஒரு சிறு காயத்தை உண்டு பண்ணுமளவு தாரணி பெருத்த துணிச்சல்காரியாக இருக்கிறாளே. அவன் அவளை அப்படி லேசில் விட்டு விடப் போவதில்லை. பழிக்குப் பழி வாங்காவிட்டால் அவன் ஒரு ஆண் பிள்ளையா? பலவந்தமாக அவளை எப்படியாவது அவன் அடைந்து விடப் போகிறான். செந்திலுக்கோ அந்த ஊர் ஜனங்களுக்கோ அவன் இனி பயப்பட்டுப் பயன் இல்லை. பற்களைக் கடித்துக் கொண்டு அலமாரியில் வைத்திருந்த

பீஞ்சை எடுத்து மருந்துபோட்டு துடைத்து ஒரு பிளாஸ்திரியை எடுத்து ஒட்டிக்கொண்டான்.

"மண்டையில் என்ன அடிபட்டது" என்று அவனது ஆட்கள் யாராவது விசாரிப்பு செய்தால்...

"ஒரு பெண் செய்த மண்டகப்படி" என்று எப்படிச் சொல்வான்? அலமாரியின் முனை நெற்றியில் குத்தி காயமாகி விட்டது என்று சமாளிக்கவேண்டும். பலவும் எண்ணியபடி இருட்டிய பின்னர் வீட்டுக்குத் திரும்பினான்.

மாந்தோப்பில் நடந்த அந்தச் சங்கதியையும் தாரணி அண்ணனிடம் சொல்லவேயில்லை. அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியில் அவளுக்கு இரவில் சரியான உறக்கமே இல்லை.

சின்னதுரையும் அமைதியாக உறங்கவேயில்லை- ஆத்திரம் கலந்தமோகம் அவனது மனதை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

தாரணியைவிட ஆணவக்காரிகள் எத்தனையோ பேரை அவன் தன் ஆசை வார்த்தைகளால் மடக்கியவனா யிற்றே... ஒரு சின்ன பெண்ணிடமா அவன் தோற்றுப் போவான். இல்லை... இல்லை ஒரு நாளும் இல்லை. இன்னும் சில தினங்களில் தாரணியின் திமிரை அடக்கி அவளைத் தன் கைப்பொம்மையாக்கிக் கொள்ளாவிடில் மீசையைக் கோபத்துடன் தடவிக் கொண்டான்.

அதற்குப் பின்னர் தாரணி மிகவும் எச்சரிக்கையுடன் தான் இருந்தாள். கூட்டமாகப் பெண்களுடன் கடைத் தெருவுக்குப் போய் வந்தாள். சாலையோரம் அமைந் திருந்த விநாயகர் கோவிலுக்கு தெருப் பெண்களுடன் சென்று வழிபட்டு வந்தாள். எங்கேயாவது அந்த நீல

பியட்கார் கண்களில் பட்டுவிட்டால் கூட்டத்திற்குள் தலைமறைவாகிக் கொண்டிருந்தாள்.

அன்று மாலைப்பொழுது அமுங்கிக்கொண்டு வருமுன் முகத்தைக் கழுவித் துடைத்து பவுடர் பூசி பொட்டு வைத்துக்கொண்டாள். தலையை வாரி பின்னலிட்டுக் கொண்டு தோட்டத்து மல்லிகை மொட்டை தொடுத்து தலையில் சூட்டிக் கொண்டாள். கண்களில் லேசாக மையைத் தொட்டு கண்ணாடி முன் நின்று அழகு பார்த்து விட்டு, கொடியில் காய்ந்த மல்மல் சேலையை எடுத்து உடுத்திக்கொண்டு கதைப் புத்தகத்துடன் மங்கிக்கொண்டு வந்த வெளிச்சத்திலே முற்றத்து ஓரத்தில் படிக்க உட்கார்ந்தாள்.

"கண்ணு கெட்டுப் போயிடும். என்னேரமும் என்ன படிப்பு? சூடா போட்டு வச்சிருக்கிற பஜ்ஜியை தின்னுட்டு காப்பி குடி" என்று அன்போடு முத்தாட்சி அழைக்கவே, புத்தகத்தை வைத்துவிட்டு சமையலறைக்குள் நுழைந்தாள்.

உப்பும் காரமும் நன்றாகக் கூடிவிட்டிருந்த சூடான பஜ்ஜிகளைச் சுவைத்து சாபிட்டுவிட்டு, காப்பி சாப்பிட்டதும் இரவு சாப்பாடு தேவையில்லை போல வயிறு நிறைந்து போனது.

"பெரியம்மா! நீங்களே எல்லா வேலைகளையும் செய்ய வேணாம், நான் உதவுகிறேன்" என்று கூறியபடி கிழவி இரவு சமையலுக்கு எடுத்த கீரைக் கத்தையுடன் கூடத்திலே உட்கார்ந்தாள். அதை ஆய்ந்து முடிப்பதற்குள் பொழுது அமிழ்ந்து நன்றாகவே இருட்டிக் கொண்டு விடவே கூடத்துக் குழல் விளக்கைப் பொருத்தினாள்.

"சாமிக்கு விளக்கேத்திட்டு வா. பிறகு மத்த வேலையைப் பார்க்கலாம்" என்று கிழவி உத்திரவிடவே

மாடத்திலேயிருந்து வெண்கல அகல் விளக்கை ஏற்றிவிட்டு திரும்பியபோது வாயிற் கதவு இடிபடும் ஓசை கேட்டது.

வீட்டில் துணைக்கு, முத்தாச்சி இருக்கும் தைரியத்திலே ஓடிச்சென்று கதவைத் திறந்தாள்.

வாயிலில் முன்பின் பார்த்திராத ஆண்கள் இருவர் நின்று கொண்டிருந்தனர்.

''தங்கச்சி என்ன சொல்றதுன்னு தெரியலை! உங்கண்ணனுக்கும் பெரிய தனக்காரருக்கும் பேச்சுமுத்தி பெரிய சண்டையாகிடவே அவர் ஓங்கி உன் அண்ணனை அடிச்சுப் போட்டுட்டு ஓடிட்டார். குற்றுயிரா கிடக்கிற உன் அண்ணனை தூக்கிட்டு வரதுக்கு சிலபேர் போயிருக்காங்க. உன் பேரைச் சொல்லிக்கிட்டே இருக்கிறதால நீயும் வந்தா''... கிடுகிடு வென்று உடல் நடுங்க வாய் உலர்ந்து போனாள் தாரணி.

''எங்க கிடக்கார்னு சொல்ல முடியுமா?'' அவசரமாகக் கேட்டாள், நெஞ்சு பயத்திலே வேகமாகத் துடித்தது.

சாலையோரத்துச் சாவடியிலே தூக்கிக் கொண்டு போட்டிருக்காங்க. உன் அனுமதி இல்லாம டவுன் ஆஸ்பத்திரிக்கு கிளம்ப மறுக்கிறார் உன் அண்ணன் -ரத்தம் நிக்காம இன்னும் பெருகி வழிஞ்சுக்கிட்டேயிருக்கு. உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போகாட்டா உயிருக்கு ஆபத்து வந்துடுமோன்னு பயமாயிருக்கு.''

அவ்வளவுதான் - அதற்குமேல் கேட்டுக் கொண்டிருக்க அவளுக்கு முடியவில்லை ''பெரியம்மா கதவைத் தாளிட்டுக்கோங்க - இதோ வந்துட்டேன்'' என்று குரல் கொடுத்து விட்டு வந்தவர்களுடன் வேகமாக நடந்தாள்.

''இப்படி குறுக்கால போனா நல்லது'' என்று முதலில் பேசியவன் வழி காட்டியபோது கால்கள் கூசின.

''அதோ தெரியுதே அதுதான் சாவடியம்மா - பயப்படாமே வாங்க நாங்க துணை இருக்கோம்'' - மற்றவன் தைரியம் சொல்ல அவள் அண்ணனை நினைத்துப் பதறிக் கொண்டு குழப்பத்தில் யோசிக்கத் தோன்றாது மாந்தோப்பு ஒற்றையடிப் பாதையில் விழுந்தடித்துக்கொண்டு நடந்தாள்.

''இங்கேதான் அம்மா'' என்று அந்த மாந்தோப்பு வீட்டைக் காட்டினார்கள் அவர்கள்.

வராந்தாவிலே ஒரு விளக்கு லேசாக எரிந்து கொண்டிருந்தது. படியேறி அவள் வராந்தாவை அடைவதற்குள் பின்வந்தவர்கள் இருவரும் எங்கேயோ மாயமாகி விட்டதை உணர்ந்து திகிலுடன் அவள் திரும்பியபோது கதவைத் திறந்துகொண்டு வந்த சின்னதுரை சிரித்தபடி அவள் கையைப்பற்றி இழுத்தான்.

மோசம் போய்விட்டோம் என்ற உணர்வின் எச்சரிக்கையில் முழு பலத்துடன் அவள் கையை உதறினாள்.

''நான்தான் உனக்காகக் காத்திருக்கிறேன். உங்க அண்ணன் ஏன் இங்கே வறப்போறான்'' சிரித்தபடி-இடது கையால் வராந்தாவின் விளக்கை அணைத்தான் சின்னதுரை.

எங்கும் ஒரே இருட்டு. முரட்டுத் தனமாகப் பற்றி இழுத்த கரத்தை விடுவித்துக்கொள்ள தன் முழு பலத்தையும் உபயோகித்துத் திமிறிய தாரணி சட்டென்று குனிந்து அவன் கரத்தை வெடுக்கென்று அழுத்தமாகக் கடித்தாள்.

"அடிப்பாவி!" என்று அலறிய சின்னதுரை கையை விட்டபோது ஒரே ஓட்டமாக இருளில் அந்த வராந்தாவைத் தாண்டி, படிகளைத் தாவி - தலைதெறிக்க ஓடினாள்.

"ஓடு... ஓடு... ஓடு எங்கே ஓடிப் போவாய்! இந்தத் தோட்டம் முழுவதும் என் சொத்து" என்று கத்தியபடி பின்னால் அவன் துரத்த இருளில் நிலை தெரியாது ஓடினாள் தாரணி. நெஞ்சு அந்த பயங்கர உணர்வில் வெடித்துவிடும் போலத் துடித்தது.

ஓடினாள்... ஓடினாள்... துர்க்கையம்மன் கோயில் அருகே நெருங்கியபோது அவன் அவளை நெருங்கி விட்டான். சேலையைப்பற்றி இழுத்து தன் மார்போடு அணைக்க முயன்றவனுடன் போராடிய தாரணிக்கு வேறு வழி எதுவும் தெரியவில்லை.

ஒன்று அவனது பிடியில் கசங்கவேண்டும் இல்லை யென்றால்...?

அண்ணன் செந்திலை நினைத்துக் குமுறிக் கொண்டே மீண்டும் ஒரு முறை அவனது கரத்தைக் கடித்தாள்.

"நீ பெண் இல்லையடி பிசாசு" என்று அவன் கையை உதறியபோது தப்பித்துக்கொண்டு ஓடியவள் அந்தப் பாழும் கிணற்றை நெருங்கியதும் ஒரே தீர்மானத்துடன் இடிந்து கிடந்த கைப்பிடி சுவர்மேல் ஏறி கிணற்றுக்குள் குதித்து விட்டாள்.

"தொப்' பென்று ஏதோ விழுந்த சத்தம்... அந்த வேகத்திலே நீர் எழும்பி அடங்கிய ஓசையைக் கேட்டு திடுக்கிட்டுப் போனான் சின்னதுரை. பாவிப் பெண் கிணற்றுக்குள் விழுந்து விட்டாளே! இனி அவன் என்ன செய்வான்? ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கிப்

போய் சேர்ந்தான். கையில் அவன் கடித்த இடத்திலிருந்து ஏற்பட்ட ரத்தக் கசிவை பஞ்சினால் அந்தக் காயம் தெரியக் கூடாது என்று தன் முழுக்கை சட்டையை அணிந்து கொண்டான்.

4

வீட்டுக்கு வந்த செந்தில்... தங்கையைக் காணாது துடித்துப் போனான்.

அடுப்பருகில் சமையலில் நாட்டமாக இருந்த கிழவிக்கு வசாலில் வந்து நின்றவர்களையோ அவர்கள் சொன்னவையோ எதுவும் தெரிந்திருக்கவில்லை.

"கதவைத் தாள் போட்டுக்கோன்னுட்டு உன் தங்கச்சி வேகமா தெருவில் இறங்கிப்போனா - எனக்குக் கண் பார்வை மந்தமாயிட்டதாலே எங்கேம்மா தனியாப் போறேன்னு ஒரு குரல் கொடுத்தேன். அதுக்கு மேலே எனக்கு ஏதும் தெரியாதப்பா" - கிழவி விக்கி விக்கி அழுதாள்.

தெரு ஆண்பிள்ளைகளைச் சேகரித்துக் கொண்டு புறப்பட்டான். ஆளுக்கொரு லாந்தரும் கையில் தீவட்டியு மாக அவர்கள் தேடத் துவங்கினார்கள். துர்க்கையம்மன் கோயில் அருகே வந்ததும் ஹரிகன் விளக்கு வெளிச்சத்திலே மல்லிகைப் பூச்சரம் உதிர்ந்து ஒரு புதரின்மீது சிதறிக் கிடப்பதைக் கண்டு அரண்டு போனான் செந்தில்.

"இந்தப் பக்கம் வாங்கோ" என்று கூச்சலிட்டவுடன் ஓட... பாழுங்கிணற்றுக்குள்ளே குப்புற மிதந்து கொண்டிருந்த தங்கையின் பிணத்தைப் பார்த்துவிட்டு

அவன் கதறியது காற்றிலே கலந்து ஊர் முழுவதும் எதிரொலிக்க... ஊர் மக்களே அங்கு நொடிப் பொழுதில் திரண்டு வந்து விட்டனர்.

"உனக்கு என்ன குறை வச்சேன் தாரணி! - இப்படி ஒரு முடிவைத் தேடிக்கிட்டியே" - செந்தில் முகத்தில் அடித்துக் கொண்டு அழத் தொடங்கினான்.

"காரணமில்லாமல் கிணத்திலே விழுந்திருப் பாளா?" பட்டணத்திலே படிச்சவ, ஏதாவது தப்பு நடந்திருக்கும் என்று சிலர் கிசுகிசுக்க...

"துர்க்கைகோவில் பக்கத்து பாழுங்கிணத்திலே போய் விழுவானேன்? இதில் ஏதோ சந்தேகமிருக்கு... நல்லா யோசிக்கணும். தாரணி தானேதான் விழுந்தாளோ- இல்லை யாராவது தூக்கிப் போட்டிருப்பார்களோ" என்று சிலர் முணுமுணுக்க...

போலீஸ் விசாரிப்பு, பிரேத பரிசோதனை என்ற பல சங்கதிகளுக்குப் பின் தன் அருமைத் தங்கையை தகனம் செய்துவிட்டு வீட்டுக்கு வந்த செந்தில் -

காய்ச்சலுடன் பத்துநாள் தன் நினைவே தெரியாது தாரணி தாரணி என் தங்கமே எங்கே போயிட்டே' என்று புலம்பியபடி படுத்துவிட்டான்.

அதைப் பேசிக் கொண்டிருந்த ஊர் மக்களுக்கு தாரணியின் மரணத்தால் ஏற்பட்ட வியப்பு சில நாளில் அடங்கிப் போயிற்று. கடைத்தெருவிலிருந்த முறுக்குக் கடைக்காரன் சின்னசாமிக்கு லாட்டரியில் இரண்டு லட்சம் விழுந்துவிட்ட திடீர் செய்தி அவர்களது ஆவலை வேறு பக்கம் திருப்பவே தாரணியின் மரணத்தைப் பற்றி அவர்கள் மறக்கத் தொடங்கி விட்டனர்.

கடையைத் திறக்காது காய்ச்சலுடன் படுத்துக் கிடந்த செந்தில் அன்றுதான் எழுந்து உட்கார்ந்திருந்தான்.

காய்ச்சல் இறங்கியிருந்தது. ஆனால் மனதிலே ஏற்பட்ட அந்தத் துயரத்தின் வேதனை சிறிதும் அடங்கவே யில்லை.

முகத்தை வழித்துக் கொள்ளாது தாடியும் மீசையுமாக கண்ணில் ஏக்கமும் துயரமும் நிறைந்தவனாக தள்ளாடிய படி நடந்து கயிற்றுக் கட்டிலின் மீது உட்கார்ந்திருந்தான்.

"நான் வந்த வேளை சரியில்லை...இத்தனை பெரிய துக்கம் ஏற்பட்டு விட்டிருக்கு. ஒரு நாலு நாள் எப்படியோ சமாளிச்சுக்கோ. ஊருக்குப்போய் நம்ப குலதெய்வம் பகவதிக்கு பூசை போட்டுட்டு வந்துடறேன் "என்றவாறே முத்தாட்சி ஊருக்குப் புறப்பட்டுப் போனாள்.

தானே மண்எண்ணை ஸ்டவ்வைப் பற்றவைத்து புழுங்கலரிசி கஞ்சி தயாரித்து வேண்டா வெறுப்பாகச் சாப்பிட்டு விட்டு வீட்டின் வெறுமை மனதை இறுக்க கட்டிலின்மேல் படுக்கையை விரித்துக் கொண்டு - குழல் விளக்கை அணைத்து விட்டுப் படுக்க வந்து உட்கார்ந்தான் செந்தில்.

உறக்கம் வந்தால்தானே?

என்னென்ன கனவுகள்! அவளைப்பற்றி எத்தனை எதிர்பார்ப்புகள்...? எல்லாம் எப்படி நாசமாகிப் போயின? கண்களில் புரண்ட கண்ணீரை புறங்கைகளால் துடைத்துக் கொண்டான்.

"அம்மாடி தாரணி! அண்ணன் என்ன குறை வச்சான்னு கோவிச்சுக்கிட்டு நீ கிணத்திலே விழுந்திட்டே யம்மா? இதை தெரிஞ்சுக்காம நான் செத்தால் என் நெஞ்சு வேகாதம்மா தாரணி... வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொல்லம்மா. அண்ணா அண்ணான்னு வீட்டுக்குள்ளே பூனைக் குட்டி மாதிரி காலைச் சுத்திக்கிட்டு இருப்பியே

இப்போ எங்கேம்மா போயிட்டே - தானே பேசிக்கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுது தனது சோகத்தைக் குறைத்துக் கொள்ள முயன்றான்.

பிறகு கட்டில் தலைமாட்டில் கிடந்த துவாலையை எடுத்து கண்களைத் துடைத்துக்கொண்டு முகத்தின்மீது எடுத்து விரித்துப் போட்டுக் கொண்டு படுக்கையில் சாய்ந்தவன் அவனையுமறியாது உறங்கிப் போனான்.

கூடத்துச் சுவரில் தொங்கிய அந்த பழையகடிகாரம் பன்னிரண்டு முறை அடித்து ஓய்ந்தது. திடுக்கென்று விழித்துக்கொண்டான் அவன். கண்களை இறுக்கி மூடிக்கொண்டு மறுபடியும் தூங்க முயன்றபோது, தொப்பென்று முத்தத்துக் கம்பி இடுக்கு வழியே... அதென்ன சத்தம்? திடுக்கிட்டு முழித்துக் கொண்டான்.

மெல்லிய விளக்கொளியில் துல்லியமாகத் தெரிந்த அதை வியப்புடன் உற்றுப் பார்த்தான். கொழுத்து பருத்து வளர்ந்திருந்ததொரு கரும்பூனை. தணல்போல பளபளத்த கண்களுடன், பார்க்க புலிக்குட்டிபோல பயங்கரமான தோற்றத்துடன் 'மியாவ் - மியாவ்' என்று கத்திய போது அவன் உடல் சில்லிட்டுப் போனது.

பார்த்தால் வீட்டுப் பூனைபோல தெரியலையே. காட்டுப் பூனை இங்கே எங்கே வந்து நடு இரவில் தொந்திரவு கொடுக்கிறது? சட்டென்று எழுந்தான். மூலையிலிருந்த கொடிக்கம்பால் அதை விரட்ட நினைத்தவன்? அண்ணா! அண்ணா!' என்று பின்னாலிருந்து எழுந்த குரலைக் கேட்டு பதறிப் போனான். சற்றுமுன் தணல் கண்களால் அவனை உறுத்துப் பார்த்த பூனை தரை மீது சுருண்டு கிடந்தது... அதன் மேலிருந்து புகை மண்டலம் போல... ஒரு நீல ஒளி எழ பிரமிப்புடன் பார்த்தான்.

இல்லை, அவனுக்குப் பைத்தியம் பிடிக்கத் தொடங்கி விட்டிருக்கிறது - அல்லது ஏதோ கனவு காண்கிறான் போலிருக்கு.

நினைத்தபடி கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தவன் அதிர்ந்து போனான். அவனது அருமைத் தங்கை தாரணி கை எட்டும் தூரத்திலே நின்று கொண்டிருந்தாள். 'விர் என்ற குளிர் காற்று கூடம் முழுவதும் வியாபித்து மெல்லிய மல்லிகை மலர் வாசத்தைப் பரப்புவதை உணர்ந்தான்.

''அண்ணா, என்னைக் கூப்பிட்டுக் கொண்டே இருந்தீங்க. அதனால் உங்களைப் பார்க்க வந்தேன்'' தெளிவாக தாரணி பேசியதைக் கேட்டு அவன் பதறிப் போனான்.

இது நடக்க முடியாத நிகழ்ச்சி. தாரணி இறந்து போய் அவளைத் தீயிலிட்டு சாம்பலாக்கி - அந்தச் சாம்பலை காவேரியில் கறைத்து-கருமாதி செய்து முடித்து எல்லாம் முடிவானபின் அவள் எப்படித் திரும்பிவர முடியும்?

''எப்படித் தங்கச்சி வந்திருக்கான்னுதானே நினைக்கிறீங்க அண்ணா. உங்களது பாசமும் பரிவும் என்னை ஈர்த்துக் கொண்டு வந்திருக்கு. உங்களைப் பார்த்து பேசிவிட்டுப் போக வந்தேன். எப்படி வந்தேன்னு கேட்கிறீங்களா? ஒரு கரும்பூனையாகத் திரும்பி வந்திருக்கேன்.''

காய்ந்துபோன உதட்டை நாவால் தடவிக் கொண்டு மறுபடியும் உற்றுப் பார்த்தான்.

சந்தேகமேயில்லை. அவன் அருகே நின்ற உருவம் அவனது அருமைத் தங்கை தாரணிதான்.

கையை நீட்டி அவளைத் தொட முயன்றாள்.

களுக்கென்ற சிரிப்பொலி கேட்டது. "அண்ணா என்னை நீங்கள் பார்ப்பதே ஒரு அதிசயம். உங்களது உணர்வுகளில் என் நினைவு ஒன்றிக் கிடப்பதால் என் உருவத்தை உங்களால் பார்க்க முடிகிறது. நான் தலையில் அணிந்து கொண்டிருந்த அந்த மல்லிகையின் மணத்தைக் கூட உணர முடிகிறது. ஆனால் என்னைத் தொடமுடியாது அண்ணா. உங்களுக்கும் எனக்கும் இடையே உள்ள வித்தியாசம் மிகவும் பெரியது. நான் இப்போது வேறு ஒரு உலகில் இருக்கிறேன். அமைதியில்லா ஒரு ஆவியாக அந்த உலகிலே திரிகிறேன்.

"தங்கச்சி தாரணி! உனக்கு என்னம்மா நேர்ந்தது? ஏன் கிணற்றிலே விழுந்தே? இப்போது என்கிட்டே சொல்லம்மா. உனக்கு பேசமுடிகிற இந்தச் சமயத்தில் சொல்லம்மா."

"துர் மரணத்துக்கு ஆளாகிறவங்க அமைதியில்லாம ஆவி உலகத்தில் அலைவாங்க இல்லையா?"

"உனக்கேன் துர் மரணம்? நீ வெகு நாள் வாழ வேண்டியவளாச்சே தாரணி. என் கண்ணே சொல்லம்மா?" துயரத்தில் குரல் உடையக் கேட்டான்.

"அதை நீங்க பிறகு தெரிஞ்சிப்பீங்க அண்ணா. நான் இறந்ததும் என் ஆவி பரபரப்போட வெளியே வந்ததும் இறந்து கிடந்த இந்தப் பூனையின் உடலுக்குள்ளே நுழைஞ்சுகிச்சி."

"இதென்னம்மா கூடுவிட்டுக் கூடு பாய்கிற கதையைச் சொல்றே?"

"தற்கொலை செய்துக்கிற அளவுக்கு உனக்கு நான் என்ன தீங்கு செய்தேன்?"

"தீங்கு செய்தவங்களைத் தேடி பழி வாங்கற வரைக்கும் எனக்கு அமைதி கிடையாது அண்ணா."

"அது யார்னு சொல்லு நான் பழிவாங்கிடறேன்."

"பழிவாங்கி அமைதி பெறவேண்டியவள் நான் - உங்களுக்கு அந்தப் பாவம் தேவையில்லை. தனியா இந்த ஆவி உடலில் அலைந்தால் எனக்குத் தெம்பு கிடையாது. அதனாலே சட்டுனு செத்துப்போன இந்தப் பூனை உடம்பிலே புகுந்துகிட்டேன். இது ஒரு காட்டுப் பூனை - முரட்டுப் பூனை. இதனுடைய சக்தியை வச்சுக்கிட்டு நான் பழிவாங்கப் போறேன். அண்ணா நீங்க ஒண்ணு செய்யணும்."

"என்னம்மா தாரணி சொல்லு. உசிரோட இருக்கச்சே உனக்கு நான் செய்யாததை இப்பவாவது நிறைவேற்றி வைக்கிறேன். ஏழைகளுக்கு அன்னதானம் செய்யணுங் கறியா? கன்னிப் பெண்களுக்கு புடவை துணிமணி வாங்கித் தரணும் என்கிறாயா? எந்தக் கோவிலில் என்ன பூசை போட்டா உனக்கு நிம்மதி ஏற்படும் சொல்லம்மா."

"அதிக நேரம் பேசமுடியாது அண்ணே, ஆவிகள் உலகத்திற்கு இந்த நடு சாமப்பொழுது தான் உகந்த நேரம். இன்னும் சிறிது நேரத்திலே நான் மறைஞ்சு போயிடுவேன். அதுக்குள்ளே சொல்றேன். என் பழியைத் தீர்த்துக் கொண்ட பிறகு மறுபடியும் உங்களைச் சந்திப்பேன். உங்கள் தங்கை தாரணியாக தலை நிறைய பூவோடும் பொட்டோடும் வருவேன். நீங்க எனக்கு ஒரு வாக்கு தரணும்."

"என்ன வேணும் சொல்லம்மா சீக்கிரம். என் உயிரை வேணுமானாலும் தந்துடறேன்."

"இப்படிப்பட்ட அன்பான தமையனை இழந்துட்டோமேன்னு ஆவி உலகில் அலைகிறவள் மனம் அலைபாய்கிறது. என் மரணத்துக்குக் காரணமானவனைப் பழிவாங்கின பிறகு நான் மறுபடி இந்த உலகிலே பிறக்கணும் அண்ணா. பல பிறவிகள் எடுக்க நேரும். அதிலே ஒரு பிறவியில் உங்க குழந்தையாக நான் பிறக்க ஆசைப்படறேன். தமையனாக இருந்த நீங்க எனக்கு தந்தையாக இருக்கணும்னு விரும்பறேன். எனக்காக நீங்க கல்யாணம் செய்துக்கோங்க. உங்களுக்கு முதல் குழந்தையாக வந்து பிறக்கப் போகிற பெண்ணான எனக்கு தாரணின்னு பேர் வச்சு என்னை வளர்த்து..."

"தாரணி! தாரணி!" என்று அவன் கூவிக் கொண்டிருந்தபோது அந்த நீலப்புகை மண்டலம் வீடு முழுவதையும் அடைக்க அதற்குள் தெரிந்த தாரணியின் உருவம் மறைந்து போக, "மியாவ்... மியாவ்" என்று குரல் கொடுத்தபடி பூனை எழுந்து உடம்பை சிலிர்த்துக் கொண்டு முற்றத்துச் சுவர் மேல் ஏறி, அவன் பார்க்கும் முன் கம்பிகளிடையே புகுந்து ஒரே தாவலில் மறைந்து போயிற்று.

இத்தனையும் கனவா அல்லது நனவா? இப்படியும் நடக்குமா? மறைந்தவர்களைத் திரும்பிப் பார்க்க சாத்தியப்படுமா?

நெற்றியில் பூத்து வழிந்து நெஞ்சை நனைத்த வியர்வையை அவன் துவாலையால் துடைத்துக் கொண்டான்.

உடல் முழுவதும் விவரிக்க இயலாத ஒரு உணர்வின் தாக்குதலால் நடுங்குவதை உணர்ந்தான்.

அவனையும் அறியாது கண்களிலிருந்து கண்ணீர் வெள்ளமாக வழிந்தோடியது.

"தாரணி நீ கேட்டுக் கொண்டபடி செய்கிறேன் அம்மா. ஒரு வருஷம் முடியட்டும். உனக்குத் திவசம் செய்து உன் ஆன்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொண்டு நான் கல்யாணம் செய்துக்கறேன். என் மகிழ்ச்சிக்காக இல்லை, என் தங்கை தாரணியை என் குழந்தையாகப் பெற்று எடுத்து மடியில் வைத்துக் கொஞ்சி வளர்த்து ஆளாக்கி படிக்க வைத்து தக்க இடத்தில் கட்டிக் கொடுத்து இந்த வகையிலாவது இந்த அண்ணன் என் கடமைகளைச் செய்ய முயலுகிறேன். சத்யம் அம்மா! தாரணி! சத்யம்" என்று அழுதவாறே படுக்கையில் சாய்ந்து கொண்டான்-பிறகு விடியும்வரை அவன் தூங்கவே யில்லை.

முதலில் முகத்தை மழித்துக் கொண்டு கழுத்துவரை புரண்டு கொண்டிருந்த முடியை வெட்டிக் கொண்டான். அப்படிச் செய்ததும் மனதை அழுத்திய சுமை தீர்ந்த விட்டது போல ஒரு நிம்மதி ஏற்பட்டது. துவைக்காது மூலையில் சுருட்டி வைத்திருந்த தன் துணிகளை எடுத்துக் கடைத்தெரு கடையில் சலவைக்குப் போட்டான். நன்றாகக் குளித்து விட்டு அலமாரியில் தங்கை அடுக்கி வைத்துவிட்டுப் போயிருந்த தன் வெள்ளை வேட்டி சட்டையை அணிந்து கொண்டான்.ஒரு மாதத்திற்கு மேலாக மூடி வைத்திருந்த மளிகைக் கடையைத் திறந்தான். போதாத சாமான்களை வாங்கிப்போட்டு நிறைத்தான்.

அன்றுவரை முகத்திலே பிணக்களையுடன் வளைய வந்தவன் வாடிக்கைக்காரர்களைப் பார்த்து முறுவலித்துப் பேசினான்.

பக்கத்துச் சைக்கிள் ரிப்பேர் கடைக்கார இளைஞன் சொன்ன அறுவை ஜோக்குகளுக்கு விழுந்து விழுந்து சிரித்தான்.

பகல் உணவுக்கு ஆனந்தா ஹோட்டலுக்குப் போய் வயிறு நிறையச் சாப்பிட்டான். மாலை வேளையில் கடையில் மாட்டியிருந்த திருமகளின் படத்தருகே மல்லிகை ஊதுவத்தியை கத்தையாகக் கொளுத்தி வைத்தான். துபாயிலிருந்து வந்ததொரு கடைக்காரரிட மிருந்து சார்லி சென்டை மூணு மடங்கு விலைகொடுத்து வாங்கி மேலே தெளித்துக்கொண்டான்.

பார்த்தியா செந்தில் எப்படி மாறிப் போனான்? அன்னிக்கு தங்கை செத்ததிற்கு முகத்திலடிச்சு அழுது ஊரைக் கூட்டினானே, இப்போது அவளைப்பத்தி நினைப்புக்கூட இல்லாம மைனர் வேஷம் போடறான் பார்த்தியா?''

''மைனருக்கு வயது ஏறிக்கிட்டே போகுது. ஒரு நல்ல பெண்ணைப் பார்த்துக் கட்டிக்கிட்டு நல்லாயிருந்தா ஊருக்குக் கௌரவமாக இருக்கும். எல்லோருக்கும் நல்லது.''

பல கதைகள்... பலர் வாயில்... பல உருவில் எழுந்து ஊர் முழுவதும் பரவிக் கொண்டிருந்தன.

5

சில நாட்களுக்குப் பின் - ஒரு பகல் பொழுது தண்ணீர் எடுக்க கிழக்குத் தெருவிலிருந்து சம்பகம் வாய்க்காலுக்குப் போனாள்.

பிள்ளையார் கோவிலைத் தாண்டி ஓங்கி உயரமாக வளர்ந்திருந்த வேதநாராயண மரத்தின் கிளை ஒன்றிலே படுத்துக் கொண்டிருந்த பெரிய பூனையைப் பார்த்து திடுக்கிட்டுப் போனாள்.

''சே! ஒரு பூனையைக் கண்டு பயப்படுவாங்களா...'' எண்ணியபடி வாய்க்காலில் இறங்கி தண்ணீரைக் குடத்தில் மொண்டு இடுப்பில் தூக்கிக்கொண்டு படியேறி பாதைக்கு வந்தாள்.

''தொப்'' என்ற சப்தத்துடன் பாதையின் குறுக்கே மரத்திலிருந்து குதித்த அந்தப் பூனை தன் கொள்ளிக் கண்களால் அவளைப் பார்த்து விழித்து உறுமியபோது அவள் குடல் புரண்டு நடுங்கிப் போய் விட்டாள். ஒரு கல்லை எடுத்து அதன்மேல் வீச முயன்று குனிந்தவளை அருகே ஒரே பாய்ச்சலில் சீறிக்கொண்டு வந்த பூனையின் வாயில் தெரிந்த பற்களும் கண்ணில் தெரிந்த வெறியும் கிரீச்சென்று அலறச் செய்தன.

வாய்க்கால் கரை ஓரமாகப் போய்க்கொண்டிருந்த ஆண்கள் சிலர் ஓடிவந்தனர்.

''என்னம்மா என்னாச்சு'' என்று கேட்டபோது அவள் திரும்பிப் பார்த்தாள். அந்தக் கரும்பூனையைக் காணவில்லை.

''ஒரு காட்டுப் பூனை என்னைக் கடிக்க வந்தது'' என்று அவள் விசும்பியதைக் கேட்ட அத்தனை பேரும் கொல்லென்று சிரித்து விட்டார்கள்.

''கனவு கண்டியா? அந்தப் பூனை இப்போ எங்கே?'' என்று கேலியாகக் கேட்டார் ஒரு பெரியவர்.

''ஏதோ புலியோ சிறுத்தையோ வந்து விட்டதுபோல அலறினியே அம்மா. ஊர் கெட்டுக் கிடக்கே. ஒரு பெண் கூச்சல் போடறாளேன்னு ஓடி வந்தோம். ஒரு கரும்பூனை யைப்பார்த்தா இப்படிக் கூவினே?'' சிரித்தார் மற்றொருவர்.

சம்பகத்தை ஒரு கரும்பூனை வழி மடக்கி மிரட்டிய செய்தி ஊர் முழுவதும் பரவிப் போனது.

பலர் அதை நம்பவில்லை.

நகத்தால் பிராண்டி சீறிப் பாய்ந்ததைப்பற்றி கேள்விப்பட்டு கிராமத்து மக்கள் நடுங்கிப் போய்விட்டனர்.

"கட்டாயம் இது அருகிலிருந்த காட்டிலிருந்து கிராமத்தின் பக்கம் ஓடி வந்ததொரு காட்டுப் பூனையாக தானிருக்கும்."

"ஒரு சமயம் வெறிபிடித்த பூனையோ என்னவோ? இது தொடர்ந்து கிராமத்து மக்களை பயமுறுத்த அனுமதிக்கக் கூடாது" என்ற எண்ணமே எல்லோரிடமும் பரவவே - பூனைப் பிரச்சினைக்கு தீர்வு காண நாட்டாண்மை தலைமையில் பஞ்சாயத்து கூடியது.

கிராமத்திருந்த அனைவரும் ஆண் பெண் குழந்தைகள் உட்பட ஆலமரத்து நிழலில் அன்று காலை கூடினார்கள்.

நாட்டாண்மை நல்லசிவம் தலைமை வகித்தார்.

அவரவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை அவரவர் சொல்ல கூட்டம் பிரமிப்புடன் கேட்டது.

ஒரு பக்கம் மேடையோரத்திலே வெள்ளை வேட்டி சட்டை சரிகை உத்திரியத்துடன் பெரியதனக்காரர் என்ற கௌரவத்தை தாங்கியபடி சின்னதுரை உட்கார்ந்திருந்தான். எதிர்ப்பக்கம் ஒரு ஓரமாக கிராமத்து ஜனங்களுடன் தரையில் உட்கார்ந்திருந்த செந்திலுக்கு மட்டும் அந்தக் காட்டுப் பூனை விவகாரத்திலே உணர்வு வித்தியாசப் பட்டது.

பூனையாக அன்று அவன் வீட்டிற்கு வந்து பேசி விட்டுப்போன தங்கை தாரணி இன்னமும் அந்தப் பூனை உருவிலே அலைந்து கொண்டிருந்ததால் அதைக்

கொன்றுவிட வேண்டும் என்று எல்லோருடனும் கூடி ஒப்புதல் கொடுக்க அவனுக்கு மனம் இசையவில்லை.

ஒரே ஒரு நாள் இரவுதான் அந்தப் பூனையை அவன் பார்த்தான். ஆனாலும் அவனுக்கு அதன்மேல் விவரிக்க இயலாத இரக்கம். வெளியே சொன்னால் பைத்தியக்காரன் என்று ஊர் மக்கள் சிரிப்பார்கள் என்ற அச்சம்.

"முன்னொரு சமயம் இப்படித்தானே கிராமத்துக் குள்ளே ஒரு சிறுத்தை வந்து ஆட்டுக்குட்டிகளை அடித்துக் கொன்று ஊர் மக்களை பயங்கரப்படுத்தியது. அப்போது நாம் எடுத்த முடிவுதான் இந்தப் பூனைக்கும் பொருந்தும்" என்றார் நாட்டாண்மை.

"அப்போ நம்ம பெரியதனக்காரர் அந்த சிறுத்தையை வேட்டையாடிக் கொன்று நமக்கு உதவி செஞ்சார்"-ஒரு கிழவர் ஆரம்பித்தார்.

எல்லோர் பார்வையும் சின்னதுரை பக்கம் திரும்பியது. முகத்தை நிமிர்த்தி ஆர்வமாக அவன் கூட்டத்தினரைப் பார்த்தான். அவனிடம் ஒரு துப்பாக்கி இருந்தது. எப்பொழுதாவது அவன் வேட்டையாட அருகிலிருந்த மலைக்காட்டின் பக்கம் போவதுண்டு. காடை, கௌதாரி, காட்டு முயல், நரி என்று அவன் கொன்று குவித்தவை பல.

காட்டிலிருந்து வந்த சிறுத்தை ஊரைக் கலக்கிக் கொண்டிருந்தபோது, அசாதாரணத் துணிவுடன் அதை வேட்டையாட ஒப்புக்கொண்டான். அவன் வீட்டுக் தோட்டத்திலிருந்த பெரிய வைக்கோல் போர் பின்னால் ஒளிந்து நின்று சிறுத்தையை ஒரே தோட்டாவால் சுட்டுக்கொன்ற பெருமை அவனுக்கு இருந்தது.

அந்த நினைப்பு நெஞ்சைத் தொட அவன் மிகவும் பெருமையோடு நாட்டாண்மையைப் பார்த்தான்.

''ஒரு பூனையை மடக்கிக் கொல்ல துப்பாக்கி எதற்கு? உங்களுக்கு மறுப்பு இல்லேன்னா எங்கிட்ட அந்த வேலையைக் கொடுங்கோ. ஒரு சில நிமிஷங்களில் அந்தக் காட்டுப் பூனையை கழுத்தை இறுக்கிக் கொன்று ஊர் மக்கள் பயத்தை தீர்த்து வைக்கிறேன.''-மிகவும் ஆணவமான குரலில் சொன்னான்.

''அது ரொம்பப் பொல்லாத பூனை என்று பெண்கள் சொல்கிறாங்க. அதனாலே நீங்க தனியாப் போக வேணாம். கூடத் துணைக்கு தைர்யமான சில ஆண்கள் கைத்தடி, கழி, கம்பு கொண்டு வரட்டும். பத்துபேர் சேர்ந்து மடக்கினால் ஒரு பூனை என்ன செய்ய முடியும்?'' - நாட்டாண்மை நல்லசிவம் கூறவே எல்லோரும் ஆமோதித்தனர்.

செந்தில் வாயைத் திறக்காது உட்கார்ந்திருந்தான். அவனது நெஞ்சு கலவரத்தில் தீவிரமாகத் துடித்தது.

''தாரணி! உனக்கு இப்படி ஒரு கஷ்டம் வர வேணுமா? காட்டுப்பக்கம் ஒடிப் போயிடு அம்மா'' என்று தனக்குள்ளே முணகிக் கொண்டான்.

இரவு முழுவதும் சின்னதுரை மனம் சரியாகவே இல்லை.

பூனையைக் கொல்லும் பணியை வேறு ஒரு இளைஞனிடம் ஒப்படைக்காது தானே ஏற்றுக் கொண்டது எத்தனை பெரிய பிசகு?

சிறுத்தையைச் சுட்டு வீழ்த்தியபோது அவன் இருபத்தைந்து வயது கட்டுடல் காளை. இப்போது வயது முப்பத்தைந்தைத் தாண்டி விட்டிருக்கிறது. அந்த வீரம் குறைந்து உயிர்மேல் ஆசை ரொம்பவும் அதிகரித்து விட்டிருக்கிறதே! வேட்டைக்குப்போய் எத்தனை நாள்

ஆகின்றது. துப்பாக்கியும் துருப்பிடித்து அவனது துணிவும் துருப்பிடித்துக் கிடக்கும்போது ஏன் அவன் ஒப்புக் கொண்டான்? சமீப காலத்தில் அவன் மிருகங்களை வேட்டையாடுவதைவிட்டு மிருகமாக மாறி பெண் வேட்டையில் அல்லவா மும்முரமாகி விட்டிருக்கிறான்!

கிராமத்து மக்களுக்கு ஓரளவு அவனது நடவடிக்கை தெரிந்தும் கண்டு கொள்ளாது பெருந்தன்மையோடு அவனுக்கு வீரப் பட்டமளித்து கோதாவில் இறக்கி விட்டிருக்கிறார்கள். ஊரார் மெச்ச அவனும் தலையாட்டி விட்டு வந்து விட்டான்.

அவனுக்கு இப்போது நடுக்கமாக இருந்தது. கிராமத்துப் பெண்களை பலமுறை பாய்ந்து கடிக்க வந்த பூனை அவனிடமும் சீறிக்கொண்டு வந்தால்...?

தூரத்திலிருந்தபடி ஒரே தோட்டாவில் குறி வைத்து அதற்குச் சமாதிகட்ட வேணும். துப்பாக்கியை எடுத்து தட்டிக்கொட்டி... குண்டுகளைத் தயாராகப் போட்டு வைக்க வேணும்.

அன்று, தான் காக்கி பாண்ட்டும் சட்டையும் போட்டுக் கொண்டு கிளம்பவேணும்.

என்னென்னவோ எண்ணியபடி படுக்கையில் புரண்டான். தாரணி கிணற்றில் குதித்த நாளிலிருந்து குற்ற உணர்வில் அவனை ஒரு பயங்கர உணர்வு ஆட்கொண்டு விட்டது. உணவு பிடிக்கவில்லை. வாழ்க்கையில் உற்சாகம் இருக்கவில்லை.

வீதியில் நடக்கும்போது கூடத் தன் பின்னால் காலடிச் சத்தம் கேட்டால் மிரண்டு கொண்டு திரும்பிப் பார்க்கு மளவு கோழையாகி விட்டிருந்தான். முன்போல தன் காரில் ஏறிக்கொண்டு கடைத்தெருவில் பவனி வருவதை நிறுத்திக்கொண்டிருந்தான்.

கொஞ்ச நாளாக மறந்து போயிருந்த ஊர் சிவன் கோவிலுக்கு அன்றாடம் போய் வந்தான்.

அம்மாவின் தேவாரப் புத்தகத்தை எடுத்து அந்த நாளில் அவள் தனக்குப் போதித்த பதிகங்கள் சிலவற்றை எடுத்து கட்டைக்குரலில் காலை வேளையில் பூஜையறையில் உட்கார்ந்து கத்திப் படித்தான்.

ஊகூம், இவன் மன அமைதியை அந்தப் பாவிப் பெண் தாரணி அபகரித்துக் கொண்டு போய் விட்டிருந்தாள்!

நாட்கள் வேகமாக நகர்ந்து வியாழக்கிழமையும் வந்து விட்டது. அன்று பகல் ஊர் மக்கள் வேடிக்கை பார்க்க அந்தப் பூனையை வேட்டையாடப் போகிறான் என்கிற நினைப்பு உடல் முழுவதையும் வியர்வையால் நனைத்தது.

ஒரு பொல்லாத சிறுத்தையைக் கொன்றவன் கேவலம் ஒரு கரும் பூனையைக் கண்டு ஏன் பயப்பட வேண்டும்?

தன்னையே தேற்றிக்கொண்டு தோளில் துப்பாக்கி யும் முகத்தில் போலியான வீரமுமாக பஞ்சாயத்தில் குறிக்கப்பட்ட அந்தப் பகல் பனிரெண்டு மணி வேளைக்குப் புறப்பட்டு விட்டான். அவன் பின்னால் பத்து ஆண்கள் கம்பும் கழியுமாகத் தொடர்ந்தனர்.

சின்னதுரை துப்பாக்கியுடன் வரப்போவதை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதுபோல அந்தக் கரும்பூனை வழக்கம்போல தாழ்வாக இருந்ததொரு கிளையில் கால்களை முன்னும் பின்னும் நீட்டிக்கொண்டு கம்பீரமாக உட்கார்ந்திருந்தது.

அதனுடைய கொள்ளிக் கண்களில் சினம் பொங்கிக் கொண்டிருப்பதைக் கொஞ்ச தூரத்திலேயே பார்த்து விட்ட சின்னதுரையின் குடல் பயத்தில் புரண்டது.

ஒரு புலிக்குட்டி... கருப்புச் சாயத்தை பூசிக் கொண்டு வந்துவிட்டது போல அச்சுறுத்திய பூனையின் கண்களில் நீலமும்-பச்சையும் சிவப்புமாக எத்தனை வண்ணங்கள்!

சண்டைக்குத் தயாராகி விட்டதை எச்சரிப்பது போல உர்... என்று அது மெல்லச் சீறி... பயங்கரமாகத் தன் பற்களைக் காட்டியபோது... கைகள் நடுங்கின.

துப்பாக்கியைத் தூக்கி குறிவைத்தான் சின்னதுரை.

இலைகளின் சலசலப்பு ஓசையைத் தவிர அத்தனை பேரும் மூச்சுவிடக்கூடப் பயந்து வியப்புடன் அந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டு நின்றனர். டபார்...என்ற சத்தம் கேட்டதும் எல்லோரும் ஆவலுடன் பூனை ரத்த வெள்ளத்திலே மிதக்கப் போகிற பரிதாபத்தைப் பார்க்கக் கண்களை அகல விரித்துக்கொண்டு... புதர்களிலும் செடிகள் பின்னாலும் மறைந்து பார்த்துக் கொண்டிருந்த போது...

அந்தப் பொல்லாத பூனை ரப்பரைப்போலத் தாவி நகர்ந்து கொள்ள குண்டு மரத்தின்மீது பட்டது. அருகிலிருந்த மரங்களிலிருந்த பறவைகள் கிரீச்சிட்டு சிறகை அடித்துக் கொண்டு குப்பென்று கூட்டமாக ஆகாயத்தில் பறந்தன.

ஒரே தோட்டாவில் குறிவைத்து மிருகத்தைக் கொன்றுவிடும் வீரன் சின்னதுரைக்குக் கோபம் தாங்க முடியவில்லை. என்ன அவமானம்... குறி பிசகிவிட்டதே? அதுவும் இத்தனை பேர்கள் முன்னால்?

ஆத்திரத்துடன் மறுபடியும் துப்பாக்கியைப் பூனையின் பக்கம் வைத்துப் பற்களைக் கடித்துக் கொண்டு சுட்டான்.

தொப்பென்ற சப்தம் கேட்டதுமே மக்கள் பரவச மடைந்து போனார்கள். அப்பாடா! பூனை செத்தது என்ற நினைப்பு எழுந்து அடங்குமுன் ''ஐயோ அம்மா'' -என்று சின்னதுரை அலறும் சத்தம் அந்தப் பிரதேசத்தையே கிடுகிடுக்க வைத்தது.

என்ன நேர்ந்தது என்று புரிந்து கொள்ளுமுன், சுற்றிலும் நின்ற துணையாட்கள் கம்பைச் சுழற்றிக் கொண்டுவருமுன் அந்தப் பொல்லாத காட்டுப் பூனை - புலிபோல சீறிக் கொண்டு... சின்னதுரை முகத்தையும் கண்களையும் நகத்தால் ஆழமாகப் பிராண்டிவிட்டு அவனது கழுத்தைப் பார்த்து குறிவைத்துக் கடித்துக் குதறத் தொடங்கிவிட்டது. ரத்தம் முகத்தில் வழிய - கழுத்திலிருந்து ரத்தம் பீய்ச்ச கத்திக்கொண்டே அவன் சுருண்டு கீழே விழுந்ததும் பூனை ஒரே தாவில் மரத்தில் ஏறி கிளைகளுக்கு நடுவில் ஒளிந்து கொண்டுவிட்டது.

இதை எதிர்பார்க்காத அத்தனை பேரும் அதிர்ச்சியில் அயர்ந்து போனார்கள்.

''என்ன வேடிக்கை! பெரியதனக்காரரை சீக்கிரம் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிட்டுப் போங்க! பத்துபேர் நெருப்புப் பந்தத்தோட ஓடிவாங்க... இந்த மரத்துக்கே நெருப்பு வச்சு பூனையைக்கொன்று விடுவோம்''- நாட்டாண்மை கத்தினார்.

குற்றுயிராகக் கிடந்த சின்னதுரையை சிலர் தூக்கி எடுத்துக்கொண்டு ஓடினர். மண்ணெண்ணையால் எரிந்த தீப்பந்தங்களுடன் சிலர் நொடிப்பொழுதில் மரத்தைச் சுற்றிக்கொண்டு பூனையை பயமுறுத்தத் தொடங்கினர்.

ஆண்கள் பலர் பெரும் கழிகளுடன் அதை அடித்துக் கொல்லத் தயாராகக் கூச்சலிட்டு சூழ்ந்து கொண்டதும் பூனை ஒரே தாவலில் புதர்மீது விழுந்து ஒளிந்து கொண்டது.

புதருக்குள் எல்லாம் புகுந்து பல திக்கிலும் தேடினார்கள். முடிவில் ஒருவன் கண்டுபிடித்துவிட்டு கூச்சலிட்டான்.

''இங்கே படுத்துக் கிடக்கு'' என்று அவன் போட்ட சத்தத்தைக் கேட்டு அத்தனை பேரும் கம்புகளுடன் ஓடிவந்தனர்.

ஒருவன் வீரவேசமாக அதை நெருங்கி கம்பை ஓங்கினவன் திகைத்துப் போனான்.

பூனை செத்துக் கிடக்குதே. எப்படிச் செத்துப் போச்சு. குண்டுபட்டு செத்துப் போச்சா என்று கேட்டுக் கொண்டு கம்பால் அதை முன்னும் பின்னும் திருப்பிப் போட்டு உற்றுப் பார்த்தான்.

கண்களைத் திறந்த நிலையில் வாயிலும்-கால் நகங்களிலும் ரத்தக் கரையுடன் பூனை செத்துக் கிடந்தது.

பூனை செத்துவிட்டது என்ற செய்தியுடன் அவர்கள் ஊருக்குள் நுழையுமுன் சின்னதுரை செத்துவிட்டான் என்ற துக்கச் செய்தியுடன் எதிரே வந்தார்கள் சிலர்.

பெரியதனக்காரர் என்ற தகுதிக்கு ஊரே துக்கம் கொண்டாடிக் கொண்டிருந்தது.

செந்திலுக்கு இப்போது தெரிந்துவிட்டது. அவன் தங்கை பழிக்குப்பழி வாங்க நினைத்தவன் சின்னதுரை தான்!



டாண் டாண் என்று இரவு மணி பனிரெண்டு என்று உணர்ந்த கூடத்து கடிகாரம் மண்டையிலடிப்பது போல அடிக்கத் தொடங்கியதும் திடுக்கிட்டு விழித்துக் கொண்டான் செந்தில்.

நல்ல கோடை இரவு. புழுக்கம் தாங்காது பனியனைக் கழற்றி மேல் துண்டோடு படுத்துக் கொண்டிருந்தான். திடீரென்று சில்லென்ற ஊதக்காற்று வீடு முழுவதும் வீச அத்துடன் மல்லிகை மலரின் மணமும் கலந்து வர திகைப்புற்று காலடியில் கிடந்த போர்வையை இழுத்து மேலே மூடிக்கொண்டான்.

'பொத்' தென்ற ஓசையில் அரண்டுபோய் எழுந்து நின்று கொண்டான். ஊரே செத்துப்போனதாக சொன்ன அந்தப் பூனை... கண்கள் தகதகக்க முற்றத்தில் குதித்து தாழ்வாரத்திற்குத் தாவி அவன் அருகே வந்து நின்றதும் அவன் உடல் வெடவெடத்தது.

முன்போல ஒரு புகை மண்டலம். அதை மறைக்க விடிவிளக்கின் மெல்லிய ஒளியில்... மெல்ல மெல்ல தெரிந்தாள் தங்கை தாரணி.

"தங்கச்சி வந்துட்டியாம்மா."

"என் ஆத்மா இப்போ சாந்தியடைஞ்சு போச்சு. என் மானத்தை அபகரிக்க நினைச்சு என்னைத் துரத்தினவனை நான் பலர் முன்னால் பழிவாங்கி விட்டேன். உங்களுக்கு ஏதோ ஆபத்துன்னு அவனது ஆட்களைச் சொல்லச் சொல்லி என் மனசைக் குழப்பி - என்னை மாந்தோப்பு வீட்டுக்கு அந்தி நேரத்திலே அழைச்சிட்டுப் போய் மானபங்கம் செய்யத் திட்மிட்டிருந்தான் சின்னதுரை.

அவனோட போராடினேன் அண்ணா. ஆனால் முடியாது என்று தெரிஞ்சப்போ மானத்தைக் காத்துக்க ஆவி உருவிலேயாவது கொஞ்சம் பெருமையோடு அலைய நான் அந்தக் கிணற்றிலே குதிச்சுச் செத்துட்டேன்.

"தற்கொலையானதாலே ஆத்மா சாந்தியடையாது தவிச்சுது. அவனை இந்தச் செத்த பூனை உடலில் புகுந்து பழி வாங்கி விட்டேன். இவனுடைய பாவ புண்ணியத்துக்கு நான் இன்னொரு பிறவி எடுக்கப் போறேன்... அந்தக் கர்ம வினையை துடைச்சுட்டு உங்க மகளா... நான் வந்து பிறப்பேன், சத்தியம் அண்ணா, வரட்டுமா? நான் சொன்னதை மறக்காதீங்க. இப்போ எனக்கு பூரண நிம்மதி கிடைச்சுட்டது. இனி நான் தாமதிக்க முடியாது" என்று கூறியபடி அவள் புகையில் கரைந்து பூனையாகி மியாவ்... மியாவ் என்று சப்தமிட்ட வண்ணம் முற்றத்துக் கம்பி இடுக்கிலே மறைந்து போனாள்.

கனவல்ல, எல்லாம் உண்மை, விடியும்வரை அவனுக்கு தூக்கமே வலவில்லை. தாரணி நினைவாகவே படுத்துப் புரண்டு கொண்டிருந்தான். விடிந்ததும் மெதுவாக எழுந்து பல் துலக்க பின்பக்கம் சென்றவன் திடுக்கிட்டுப் போனான். தாரணி நட்டு வைத்த பன்னீர் பூச்செடியின் அருகே அந்தப் பூனை செத்துக் கிடந்தது. கதறிவிட்டான் செந்தில், திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தவனாய் அவசர அவசரமாகப் பல் தேய்த்து முடித்து குளித்துவிட்டு ஒரு வெள்ளைத் துணியை மஞ்சள் நீரில் தோய்த்தான். இறந்து கிடந்த அந்தப் பூனையை எடுத்து அதில் சுற்றி அந்தப் பன்னீர் செடியருகே குழி தோண்டிப் புதைத்தான்.

"என் தங்கைக்குத் துணை செய்த பூனையே நீயும் இங்கே என் வீட்டில் இந்த மரத்தடியில் உறங்கு. தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்வது போல இந்தச் செடி

மரமாகி பூத்து உன் சமாதிமீது பூக்களை உதிர்க்கும். நான் இப்போது என் கண்ணீரை உதிர்க்கிறேன்'' என்று முணுமுணுத்த வண்ணம் கைகூப்பி வணங்கினான்.

தாரணி ஒரு கரும்பூனையாக வந்தாள் என்ற சங்கதி அவனுக்குப் பின்னர் அதற்கு அடுத்த ஆண்டு அவனுக்குப் பிறந்த பெண் குழந்தையைப் பார்த்தவர்கள் எல்லாம் சொன்னார்கள்.

தாரணிக்கு அண்ணன் மேலே கொள்ளை ஆசை. அவன் மகளாக வந்து பிறந்துட்டாளே... அதே மூக்கு'' அதே சுருண்ட முடி, அதே தங்க நிறம். பெயர்கூட தாரணியாம்.''

ஊரார் அதிசயப்பட்டார்கள். மார்போடு அணைத்துக் கொஞ்சிய மகள் முகத்தைப் பார்த்த செந்தில் அதிசயப்பட வில்லை.

அவன் தங்கை - இப்போது அவனுக்கு மகளாகி விட்டாள். உறவு என்னதாக இருந்தால் என்ன... தாரணி மேல் கொண்ட அந்தப் பாசம் என்றுமே அழியாத பாசம். மகளை வாரி எடுத்து முத்தமழை பொழிந்து கொஞ்சிய வனது மனதிற்குத்தான் எத்தனை நிம்மதி - எத்தனை நிறைவு!

★-★-★